ஸ்ரீ தத்தாத்ரேயர்
அருளிய

அவதூத கீதை



பராபரன்

ஸ்ரீ தத்தாத்ரேயரின்

அவதூத கீதை

பராபரன்

நூல் விளக்கம்

நூலின் பெயர்	**:**	**அவதூத கீதை**
நூல் ஆசிரியர்	**:**	**பராபரன்**
வெளியீடு	**:**	**பராபரம் பாடசாலை**
மொழி	**:**	**தமிழ்**
வகை	**:**	**தன்னாட்டம்**
முதற்பதிப்பு	**:**	**2025**
பக்கங்கள்	**:**	**176**
உரிமை	**:**	**அனைவருக்கும்**
கட்டமைப்பு	**:**	**சாதா பைண்டு அட்டை**
விலை	**:**	**அகவிழிப்பு**

என்னுரை

அவதூத கீதை என்பது அத்வைத வேதாந்தத்தின் இரண்டற்ற தன்மையை விளக்கும் ஓர் அற்புத நூலாகும், இந்நூலை அருளியவர் **ஸ்ரீ தத்தாத்ரேயர்**.

ஸ்ரீ தத்தாத்ரேயர் என்பவர் ஸ்ரீ அத்ரி ரிஷிக்கும், ஸ்ரீ அனசூயா ரிஷிபத்னிக்கும் மகனாக பிறந்தவர், அவர் மும்மூர்த்திகளின் ஓரே வடிவம் என்றும் புராணங்கள் எடுத்துரைக்கின்றன.

ஸ்ரீ தத்தாத்ரேயர் அவர்கள் சிறு வயதிலேயே மிக உயர்ந்த **அவதூத நிலையில்** வாழ்ந்தார் என்பதை இந்த கீதையில் வரும் பாடல்களின் வாயிலாக அறியப்படுகின்றது. மேலும் அவர் தன்னிச்சையாக இப்பாடல்களை பாடியுள்ளார் என்றும் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

அவதூத கீதையில் மொத்தம் **8 அத்தியாயங்களும்**, அவற்றில் **271 பாடல்களும்** உள்ளது. இந்த நூலின் **மூலம் சமஸ்கிருத மொழியில் இயற்றப்பட்டுள்ளது**, அதனை **தமிழில் மொழிபெயர்த்து**, தெளிவுரை செய்வதே இம்முயற்சியின் சிறிய நோக்கம்.

இந்நூல் முழுவதும் **அவதூதரின்** உயர்ந்த **சகஜ அனுபவத்தை** தெளிவாக **எடுத்துரைக்கின்றது**. யதார்த்தத்தின் ஒருமைப்பாட்டை நிரூபிக்க இந்நூல் எந்த தத்துவ வாதத்திற்கும் செல்லாது. ஆனால் மிகவும் ஆழமான விஷயங்களை விளக்கி அறிவிற்கு பூரணம் அளிக்கிறது.

உண்மையைத் தேடுபவர்கள் இக்கருத்துக்களை உள்வாங்குவதற்கும், **அறியாமை** என்னும் **இருளிலிருந்து ஆத்ம பிரகாசத்திற்கு** ஒரு சாதகனை **இட்டுச் செல்ல உதவுகிறது** என்றால் அது மிகையாகாது.

அத்வைத வேதாந்தம் இந்த கீதையை மிக உயர்வாக மதிப்பிடுகிறது. **இந்நூலின் கருத்துக்களைப் படித்துத் தெளிந்தவர்கள், மன அமைதி அடைந்து** தன் **சுயத்தில் நிலைபெறுவார்கள்** என்பதில் எந்த சந்தேகமுமில்லை.

இவ்வுயர்ந்த அவதூத கீதைக்கு தெளிவுரை செய்வதில் ஆனந்தம். அற்புதமான இந்த அவதூத கீதை புத்தகத்தை படிப்பவர்களுக்கு, இதிலுள்ள கருத்துக்கள் நன்றாக புரிந்து, மனத்தெளிவு ஏற்பட எல்லாம் வல்ல ஈஸ்வரனையும், குருமார்களையும் பணிகிறேன்.

நன்றி
பராபரன்

அவதூத கீதை

முதல் அத்தியாயம்

ஆத்மா எல்லாம் அறிந்தது, சர்வ வல்லமை படைத்தது,
எங்கும் நிறைந்தது, பி(இ)றப்பு அற்றது, பந்த விடுதலை அற்றது
என்று அவதூதர் எடுத்துரைத்தல்

அவதூதர் கூறுகிறார்:

ஈஶ்வராநுக் ^{3}ரஹாதே ^{3}வ பும்ஸாமத் ^{3}வைதவாஸநா ।
மஹத் ^{3}ப^{4}யபரித்ராணாத் ^{3}விப்ராணாமுபஜாயதே ॥ 1 ॥

பதச்சேதம்:

ஈஸ்வர அனுக்ரஹாத் ஏவ பும்ஸாம் அத்வைத வாஸனா|
மஹத் பய பரித்ராணாத் விப்ராணாம் உபஜாயதே ||1||

பத அர்த்தம்:

ஈஸ்வரன் – ஸகுணப்பிரம்மம் (குரு)
அனுக்ரஹாத் – அருளால்
ஏவ – மட்டுமே
பும்ஸாம் – மனித உடல் கொண்ட ஜீவனுக்கு
அத்வைத – இரண்டற்ற தன்மை – பிரம்மம்
வாஸனா – செயல்களில் ஈடுபாடு (முற்பிறவியின் பதிவு)
மஹத் பய – சம்ஸாரம் என்ற பி(இ)றப்பு) என்பதே பயம்
பரித்ராணாத் – விடுபடுவது
விப்ராணாம் – ஏதோ ஒரு ஜீவருக்கு
உப –அருகில் (குருவின் ஆன்மவியல் உபதேசத்தால்[1])
ஜாயதே – ஞானம் பிறக்கிறது

தெளிவுரை:

ஜீவனுக்கு பல பிறவிகளின் செய்த கர்ம வினையின் பலனாக, **மனித சரீரம்** வாய்க்கப் பெறுகிறது; ஏனெனில் மனித சரீரத்திற்கே, **மனம்** என்ற பகுத்தாராயும் கருவி கொடுக்கப்பட்டுள்ளது, இதனால் மனிதன் மற்ற ஜீவர்களிடமிருந்து அறிவில் உயர் பரிமாணத்தை அடையப் பெற்றுள்ளான்.

இவ்வாறு மனித உடல் கொண்ட **ஏதோ ஒரு** ஜீவனுக்கு, தன் மனதின் துணை கொண்டு, முற்பிறவியில் செய்த **செயல்களின் பதிவுகளால்**, ஈஸ்வரனின் அம்சமான குருவினிடத்தில் தொடர்பு (**ஸத்சங்கம்**) ஏற்படுகிறது.

அக்குருவின் **ஆன்மவியல் கல்வி உபதேசத்தால்**, மனிதனுக்கு இரண்டற்ற பிரம்மமாகிய தன்னை அறிந்து கொள்ள **தன்னாட்டம்** ஏற்படுகிறது, இத்தன்னாட்டமே, குருவின் உபதேசங்களை பின்பற்றி, சம்ஸாரமாகிய **பி(இ)றப்பு** என்ற மிகப்பெரிய **பயத்திலிருந்து** ஜீவனை விடுவித்து, தான் யார் என்ற தத்துவ

ஞானத்தை உணர்ந்து **தன்மயம்** ஆகிறது, அதாவது ஜீவத்தன்மை ஒழிந்து தன் சுயமாகிய ஆத்மாவில் நிலைத்து நிற்கிறது.

1. **உபதேசம்** – குரு சீடருக்கு பிரம்மமாகிய தன்னை பற்றிய ஞானத்தை போதித்தல்.

ஒருவருக்கு தான் கற்கும் ஆன்மவியல் கல்வியே தன்னை அறியும் மூலமாகிறது, அக்கல்வியின் மூலம் தன்னை யார் என்று விசாரிக்க பகுத்தறிவு ஏற்படுகிறது; இப்பகுத்தறிவே வாழ்வில் பின்பற்றும் ஒழுக்கத்தை ஏற்படுகிறது; ஒழுக்கத்தினால் மற்ற ஜீவர்களிடத்தில் (ஓரறிவு முதல் ஆரறிவு வரை) அன்பு மலர்கிறது; இப்பேரன்பு மலர அருள் பெருகுகிறது; அருள் பெருக நான் என்ற அகங்காரமும், எனது என்ற மமகாரமும் அற்ற துறவு மனம் வாய்கிறது; இப்படி அகங்(மம)காரமற்ற மனமே வீடுபேற்றில் (சுயத்தில்) நிலைத்து நிற்கிறது.

ஆதாரச்சக்கரங்களின் தத்துவ நிலைகள்	
மூலாதாரம்	**ஆன்மவியல் கல்வியே மூல சாதனம்**
ஸ்வாதிஷ்டானம்	**கல்வியின் மூலம் நா(தா)ன் யார்? என்ற அறிவு**
மணிபூரகம்	**தன்னறிவால் பிரபஞ்ச ஒழுக்க(ரித)ம் உணர்தல்**
அனாஹதம்	**ஒழுக்க(ரித)த்தால், உயிர்களிடத்தில் அன்பு மலர்தல்**
விசுத்தி	**அன்பு மலர, அருள் பெருகுகிறது**
ஆக்ஞா	**அருள் பெருக, மனம் அகங்(மம)காரத்தை துறக்கிறது**
ஸஹஸ்ராரம்	**மனத்துறவே, வீடுபேறு**

யேநேத ³ம் பூரிதம் ஸர்வமாத்மநைவாத்மநாத்மநி ।
நிராகாரம் கத ²ம் வந்தே ³ ஹ்யபி⁴ந்நம் ஶிவமவ்யயம் ॥ 2॥

பதச்சேதம்:

யேன இதம் பூரிதம் ஸர்வம் ஆத்ம நைவ ஆத்மா அநாத்மனி |
நிராகாரம் கதம் வந்தே ஹி அபின்னம் ஸிவம் அவ்யயம் ||2||

பத அர்த்தம்:

யேன – எவ்வாறு
இதம் – இந்த
பூரிதம் – நிறைந்துள்ளது
ஸர்வம் – பிரபஞ்சம் அனைத்தும்
ஆத்ம - ஆத்மா
நைவ – அது மட்டுமே
ஆத்மா அநாத்மனி – அறிவுள்ள (ஜடமற்ற); அறிவற்ற (ஜடம்)
நிராகாரம் – வேறுபாடற்றதும்
கதம் வந்தே – எவ்வாறு வணங்குவது?
அபின்னம் – பிளவுபடாதது
ஸிவம் – ஆத்ம தத்துவத்தை
அவ்யயம் – மாறுபாடற்றது

தெளிவுரை:

இப்பிரபஞ்சம் அனைத்தும் ஆத்மாவால் நிறைந்துள்ளது, ஆத்மாவும் தன்னாலேயே நிறைந்துள்ளாதால், அறிவுள்ளதும், அறிவற்றதும், வேறுபாடற்றதும், பிளவற்றதும், மாறுபாடற்றதும் ஆன ஆத்ம தத்துவத்தை எவ்வாறு வணங்குவது[1]?

1. **வணங்குதல்** – வணங்குபவர் மற்றும் வழிபடுபவர் என்ற இருமை இருக்கும் வரையில் வணங்குதல் என்ற செயல் சாத்தியம்; நான் பிரம்மம் என்ற ஒருமைப்பாட்டை உணர்ந்தவரிடத்தில், யார் யாரை வணங்குவது?

பஞ்சபூ^{4}தாத்மகம் விஸ்வம் மரீசிஜலஸந்நிப^{4}ம் ।
கஸ்யாப்யஹோ நமஸ்குர்யாமஹமேகோ நிரஞ்ஜந : ॥ 3॥

பதச்சேதம்:

பஞ்சபூத ஆத்மகம் விஸ்வம் மரீசி ஜல ஸன்னிபம் |
கஸ்யாபி அஹோ நமஸ்குர்யாம் அஹம் ஏகோ நிரஞ்ஜன: ||3||

பத அர்த்தம்:

பஞ்சபூத – ஆகாயம், காற்று, நெருப்பு, நீர் மற்றும் மண்
ஆத்மகம் – கலப்பினால் தோன்றிய
விஸ்வம் – பிரபஞ்சம்
மரீசி ஜல ஸன்னிபம் – கானல் நீருக்கு ஒப்பானது
கஸ்யாபி – யாரை
அஹோ – ஆச்சர்யம்
நமஸ்குர்யாம் – வணங்குவது
அஹம் – நான்
ஏகோ – ஒருவனே
நிரஞ்ஜன – பற்றற்றவன்

தெளிவுரை:

இப்பிரபஞ்சமானது ஐந்து பூதங்களின் கலப்பினால் தோன்றியது, இது கானல் நீருக்கு ஒப்பானது; ஏனெனில் பஞ்சபூதங்களின் சேர்கையால் தோன்றிய இப்பிரபஞ்சம், சில காலம் இருந்து முடிவில் எந்த பூதங்களிடம் இருந்து தோன்றியதோ, மீண்டும் அதே பூதங்களிடத்தில் ஒடுங்குகின்றது. அது போல பஞ்சபூதங்களும் எதனிடத்தில் தோன்றியதோ, அதனிடத்துல் ஒடுங்குகின்றது. அதனாலேயே இது கானல் நீருக்கு ஒப்பானது என்று சாஸ்த்திரங்கள் கூறுகின்றது.

நான் ஒருவனே எங்கும் நிறைந்தவன், எதனிடத்தும் பற்றற்றவன், தூய ஆத்மா, என்று உணர்ந்த அவதூதர், யாரை வணங்குவது? இது என்ன ஆச்சர்யம்!

ஆத்மைவ கேவலம் ஸர்வம் பே^{4}தா ^{3}பே^{4}தோ ^{3} ந வித் ^{3}யதே ।
அஸ்தி நாஸ்தி கத ^{2}ம் ப்^{3}ரூயாம் விஸ்மய : ப்ரதிபா^{4}தி மே ॥ 4॥

பதச்சேதம்:

ஆத்ம ஏவ கேவலம் ஸர்வம் பேத அபேதோ ந வித்யதே |
அஸ்தி நாஸ்தி கதம் ப்ரூயாம் விஸ்மய: ப்திபாதி மே ||4||

பத அர்த்தம்:

ஆத்ம – ஆத்மாவாகிய நான்

ஏவ – மட்டுமே
கேவலம் - ஒன்றான
ஸர்வம் – எல்லாவற்றிலும்
பேத – வேறுபாடு
அபேத – வேறுபாடற்றது
ந வித்யதே – எனக்கு இல்லை
அஸ்தி – இருக்கிறது என்றும்
நாஸ்தி – இல்லை என்றும்
கதம் ப்ரூயாம் – எப்படி சொல்வது
விஸ்மய – சந்தேகம்
ப்ரதிபாதி மே – எனக்கு குழப்பத்தை ஏற்படுத்துகிறது

தெளிவுரை:

ஒன்றேயாகிய ஆத்மாவாகிய நான் மட்டுமே அனைத்திலும் இருப்பதால், வேறுபாடு, வேறுபாடற்ற தன்மை என்பது எனக்கில்லை. அப்படியிருக்க ஆத்மா இருக்கிறது என்றும், இல்லை என்றும் எப்படி சொல்வது? இது **நா(தா)ன்** ஆத்மா என்ற உண்மையை உணராத ஒருவரின் சந்தேகத்தினால் ஏற்ப்பட்ட குழப்பமே இன்றி வேறில்லை.

வேதா ³ந்தஸாரஸர்வஸ்வம் ஜ்ஞாநம் விஜ்ஞாநமேவ ச ।
அஹமாத்மா நிராகார : ஸர்வவ்யாபீ ஸ்வபா⁴வத : ॥ 5॥

பதச்சேதம்:

வேதாந்த ஸார ஸர்வம் ஸ்வம் ஜ்ஞானம் விஜ்ஞானம் ஏவ ச |
அஹம் ஆத்மா நிராகர: ஸர்வ வ்யாபீ ஸ்வபாவத: ||5||

பத அர்த்தம்:

வேதாந்த –சாஸ்த்திரங்களின்
ஸார – சாரம் (கூற்று)
ஸர்வம் – அனைத்து
ஸ்வம் – தன்னை
ஜ்ஞானம் – அறிவது
விஜ்ஞானம் - உணர்வது
ஏவ ச – மட்டுமே
அஹம் ஆத்மா – நான் ஆத்மா
நிராகார: - வடிவமற்றவன்
ஸர்வ வ்யாபீ – அனைத்திலும் நிறைந்துள்ளவன்
ஸ்வபாவத: - சகஜ நிலை

தெளிவுரை:

அனைத்து வேதாந்த சாஸ்த்தித்தின் கூற்றும், ஆத்மாவாகிய என்னை அறிந்து உணர்வது மட்டுமே; நான் ஆத்மா வடிவமற்றவன், அனைத்திலும் நிறைந்துள்ளவன், இதுவே எனது சகஜ நிலை.

யோ வை ஸர்வாத்மகோ தே ^{3}வோ நிஷ்கலோ க^{3}க^{3}நோபம : ।
ஸ்வபா^{4}வநிர்மல : ஶுத் ^{3}த:^{4} ஸ ஏவாயம் ந ஸம்ஶய : ॥ 6॥

பதச்சேதம்:

யோ வை ஸர்வ ஆத்மகோ தேவோ நிஷ்கலோ ககனோபம: |
ஸ்வபாவ நிர்மல: ஶுத்த: ஸ ஏவ அயம் ந ஸம்ஸய: ||6||

பத அர்த்தம்:

ஸர்வ – அனைத்து
தேவோ – தெய்வங்களாக
ஆத்மாகோ – ஒளிர்கிறேன்
நிஷ்கலோ – அனைத்தையும் நிறைத்து இருக்கிறேன்
ககனோபம: - ஆகாயத்தை போல
ஸ்வபாவ – சகஜ நிலை
நிர்மல: - மலங்களற்றவன்
ஶுத்த – தூயமையானவன்
ஸ ஏவ அயம் – இந்த ஆத்மா
ந ஸம்ஸய: - எனக்கு சந்தேகமில்லை

தெளிவுரை:

ஆத்மாவாகிய நான் அனைத்தையும் நிறைத்து இருக்கிறேன்; எல்லா தெய்வங்களாகவும் ஒளிர்கிறேன்; ஆகாயத்தை போன்று அனைத்தையும் வியாபித்து இருக்கிறேன்; நான் ஆத்மா மலங்களற்றவன், தூய்மையானவன், இதுவே எனது சகஜ நிலை. இதில் எந்த சந்தேகமுமில்லை.

அஹமேவாவ்யயோ ऽநந்த : ஶுத் ^{3}த^{4}விஜ்ஞாநவிக் ^{3}ரஹ : ।
ஸுக ^{2}ம் து:^{3} க^{2}ம் ந ஜாநாமி கத ^{2}ம் கஸ்யாபி வர்ததே ॥ 7॥

பதச்சேதம்:

அஹம் ஏவ அவ்யயோ அனந்த: ஶுத்த விஜ்ஞான விக்ரஹ: |
ஸுகம் துக்கம் ந ஜானாமி கதம் கஸ்யாமி வர்த்தே ||7||

பத அர்த்தம்:

அஹம் – ஆத்மாவாகிய நான்
ஏவ – மட்டுமே
அவ்யய: - அழிவற்றவன்
அனந்த: - எல்லையற்றவன்
ஶுத்த: விஜ்ஞான விக்ரஹ: - தூய அறிவு வடிவினன்
ஸுகம் துக்கம் – இன்பம் துன்பம்
ந ஜானாமி – நான் அறிகிலேன்
கதம் – எப்படி
கஸ்யாபி வர்ததே – அனுபவித்தேன் என்று கூறுவது

தெளிவுரை:

உண்மையில் ஆத்மாவாகிய நான் அழிவற்றவன், எல்லையற்றவன், தூய அறிவு வடிவினன்; இ(து)ன்பம் போன்றவை எனக்கில்லை, அப்படியிருக்க, இ(து)ன்பத்தை அனுபவித்தேன் என்றும், அனுபவிப்பேன் என்றும் எப்படி கூறுவது?

ந மாநஸம் கர்ம ஶுபா^{4}ஶுப^{4}ம் மே
ந காயிகம் கர்ம ஶுபா^{4}ஶுப^{4}ம் மே ।
ந வாசிகம் கர்ம ஶுபா^{4}ஶுப^{4}ம் மே
ஜ்ஞாநாம்ரு 'தம் ஶுத் ^{3}த^{4}மதீந்த் ^{3}ரியோ ऽஹம் ॥ 8॥

பதச்சேதம்:

ந மானஸம் கர்ம ஶுப அஶுபம் மே
ந காயிகம் கர்ம ஶுப அஶுபம் மே |
ந வாசிகம் கர்ம ஶுப அஶுபம் மே
ஜ்ஞான அம்ருதம் ஶுத்தம் அதீந்த்ரியோ அஹம் ||8||

பத அர்த்தம்:

மானஸம் கர்ம – மனதினால் செய்ய கூடிய செயல்(எண்ணங்)களால்
ந ஶுப அஶுபம் – நல்லது கெட்டது இல்லை
காயிகம் கர்ம – சரீரத்தால் செய்ய கூடிய செயல்களால்
வாசிகம் கர்ம – வாக்கால் செய்ய கூடிய செயல்களால்
ஜ்ஞானம் – அறிவு வடிவினன்
அம்ருதம் – அழிவற்றவன்
ஶுத்தம் – தூய்மையானவன்
அதீந்த்ரியோ – இந்த்ரியங்களுக்கு அப்பாற்பட்டவன்
அஹம் – ஆத்மாவாகிய நான்

தெளிவுரை:

நான் ஆத்மா, தூய அறிவு வடிவினன், அழிவற்றவன், தூய்மையானவன், இந்த்ரியங்களுக்கு அப்பாற்பட்டவன்; அகையால் எனக்கு மனதின் செயல்களாலோ (எண்ணங்களாலோ), சரீரச் செயல்களாலோ, வாக்கின் செயல்களாலோ எற்படுகின்ற நல்லது கெட்டது என்பது இல்லை.

மநோ வை க^{3}க^{3}நாகாரம் மநோ வை ஸர்வதோமுக ^{2}ம் ।
மநோ ऽதீதம் மந : ஸர்வம் ந மந : பரமார்த ^{2}த: ॥ 9॥

பதச்சேதம்:

மனோ வை ககனாகாரம் மனோ வை ஸர்வதோமுகம் |
மனோ அதீதம் மன: ஸர்வம் ந மன: பரமார்தத: ||9||

பத அர்த்தம்:

மனோ – மனமே

ககனாகாரம் – ஆகாயம் போன்றது
ஸர்வதோமுகம் – அனைத்து திசைகளையும் அறிகின்றதாய் உள்ளது
ஸர்வம் அதீதம் பரமார்த: – அனைத்தையும் கடந்து இருக்கிறது
மன: ந: - மனம் என்பது இல்லை

தெளிவுரை:

யதார்தத்தில், மனம் ஆகாயத்தை போன்றது; அது எல்லா திசைகளையும் அறிகின்றதாய் உள்ளது; எல்லாவற்றையும் கடந்து இருக்கிறது; ஆனால் உண்மையில் மனம் என்பதே இல்லை.

அஹமேகமித ^{3}ம் ஸர்வம் வ்யோமாதீதம் நிரந்தரம் ।
பஶ்யாமி கத ^{2}மாத்மாநம் ப்ரத்யக்ஷம் வா திரோஹிதம் ॥ 10 ॥

பதச்சேதம்:

அஹம் ஏகம் இதம் ஸர்வம் வ்யோம அதீதம் நிரந்தரம்|
பஸ்யாமி கதம் ஆத்மானம் ப்ரத்யக்ஷம் வா திரோஹிதம் ||10||

பத அர்த்தம்:

அஹம் – ஆத்மாவாகிய நான்
ஏகம் – ஒன்றேயானவன்
இதம் ஸர்வம் – எல்லாவற்றிலும் இருப்பவன்
வ்யோம அதீதம் – ஆகாயத்தையும் கடந்து இருப்பவன்
நிரந்தரம் – எப்பொழுதும் இருப்பவன்
பஸ்யாமி – அறிவது
கதம் – எதைக் கொண்டு
ஆத்மானம் – ஆத்மாவாகிய என்னை
ப்ரத்யக்ஷம் – தோன்றுவது
திரோஹிதம் – மறைவது
வா - என்று

தெளிவுரை:

ஆத்மாவாகிய நான் எல்லாவற்றிலும் ஒருவனாக இருக்கிறேன்; ஆகாயத்தையும் கடந்து எல்லையற்று இருக்கிறேன்; அப்படியிருக்க, எனது சுயம் தோன்றுவதாகவும், மறைவதாகவும் எதைக் கொண்டு அறிவது?

த்வமேவமேகம் ஹி கத ^{2}ம் ந பு^{3}த்^{4}யஸே
ஸமம் ஹி ஸர்வேஷு விம்ரு ’ஷ்டமவ்யயம் ।
ஸதோ ^{3}தி ^{3}தோ Sஸி த்வமக ^{2}ண்டி ^{3}த: ப்ரபோ^{4}
தி ^{3}வா ச நக்தம் ச கத ^{2}ம் ஹி மந்யஸே ॥ 11 ॥

பதச்சேதம்:

த்வம் ஏவ ஏகம் ஹி கதம் ந புத்யஸே
ஸமம் ஹி ஸர்வேஷு விம்ருஷ்டம் அவ்யயம்|

ஸத் உதிதோ அஸி த்வம் அகண்டித: ப்ரபோ
திவா ச நக்தம் ச கதம் ஹி மந்யஸே ||11||

பத அர்த்தம்:

த்வம் ஏவ – ஆத்மாவாகிய நீ மட்டுமே
ஏகம் – ஒன்றேயானவன்
கதம் – ஏன்
ந புத்யஸே – இதை உணர மறுக்கிறாய்?
ஸமம் – ஸமமாக
ஸர்வேஷு விம்ருஷ்டம் – எல்லாவற்றிலும் இருக்கிறாய்
அவ்யயம் – மாறுபாடற்று
ஸத் – இருப்பாக
உதிதோ அஸி – அனைத்திலும் பிரகாசம்
அகண்டித – பிளவுபடாதவன்
ப்ரபோ – பேரறிவு
திவா – பகல்
நக்தம் – இரவு
கதம் – எங்கு
மந்யஸே – சிந்திப்பது

தெளிவுரை:

ஆத்மாவாகிய நீ மட்டுமே உண்மையில் முழுமையானவன் என்பதை ஏன் உணர மறுக்கிறாய்? நீ அனைத்திலும் சமமாக பிரகாசித்து இருக்கும் நித்திய ஆத்மா; நீ மாறுபாடற்ற பேரறிவு, பிளவுபடாதவன்; அப்படியிருக்க இரவு பகல் பற்றி எப்படி சிந்திக்க முடியும்?

ஆத்மாநம் ஸததம் வித் ^{3}தி^{4} ஸர்வத்ரைகம் நிரந்தரம் ।
அஹம் த்^{4}யாதா பரம் த்^{4}யேயமக ^{2}ண்ட ^{3}ம் க^{2}ண்ட்^{3}யதே கத ^{2}ம் ॥ 12 ॥

பதச்சேதம்:

ஆத்மானம் ஸததம் வித்தி ஸர்வத்ர ஏகம் நிரந்தரம் |
அஹம் த்யாதா பரம் த்யேயம் அகண்டம் கண்ட்ய்தே கதம் ||12||

பத அர்த்தம்:

ஆத்மானம் – நான் ஆத்மா
ஸததம் – எப்பொழுதும்
வித்தி – உணரு
ஸர்வத்ர – எல்லாவற்றிலும்
ஏகம் – ஒன்றானவன்
நிரந்தரம் – அழியாதவன்
அஹம் – நான்
த்யாதா – தியானிப்பவன் என்றும்
பரம் த்யேயம் – எனக்கு மேலான தியானிப்பதற்கு ஒன்று உள்ளது என்றும்
அகண்டம் – பிரிக்கமுடியாத உன்னை
கண்ட்யதே கதம் – ஏன் பிரித்து பார்க்கிறாய்?

தெளிவுரை:

நான் ஒன்றேயாகிய ஆத்மா, எப்பொழுதும், எல்லாவற்றிலும், அழியாமல் இருக்கிறேன் என்பதை உணரு; அதை விடுத்து நான் தியானிப்பவன்[1], எனக்கு மேலான தியானிப்பதற்கு ஒன்று உள்ளது என்று, பிரிக்கமுடியாத ஆத்மாவாகிய உன்னை, ஏன் இவ்வாறு பிரித்து பார்க்கிறாய்?

1. **தியானிப்பவன்** – தியானிப்பவன், தியானிக்கப்படுவது, தியானம் என்ற திரிபிடி இருக்கும் வரை, நான் ஆத்மா என்ற உண்மை நிலையை உணருவது கடினமே.

ந ஜாதோ ந ம்ரு ’தோ ऽஸி த்வம் ந தே தே ^{3}ஹ: கதா ^{3}சந ।
ஸர்வம் ப்^{3}ரஹ்மேதி விக் ^{2}யாதம் ப்^{3}ரவீதி ப^{3}ஹுதா^{4} ஶ்ருதி : ॥ 13 ॥

பதச்சேதம்:

ந ஜாதோ ந ம்ருதோ அஸி த்வம் ந தே தேஹ: கதா ச ந |
ஸர்வம் ப்ரஹ்மேதி விக்யாதம் ப்ரவீதி பஹுதா ஸ்ருதி: ||13||

பத அர்த்தம்:

ஜாதோ – பிறப்பு
ம்ருதோ – இறப்பு
ந அஸி – இல்லை
த்வம் – உனக்கு
தேஹ – உடல்
கதா ச – எப்பொழுதும்
ந – இல்லை
ஸர்வம் – அனைத்தும்
ப்ரஹ்மேதி – பிரம்மமே
விக்யாதம் – கூற்றை
ப்ரவீதி – எடுத்துரைக்கின்றன
பஹுதா – பல
ஸ்ருதி – சாஸ்த்திரங்கள்

தெளிவுரை:

ஆத்மாவாகிய உனக்கு ஒருபோதும் பி(இ)றப்பில்லை. உடல் என்பது ஒருபோதும் இருந்ததில்லை. அனைத்து சாஸ்த்திரங்களும் எல்லாம் பிரம்மமே என்ற உண்மையை வெவ்வேறு வழிகளில் எடுத்துரைக்கின்றன.

ஸ பா ^{3}ஹ்யாப்^{4}யந்தரோ ऽஸி த்வம் ஶிவ : ஸர்வத்ர ஸர்வதா ^{3} ।
இதஸ்தத : கத ^{2}ம் ப்^{4}ராந்த : ப்ரதா^{4}வஸி பிஶாசவத் ॥ 14 ॥

பதச்சேதம்:

ஸ பாஹ்ய அப்யந்தரோ அஸி த்வம் ஸிவ: ஸர்வத்ர ஸர்வதா |
இதஸ் தத: கதம் ப்ராந்த: ப்ரதாவஸி பிஸாசவத் ||14||

பத அர்த்தம்:

ஸ – பிரம்மம்
பாஹ்ய – வெளியும்
அப்பய்ந்த்ரோ – உள்ளும்
அஸி – இருக்கிறது
த்வம் – நீ
ஸிவ: - அழிவற்ற சிவம்
ஸர்வத்ர ஸர்வத்ர – எங்கும் எல்லாவற்றிலும் நிறைந்துள்ளாய்
இதஸ் தத – இங்கும் அங்கும்
கதம் – ஏன்
ப்ராந்த – பித்து பிடித்தவன்
ப்ராதவஸி – அலைகிறாய்
பிசாசவத் – பேய் போல

தெளிவுரை:

நீ எப்போதும் உள்ளேயும் வெளியேயும் இருக்கிறாய்; எங்கும், எல்லாவற்றிலும் அழிவற்ற சிவம் நீயே; அப்படியிருக்க, ஏன் பேயைப் போல் அங்கும் இங்கும் குழம்பி அலைகிறாய்?

ஸம்யோக ^{3}ஶ்ச வியோக ^{3}ஶ்ச வர்ததே ந ச தே ந மே ।
ந த்வம் நாஹம் ஜக ^{3}ந்நேத ^{3}ம் ஸர்வமாத்மைவ கேவலம் ॥ 15 ॥

பதச்சேதம்:

ஸம்யோகஸ் ச வியோகஸ் ச வர்ததே ந ச தே ந மே |
ந த்வம் ந அஹம் ஜகம் ந இதம் ஸர்வம் ஆத்ம ஏவ கேவலம் ||15||

பத அர்த்தம்:

ஸம்யோகஸ் ச – சேர்ந்தும்
வியோகஸ் ச – பிரிந்தும்
வர்ததே – வந்தும்
ந ச தே ந மே – எதுவும் எனகில்லை
ந த்வம் – நீ இல்லை
ந அஹம் – நான் இல்லை
ஜகம் ந – உலகம் இல்லை
இதம் – இந்த
ஸர்வம் – அனைத்தும்
ஆத்ம ஏவ கேவலம் – ஆத்மா ஒன்று மட்டுமே

தெளிவுரை:

உனக்கும் எனக்கும் இணைவு என்பதில்லை, பிரிவு என்பதில்லை; யதார்த்தத்தில் நீ, நான், உலகம் என்பதில்லை. இருப்பதெல்லாம் ஒன்றேயான ஆத்மா மட்டுமே.

ஶப் ^{3}தா ^{3}தி ^{3}பஞ்சகஸ்யாஸ்ய நைவாஸி த்வம் ந தே புந : ।
த்வமேவ பரமம் தத்த்வமத : கிம் பரிதப்யஸே ॥ 16 ॥

பதச்சேதம்:

ஸப்தாதி பஞ்கஸ்ய அஸ்ய ந ஏவாஸி த்வம் ந தே புன: |
த்வம் ஏவம் பரமம் தத்த்வம் அத: கிம் பரிதப்யஸே ||

பத அர்த்தம்:

ஸப்தாதி –சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
பஞ்சகஸ்ய –ஐந்து இந்த்ரியங்கள்
அஸ்ய ந த்வம் – உனக்கில்லை
ந தே புன: - அவைகளும் உன்னிடத்தில் இல்லை
த்வம் ஏவம் – நீ மட்டுமே
பரமம் தத்த்வம் அத: – மேலான உண்மையாகிய ஆத்மா
கிம் – எதற்காக
பரிதப்யஸே – துக்கப்படுகிறாய்

தெளிவுரை:

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் முதலிய ஐந்து இந்த்ரியங்கள் உனக்கில்லை; அவ்வைந்து இந்த்ரியங்களும் உன்னிடத்தில் இல்லை; நீ மட்டுமே மேலான உண்மையாகிய ஆத்மா, ஆகையால் எதற்காக துக்கப்படுகிறாய்?

ஜந்ம ம்ரு ’த்யுர்ந தே சித்தம் ப^{3}ந்த^{4}மோக்ஷௌ ஶுபா^{4}ஶுபௌ^{4} ।
கத ^{2}ம் ரோதி ^{3}ஷி ரே வத்ஸ நாமரூபம் ந தே ந மே ॥ 17 ॥

பதச்சேதம்:

ஜன்ம ம்ருத்யுர் ந தே சித்தம் பந்தம் மோக்ஷௌ ஸுப அஸுபௌ|
கதம் ரோதிஷிரே வத்ஸ நாம ரூபம் ந தே மே ||17||

பத அர்த்தம்:

ஜன்ம – பிறப்பு
ம்ருத்யுர் – இறப்பு
ந தே – உனக்கு இல்லை
சித்தம் – நினைவுகள் (எண்ணப் பதிவுகள்)
பந்தம் – பற்று
மோக்ஷௌ – பற்றற்றதும்
ஸுப – சுகம்
அஸுபௌ – துக்கம்
கதம் – ஏன்
ரோதிஷிரே – அழுகிறாய்
நாம – பெயர்
ரூபம் – உருவம்
ந தே மே – எ(உ)னக்கு இல்லை

தெளிவுரை:

ஆத்மாவாகிய உனக்கு, பி(இ)றப்பு இல்லை, நினைவுகள் (எண்ணப் பதிவுகள்) இல்லை, பற்று இல்லை, பற்றற்றும் இல்லை, சுகம் இல்லை, துக்கம் இல்லை; உ(எ)னக்கோ அழைப்பதற்கு பெயர்கள் இல்லை, வடிவம் இல்லை, அப்படியிருக்க ஏன் நீ அழுகிறாய்?

அஹோ சித்த கத ^{2}ம் ப்^{4}ராந்த : ப்ரதா^{4}வஸி பிஶாசவத் ।
அபி^{4}ந்நம் பஶ்ய சாத்மாநம் ராக ^{3}த்யாகா ^{3}த்ஸுகீ ^{2} ப^{4}வ ॥ 18 ॥

பதச்சேதம்:

அஹோ சித்த கதம் ப்ராந்த: ப்ரதாவஸி பிஸாசவத் |
அபின்னம் பஸ்ய ச ஆத்மானம் ராக த்யாகாத் ஸுகி பவ ||18||

பத அர்த்தம்:

அஹோ – ஓ (ஆச்சர்யம்)
சித்த – மனமே
கதம் – எதற்காக
ப்ராந்த – குழம்பி
ப்ரதாவஸி – அலைகிறாய்
பிஸாசவத் – பேய் பிடித்தவன் போல
அபின்னம் – பிளவுபடாத
பஸ்ய ச – உணர்ந்து
ஆத்மானம் – நீ அத்மா
ராக த்யாகாத் – விருப்பு வெறுப்பு ஒழித்து
ஸுகி பவ – சுயத்தில் சுகமாய் இரு

தெளிவுரை:

ஓ மனமே! நீ எதற்காக பேய் பிடித்தவன் போல குழம்பி அலைகிறாய்; நீ பிளவற்ற ஆத்மா என்பதை உணர்ந்து, விருப்பு, வெறுப்பு ஒழித்து, உன் சுயத்தில் சுகமாய் இரு.

த்வமேவ தத்த்வம் ஹி விகாரவர்ஜிதம்
நிஷ்கம்பமேகம் ஹி விமோக்ஷவிக் ^{3}ரஹம் ।
ந தே ச ராகோ ^{3} ஹ்யத ^{2}வா விராக :^{3}
கத ^{2}ம் ஹி ஸந்தப்யஸி காமகாமத : ॥ 19 ॥

பதச்சேதம்:

த்வம் ஏகம் தத்த்வம் ஹி விகார வர்ஜிதம்
நிஷ்கம்பம் ஏகம் ஹி விமோக்ஷ விக்ரஹம் |
ந தே ச ராகோ ஹி அதவா விராக:
கதம் ஹி ஸந்தப்யஸி காமகாமத: ||19||

பத அர்த்தம்:

த்வம் – நீ
ஏகோ – ஒன்றேயாகிய
தத்த்வம் – உண்மை
விகார – மாறுபாடு
வர்ஜிதம் – உனக்கில்லை
நிஷ்கம்பம் – அசைவற்ற
ஏகம் – ஒன்றேயான
விமோக்ஷ – விடுதலை
விக்ரஹம் – வடிவினன்
ந தே – உனக்கில்லை
ராகோ – விருப்பு
அதவா – மற்றும்
விராக – வெறுப்பு
கதம் ஹி – எதற்கு இந்த
ஸந்தப்யஸி – வேதனை கொள்கிறாய்
காமகாமத: - ஆசையின் காரணமாக

தெளிவுரை:

ஒன்றேயான ஆத்மாவாகிய உனக்கு, மாறுபாடு என்பதில்லை; நீ யதார்தத்தில் ஒன்றேயானவன், அசைவற்றவன், விடுதலை வடிவினன்; எதனி(யாரி)டத்திலும் விருப்பு மற்றும் வெறுப்பு என்பது உனக்கில்லை; ஆகையால் ஆசையின் காரணமாக எதற்காக வேதனை கொள்கிறாய்?

வத ^{3}ந்தி ஶ்ருதய : ஸர்வா : நிர்கு ^{3}ணம் ஶுத் ^{3}த^{4}மவ்யயம் ।
அஶரீரம் ஸமம் தத்த்வம் தந்மாம் வித் ^{3}தி^{4} ந ஸம்ஶய : ॥ 20 ॥

பதச்சேதம்:

வதந்தி ஸ்ருதய: ஸர்வா: நிர்குணம் ஸுத்தம் அவ்யயம் |
அஸரீரம் ஸமம் தத்த்வம் தன்மாம் வித்தி ந ஸம்ஸய: ||20||

பத அர்த்தம்:

வதந்தி – எடுத்துரைக்கின்றன
ஸ்ருதய: - சாஸ்த்திரங்களும்
ஸர்வா: - எல்லா
நிர்குணம் – குணங்களற்ற
ஸுத்தம் – தூயமையான
அவ்யயம் – மாறுபாடற்ற
அஸரீரம் – உடலற்ற
ஸமம் – ஒரே
தத்த்வம் – உண்மை
தன்மாம் வித்தி - என்பதை உணர்ந்து
ந ஸம்ஸய: - இதில் சந்தேகமில்லை

தெளிவுரை:

அனைத்து சாஸ்த்திரங்களும் நான் பிரம்மம் என்ற யதார்த்த உண்மையை எடுத்துரைக்கின்றன; பிரம்மம் குணங்களற்றது, தூய்மையானது, மாறுபாடற்றது, உடலற்றது, எல்லாவற்றையும் சமமாக வியாபித்துள்ளது; ஆகையால் நான் பிரம்மம் என்ற உண்மையை உணர்ந்து சந்தேகமின்றி இருப்பாய்.

ஸாகாரமந்ரு ’தம் வித் ^{3}தி^{4} நிராகாரம் நிரந்தரம் ।
ஏதத்தத்த்வோபதே ^{3}ஶேந ந புநர்ப^{4}வஸம்ப^{4}வ : ॥ 21 ॥

பதச்சேதம்:

ஸாகாரம் அன்ருதம் வித்தி நிராகாரம் நிரந்தரம் |
ஏதத் தத்த்வ உபதேஸே ந புனர் பவஸம்பவ: ||21||

பத அர்த்தம்:

ஸாகாரம் – பிரபஞ்சம்
அன்ருதம் – உண்மையல்ல
வித்தி – என்று அறிவாய்
நிராகாரம் – வடிவமற்றதும்
நிரந்தரம் – என்றுமுள்ளதும்
ஏதத் – என்ற அந்த பிரம்மத்தை பற்றிய
தத்தவ – உண்மையை
உபதேஸே – குருவின் மூலம் அறிந்து
ந புனர் பவ ஸம்பவ: - மீண்டும் பி(இ)றப்பு என்ற சுழலில் வருவதில்லை

தெளிவுரை:

வடிவுடைய, பெயருடைய இப்பிரபஞ்சம் உண்மையல்ல என்பதை அறிவாயாக; நாம ரூபமற்ற பிரம்மமே என்றுமுள்ளது; இவ்வுண்மையை தக்க குருவின் மூலம் அறிந்து, தனது வாழ்க்கையை வாழ்பவர், மீண்டும் பி(இ)றப்பிற்கு ஆளாவதில்லை.

ஏகமேவ ஸமம் தத்த்வம் வத ^{3}ந்தி ஹி விபஸ்சித : ।
ராக ^{3}த்யாகா ^{3}த்புநஸ்சித்தமேகாநேகம் ந வித் ^{3}யதே ॥ 22 ॥

பதச்சேதம்:

ஏகம் ஏவ ஸமம் தத்த்வம் வதந்தி ஹி விபஸ்சித: |
ராக த்யாகாத் புனஸ் சித்தம் ஏகோ ந ஏகம் ந வித்யதே ||22||

பத அர்த்தம்:

ஏகம் ஏவ – ஒன்றேயாகிய ஆத்மா மட்டுமே
ஸமம் – சமமானது
தத்த்வம் – உண்மையை
வதந்தி – எடுத்துரைக்கின்றனர்

விபஸ்சித: - உணர்ந்தவர்கள்
ராக த்யாகாத் – விருப்பு வெறுப்பு விலகிய
புனஸ் – மீண்டும்
சித்தம் – மனம்
ஏகோ – ஒற்றுமை
ந ஏகம் – வேற்றுமை
ந வித்யதே – உணர்வதில்லை

தெளிவுரை:

உண்மையாகிய ஆத்மா ஒன்றானது, என்றும் மாறாதது என்று ஞானிகள் எடுத்துரைக்கின்றனர்; விருப்பு, வெறுப்பு போன்ற இருமைகள் கைவிடப்படும்போது, ஒற்றுமை, வேற்றுமை போன்ற இருமைகளை மனம் உணர்வதில்லை.

அநாத்மரூபம் ச கத ^{2}ம் ஸமாதி^{4} -
ராத்மஸ்வரூபம் ச கத ^{2}ம் ஸமாதி :^{4} ।
அஸ்தீதி நாஸ்தீதி கத ^{2}ம் ஸமாதி^{4} -
ர்மோக்ஷஸ்வரூபம் யதி ^{3} ஸர்வமேகம் ॥ 23 ॥

பதச்சேதம்:

அனாத்ம ரூபம் ச கதம் ஸமாதிர்
ஆத்ம ஸ்வரூபம் ச கதம் ஸமாதி: |
அஸ்தி இதி நாஸ்தி இதி கதம் ஸமாதிர்
மோக்ஷ ஸ்வரூபம் யதி ஸர்வம் ஏகம் ||23||

பத அர்த்தம்:

அனாத்ம ரூபம் – ஆத்மா அல்லாததற்கு
கதம் – ஏது?
ஸமாதிர் – ஸமாதி
ஆத்ம ஸ்வரூம் – ஆத்மாவிற்கு
கதம் – ஏது?
ஸமாதிர் – ஸமாதி
அஸ்தி இதி – ஆத்மா இருக்கிறது என்றும்
நாஸ்தி இதி – ஆத்மா இல்லை என்றும்
கதம் ஸமாதிர் – வாதிக்கும் வரை ஸமாதி ஏது?
மோக்ஷ ஸ்வரூபம் – பற்றற்ற ஆத்மா
யதி ஸர்வம் ஏகம் – ஒன்றேயாகிய ஆத்மா ஸமாதி ஏது?

தெளிவுரை:

ஒருவர் தன்னை ஆத்மாவாக உணராத வரை அவருக்கு சமாதி ஏது? அதுவே, தன்னை ஆத்மாவாக உணர்ந்தவருக்கு சமாதி ஏது? ஆத்மா இருக்கிறது, இல்லை என்று வாதிக்கும் வரை சமாதி ஏது? நான் ஒன்றேயாகிய ஆத்மா, பற்றற்றவன் என்றும் உணர்ந்தவருக்கு சமாதி ஏது?

விஶுத்^{3}தோ^{4} ऽஸி ஸமம் தத்த்வம் விதே ^{3}ஹஸ்த்வமஜோ ऽவ்யய : ।
ஜாநாமீஹ ந ஜாநாமீத்யாத்மாநம் மந்யஸே கத ^{2}ம் ॥ 24 ॥
பதச்சேதம்:

விஸுத்தோ அஸி ஸமம் தத்த்வம் விதேஹஸ் த்வம் அஜோ அவ்யய: |
ஜானாமி இஹ ந ஜானாமி இதி ஆத்மானம் மன்யஸே கதம் ||24||

பத அர்த்தம்:

விஸுத்தோ – தூய்மையாக
அஸி – இருக்கிறாய்
ஸமம் – மாறுபாடற்ற
தத்த்வம் – உண்மை
விதேஹஸ் – உடலற்றவன்
த்வம் – நீ
அஜோ – பிறப்பவற்றவன்
அவ்யய: - அழிவற்றவன்
ஜானாமி இஹ – அறுகிறேன்
ந ஜானாமி இதி – அறியவில்லை
ஆத்மானம் - ஆத்மாவை
மன்யஸே – எண்ணுவது
கதம் - எதற்கு

தெளிவுரை:

நீ எப்போதும் தூய்மையானவன், மாறாத உண்மை; நீ உடலற்றவன், பிறப்பற்றவன் மற்றும் அழியாதவன்; அப்படியிருக்க, எனக்கு ஆத்மா தெரியும் அல்லது எனக்கு ஆத்மா தெரியாது, போன்ற எண்ணங்கள் எதற்கு?

தத்த்வமஸ்யாதி ^{3}வாக்யேந ஸ்வாத்மா ஹி ப்ரதிபாதி ^{3}த: ।
நேதி நேதி ஶ்ருதிர்ப் ^{3}ரூயாத ^{3}ந்ரு ’தம் பாஞ்சபௌ^{4}திகம் ॥ 25 ॥

பதச்சேதம்:

தத்த்வமஸி ஆதி வாக்யேன ஸ்வ ஆத்மா ஹி ப்ரதிபாதி த: |
நேதி நேதி ஸ்ருதிர் ப்ரூயாத் அன்ருதம் பாஞ்ச பௌதிகம் ||25||

பத அர்த்தம்:

தத்த்வமஸி – அது நீயாக இருக்கிறாய்
ஆதி – போன்ற
வாக்யேன – மகா வாக்கியங்கள்
ஸ்வ – நான்
ஆத்மா ஹி – ஆத்மா
ப்ரதிபாதித: - மனதின் பிரதிபலிப்பு
நேதி நேதி – இது அல்ல இது அல்ல
ஸ்ருதிர் – சாஸ்த்திரங்கள்
ப்ரூயாத் – எடுத்துரைகின்றன
அன்ருதம் – உண்மையல்ல
பாஞ்ச – ஐந்து

பௌதிகம் – பூதங்களின் சேர்க்கை

தெளிவுரை:

சாஸ்த்திரங்கள் ஆத்மாவின் யதார்த்த உண்மையை நீ அதுவாக இருக்கிறாய் மற்றும் நான் பிரம்மம் போன்ற மகாவாக்கியங்களால் எடுத்துரைக்கின்றது; ஐந்து பூதங்களின் சேர்க்கையால் ஆன இவ்வுடல் உண்மையற்றது, மனதின் பிரதிபலிப்பு; ஆகையால் சாஸ்த்திரங்கள், ஆத்மா அல்லாதவற்றை இது அல்ல, இது அல்ல என்று கூறுகின்றது.

ஆத்மந்யேவாத்மநா ஸர்வம் த்வயா பூர்ணம் நிரந்தரம் ।
த்⁴யாதா த்⁴யாநம் ந தே சித்தம் நிர்லஜ்ஜம் த்⁴யாயதே கத ²ம் ॥ 26 ॥

பதச்சேதம்:

ஆத்மனி ஏவ ஆத்மனா ஸர்வம் த்வயா பூர்ணம் நிரந்தரம் |
த்யாதா த்யானம் ந தே சித்தம் நிர்லஜ்ஜம் த்யாயதே கதம் ||26||

பத அர்த்தம்:

ஆத்மனி – ஆத்மாவாகிய
ஏவ - மட்டுமே
ஆத்மனா – ஆத்மாவால் படைக்கப்பட்ட பிரபஞ்சம்
ஸர்வம் - அனைத்தும்
த்வயா - உன்னால்
பூர்ணம் – நிறைந்துள்ளது
நிரந்தரம் – எப்பொழுதும்
த்யாதா – தியானம் செய்பவர்
த்யானம் – தியானம்
ந – இல்லை
தே சித்தம் – உன் மனதில்
நிர்லஜ்ஜம் - வெட்கமின்றி
த்யாயதே – தியானம்
கதம் – எதற்கு?

தெளிவுரை:

இப்பிரபஞ்சம் அனைத்தும் ஆத்மாவாகிய உன்னால் மட்டுமே எப்பொழுதும் நிறைந்துள்ளது; ஆகையால், தியானம் செய்பவர், தியானம் போன்றவை உன் மனதிற்கு இல்லை; அப்படியிருக்க, வெட்கமின்றி ஏன் உன் மனது தியானம்[1] செய்ய விழைகிறது?

1. **தியானம்** - தியானம் என்ற செயல் பயனற்றது என்று தவறாக புரிந்து கொள்ளக்கூடாது. இங்கு ஸ்ரீ தத்தாத்ரேயர் எடுத்துரைப்பது என்னவெனில், யதார்த்தத்தில் மனிதன் எப்பொழுதும் சுதந்திரமானவன், ஆகையால் தியானம் என்ற செயல் கூட, தன் இயல்பான சுயத்தை மறந்ததை (தன்மறதியை) குறிக்கிறது, அதாவது, தன்சுயத்தை மறந்த நிலையே தன்னை மறப்பதாகும், இது ஒரு அவல நிலையாகும்.

ஶிவம் ந ஜாநாமி கத ^{2}ம் வதா ^{3}மி
ஶிவம் ந ஜாநாமி கத ^{2}ம் ப^{4}ஜாமி ।
அஹம் ஶிவஸ்சேத்பரமார்த ^{2}தத்த்வம்
ஸமஸ்வரூபம் க^{3}க^{3}நோபமம் ச ॥ 27 ॥

பதச்சேதம்:

ஸிவம் ந ஜானாமி கதம் வதாமி
ஸிவம் ந ஜானாமி கதம் பஜாமி |
அஹம் ஸிவஸ்சேத் பரமார்த தத்த்வம்
ஸமஸ்வரூபம் ககனோபமம் ச ||27||

பத அர்த்தம்:

ஸிவம் – ஆத்மாவாகிய என்னை
ந ஜானாமி – அறியவில்லை என்றால்
கதம் – என்ன/எதை
வதாமி – பேசுவது
பஜாமி – வழிபடுவது
அஹம் - நான்
ஸவிஸ்சேத் – சிவம்
பரமார்த்த தத்த்வம் – மேலான உண்மை
ஸமஸ்வரூபம் – எங்கும் நிறைந்தவன்
ககனோபமம் – ஆகாயம் போல

தெளிவுரை:

ஞானவடிவான ஆத்மாவாகிய என்னை அறியவில்லை எனில், எதனை பற்றி பேசுவது? எதை வழிபடுவது? ஆகாயம் போல, எங்கும் நிறைந்த மேலான சிவமே நான்.

நாஹம் தத்த்வம் ஸமம் தத்த்வம் கல்பநாஹேதுவர்ஜிதம் ।
க்^{3}ராஹ்யக் ^{3}ராஹகநிர்முக்தம் ஸ்வஸம்வேத் ^{3}யம் கத ^{2}ம் ப^{4}வேத் ॥ 28 ॥

பதச்சேதம்:

ந அஹம் தத்த்வம் ஸமம் தத்த்வம் கல்பனா ஹேது வர்ஜிதம் |
க்ராஹ்ய க்ராஹக நிர்முக்தம் ஸ்வஸம் வேத்யம் கதம் பவேத் ||28||

பத அர்த்தம்:

ந – இல்லை
அஹம் – நான்
தத்த்வம் – உண்மை
ஸமம் – எல்லாவற்றிலும்
தத்தவம் கல்பனா – அனுமானம் (உண்மையை போல)
ஹேது – காரணம்
வர்ஜிதம் – அப்பாற்பட்டது
க்ராஹ்ய – அறிபவன்
கிராஹக – அறிபடுபொருள்

நிர்முக்தம் – விடுபட்டது
ஸ்வஸம் வேத்யம் – என்னை அறிந்தேன் என்று
கதம் - எப்படி
பவேத் – சொல்வது

தெளிவுரை:

பிரபஞ்சத்தின் நியதிகள் (கொள்கைகள்) என்பது எனகல்ல; ஏனெனில், நான் யதார்த்த உண்மை; இவ்வுண்மையானது, கற்பனை (அனுமானம்) மற்றும் காரணத்திற்கு அப்பாற்பட்டது; நான் அறிபவன், அறிபடுபொருள் என்பதிலிருந்து விடுபட்டவன்; அப்படியிருக்க, என்னை நான் அறிந்தேன் என்று எப்படி சொல்வது?

அநந்தரூபம் ந ஹி வஸ்து கிஞ்சித்
தத்த்வஸ்வரூபம் ந ஹி வஸ்து கிஞ்சித் ।
ஆத்மைகரூபம் பரமார்த ^{2}தத்த்வம்
ந ஹிம்ஸகோ வாபி ந சாப்யஹிம்ஸா ॥ 29 ॥

பதச்சேதம்:

அனந்த ரூபம் ந ஹி வஸ்து கிஞ்சித்
தத்த்வ ஸ்வரூபம் ந ஹி வஸ்து கிஞ்சித் |
ஆத்ம ஏக ரூபம் பரமார்த தத்த்வம்
ந ஹிம்ஸ கோ வாபி ந சாபி அஹிம்ஸா ||29||

பத அர்த்தம்:

அனந்த ரூபம் – எல்லையற்ற சுயம்
ந ஹி வஸ்து கிஞ்சித் – ஒரு பொருளாக இருக்க இயலாது
ந ஹி தத்த்வ ஸ்வரூபம் – சுயமாக இருக்க இயலாது
வஸ்து கிஞ்சித் – இது அது என்று குறிப்பிடப்படும் எதுவும்
ஆத்ம – ஆத்மா
ஏக ரூபம் – ஒன்றே
பரமார்த்த தத்த்வம் – மேலான உண்மை
ந ஹிம்ஸ – காயபடுவதில்லை
ந சாபி ஹிம்ஸா – காயபடுத்துவதும் இல்லை

தெளிவுரை:

எல்லையற்ற சுயம், ஒரு பொருளாக இருக்க இயலாது; இ(அ)து என்று குறிப்பிடப்படும் எதுவாகவும் சுயம் இருக்க இயலாது; எனெனில், சுயமான ஆத்மா ஒன்றே மேலான உண்மை, அது காயப்படுவதும் அல்ல, காயப்படுத்துவதும் அல்ல.

விஶுத் ^{3}தோ^{4} Sஸி ஸமம் தத்த்வம் விதே ^{3}ஹமஜமவ்யயம் ।
விப்^{4}ரமம் கத ^{2}மாத்மார்தே ^{2} விப்^{4}ராந்தோ Sஹம் கத ^{2}ம் புந : ॥ 30 ॥

பதச்சேதம்:

விஸுத்தோ அஸி ஸமம் தத்த்வம் விதேஹம் அஜம் அவ்யயம் |
விப்ரமம் கதம் ஆத்மார்தே விப்ராந்தோ அஹம் கதம் புன: ||30||

பத அர்த்தம்:

விஸுத்தோ - தூய்மையான
அஸி - இருக்கிறாய்
ஸமம் – ஒன்றாக
தத்த்வம் – உண்மை
விதேஹம் – உலடற்றவன்
அஜம் – பிறவாதவன்
அவ்யயம் – அழியாதவன்
விப்ரமம் – குழப்பம்
கதம் – எப்படி
ஆத்மார்தே – ஆத்மாவை பற்றி
விப்ராந்தோ – குழப்பிவிட்டேன்
அஹம் – நான்
கதம் – எப்படி
புன: - மீண்டும்

தெளிவுரை:

ஆத்மாவாகிய நீ, தூய்மையானவன், உடலற்றவன், பிறவாதவன், அழியாதவன், மாறாத ஒரே உண்மை; அப்படியிருக்கையில், ஆத்மாவை பற்றிய குழப்பம் உனக்கு எப்படி இருக்க முடியும்? நான் குழம்பிவிட்டேன் என்ற எண்ணமும் உன்னில் எப்படி மீண்டும் மீண்டும் தோன்றுகிறது?

க^{4}டே பி^{4}ந்நே க^{4}டாகாஶம் ஸுலீநம் பே^{4}த ^{3}வர்ஜிதம் ।
ஶிவேந மநஸா ஶுத் ^{3}தோ^{4} ந பே^{4}த :^{3} ப்ரதிபா^{4}தி மே ॥ 31 ॥

பதச்சேதம்:

கடே பின்னே கடாகாஸம் ஸுலீனம் பேத வர்ஜிதம் |
ஸிவேன மனஸா ஸுத்தோ ந பேத: ப்ரதிபாதி மே ||31||

பத அர்த்தம்:

கடே – குடம்
பின்னே – உடைந்தால்
கடாகாஸம் – குடத்தில் உள்ள ஆகாயம்
ஸுலீனம் – மகா ஆகாயத்திலிருந்து
பேத – வேறானது
வர்ஜிதம் – இல்லை
ஸிவேன – ஆத்மா
மனஸா – மனமானது
ஸுத்தோ – தூய்மை அடையும் போது
ந பேத – வேறுபாடு இல்லை
ப்ரதிபாதி மே – நான் காணுவது

தெளிவுரை:

எப்படி ஒரு குடம் உடைந்தால் அதனிலுள்ள ஆகாயம் வேறுபடாத மகா ஆகாயத்துடன் முழுமையாக ஒன்றிணைகிறதோ, அப்படி மனம் தூய்மை அடையும் போது, அது பிரம்மத்துடன் ஐக்கியமாகிறது; இதனால் எந்த வேறுபாட்டையும் நான் உணரவில்லை.

குறிப்பு: இதனையே ஜீவபிரம்ம ஐக்கியம் என்று சாஸ்த்திரங்கள் எடுத்துரைக்கின்றன.

ந க^{4}டோ ந க^{4}டாகாஶோ ந ஜீவோ ஜீவவிக் ^{3}ரஹ : ।
கேவலம் ப்^{3}ரஹ்ம ஸம்வித் ^{3}தி^{4} வேத் ^{3}யவேத ^{3}கவர்ஜிதம் ॥ 32 ॥

பதச்சேதம்:

ந கடோ ந கட ஆகாஸோ ந ஜீவோ ஜீவ விக்ரஹ: |
கேவலம் ப்ரஹ்ம ஸம்வித்தி வேத்ய வேதக வர்ஜிதம் ||32||

பத அர்த்தம்:

ந கடோ – குடம் இல்லை
ந கடா ஆகாஸோ – ஆகாயம் இல்லை
ந ஜீவோ – சீவன் இல்லை
ஜீவ – உடல்
விக்ரஹ: - வேறுபாடுகள்
கேவலம் – ஒன்றேயான
ப்ரஹ்ம – பிரம்மத்தை
ஸம்வித்தி – உணர்ந்து
வேத்ய – அறிபடுவது
வேதக – அறிபடுபவர்
வர்ஜிதம் – போன்றவை இல்லை

தெளிவுரை:

குடம், குடத்திலுள்ள ஆகாயம், உடல், ஆத்மா போன்ற வேறுபாடுகள் பிரம்மத்திடம் இல்லை; ஒன்றேயான பிரம்மம் அறிய முடியும், அறிய முடியாது போன்ற வேறுபாடுகள் அற்றது என்பதை உணரு.

ஸர்வத்ர ஸர்வதா ^{3} ஸர்வமாத்மாநம் ஸததம் த்^{4}ருவம் ।
ஸர்வம் ஶூந்யமஶூந்யம் ச தந்மாம் வித் ^{3}தி^{4} ந ஸம்ஶய : ॥ 33 ॥

பதச்சேதம்:

ஸர்வத்ர ஸர்வதா ஸர்வம் ஆத்மானம் ஸததம் த்ருவம் |
ஸர்வம் ஸூன்யம் அஸூன்யம் ச தன்மாம் வித்தி ந ஸம்ஸய: ||33||

பத அர்த்தம்:

ஸர்வத்ர – எல்லா இடத்திலும்

ஸர்வதா – எல்லா காலங்களிலும்
ஸர்வம் – எல்லாவற்றிலும்
ஆத்மானம் – ஆத்மாவானது
ஸததம் – நித்தியமானது
த்ருவம் – அழியாதது
ஸர்வம் – அனைத்திலும்
ஸூன்யம் – பாழானதும்
அஸூன்யம் – பாழற்றதும்
தன்மாம் - ஆத்மாவை
வித்தி - உணர்வாய்
ந ஸம்ஸய: - சந்தேகமில்லை

தெளிவுரை:

ஆத்மாவானது எல்லா இடங்களிலும் எல்லா காலங்களிலும், எல்லாவற்றிலும் உள்ளது; அது நித்தியமானது, மாறாதது; இப்பிரபஞ்சத்தில் உள்ள பாழானது மற்றும் பாழற்றது என அனைத்தும் ஆத்மாவால் நிறைந்துள்ளது; நான் ஆத்மா என்பதை உணர்வாய், இதில் சந்தேகமில்லை.

வேதா ^{3} ந லோகா ந ஸுரா ந யஜ்ஞா
வர்ணாஶ்ரமோ நைவ குலம் ந ஜாதி : ।
ந தூ^{4}மமார்கோ ^{3} ந ச தீ ^{3}ப்திமார்கோ ^{3}
ப்^{3}ரஹ்மைகரூபம் பரமார்த ^{2}தத்த்வம் ॥ 34 ॥

பதச்சேதம்:

வேதா ந லோகா ந ஸுரா ந யஜ்ஞா
வர்ண ஆஸ்ரமோ ந ஏவ குலம் ந ஜாதி: |
ந தூம மார்கோ ந ச தீப்தி மார்கோ
ப்ரஹ்ம ஏக ரூபம் பரமார்த்த தத்த்வம் ||34||

பத அர்த்தம்:

வேதா – வேதங்கள்
லோகங்கள் – உலகங்கள்
ஸுரா – தெய்வங்கள்
யஜ்ஞா – யஜ்ஞங்கள்
ந – இல்லை
வர்ண ஆஸ்ரமம் – வாழ்வியல் முறைகள்
ந – இல்லை
குலம் – பரம்பரை
ஜாதி – இனம்
ந – இல்லை
தூம மார்கோ – இருள் பாதை
தீப்த மார்கோ – ஒளி பாதை
ந - இல்லை
ப்ரஹ்ம – பிரம்மம்
ஏகம் ரூபம் – ஒன்றேயானவன்
பரமார்த்த – மேலான
தத்த்வம் - உண்மை

தெளிவுரை:

பிரம்மத்தில் வேதங்களோ, உலகங்களோ, தெய்வங்களோ, யாகங்களோ இல்லை; வாழ்வியல் முறைகளோ, இனங்களோ, பரம்பரையோ இல்லை, இருள், ஒளி போன்ற பாதைகள் இல்லை. பிரம்மம் மட்டுமே மேலான யதார்த்த உண்மை.

வ்யாப்யவ்யாபகநிர்முக்த : த்வமேக : ஸப ^{2}லம் யதி ^{3} ।
ப்ரத்யக்ஷம் சாபரோக்ஷம் ச ஹ்யாத்மாநம் மந்யஸே கத ^{2}ம் ॥ 35 ॥

பதச்சேதம்:

வ்யாபி அவ்யாபக நிர்முக்த: த்வம் ஏக: ஸபலம் யதி |
ப்ரத்யக்ஷம் ச அபரோக்ஷம் ச ஹி ஆத்மானம் மன்யஸே கதம் ||35||

பத அர்த்தம்:

வ்யாபி – அனைத்தையும் ஊடுருவி
அவ்யாபக – பரவி கிடப்பது
த்வம் – நீ
ஏகம் – ஒன்றேயான
ஸபலம் யதி – என்று உணர்ந்தால்
ப்ரத்யக்ஷம் – அறியப்படுவதாயும்
அபரோக்ஷம் ச ஹி – உணரக்கூடியதாயும்
ஆத்மானம் – ஆத்மாவே
மன்யஸே – நினைக்க முடியும்
கதம் - எப்படி

தெளிவுரை:

அனைத்தையும் ஊடுருவி, பரவி கிடப்பதுமான ஒன்றேயான ஆத்மாவே நீ என்று உணர்ந்தால்; ஆத்மா அறியப்படுவது என்றும், உணரக்கூடியது என்றும், எப்படி உன்னால் நினைக்க முடியும்?

அத் ^{3}வைதம் கேசிதி ^{3}ச்ச ^{2}ந்தி த் ^{3}வைதமிச்ச ^{2}ந்தி சாபரே ।
ஸமம் தத்த்வம் ந விந்த ^{3}ந்தி த் ^{3}வைதாத் ^{3}வைதவிவர்ஜிதம் ॥ 36 ॥

பதச்சேதம்:

அத்வைதம் கேசித் இச்சந்தி த்வைதம் இச்சந்தி ச அபரே |
ஸமம் தத்த்வம் ந விந்தந்தி த்வைத அத்வைத விவர்ஜிதம் ||36||

பத அர்த்தம்:

அத்வைதம் – ஒருமை வாதத்தை
கேசித் – சிலர்
இச்சந்தி - விரும்புகின்றனர்
த்வைதம் – இருமை வாதத்தை
கேசித் – சிலர்

இச்சந்தி - விரும்புகின்றனர்
ஸமம் – ஒன்றேயான
தத்த்வம் – உண்மையை
ந விந்தந்தி – உணருவதில்லை
த்வைத அத்வைத – இருமையும் ஒருமையும்
விவர்ஜிதம் - அற்ற

தெளிவுரை:

சிலர் ஒருமை வாதத்தை விரும்புகின்றனர், சிலர் இருமை வாதத்தை விரும்புகின்றனர்; ஆனால் யாரும் இருமையும், ஒருமையும் அற்ற பிரம்மத்தை உணருவதில்லை.

ஶ்வேதாதி ^{3}வர்ணரஹிதம் ஶப் ^{3}தா ^{3}தி ^{3}கு^{3}ணவர்ஜிதம் ।
கத ^{2}யந்தி கத ^{2}ம் தத்த்வம் மநோவாசாமகோ ^{3}சரம் ॥ 37 ॥

பதச்சேதம்:

ஸ்வேதாதி வர்ண ரஹிதம் ஸப்தாதி குண வர்ஜிதம் |
கதயந்தி கதம் தத்த்வம் மனோ வாசம் அகோசரம் ||37||

பத அர்த்தம்:

ஸ்வேதாதி – வெள்ளை முதலிய
வர்ண ரஹிதம் – நிறங்களற்றது பிரம்மம்
ஸப்தாதி – ஒலி முதலிய
குண விர்ஜிதம் – புலன்களற்றது பிரம்மம்
கதயந்தி கதம் – எங்கனம் விவரிப்பது?
மனோ வாசம் – மனதிற்கும் வாக்கிற்கும்
அகோசரம் – அப்பாற்பட்ட

தெளிவுரை:

பிரம்மம் நிறங்களற்றது (வெண்மை, கருமை முதலியவை); புலன்களற்றது (ஒலி, சுவை முதலியவை); அப்படியிருக்க மனதிற்கும் வாக்கிற்கும் அப்பாற்பட்ட பிரம்மத்தை எங்கனம் விவரிப்பது?

யதா ^{3}Sந்ரு ’தமித ^{3}ம் ஸர்வம் தே ^{3}ஹாதி ^{3}க^{3}க^{3}நோபமம் ।
ததா ^{3} ஹி ப்^{3}ரஹ்ம ஸம்வேத்தி ந தே த்^{3}வைதபரம்பரா ॥ 38 ॥

பதச்சேதம்:

யதா அன்ருதம் ஸர்வம் தேஹாதி ககனோபமம் |
ததா ஹி ப்ரஹ்ம ஸம்வேத்தி ந தே த்வைத பரம்பரா ||38||

பத அர்த்தம்:

யதா – எவ்வாறு

அன்ருதம் – கற்பனையானது (ஏதுமற்றது)
ஸர்வம் – இப்பிரபஞ்சம் அனைத்தும்
தேஹாதி – உடல் உட்பட
ககனோபமம் – ஆகாயத்தை போல பாழானதாய்
ததா – அவ்வாறு
ஸம்வேத்தி – நன்றாக பிரம்மத்தை உணர்ந்தவன்
ந தே – அவனிடத்தில் இல்லை
த்வைத பரம்பரா - இருமைகள் மனம்

தெளிவுரை:

உடல் உட்பட இப்பிரபஞ்சம் அனைத்தும் கற்பனையானது (ஏதுமற்றது), அது ஆகாயம் போன்று பாழானதாய் (ஏதுமற்றதாய்) உணரும் பொழுது, உண்மையில் ஒருவன் பிரம்மத்தை உணர்ந்தவன் ஆவான்; அதன் பின் அவனிடத்தில் இருமைகள் என்ற பேச்சிற்கே இடமில்லை.

பரேண ஸஹஜாத்மாபி ஹ்யபி^{4}ந்ந : ப்ரதிபா^{4}தி மே ।
வ்யோமாகாரம் ததை ^{2}வைகம் த்^{4}யாதா த்^{4}யாநம் கத ^{2}ம் ப^{4}வேத் ॥ 39 ॥

பதச்சேதம்:

பரேண ஸஹஜ ஆத்மாபி ஹி அபின்ன: ப்ரதிபாதி மே |
வ்யோமாகாரம் தத் ஏவ ஏகம் த்யாதா த்யானம் கதம் பவேத் ||39||

பத அர்த்தம்:

பரேண – தோன்றுகிறது
ஸஹஜ – சுயமும்
ஆத்மாபி – பிரம்மமும்
அபின்ன – வேறல்ல
ப்ரதிபாதி மே – என்னிடம் இருக்கிறது
வ்யோமாகாரம் – ஆகாயம் போன்று
தத் – அது (பிரம்மம்)
ஏவ – மட்டுமே
ஏகம் – ஒன்றானது
த்யாதா – தியானம் செய்பவர்
த்யானம் – தியானம்
கதம் – எப்படி
பவேத் – சொல்வது

தெளிவுரை:

ஒன்றேயாகிய பிரம்மம் மட்டுமே உள்ளது, அந்த சுயமும், பிரம்மமும் வேறல்ல; ஆகாயத்தை போன்று என்னிடம் இருக்கிறது; அப்படியிருக்க, தியானம் செய்பவர், தியானம் போன்றவை எப்படி இருக்க முடியும்?

யத்கரோமி யத ^{3}ஶ்நாமி யஜ்ஜுஹோமி த^{3}தா ^{3}மி யத் ।
ஏதத்ஸர்வம் ந மே கிஞ்சித் ^{3}விஶூத் ^{3}தோ^{4} Sஹமஜோ Sவ்யய : ॥ 40 ॥

பதச்சேதம்:

யத் கரோமி யத் அஸ்னாமி யஜ் ஜுஹோமி ததாமி யத் |
ஏதத் ஸர்வம் ந மே கிஞ்சித் விஸுத்தோ அஹம் அஜோ அவ்யய ||40||

பத அர்த்தம்:

யத் – எதை
கரோமி – செய்தாலும்
யத் – எதை
அஸ்னாமி – உண்டாலும்
யஜ் – எதை
ஜுஹோமி – பலியிட்டாலும்
யத் – எதை
ததாமி – தானமாகக் கொடுத்தாலும்
ஏதத் – பிரம்மமே
ஸர்வம் – அனைத்தும்
ந மே – எனதல்ல
கிஞ்சித் – சிறிதும்
விஸித்தோ – தூய்மையான
அஹம் – நான்
அஜோ – பிறப்பற்றவன்
அவ்யய – மாறாதவன்

தெளிவுரை:

நான் எதைச் செய்தாலும், எதைச் சாப்பிட்டாலும், எதைப் பலியிட்டாலும், எதைக் தானமாகக் கொடுத்தாலும், சிறிதளவும் எதுவும் எனதல்ல; ஆத்மாவாகிய நான் எப்பொழுதும் தூய்மையானவன், பிறக்காதவன், மாறாதவன்.

ஸர்வம் ஜக ^{3}த்^{3}வித் ^{3}தி^{4} நிராக்ரு ’தீத ^{3}ம்
ஸர்வம் ஜக ^{3}த்^{3}வித் ^{3}தி^{4} விகாரஹீநம் ।
ஸர்வம் ஜக ^{3}த்^{3}வித் ^{3}தி^{4} விஶுத் ^{3}த^{4}தே ^{3}ஹம்
ஸர்வம் ஜக ^{3}த்^{3}வித் ^{3}தி^{4} ஶிவைகரூபம் ॥ 41 ॥

பதச்சேதம்:

ஸர்வம் ஜகத் வித்தி நிராக்ருதி இதம்
ஸர்வம் ஜகத் வித்தி விகார ஹீனம் |
ஸர்வம் ஜகத் வித்தி விஸுத்த தேஹம்
ஸர்வம் ஜகத் வித்தி ஸிவ ஏக ரூபம் ||41||

பத அர்த்தம்:

ஸர்வம் ஜகத் வித்தி – இப்பிரபஞ்சம் முழுவதும் அறிவாய்
நிராக்ருதி – வடிவற்ற
விகார ஹீனம் – மாறுதலற்ற
விஸுத்த தேஹம் – தூய இருப்பே
ஸிவ ஏக ரூபம் – ஒன்றேயான சிவம் மட்டுமே

தெளிவுரை:

இப்பிரபஞ்சம் அனைத்தும் வடிவமற்ற, மாறுதலற்ற தூய இருப்பே என்று அறிந்து கொள்; இப்பிரபஞ்சமாக இருப்பதெல்லாம் ஒன்றேயான சிவம் (ஆத்மா) மட்டுமே

தத்த்வம் த்வம் ந ஹி ஸந்தே ³ஹ: கிம் ஜாநாம்யத ²வா புந : ।
அஸம்வேத் ³யம் ஸ்வஸம்வேத் ³யமாத்மாநம் மந்யஸே கத ²ம் ॥ 42 ॥

பதச்சேதம்:

தத்த்வம் த்வம் ந ஹி ஸந்தேஹ: கிம் ஜானாமி அதவா புன: |
அஸம் வேத்யம் ஸ்வஸம் வேத்யம் ஆத்மானம் மன்யஸே கதம் ||42||

பத அர்த்தம்:

தத்த்வம் – யதார்த்த உண்மை
த்வம் – நீயே
ந ஹி ஸந்தேஹ: - சந்தேகம் இல்லை
ஜானாமி – அறிந்து
அதவா புன: - மீண்டும்
அஸம் வேத்யம் ஸ்வஸம் வேத்யம் ஆத்மானம் – இது சுய அனுபவமா அல்லது புரிந்து கொள்ள முடியாததா?
மன்யஸே – நினைக்கிறாய்
கதம் – ஏன்?

தெளிவுரை:

சந்தேகத்திற்கு இடமின்றி நீயே மிக உயர்ந்த யதார்த்த உண்மை என்பதை அறிந்து; எனக்கு ஆத்மா தெரியும் அல்லது தெரியாது என்று ஏன் நினைக்கிறாய்? இது சுய அனுபவமா அல்லது புரிந்து கொள்ள முடியாததா என்ற நினைப்பும் மீண்டும் உனக்கு எதற்கு?

மாயா Sமாயா கத ²ம் தாத சா ²யா Sசா ²யா ந வித் ³யதே ।
தத்த்வமேகமித ³ம் ஸர்வம் வ்யோமாகாரம் நிரஞ்ஜநம் ॥ 43 ॥

பதச்சேதம்:

மாயா அமாயா கதம் தாத சாயா அசாயா ந வித்யதே |
தத்த்வம் ஏகம் இதம் ஸர்வம் வ்யோமாகாரம் நிரஞ்ஜனம் ||43||

பத அர்த்தம்:

மாயா அமாயா – அறியாமையும் அறிவும்
தாத – மகனே
சாயா அசாயா – இருளும் ஒளியும்
ந வித்யதே – இருக்க இயலாது?
தத்த்வம் – யதார்த்த உண்மை

ஏகம் – ஒன்றானது
இதம் ஸர்வம் – அனைத்திலும்
வ்யோமாகாரம் – ஆகாயத்தை போன்று
நிரஞ்ஜனம் – வடிவமற்றது

தெளிவுரை:

மகனே! எப்படி இருளும் ஒளியும் ஒன்றாக இருக்க முடியாதோ? அதுப் போல அறியாமையும் அறிவும் பிரம்மத்திடம் எப்படி இருக்கும்? பிரம்மமானது, ஒன்றேயான, களங்கமற்ற, வடிவமற்ற யதார்த்த உண்மை.

ஆதி ^{3}மத்^{4}யாந்தமுக்தோ ऽஹம் ந ப^{3}த்^{3}தோ^{4} ऽஹம் கதா ^{3}சந ।
ஸ்வபா^{4}வநிர்மல : ஶுத் ^{3}த^4 இதி மே நிஶ்சிதா மதி : ॥ 44 ॥

பதச்சேதம்:

ஆதி மத்ய அந்த முக்தோ அஹம் ந பத்தோ அஹம் கதா ச ந |
ஸ்வபாவ நிர்மல: ஶுத்த இதி மே நிஸ்சிதா மதி: ||44||

பத அர்த்தம்:

ஆதி – தொடக்கம்
மத்ய – நடு
அந்த – முடிவு
முக்தோ – அற்றவன்
அஹம் – நான்
ந பத்தோ – பந்தமற்றவன்
அஹம் – நான்
கதா ச ந – எப்பொழுதும்
ஸ்வபாவ – இயல்பில்
நிர்மல: - மலங்களற்றவன்
ஶுத்த – தூய்மையான
இதி மே - எனது
நிஸ்சிதா – உறுதியான நம்பிக்கை
மதி – அறிந்து கொள்

தெளிவுரை:

நான் தொடக்கம், நடு மற்றும் முடிவு அற்றவன்; நான் ஒரு பொழுதும் பந்தமற்றவன்; இயல்பில் நான் தூய்மையானவன் மற்றும் பரிபூரணமானவன்; இதுவே எனது உறுதியான நம்பிக்கை.

மஹதா ^{3}தி ^{3} ஜக ^{3}த்ஸர்வம் ந கிஞ்சித்ப்ரதிபா^{4}தி மே ।
ப்^{3}ரஹ்மைவ கேவலம் ஸர்வம் கத ^{2}ம் வர்ணாஶ்ரமஸ்தி ^{2}தி : ॥ 45 ॥

பதச்சேதம்:

மஹத் ஆதி ஜகத் ஸர்வம் ந கிஞ்சித் ப்ரதிபாதி மே |
ப்ரஹ்ம ஏவ கேவலம் ஸர்வம் கதம் வர்ண ஆஸ்ரமஸ்திதி: ||45||

பத அர்த்தம்:

மஹத் ஆதி – பிரபஞ்ச நுண்ணறிவு
ஜகத் ஸர்வம் – வெளிப்பட்ட உலகம்
ந கிஞ்சித் – சிறுதும் இல்லை
ப்ரதிபாதி மே – என்னிடம் உணரப்படும்
ப்ரஹ்ம ஏவ கேவலம் – பிரம்மம் மட்டுமே
ஸர்வம் – அனைத்துமானது
கதம் – எப்படி?
வர்ணாஸ்ரமஸ்திதி – சாதி மற்றும் வாழிவியல் முறை

தெளிவுரை:

பிரபஞ்ச நுண்ணறிவு முதல் வெளிப்பட்ட உலகம் வரை, எதுவும் சிறிதும் பிரம்மமாகிய என்னில் உணரப்படவில்லை; இவை அனைத்தும் நானே, ஆகையால், சாதி மற்றும் வாழ்வியல் முறைகள் போன்றவை என்னில் எப்படி இருக்க முடியும்?

ஜாநாமி ஸர்வதா [2] ஸர்வமஹமேகோ நிரந்தரம் ।
நிராலம்ப [3]மஶூந்யம் ச ஶூந்யம் வ்யோமாதி [3]பஞ்சகம் ॥ 46 ॥

பதச்சேதம்:

ஜானாமி ஸர்வதா ஸர்வம் அஹம் ஏகோ நிரந்தரம் |
நிராலம்பம் அஸூன்யம் ச ஸூன்யம் வ்யோமாதி பஞ்சகம் ||46||

பத அர்த்தம்:

ஜானாமி – அறிவேன்
ஸர்வதா – எல்லா வகையிலும்
ஸர்வம் – அனைத்தும்
அஹம் – நான்
ஏகோ – ஒருவனே
நிரந்தரம் – நிறைந்து
நிராலம்பம் – சுதந்திரமாய்
அஸூன்யம் ச ஸூன்யம் – இருப்பற்றும் இருப்புமாய் இருப்பவன் நான்.
வ்யோமாதி பஞ்சகம் – ஐம் பூதங்களில் ஆகாயத்தை போன்று

தெளிவுரை:

எல்லா வகையிலும் நான் ஒருவனே யதார்த்த உண்மை, எங்கும் நிறைந்தவன், சுதந்திரமானவன், எப்போதும் இருப்பவன் என்பதை அறிவேன்; ஐம்பூதங்களில் ஆகாயம் போன்று இருப்பற்றும், இருப்புமாய் இருப்பவன் நான்.

ந ஷண்டோ^{4} ந புமாந்ந ஸ்த்ரீ ந போ ^{3}தோ^{4} நைவ கல்பநா ।
ஸாநந்தோ ^{3} வா நிராநந்த ^{3}மாத்மாநம் மந்யஸே கத ^{2}ம் ॥ 47 ॥

பதச்சேதம்:

ந ஷண்டோ ந புமான் ந ஸ்த்ரீ ந போதோ ந ஏவ கல்பனா |
ஸ ஆனந்தோ வா நிரானந்தம் ஆத்மானம் மன்யஸே கதம் ||47||

பத அர்த்தம்:

ந ஷண்டோ – அலி அல்ல
ந புமான் – ஆண் அல்ல
ந ஸ்த்ரீ – பெண் அல்ல
ந போதோ – உணர்தல் அல்ல
ந கல்பனா – அனுமானம் அல்ல
ஸ ஆனந்தோ – ஆனந்தமா
வா – அல்லது
நிரானந்தம் – ஆனந்தமற்றதா
ஆத்மானம் – ஆத்மா
மன்யஸே – சிந்தனை
கதம் – ஏன்

தெளிவுரை:

ஆத்மா அலி அல்ல, ஆண் அல்ல, பெண் அல்ல; உணர்தல் மற்றும் அனுமானம் பற்றிய விஷயங்கள் அல்ல; ஆத்மா ஆனந்தமாக இருக்கிறதா? அல்லது ஆனந்தம் அற்று இருக்கிறதா? என்ற சிந்தனை உனக்கு எதற்கு?

ஷட ^{3}ங்க ^{3}யோகா ^{3}ந்ந து நைவ ஶுத் ^{3}த^{4}ம்
மநோவிநாஶாந்ந து நைவ ஶுத் ^{3}த^{4}ம் ।
கு^{3}ருபதே ^{3}ஶாந்ந து நைவ ஶுத் ^{3}த^{4}ம்
ஸ்வயம் ச தத்த்வம் ஸ்வயமேவ பு^{3}த்^{3}த^{4}ம் ॥ 48 ॥

பதச்சேதம்:

ஷடங்க யோகான் ந து ந ஏவ ஶுத்தம்
மனோ விநாஶாந் ந து ந ஏவ ஶுத்தம் |
குரு உபதேஶாந் ந து ந ஏவ ஶுத்தம்
ஸ்வயம் ச தத்த்வம் ஸ்வயம் ஏவ புத்தம் ||48||

பத அர்த்தம்:

ஷடங்க யோகான் – யோகங்களின் ஆறு அங்கங்களால்
ந து ஏவ – செய்ய இயலாது
ஶுத்தம் – தூய்மை
மனோ விநாஶாந் – மனதை அழிப்பதால்
ந து ஏவ – செய்ய இயலாது
ஶுத்தம் – தூய்மை
குரு உபதேஶாந் –குருவின் உபதேசத்தால் மட்டும்
ந து ஏவ – செய்ய இயலாது

ஸுத்தம் – தூய்மை
ஸ்வயம் ச தத்த்வம் – ஆத்மாவே மேலான உண்மை
ஸ்வயம் ஏவ புத்தம் – அதுவே பரிசுத்தமானது
தெளிவுரை:

ஆத்மாவை யோகத்தின் ஆறு அங்கங்களின் பயிற்சி மூலமாகவோ அல்லது மனதை அழிப்பதன் மூலமாகவோ அல்லது குருவின் உபதேசத்தின் மூலமாகவோ தூய்மைப்படுத்த முடியாது. ஆத்மாவே மேலான உண்மை, அது பரிசுத்தமானது.

ந ஹி பஞ்சாத்மகோ தே ^{3}ஹோ விதே ^{3}ஹோ வர்ததே ந ஹி ।
ஆத்மைவ கேவலம் ஸர்வம் துரீயம் ச த்ரயம் கத ^{2}ம் ॥ 49 ॥

பதச்சேதம்:

ந ஹி பஞ்ச ஆத்மகோ தேஹோ விதேஹோ வர்ததே ந ஹி |
ஆத்ம ஏவ கேவலம் ஸர்வம் துரீயம் ச த்ரயம் கதம் ||49||

பத அர்த்தம்:

ந ஹி – இல்லை
பஞ்ச ஆத்மகோ – ஐம்பூதங்களினால் ஆன
தேஹோ – உடலுள்ளதும்
விதேஹோ – உடலற்றதும்
ந ஹி – இல்லை
ஆத்ம் – ஆத்மா
கேவலம் ஸர்வம் – அனைத்துமானது
துரீயம் ச – நான்காவது நிலை
த்ரயம் – மூன்று நிலைகளை கடந்த
கதம் - எப்படி

தெளிவுரை:

ஆத்மா ஐம்பூதங்களினால் ஆன உடலும் அல்ல, உடலற்றதும் அல்ல; அப்படியிருக்க, மூன்று நிலைகள்[1] மற்றும் நான்காவது[2] நிலை உண்டு என்று எப்படி கூறவது?

1. **மூன்று நிலைகள்** – விழிப்பு, கனவு, உறக்கம்
2. **நான்காவது நிலை** – துரிய நிலை (மாயைக்கு அப்பாற்பட்ட நிலை)

ந ப^{3}த்^{3}தோ^{4} நைவ முக்தோ ऽஹம் ந சாஹம் ப்^{3}ரஹ்மண : ப்ரு ʼத^{2}க் ।
ந கர்தா ந ச போ^{4}க்தாஹம் வ்யாப்யவ்யாபகவர்ஜித : ॥ 50 ॥

பதச்சேதம்:

ந பத்தோ ந ஏவ முக்தோ அஹம் ந ச அஹம் ப்ரஹ்மண: ப்ருதக் |
ந கர்தா ந ச போக்தா அஹம் வ்யாபிய வ்யாபக வர்ஜித: ||50||

பத அர்த்தம்:

ந பத்தோ – பற்றுள்ளவன் அல்லன்
ந ஏவ முக்தோ – பற்றற்றவன் அல்லன்
ந ச அஹம் ப்ரஹ்மண: ப்ருதக் – நான் பிரம்மத்திலிருந்து வேறானவன் அல்லன்
ந கர்தா – செயலுற்றவன் அல்லன்
ந ச போக்தா – அனுபவிப்பவன் அல்லன்
அஹம் – நான்
வ்யாபய வ்யாபக வர்ஜித – ஊடுருவி நிறைந்தவனும் அல்லன்

தெளிவுரை:

ஆத்மாவாகிய நான் பற்றுள்ளவனும் அல்லன், பற்றற்றவனும் அல்லன், பிரம்மத்திற்கு வேறானவன் அல்லன்; நான் செயலுற்றவன் அல்லன், அனுபவிப்பவன் அல்லன், எதையும் ஊடுருவி நிறைந்துள்ளவனும் அல்லன்.

யதா ^{2} ஜலம் ஜலே ந்யஸ்தம் ஸலிலம் பே^{4}த ^{3}வர்ஜிதம் ।
ப்ரக்ரு ’திம் புருஷம் தத் ^{3}வத ^{3}பி^{4}ந்நம் ப்ரதிபா^{4}தி மே ॥ 51 ॥

பதச்சேதம்:

யதா ஜலம் ஜலே ந்யஸ்தம் ஸலிலம் பேத வர்ஜிதம் |
ப்ரக்ருதிம் புருஷம் தத்வத் அபின்னம் ப்ரதிபாதி மே ||51||

பத அர்த்தம்:

யதா – எவ்வாறு
ஜலம் – நீர்
ஜலே – நீரிலே
ந்யஸ்தம் – கலந்தால்
ஸலிலம் பேத வர்ஜிதம் – நீருக்கு எந்த மாற்றமும் இல்லையோ?
ப்ரக்ருதிம் – மாயை
புருஷம் – ஜீவன்
தத்வத் – அது போல
அபின்னம் – வேறுபாடற்று ஒன்றாகவே
ப்ரதிபாதி மே – என்னில் பிரிவற்றதாக தோன்றுகிறது

தெளிவுரை:

எவ்வாறு நீரானது நீரிலே கலந்த போது வேறுபடுத்தப்படாத நீராக இருக்கிறதோ, அது போல மாயையும் (ப்ரகிருதி), ஜீவனும் (புருஷன்), ஆத்மாவாகிய என்னில் பிரிவற்றதாக தோன்றுகிறது.

யதி ^{3} நாம ந முக்தோ ऽஸி ந ப^{3}த்^{3}தோ^{4} ऽஸி கதா ^{3}சந ।
ஸாகாரம் ச நிராகாரமாத்மாநம் மந்யஸே கத ^{2}ம் ॥ 52 ॥

பதச்சேதம்:

யதி நாம ந முக்தோ அஸி ந பத்தோ அஸி கதா ச ந |
ஸாகாரம் ச நிராகாரம் ஆத்மானம் மன்யஸே கதம் ||52||

பத அர்த்தம்:

யதி – நீ
நாம – எதனிடத்திலிருந்தும்
ந முக்தோ அஸி – சுதந்திரமானவனும் அல்லன்
ந பத்தோ அஸி – கட்டுபட்டவனும் அல்லன்
கதா ச ந – எப்பொழுதும்
ஸாகாரம் – உருவம் உள்ளது
நிராகாரம் – உருவம் அற்றது
ஆத்மானம் – ஆத்மா
மன்யஸே – நினைப்பு
கதம் – எதற்கு

தெளிவுரை:

நீ எதனிடத்திலிருந்தும் சுதந்திரம் அடைந்தவன் அல்லன், எதற்கும் கட்டுப்பட்டவனும் அல்லன்; அப்படியிருக்க, ஆத்மாவாகிய உனக்கு உருவம் உள்ளது மற்றும், உருவம் அற்றது என்ற நினைப்பு எதற்கு?

ஜாநாமி தே பரம் ரூபம் ப்ரத்யக்ஷம் க^{3}க^{3}நோபமம் ।
யதா ^{2} பரம் ஹி ரூபம் யந்மரீசிஜலஸந்நிப^{4}ம் ॥ 53 ॥

பதச்சேதம்:

ஜானாமி தே பரம் ரூபம் ப்ரத்யக்ஷம் ககனோபமம் |
யத் அபரம் ஹி ரூபம் யந் மரீசி ஜல ஸன்னிபம் ||53||

பத அர்த்தம்:

ஜானாமி தே – அறிந்து கொள்வாய் நீ
பரம் ரூபம் – மேலான உண்மையை
ப்ரத்யக்ஷம் – எப்பொழுதும் இருக்கும்
ககனோபமம் – ஆகாயத்தை போல நிறைந்துள்ளவன்
அபரம் ரூபம் ஹி – மாயா வடிவத்தை
யந் மரீசி ஜல ஸன்னிபம் – கானல் நீர் போல

தெளிவுரை:

ஆத்மாவாகிய நீ மேலான உண்மை, எப்போதும், எல்லா இடங்களிலும் ஆகாயத்தை போன்று நிறைந்துள்ளவன்; மாயா வடிவமானது கானல் நீர் போன்றது என்று அறிந்து கொள்வாய்.

ந கு^{3}ருர்நோபதே ^{3}ஶஶ்ச ந சோபாதி^{4}ர்ந மே க்ரியா ।
விதே ^{3}ஹம் க^{3}க^{3}நம் வித் ^{3}தி^{4} விஶுத் ^{3}தோ^{4} Sஹம் ஸ்வபா^{4}வத : ॥ 54 ॥

பதச்சேதம்:

ந குருர் ந உபதேஸஸ்ச ந ச உபாதிர் ந மே க்ரியா |
விதேஹம் ககனம் வித்தி விஸுத்தோ அஹம் ஸ்வபாவத: ||54||

பத அர்த்தம்:

ந குருர் – குரு இல்லை
ந உபதேஸஸ்ச – உபதேசம் இல்லை
ந ச உபாதிர் – உடல் மனம் போன்ற உபாதிகள் இல்லை
ந மே க்ரியா – செயல்கள் இல்லை
விதேஹம் ககனம் – ஆகாயம் போல உடலற்றவன்
வித்தி – அறிவாய்
விஸுத்தோ அஹம் ஸ்வபாவத: – யதார்த்தத்தில் நான் தூய்மையானவன்

தெளிவுரை:

ஆத்மாவாகிய எனக்கு, குருவோ, உபதேசமோ இல்லை, உடல், மனம் போன்ற உபாதிகள் இல்லை, உபாதிகளின் செயல்கள் இல்லை; நான் ஆகாயம் போன்ற உடலற்றவன், யதார்த்தத்தில் நான் தூய்மையானவன் என்று அறிந்து கொள்.

விஶுத் ^{3}தோ^{4} Sஸ்ய ஶரீரோ Sஸி ந தே சித்தம் பராத்பரம் ।
அஹம் சாத்மா பரம் தத்த்வமிதி வக்தும் ந லஜ்ஜஸே ॥ 55 ॥

பதச்சேதம்:

விஸுத்தோ அஸ்ய ஸரீரோ அஸி ந தே சித்தம் பராத்பரம் |
அஹம் ச ஆத்மா பரம் தத்த்வம் இதி வக்தும் ந லஜ்ஜஸே ||55||

பத அர்த்தம்:

விஸுத்தோ அஸ்ய – தூய்மையானவனாய் இருக்கிறேன்
ஸரீரோ அஸி ந தே சித்தம் – உடல், மனம் போன்றவை உனக்கில்லை
பராத்பரம் – மாயைக்கு அப்பாற்பட்டவன்
அஹம் ச ஆத்மா – நான் ஆத்மா
பரம் தத்த்வம் – மேலான உண்மை
வக்தும் – என்று கூறுவதில்
ந லஜ்ஜஸே – வெட்கப்படுகிறாய்

தெளிவுரை:

ஆத்மாவாகிய நீ, தூய்மையானவன், உனக்கு உடல், மனம் இல்லை, மாயைக்கு அப்பாற்பட்டவன்; அப்படியிருக்க, நான் ஆத்மா உயர்ந்த உண்மை விடிவினன் என்று சொல்ல எதற்காக வெட்கப்படுகிறாய்?

கத ^{2}ம் ரோதி ^{3}ஷி ரே சித்த ஹ்யாத்மைவாத்மாத்மநா ப^{4}வ ।
பிப ^{3} வத்ஸ கலாதீதமத் ^{3}வைதம் பரமாம்ரு ′தம் ॥ 56 ॥

பதச்சேதம்:

கதம் ரோதிஷிரே சித்த ஹி ஆத்மா ஏவ ஆத்மாத்மனா பவ |
பிப வத்ஸ கலாதீதம் அத்வைதம் பரம அம்ருதம் ||56||

பத அர்த்தம்:

கதம் – எதற்காக
ரோதிஷிரே – அழுகிறாய்
சித்த – மனமே
ஆத்மா ஏவ ஆத்மாத்மனா - நீ சுயமாகவே இருக்கிறாய், சுயத்தின் மூலம் சுயமாகவே இருந்து
பிப – பருகுவாயாக
வத்ஸ – மகனே
கலாதீதம் அத்வைதம் பரம் அம்ருதம் - அனைத்து வேறுபாடுகளையும் கடந்த ஒன்றேயான மேலான பேரின்பம்.

தெளிவுரை:

ஓ மனமே! நீ எதற்காக அழுகிறாய்? நீ அந்த சுயமாகவே இருக்கிறாய், ஆகையால் சுயத்தின் மூலம் சுயமாகவே இருந்து, மேலான பேரின்ப பரவசத்தை பருகுவாயாக. மகனே! நீ அனைத்து வேறுபாடுகளையும் கடந்த இரண்டற்ற பரிபூரண பிரம்மம்.

நைவ போ ^{3}தோ^{4} ந சாபோ ^{3}தோ^{4} ந போ ^{3}தா^{4}போ ^{3}த^{4} ஏவ ச ।
யஸ்யேத் ^{3}ரு′ஶ: ஸதா ^{3} போ ^{3}த:^{4} ஸ போ ^{3}தோ^{4} நாந்யதா ^{2} ப^{4}வேத் ॥ 57 ॥

பதச்சேதம்:

ந ஏவ போதோ ந ச அபோதோ ந போதாபோத ஏவ ச |
யஸ்ய ஈத்ருஸ: ஸதா போத: ஸ போதா நான்யதா பவேத் ||57||

பத அர்த்தம்:

ந ஏவ போதோ – அறிவும் இல்லை
ந ச அபோதோ – அறியாமையும் இல்லை
ந போதாபோத ஏவ ச – அறிவறியாமையும் இல்லை
யஸ்ய ஈத்ருஸ: ஸதா போத: - யாருக்கு இந்த தூய அறிவு எப்பொழுதும் பிரகாசிக்கிறதோ
ஸ போதா - அவர் அந்த தூய அறிவே
நான்யதா பவேத் – அன்றி வேறில்லை

தெளிவுரை:

ஆத்மாவில், அறிவும் இல்லை, அறியாமையும் இல்லை, அறிவறியாமையும் இல்லை; யாருக்கு இந்த தூய அறிவு எப்பொழுதும் பிரகாசிக்கின்றதோ, அவர் தூய அறிவே அன்றி வேறில்லை.

குறிப்பு: ஸ்ரீ தத்தாத்ரேயர் கூறுவது தூய அறிவு (Consciousness), ஏற்றிவைக்கப்பட்ட அறிவு (Knowledge) அல்ல.

ஜ்ஞாநம் ந தர்கோ ந ஸமாதி⁴யோகோ ³
ந தே ³ஶகாலௌ ந கு³ரூபதே ³ஶ: ।
ஸ்வபா⁴வஸம்வித்தரஹம் ச தத்த்வ -
மாகாஶகல்பம் ஸஹஜம் த்⁴ருவம் ச ॥ 58 ॥

பதச்சேதம்:

ஜ்ஞானம் ந தர்கோ ந ஸமாதி யோகோ
ந தேஸ காலௌ ந குரு உபதேஸ: |
ஸ்வபாவ ஸம்வித்தர் அஹம் ச தத்த்வம்
ஆகாஸ கல்பம் ஸஹஜம் த்ருவம் ச ||58||

பத அர்த்தம்:

ஜ்ஞானம் – சுய அறிவானது
ந தர்கோ – தர்க வாதத்தினால் ஏற்படுவது இல்லை
ந ஸமாதி யோகோ – தியான மற்றும் யோகத்தினால் ஏற்படும் சாமிதியால் இல்லை
ந தேஸ காலௌ – இடம் மற்றும் காலத்தினால் இல்லை
ந குரு உபதேஸ: - குருவின் உபதேசத்தினாலும் இல்லை
ஸ்வபாவ ஸம்வித்தர் அஹம் ச தத்த்வம் – நான் ஆத்மா தூய அறிவு என்பதே அது
ஆகாஸ கல்பம் ஸஹஜம் த்ருவம் ச – இதுவே ஆகாயத்தை போன்று எல்லையற்ற யதார்த்த உண்மை.

தெளிவுரை:

சுய அறிவு என்பது தர்க வாதத்தினால் எற்படுவதல்ல; தியானம் மற்றும் யோகத்தினால் ஏற்படும் சமாதி அல்ல; இடம் மற்றும் காலம் போன்ற கட்டுபாடுகள் அல்ல; குருவின் உபதேசத்தினாலும் அல்ல. நான் ஆத்மா என்ற தூய அறிவு என்பதே அது, இதுவே ஆகாயத்தை போன்று எல்லையற்ற யதார்த்த உண்மை.

ந ஜாதோ Sஹம் ம்ரு ′தோ வாபி ந மே கர்ம ஶுபா⁴ஶுப⁴ம் ।
விஶுத் ³த⁴ம் நிர்கு ³ணம் ப்³ரஹ்ம ப³ந்தோ⁴ முக்தி : கத ²ம் மம ॥ 59 ॥

பதச்சேதம்:

ந ஜாதோ அஹம் ம்ருதோ வாபி ந மே கர்ம ஸுபாஸுபம் |
விஸுத்தம் நிர்குணம் ப்ரஹ்ம பந்தோ முக்தி: கதம் மம ||59||

பத அர்த்தம்:

ந ஜாதோ – பிறக்கவில்லை
அஹம் ம்ருதோ வாபி – நான் இறக்கவில்லை
ந மே கர்ம ஸுபாஸுபம் – அறம் மற்றும் அறமற்ற செயல்கள் என்பது எனக்கில்லை
விஸுத்தம் – தூய்மையான
நிர்குணம் – மூன்று குணங்களற்ற
ப்ரஹ்ம – பிரம்மம்

பந்தோ முக்தி: கதம் மம – எனக்கு விடுதலை மற்றும் கட்டு என்பது எப்படி?

தெளிவுரை:

ஆத்மாவாகிய நான் ஒருபோதும் பி(இ)றக்கவில்லை; எனக்கு அறம் (நன்மை) மற்றும் அறமற்ற (தீமை) செயல்கள் என்பதில்லை; நான் தூய்மையான, குணங்களாற்ற பிரம்மம்; அப்படியிருக்க, விடுதலை மற்றும் கட்டு என்பது எங்கு எப்படி எதனால் ஏற்ப்படும்?

யதி ^{3} ஸர்வக ^{3}தோ தே ^{3}வ: ஸ்தி ^{2}ர: பூர்ணோ நிரந்தர : ।
அந்தரம் ஹி ந பஶ்யாமி ஸ பா ^{3}ஹ்யாப்^{4}யந்தர : கத ^{2}ம் ॥ 60 ॥

பதச்சேதம்:

யதி ஸர்வ கதோ தேவ: ஸ்திர: பூர்ணோ நிரந்தர: |
அந்தரம் ஹி ந பஸ்யாமி ஸ பாஹ்ய அப்யந்தர: கதம் ||60||

பத அர்த்தம்:

யதி – பிரம்மம்
ஸர்வ – அனைத்தும்
கதோ தேவ: - தெய்வங்கள் ஏது?
ஸ்திர: - நிலையானதும்
பூர்ணோ – நிறைந்துள்ளதும்
நிரந்தர: - எப்பொழுதும்
அந்தரம் ஹி – என்னில்
ந பஸ்யாமி – பேதங்கள் ஏது?
ஸ பாஹ்ய அப்யந்தர கதம் – வெளியே உள்ளே என்பது எப்படி?

தெளிவுரை:

பிரம்மமாகிய நான், எங்கும் நிறைந்து, நிலையாக, எப்பொழுதும் அனைத்திலும் இருக்கிறேன்; அப்படியிருக்க தெய்வங்கள் என்பது என்னில் ஏது? பேதங்கள் என்பது என்னில் ஏது? நான் எப்படி ஏதோ ஒன்றின் உள்ளே இருக்கிறேன் என்றும்? வெளியே இருக்கிறேன் என்றும் கூற முடியும்?

ஸ்பு ^{2}ரத்யேவ ஜக ^{3}த்க்ரு 'த்ஸ்நமக ^{2}ண்டி ^{3}தநிரந்தரம் ।
அஹோ மாயாமஹாமோஹோ த்^{3}வைதாத் ^{3}வைதவிகல்பநா ॥ 61 ॥

பதச்சேதம்:

ஸ்புரதி ஏவ ஜகத் க்ருத்ஸ்னம் அகண்டித நிரந்தரம் |
அஹோ மாயா மஹா மோஹா த்வைத அத்வைத விகல்பனா ||61||

பத அர்த்தம்:

ஸ்புரதி ஏவ – என்னில் தோன்றுகிறது
ஜகத் க்ருத்ஸனம் – பிரபஞ்ச இயக்கம்

அகண்டித – பிரிக்க முடியாத
நிரந்தரம் – தடையற்ற
அஹோ – என்னே ஆச்சர்யம்
மாயா – மாயையானது
மஹா மோஹா – அளவுகடந்த குழப்பத்தை உண்டாக்கி
த்வைத அத்வைத – இருமையாகவும் மற்றும் இருமையற்றதாகவும்
விகல்பனா – வேறுபாடுகளை தோன்றுகிறது

தெளிவுரை:

இம்முழு பிரபஞ்சமும் என்னில் பிரிக்க முடியாத, தடையற்ற இயக்கமாகத் தோன்றுகிறது; என்னே ஆச்சர்யம்! மாயையானது பயங்கரமான குழப்பத்தையும், வேறுபாடுகளையும் உண்டாக்கி, இருமையாகவும், இருமையற்றதாகவும் தோன்றுகிறது.

ஸாகாரம் ச நிராகாரம் நேதி நேதீதி ஸர்வதா ^{3} ।
பே^{4}தா ^{3}பே^{4}த ^{3}விநிர்முக்தோ வர்ததே கேவல : ஶிவ : ॥ 62 ॥

பதச்சேதம்:

ஸாகாரம் ச நிராகாரம் நேதி நேதி இதி ஸர்வதா |
பேத அபேத விநிர்முக்தோ வர்ததே கேவல: ஸிவ: ||62||

பத அர்த்தம்:

ஸாகாரம் ச – வடிவுடைய
நிராகாரம் – வடிவற்ற
நேதி நேதி இதி – இது அல்ல இது அல்ல
ஸர்வதா – பிரபஞ்சத்தை
பேத – வேற்றுமை
அபேத – ஒற்றுமை
விநிர்முக்தோ வர்ததே – அற்ற
கேவல ஸிவ: - ஒன்றேயான சிவம்

தெளிவுரை:

வடிவுடைய மற்றும் வடிவற்ற இப்பிரபஞ்சத்தை இது அல்ல, இது அல்ல என்று நிராகரித்து; வேற்றுமையும் ஒற்றுமையும் அற்ற ஒன்றேயான சிவம் மட்டுமே உள்ளது என்று அனைத்து சாஸ்த்திரங்களும் எடுத்துரைக்கின்றன.

ந தே ச மாதா ச பிதா ச ப^{3}ந்து :^{4}
ந தே ச பத்நீ ந ஸுதஶ்ச மித்ரம் ।
ந பக்ஷபாதீ ந விபக்ஷபாத :
கத ^{2}ம் ஹி ஸந்தப்திரியம் ஹி சித்தே ॥ 63 ॥

பதச்சேதம்:

ந தே ச மாதா ச பிதா ச பந்து:

ந தே ச பத்னீ ந ஸுதஸ்ச மித்ரம் |
ந பக்ஷபாதீ ந விபக்ஷபாத:
கதம் ஹி ஸந்தப்திர் இயம் ஹி சித்தே ||63||

பத அர்த்தம்:

ந தே – பிரம்மமாகிய உனக்கு இல்லை
ச மாதா ச பிதா ச பந்து: - அம்மை, அப்பன், உறவினர்
ச பத்னீ ந ஸுதஸ்ச மித்ரம் – இல்லாள், பிள்ளைகள், நண்பர்கள்
ந பக்ஷபாதீ – பாரபட்சம்
ந விபக்ஷபாத: - பாரபட்சமற்ற
கதம் ஹி – எதற்கு?
ஸந்தப்திர் – துயரம்
இயம் ஹி சித்தே – இந்த மனதிற்கு

தெளிவுரை:

பிரம்மமாகிய உனக்கு அம்மையில்லை, அப்பனில்லை, உறவினரில்லை, இல்லாளில்லை, பிள்ளைகளில்லை, நண்பர்களில்லை; உனக்கு எதனி(யாரி)டத்திலும் பாரபட்சமில்லை, பாரபட்சமற்ற நிலையும் இல்லை; அப்படியிருக்க, இந்த மனதிற்கு துயரம் எதற்கு?

தி ^{3}வா நக்தம் ந தே சித்தம் உத ^{3}யாஸ்தமயௌ ந ஹி ।
விதே ^{3}ஹஸ்ய ஶரீரத்வம் கல்பயந்தி கத ^{2}ம் பு^{3}தா :^{4} ॥ 64 ॥

பதச்சேதம்:

திவா நக்தம் ந தே சித்தம் உதய அஸ்தமௌ ந ஹி |
விதேஹஸ்ய ஸரீரத்வம் கல்பயந்தி கதம் புதா: ||64||

பத அர்த்தம்:

திவா நக்தம் – பகல் இரவு
ந தே – இல்லை உனக்கு
சித்தம் – மனமே!
உதய அஸ்தமௌ – எழுச்சி விழ்ச்சி
ந ஹி – இல்லை
விதேஹஸ்ய – உடலற்றவன்
ஸரீரத்வம் – உடலுள்ளதாக
கல்பயந்தி கதம் புதா: - எப்படி கற்பனை செய்வான்? விவேகி

தெளிவுரை:

மனமே! உனக்கு பகலில்லை, இரவில்லை, எழுச்சியில்லை, விழ்ச்சியில்லை; உடலற்ற விவேகி தனக்கு உடலுள்ளதாக எப்படி கற்பனை செய்வான்?

நாவிப^{4}க்தம் விப^{4}க்தம் ச ந ஹி து:^{3} க^{2}ஸுகா ^{2}தி ^{3} ச ।
ந ஹி ஸர்வமஸர்வம் ச வித் ^{3}தி^{4} சாத்மாநமவ்யயம் ॥ 65 ॥

பதச்சேதம்:

ந அவிபக்தம் விபக்தம் ச ந ஹி துக்க ஸுகாதி ச |
ந ஹி ஸர்வம் அஸர்வம் ச வித்தி ச ஆத்மானம் அவ்யயம் ||65||

பத அர்த்தம்:

ந அவிபக்தம் விபக்தம் – வேறுபாடற்றதும் இல்லை, வேறுபாடுற்றதும் இல்லை
ந ஹி துக்க ஸுகாதி ச – துன்பமும் இல்லை, இன்பமும் இல்லை
ந ஹி ஸர்வம் அஸர்வம் ச – அனைத்துமாகவும் இல்லை, அனைத்துமற்றதாகவும் இல்லை
வித்தி ச ஆத்மானம் அவ்யயம் – மாறுபாடற்ற ஆத்மா என்பதை உணர்வாய்

தெளிவுரை:

மாறுபாடற்ற ஆத்மாவாக உன்னை உணர்வாய், நீ வேறுபாடற்றவன் அல்லன், வேறுபாடுற்றவன் அல்லன், நீ அனைத்துமாகவும் இல்லை, அனைத்தும் அற்றதாகவும் இல்லை; நீ இ(து)ன்பத்திற்கு அப்பாற்பட்டவன்.

நாஹம் கர்தா ந போ^{4}க்தா ச ந மே கர்ம புரா ऽது^{4}நா ।
ந மே தே ^{3}ஹோ விதே ^{3}ஹோ வா நிர்மமேதி மமேதி கிம் ॥ 66 ॥

பதச்சேதம்:

ந அஹம் கர்தா ந போக்தா ச ந மே கர்ம பரா அதுனா |
ந மே தேஹோ விதேஹோ வா நிர்மமேதி மமேதி கிம் ||66||

பத அர்த்தம்:

அஹம் – நான்
ந கர்தா – செய்பவன் அல்லன்
ந போக்தா – அனுபவிப்பவன் அல்லன்
ந மே கர்ம பரா அதுனா – முன் வினை, நட வினை எதுவும் இல்லை
ந மே தேஹோ விதேஹோ – எனக்கு உடலோ, உடலற்ற தன்மை இல்லை
நிர்மமேதி மமேதி கிம் – என்னுடையது என்றும் என்னுடையது அல்ல என்பது யாது?

தெளிவுரை:

நான் செயல் செய்பவன் அல்லன்; செயலுக்கான பலனை அனுபவிப்பவன் அல்லன்; எனக்கு முன்வினை, நடவினை எதுவும் இல்லை; எனக்கு உடலோ, உடலற்ற தன்மையோ இல்லாததால், அ(இ)து என்னுடையது என்றும், என்னுடையது அல்ல என்பது யாது?

ந மே ராகா ^{3}தி ^{3}கோ தோ ^{3}ஷோ து:^{3} க^{2}ம் தே ^{3}ஹாதி ^{3}கம் ந மே ।
ஆத்மாநம் வித் ^{3}தி^{4} மாமேகம் விஶாலம் க^{3}க^{3}நோபமம் ॥ 67 ॥

பதச்சேதம்:

ந மே ராகாதி கோ தோஷோ துக்கம் தேஹாதி கம் ந மே |
ஆத்மானம் வித்தி மாம் ஏகம் விஸாலம் ககனோபமம் ||67||

பத அர்த்தம்:

ந மே ராகாதி தோஷோ – விருப்பு, வெறுப்பு, கோவம் முதலிய மலினங்கள் எனகில்லை
துக்கம் தேஹாதி கம் ந மே – உடலாலும் மனதாலும் ஏற்ப்படும் துன்பங்கள் எனக்கில்லை
ஆத்மானம் வித்தி மாம் – நான் ஆத்மா என்பதை உணர்வாய்
ஏகம் விஸாலம் ககனோபமம் – ஒன்றேயான ஆகாயம் போன்று நிறைந்து அனைத்தையும் ஊடுருவி இருப்பவன்

தெளிவுரை:

விருப்பு, வெறுப்பு, பேரார்வம், பெருங்கோபம் போன்ற மலினங்களிலிருந்து நான் விடுபட்டவன்; உடல், மனம் மற்றும் பலவற்றின் துன்பங்களிலிருந்து நான் விடுபட்டவன்; நான் ஆத்மா, ஒன்றேயான ஆகாயம் போன்று நிறைந்து அனைத்தையும் ஊடுருவி இருப்பவன் என்று உணர்வாய்.

ஸகே ² மந : கிம் ப³ஹுஜல்பிதேந
ஸகே ² மந : ஸர்வமித ³ம் விதர்க்யம் ।
யத்ஸாரபூ⁴தம் கதி ²தம் மயா தே
த்வமேவ தத்த்வம் க³க³நோபமோ ऽஸி ॥ 68 ॥

பதச்சேதம்:

ஸகே மன: கிம் பஹு ஜல்பிதேன |
ஸகே மன: ஸர்வம் இதம் விதர்க்யம் |
யத்ஸாரபூதம் கதிதம் மயா தே
த்வம் ஏவ தத்த்வம் ககனோபமோ அஸி ||68||

பத அர்த்தம்:

ஸகே மன: - நண்பனான மனமே!
கிம் பஹு ஜல்பிதேன – வீண் பேச்சு எதற்கு?
ஸர்வம் இதம் விதர்க்யம் – இப்பிரபஞ்சம் முழுதும் ஒரு யூகமே
யத்ஸார பூதம் கதிதம் மயா தே – உன்னை பற்றிய உண்மையை நான் கூறுகிறேன் கேள்
த்வம் ஏவ தத்த்வம் ககனோபமோ அஸி – ஆத்மாவாகிய நீ மட்டுமே மேலான உண்மை, ஆகாயத்தை போன்று எல்லையற்றவன்

தெளிவுரை:

நண்பனான மனமே! வீண் பேச்சு எதற்கு? இப்பிரபஞ்சம் முழுவதும் ஒரு யூகமே (கற்பனை). உன்னை பற்றிய உண்மையை நான் கூறுகிறேன் கேள், ஆத்மாவாகிய நீ மட்டுமே மேலான உண்மை, ஆகாயத்தை போன்று எல்லையற்றவன்

யேந கேநாபி பா^{4}வேந யத்ர குத்ர ம்ரு 'தா அபி ।
யோகி ^{3}நஸ்தத்ர லீயந்தே க^{4}டாகாஶமிவாம்ப ^{3}ரே ॥ 69 ॥

பதச்சேதம்:

யேன கேன அபி பாவேன யத்ர குத்ர ம்ருதா அபி |
யோகி நஸ்தத்ர லீயந்தே கட ஆகாஸம் இவாம் பரே |

பத அர்த்தம்:

யேன கேனாபி – எந்த இடத்திலும்
பாவேன – எந்த வாழ்வியல் முறையிலும்
யத்ர குத்ர – எங்கும் அங்கும்
ம்ருதா அபி – உடல் இறந்தாலும்
யோகி – அவதூதர்
நஸ்தத்ர – அங்கேயே
லீயந்தே – குடம் உடைந்து
கட ஆகாஸம் –அதிலுள்ள ஆகாயமும்
இவாம் பரே – மஹா ஆகாயமும் வேறுபாடின்றி இருப்பது போல

தெளிவுரை:

அவதூதர் எந்த வாழ்வியல் முறையில்[1] வாழ்ந்து இறந்தாலும், எந்த இடத்தில் இறந்தாலும், அவர் பிரம்மத்திலே திளைக்கிறார்; இது எவ்வாறெனின், ஒரு குடம் உடையும் போது, அக்குடத்திலுள்ள ஆகாயமும், எல்லையற்ற ஆகாயமும் வேறுபாடின்றி இருப்பது போல.

1. **வாழ்வியில் முறை** – மணம் முடிக்காமல் வாழ்வு முழுவதும் தன்னை சார்ந்து வாழ்பவர், இல்லறத்தில் வாழ்பவர், இல்லறத்திலிருந்து தனது கடமைகளை முடித்த பின் ஆன்மீக நாட்டம் கொண்டு வாழ்பவர், உலக வாழ்வை விடுத்து துறவு வாழ்வில் வாழ்பவர்.

தீர்தே ^{2} சாந்த்யஜகே ^{3}ஹே வா நஷ்டஸ்ம்ரு 'திரபி த்யஜந் ।
ஸமகாலே தநும் முக்த : கைவல்யவ்யாபகோ ப^{4}வேத் ॥ 70 ॥

பதச்சேதம்:

தீர்தே சாந்தி அஜகேஹே வா நஷ்ட ஸ்ம்ருதிர் அபி த்யஜன் |
ஸமகாலே தனும் முக்த: கைவல்ய வ்யாபகோ பவேத் ||70||

பத அர்த்தம்:

தீர்தே – புனித நீரிலோ
சாந்தி – அமைதியான இடத்திலோ
அஜகேஹே – சாண்டாலன் இடத்திலோ
நஷ்ட ஸ்ம்ருதிர் – தன் நினைவு
த்யஜன் – இழந்தாலும்
ஸமகாலே – அதே நேரத்தில்
தனும் முக்த – உடல் இறந்தாலும்
கைவல்ய – தன் சகஜமான சுயத்தில் இருக்கிறான்

வ்யாபகோ பவேத் – ஆகாயத்தை போன்று நிறைந்துள்ளான்

தெளிவுரை:

அவதூதரின் உடல் புனித இடத்திலோ, சண்டாளானின் இல்லத்திலோ சுயநினைவற்ற நிலையிலோ இறக்கலாம்; அப்படி எந்த சூழ்நிலையிலும் அவர் உடலை துற(இழ)ந்தாலும், ஆகாயம் போன்று எங்கும் நிறைந்த சுய(பிரம்ம)த்தில் திளைத்து இருக்கிறார்.

த^{4}ர்மார்த ^{2}காமமோக்ஷாம்ஸ்ச த்^{3}விபதா ^{3}தி ^{3}சராசரம் ।
மந்யந்தே யோகி ^{3}ந: ஸர்வம் மரீசிஜலஸந்நிப^{4}ம் ॥ 71 ॥

பதச்சேதம்:

தர்ம அர்த காம மோக்ஷாம்ஸ்ச த்வி பதாதி சராசரம்|
மன்யந்தே யோகின: ஸர்வம் மரீசி ஜல ஸன்னிபம் ||71||

பத அர்த்தம்:

தர்ம – அறம்
அர்த – பொருள்
காம – இன்பம்
மோக்ஷாம்ஸ்ச – வீடுபேறு
த்விபதாதி சராசரம் – இருமைகளால் ஆன பிரபஞ்சத்தில்
மன்யந்தே யோகின: ஸர்வம் - அவதூதர் அசையும் மற்றும் அசையா என அனைத்தையும் கருதுகிறார்
மரீசி ஜல ஸன்னிபம் – கானல் நீர் போன்று

தெளிவுரை:

அவதூதர், இருமைகளால் ஆன இப்பிரபஞ்சத்தில் - அறம், பொருள், இன்பம், வீடுபேறு, அசையும், மற்றும் அசையா என அனைத்தையும் கானல் நீர் போன்றே கருதுகிறார். ஏனெனில், அவருக்கு வேண்டுதல், வேண்டாமை என்பது எதுவுமில்லை.

அதீதாநாக ^{3}தம் கர்ம வர்தமாநம் ததை ^{2}வ ச ।
ந கரோமி ந பு^{4}ஞ்ஜாமி இதி மே நிஶ்சலா மதி : ॥ 72 ॥

பதச்சேதம்:

அதீத அனாகதம் கர்ம வர்தமானம் தத் ஏவ ச |
ந கரோமி ந புஞ்ஜாமி இதி மே நிஸ்சலா மதி: ||72||

பத அர்த்தம்:

அதீத அனாகதம் – கடந்த காலத்தில் செய்ததில்லை
கர்ம – செயல்கள்
வர்தமானம் – எதிர் காலத்தில் செய்யப்போவதில்லை
தத் ஏவ ச – அது போல நிகழ் காலத்தில் செய்வதில்லை

ந கரோமி – செயல் பலன்களை செய்யவில்லை
ந புஞ்ஜாமி – செயல் பலன்களை அனுபவிக்கவில்லை
நிஸ்சலா மதி: - இதுவே எனது தீர்மானம்

தெளிவுரை:

நான் (அவதூதர்) கடந்த காலத்தில் செயல்களைச் செய்ததில்லை, நிகழ்காலத்தில் செயல்களைச் செய்வதில்லை, எதிர்காலத்தில் செயல்களைச் செய்யப்போவதும் இல்லை; கடந்த காலத்தில் செய்த செயல்களின் பலன்களை, நிகழ்காலத்தில் அனுபவிக்கவில்லை, எதிர்காலத்தில் அனுபவிக்க போவதும் இல்லை; இதுவே எனது (அவதூதரது) தீர்மானம்.

ஶூந்யாகா^{3}ரே ஸமரஸபூத -
ஸ்திஷ்ட ^{2}ந்நேக : ஸுக ^{2}மவதூ^{4}த : ।
சரதி ஹி நக் ^{3}நஸ்த்யக்த்வா க^{3}ர்வம்
விந்த ^{3}தி கேவலமாத்மநி ஸர்வம் ॥ 73 ॥

பதச்சேதம்:

ஸூன்யாகாரே ஸமரஸ பூதஸ்
திஷ்டன் ஏக ஸுகம் அவதூத: |
சரதி ஹி நக்னஸ் த்யக்த்வா கர்வம்
விந்ததி கேவல ஆத்மனி ஸர்வம் ||73||

பத அர்த்தம்:

ஸூன்யாகாரே ஸமரஸ பூத – தனிமையான இடத்தில்
திஷ்டன் ஏக ஸுகம் அவதூத: - அவதூதர் ஏகாந்தமாக தன் சுயத்தில் சுகமாக இருக்கிறார்
சரதி ஹி நக்னஸ் த்யக்த்வா கர்வம் – அகங்காரத்தை துறந்து எங்கும் சஞ்சரிக்கிறார்
விந்ததி கேவல ஆத்மனி ஸர்வம் – அனைத்தையும் ஆத்மாவான தன்னிலேயே காண்கிறார்.

தெளிவுரை:

அவதூத தனிமையான இடத்தில் ஏகாந்தமாக தன் சுயத்தில் சுகமாக இருக்கிறார். அகங்காரத்தைத் துறந்து, எங்கும் சஞ்சரிக்கிறார், அனைத்தையும் ஆத்மாவான தனக்குள்ளேயே காண்கிறார்.

குறிப்பு: இப்பாடலில் தனிமை என்று கூறப்பட்டதால், அவதூதர் எப்பொழுதும் தனியாக மக்களற்ற இடத்தில் வசிப்பார் என்று புரிந்து கொள்ளக்கூடாது, தனிமையாக இருக்கக்கூடிய சூழல் ஏற்ப்பட்டாலும் இருப்பார் என்றே புரிந்து கொள்ள வேண்டும், ஏனெனில், அவதூதர் அனைத்து ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களையும் கடந்தவர்.

த்ரிதயதுரீயம் ந ஹி நஹி யத்ர
விந்த ^{3}தி கேவலமாத்மநி தத்ர ।
த^{4}ர்மாத^{4}ர்மௌ ந ஹி நஹி யத்ர
ப^{3}த்^{3}தோ^{4} முக்த : கத ^{2}மிஹ தத்ர ॥ 74 ॥

பதச்சேதம்:

த்ரிதய துரீயம் நஹி நஹி யத்ர
விந்ததி கேவலம் ஆத்மானி தத்ர |
தர்ம அதர்மௌ நஹி நஹி யத்ர
பத்தோ முக்த: கதம் இஹ தத்ர ||74||

பத அர்த்தம்:

த்ரிதய – மூன்று நிலைகள் (விழிப்பு, கனவு, உறக்கம்)
துரீயம் – நான்காவது நிலையாகிய துரீயம்
நஹி நஹி யத்ர – இல்லாத இடத்தில்
விந்ததி – உணருகிறான்
கேவலம் ஆத்மானி தத்ர – அங்கு ஆத்மாவை
தர்ம அதர்மௌ நஹி நஹி யத்ர – அறம் அறமற்றது என்பது இல்லாத மனதில்
பத்தோ முக்த: கதம் இஹ தத்ர – அங்கு பந்தம் விடுதலை எப்படி இருக்கும்?

தெளிவுரை:

மூன்று நிலைகள் (விழிப்பு, கனவு, உறக்கம்) அல்லது நான்காவது நிலையாகிய துரீய நிலையும் இல்லாத இடத்தில், ஒருவன் முழுமையான ஆத்மாவை உணருகிறான். அறம், அறமற்றது என்ற சிந்தனை இல்லாத மனதில், பந்தமோ, விடுதலையோ எப்படி இருக்கும்?

விந்த ^{3}தி விந்த ^{3}தி ந ஹி நஹி மந்த்ரம்
ச^{2}ந்தோ ^{3}லக்ஷணம் ந ஹி நஹி தந்த்ரம் ।
ஸமரஸமக் ^{3}நோ பா^{4}விதபூத :
ப்ரலபிதமேதத்பரமவதூ^{4}த : ॥ 75 ॥

பதச்சேதம்:

விந்ததி விந்ததி நஹி நஹி மந்த்ரம்
சந்தோ லக்ஷணம் நஹி நஹி தந்த்ரம் |
ஸமரஸ மக்னோ பாவித பூத:
ப்ரலபிதம் ஏதத் பரம் அவதூத: ||75||

பத அர்த்தம்:

விந்ததி விந்ததி நஹி நஹி – உணர்தல் இல்லை
மந்த்ரம் – மந்த்ர உச்சாடனத்தால்
சந்தோ லக்ஷணம் – வேத மந்திரங்களை சந்தம் (உறு) செய்வதால்
நஹி நஹி – இல்லை
தந்த்ரம் – ஹோமாதி கர்மங்களை செய்வதால்
ஸமரஸ மக்னோ பாவித பூத: - தன் சுயத்தில் லயித்த
ப்ரலபிதம் ஏதத் பரம் அவதூத: - அவதூதர் தன்னிச்சையாக பாடுகிறார்.

தெளிவுரை:

மந்திரங்களைத் திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலமோ; வேதங்களை திரும்பத் திரும்ப ஓதுவதன் மூலமோ; தாந்த்ரீக சடங்குகளை செய்வதன் மூலமோ ஒருவர் பிரம்மத்தை உணர இயலாது; இவ்வுண்மையை தியானத்தின் மூலம் தன் மனதை தூய்மைப்படுத்தி, சுயத்தில் இடைவிடாது நிலைபெற்ற அவதூதர், இக்கீதையின் வாயிலாக தன்னிச்சையாகப் பாடியுள்ளார்.

ஸர்வஶூந்யமஶூந்யம் ச ஸத்யாஸத்யம் ந வித்³யதே ।
ஸ்வபா⁴வபா⁴வத: ப்ரோக்தம் ஶாஸ்த்ரஸம்வித்திபூர்வகம் ॥ 76 ॥

பதச்சேதம்:

ஸர்வ ஸூன்யம் அஸூன்யம் ச ஸத்ய அஸத்யம் ந வித்யதே |
ஸ்வபாவ பாவத: ப்ரோக்தம் ஸாஸ்த்ர ஸம்வித்தி பூர்வகம் ||76||

பத அர்த்தம்:

ஸர்வ – அனைத்தும்
ஸூன்யம் அஸூன்யம் ச – பாழனது நிரம்பியும்
ஸத்ய அஸத்யம் – உண்மை இன்மை
ந வித்யதே – அறியவில்லை
ஸ்வபாவ பாவத: - தன் சொந்த அனுபவத்தில்
ப்ரோக்தம் - எடுத்துரைக்கிறார்
ஸாஸ்த்ர – சாஸ்த்திரங்களின் கூற்றுக்களை
ஸம்வித்தி பூர்வகம் – நன்றாக அறிந்தவர்

தெளிவுரை:

பிரம்மத்தில், அனைத்தும் பாழானதாயும், நிரம்பியும் உள்ளது; உண்மை, இன்மை போன்றவை இல்லை; இவ்வனைத்தும், அவதூதர் தனது சொந்த அனுபவத்திலிருந்து எடுத்துரைக்கிறார், ஆனால் இவை யாவும் சாஸ்த்திரங்களிலும் கூறப்பட்டுள்ளன, இதன் மூலமாக அவதூதர் அனைத்து சாஸ்த்திரங்களையும் அறிந்தவர் என்பதை அறியமுடிகிறது.

||ஒன்றாம் அத்தியாயம் முற்றிற்று||

இரண்டாம் அத்தியாயம்

ஆத்மாவின் உண்மை தன்மை அறியாமை என்னும் இருமைகளால் மறைக்கப்பட்டுள்ளது, ஆன்மீக வாழ்வில் குருவின் தேவை பற்றி அவதூதர் எடுத்துரைத்தல்

அவதூதர் கூறுகிறார்:

பா ^{3}லஸ்ய வா விஷயபோ^{4}க ^{3}ரதஸ்ய வாபி
மூர்க ^{2}ஸ்ய ஸேவகஜநஸ்ய க்^{3}ரு’ஹஸ்தி ^{2}தஸ்ய ।
ஏதத் ^{3}கு^{3}ரோ : கிமபி நைவ ந சிந்தநீயம்
ரத்நம் கத ^{2}ம் த்யஜதி கோ ऽப்யஶுசௌ ப்ரவிஷ்டம் ॥ 1॥

பதச்சேதம்:

பாலஸ்ய வா விஷய போக ரதஸ்ய வாபி
மூர்கஸ்ய ஸேவக ஜனஸ்ய க்ருஹஸ்தி தஸ்ய |
ஏதத் குரோ: கிம் அபி ந ஏவ ந சிந்தனீயம்
ரக்னம் கதம் த்யஜதி கோ அபி அஸுசௌ ப்ரவிஷ்டம் ||1||

பத அர்த்தம்:

- பாலஸ்ய வா விஷய போக ரதஸ்ய வாபி - ஒரு குரு சீடனை விட வயதில் இளையவராகவும் இருக்கலாம்; உலக இன்ப துன்பங்களை அனுபவிப்பவராகவும் இருக்கலாம்;
- மூர்கஸ்ய ஸேவக ஜனஸ்ய க்ருஹஸ்தி தஸ்ய - கல்வியறிவு அற்றவராகவும் இருக்கலாம்; ஆசிரமம் அமைத்து உலகினருக்கு சேவை செய்பவராகவும் இருக்கலாம்; இல்லறத்தானகவும் இருக்கலாம்
- ஏதத் குரோ: கிம் அபி ந ஏவ ந சிந்தனீயம் - ஆனால் இவை எதையும் அவரை குருவாக ஏற்று கொள்வதில் கருத்தில் கொள்ளக்கூடாது
- ரக்னம் கதம் த்யஜதி கோ அபி அஸுசௌ ப்ரவிஷ்டம் - சேற்றில் விழுந்த ரத்தினக் கல்லை ஒருவர் எதற்காக கைவிடுவார்?

தெளிவுரை:

ஒரு குரு சீடனை விட வயதில் இளையவராகவும் இருக்கலாம்; உலக இன்ப துன்பங்களை அனுபவிப்பவராகவும் இருக்கலாம்; கல்வியறிவு அற்றவராகவும் இருக்கலாம்; ஆசிரமம் அமைத்து உலகினருக்கு சேவை செய்பவராகவும் இருக்கலாம்; இல்லறத்தானகவும் இருக்கலாம்; ஆனால் இவை எதையும் அவரை குருவாக ஏற்று கொள்வதில் கருத்தில் கொள்ளக்கூடாது; சேற்றில் விழுந்த ரத்தினக் கல்லை ஒருவர் எதற்காக கைவிடுவார்?

நைவாத்ர காவ்யகு^{3}ண ஏவ து சிந்தநீயோ
க்^{3}ராஹ்ய : பரம் கு^{3}ணவதா க^{2}லு ஸார ஏவ ।
ஸிந்தூ^{3}ரசித்ரரஹிதா பு^{4}வி ரூபஶூந்யா
பாரம் ந கிம் நயதி நௌரிஹ க^{3}ந்துகாமாந் ॥ 2॥

பதச்சேதம்:

ந ஏவ அத்ர காவ்ய குண ஏவ து சிந்தனீயோ
க்ராஹ்ய: பரம் குணவதா கலு ஸார ஏவ |
ஸிந்தூர சித்ர ரஹிதா புவி ரூப ஸூன்யா
பாரம் ந கிம் நயதி நௌரிஹ கந்து காமாந் ||2||

பத அர்த்தம்:

- ந ஏவ அத்ர காவ்ய குண ஏவ து சிந்தனீயோ - குருவின் போதனைகளை கல்வியறிவு தகுதியை மட்டும் வைத்து மதிப்பிடக் கூடாது
- க்ராஹ்ய: பரம் குணவதா கலு ஸார ஏவ - உண்மையில், புத்திசாலிகள் அனைத்தையும் (அறிவுள்ள மற்றும் அறிவற்ற) ஏற்றுக்கொள்கிறார்கள்
- ஸிந்தூர சித்ர ரஹிதா புவி ரூப ஸூன்யா - எப்படி ஒரு படகு வர்ணம் பூசப்படாமலும், சேறும் சகதியுமாக இருந்தாலும்
- பாரம் ந கிம் நயதி நௌரிஹ கந்து காமாந் - பாரம் சுமந்து கடலைக் கடந்து பயணிகளை ஏற்றிச் செல்லும் திறனற்றதாக இருக்குமா?

தெளிவுரை:

குருவின் போதனைகளை கல்வியறிவு தகுதியை மட்டும் வைத்து மதிப்பிடக் கூடாது; உண்மையில், புத்திசாலிகள் அனைத்தையும் சமமாக (அறிவுள்ள மற்றும் அறிவற்ற) ஏற்றுக்கொள்கிறார்கள்; எப்படி ஒரு படகு வர்ணம் பூசப்படாமலும், சேறும் சகதியுமாக இருந்தாலும், பாரம் சுமந்து கடலைக் கடந்து பயணிகளை ஏற்றிச் செல்லும் திறனற்றதாக இருக்குமா?

ப்ரயத்நேந விநா யேந நிஶ்சலேந சலாசலம் ।
க்^{3}ரஸ்தம் ஸ்வபா^{4}வத : ஶாந்தம் சைதந்யம் க^{3}க^{3}நோபமம் ॥ 3॥

பதச்சேதம்:

ப்ரயத்னேன வினா யேன நிஸ்சலே ந சல அசலம் |
க்ரஸ்தம் ஸ்வபாவத: ஸாந்தம் சைதன்யம் ககனோபமம் ||3||

பத அர்த்தம்:

- ப்ரயத்னேன வினா யேன நிஸ்சலே ந சல அசலம் - பிரம்மம் சலனமற்றது, எந்த முயற்சியும் இல்லாமல், அசையும் மற்றும் அசையாத அனைத்திலும் தன்மயமாக இருக்கிறது
- க்ரஸ்தம் ஸ்வபாவத: ஸாந்தம் சைதன்யம் ககனோபமம் - அது இயல்பிலேயே அமைதியாகவும், உணர்வாகவும், ஆகாயத்தை போன்று எங்கும் வியாபித்து இருக்கிறது.

தெளிவுரை:

பிரம்மம் சலனமற்றது, எந்த முயற்சியும் இல்லாமல், அசையும் மற்றும் அசையாத என அனைத்திலும் தன்மயமாக இருக்கிறது; அது இயல்பிலேயே அமைதியாகவும், உணர்வாகவும், ஆகாயத்தை போன்று எங்கும் வியாபித்து இருக்கிறது.

அயத்நாசா ^{2}லயேத் ^{3}யஸ்து ஏகமேவ சராசரம் ।
ஸர்வக ^{3}ம் தத்கத ^{2}ம் பி^{4}ந்நமத் ^{3}வைதம் வர்ததே மம ॥ 4॥

பதச்சேதம்:

அயத்னா சாலயேத் யஸ்து ஏகம் ஏவ சர அசரம் |
ஸர்வகம் தத் கதம் பின்னம் அத்வைதம் வர்ததே மம ||4||

பத அர்த்தம்:

- அயத்னா சாலயேத் யஸ்து ஏகம் ஏவ சர அசரம் - அசையும் மற்றும் அசையாத அனைத்திலும் சிரமமின்றி இயக்கும் ஒன்றேயான பிரம்மம் எங்கும் நிறைந்துள்ளது
- ஸர்வகம் தத் கதம் பின்னம் அத்வைதம் வர்ததே மம - அப்படியிருக்கையில், பிரம்மம் எப்படி பிளவுபட்டதாகும்? என்னைப் பொறுத்தவரை பிரம்மம் ஒன்றே.

தெளிவுரை:

அசையும் மற்றும் அசையாத அனைத்திலும் சிரமமின்றி இயக்கும் ஒன்றேயான பிரம்மம் எங்கும் நிறைந்துள்ளது, அப்படியிருக்கையில், பிரம்மம் எப்படி பிளவுபட்டதாகும்? என்னைப் பொறுத்தவரை பிரம்மம் ஒன்றே.

அஹமேவ பரம் யஸ்மாத்ஸாராத்ஸாரதரம் ஶிவம் ।
க^{3}மாக ^{3}மவிநிர்முக்தம் நிர்விகல்பம் நிராகுலம் ॥ 5॥

பதச்சேதம்:

அஹம் ஏவ பரம் யஸ்மாத் ஸாராத்ஸாரதரம் ஸிவம் |
கம அகம விநிர்முக்தம் நிர்விகல்பம் நிராகுலம் ||5||

பத அர்த்தம்:

- அஹம் ஏவ பரம் யஸ்மாத் ஸாராத்ஸாரதரம் ஸிவம் - நான் மட்டுமே மேலான உண்மை, ஆகையால் அனைத்து சாரங்களுக்கும் சாரமாக விளங்குபவன்;
- கம அகம விநிர்முக்தம் நிர்விகல்பம் நிராகுலம் - நான் போக்கும் வரவும் அற்றவன், வேறுபாடற்றவன், இன்றியமையாதவன்.

தெளிவுரை:

நான் மட்டுமே மேலான உண்மை, ஆகையால் அனைத்து சாரங்களுக்கும் சாரமாக விளங்குபவன்; நான் போக்கும் வரவும் அற்றவன், வேறுபாடற்றவன், இன்றியமையாதவன்.

ஸர்வாவயவநிர்முக்தம் ததா ^{2}ஹம் த்ரித ^{3}ஶார்சிதம் ।
ஸம்பூர்ணத்வாந்ந க்^{3}ரு’ஹ்ணாமி விபா^{4}க ^{3}ம் த்ரித ^{3}ஶாதி ^{3}கம் ॥ 6॥

பதச்சேதம்:

ஸர்வ அவயவ நிர்முக்தம் ததாஹம் த்ரிதஸ அர்சிதம் |
ஸம்பூர்ணத்வான் ந க்ருஹ்ணாமி விபாகம் த்ரிதஸாதி கம் ||6||

பத அர்த்தம்:

- ஸர்வ அவயவ நிர்முக்தம் ததாஹம் த்ரிதஸ அர்சிதம் - நான் அனைத்து பண்புகளிலிருந்தும் விடுபட்டவன், ஆகையால் மும்மூர்த்திகள் மற்றும் அனைத்து தெய்வங்களாலும் வணங்கப்படுகிறேன்[1]

- ஸம்பூர்ணத்வான் ந க்ருஹ்ணாமி விபாகம் த்ரிதஸாதி கம் - நான் முழுமையானவன் என்பதால், எந்த தெய்வத்திடமும் வேறுபாடுகள் என்பது எனக்கில்லை.

தெளிவுரை:

நான் அனைத்து பண்புகளிலிருந்தும் விடுபட்டவன், ஆகையால் மும்மூர்த்திகள் மற்றும் அனைத்து தெய்வங்களாலும் வணங்கப்படுகிறேன்[1]; நான் முழுமையானவன் என்பதால், எந்த தெய்வத்திடமும் வேறுபாடுகள் என்பது எனக்கில்லை.

1. **தெய்வங்களால் வணங்கப்படுகிறேன்** – பிரம்மத்தை உணர்ந்தவர் தெய்வங்களுக்கும் மேலானவர், ஏனெனில் பிரம்மம் தூய அறிவு, பரிபூரணம், உடல் உணர்விலிருந்து விடுபட்டது. ஜீவர்கள் தங்களின் நல்லொழுக்க செயல்களின் காரணமாக தெய்வ உடல்களைக் கொண்டிருக்கின்றனர், ஆனால் அந்த நல்லொழுக்க செயல்களின் பலன்கள் முடிந்த பிறகு, மீண்டும் அந்த ஜீவர்கள் பூமியில் பிறக்க வேண்டும்.

ப்ரமாதே ^{3}ந ந ஸந்தே ^{3}ஹ: கிம் கரிஷ்யாமி வ்ரு ’த்திமாந் ।
உத்பத் ^{3}யந்தே விலீயந்தே பு^{3}த்^{3}பு^{3}தா ^{3}ஶ்ச யதா ^{2} ஜலே ॥ 7॥

பதச்சேதம்:

ப்ரமாதேன ந ஸந்தேஹ: கிம் கரிஷ்யாமி விருத்திமான் |
உத்பத்யந்தே விலீயந்தே புத்புதாஸ்ச யதா ஜலே ||7||

பத அர்த்தம்:

- ப்ரமாதேன ந ஸந்தேஹ: கிம் கரிஷ்யாமி விருத்திமான் - அறியாமை எனக்குள் எந்த சந்தேகத்தையும் உருவாக்க முடியாது.
- உத்பத்யந்தே விலீயந்தே புத்புதாஸ்ச யதா ஜலே - மனதில் எண்ணங்கள் சதா உதித்து ஒடுங்கும், அவற்றை பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்? அவை தண்ணீரில் உள்ள நீர்குமிழி போல தோன்றி மறையும்.

தெளிவுரை:

அறியாமை எனக்குள் எந்த சந்தேகத்தையும் உருவாக்க முடியாது. மனதில் எண்ணங்கள் சதா உதித்து ஒடுங்கும், அவற்றை பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்? அவை தண்ணீரில் உள்ள நீர்குமிழி போல தோன்றி மறையும்.

மஹதா ^{3}தீ ^{3}நி பூ^{4}தாநி ஸமாப்யைவம் ஸதை ^{3}வ ஹி ।
ம்ரு ’து^{3}த்^{3}ரவ்யேஷு தீக்ஷ்ணேஷு கு^{3}டே ^{3}ஷு கடுகேஷு ச ॥ 8॥

பதச்சேதம்:

மஹத் ஆதீ நிபூதானி ஸமாப்ய ஏவம் ஸதைவ ஹி |
ம்ருது த்ரவ்யேஷு தீக்ஷனேஷு குடேஷு கடுகேஷு ச ||8||

பத அர்த்தம்:

- மஹத் ஆதீ நிபூதானி ஸமாப்ய ஏவம் ஸதைவ ஹி - பிரபஞ்ச அறிவாற்றலானது (பிரம்மம்) அனைத்து படைப்புகளிலும், அந்தந்த பொருட்களில் எப்போதும் ஊடுருவியும், வியாபித்தும் இருக்கின்றது.
- ம்ருது த்ரவ்யேஷு தீக்ஷனேஷு குடேஷு கடுகேஷு ச - மென்மை, நீர்த்தன்மையான பொருட்கள், கடினத்தன்மையான பொருட்கள், இனிப்பு மற்றும் கசப்பு போன்றவை

தெளிவுரை:

பிரபஞ்ச அறிவாற்றலானது (பிரம்மம்) அனைத்து படைப்புகளிலும் (மென்மை, நீர்த்தன்மையான பொருட்கள், கடினத்தன்மையான பொருட்கள், இனிப்பு மற்றும் கசப்பு) போன்ற அந்தந்த பொருட்களில் எப்போதும் ஊடுருவியும், வியாபித்தும் இருக்கின்றது.

கடுத்வம் சைவ ஶைத்யத்வம் ம்ரு ’து^{3}த்வம் ச யதா ^{2} ஜலே ।
ப்ரக்ரு ’தி : புருஷஸ்தத் ^{3}வத ^{3}பி^{4}ந்நம் ப்ரதிபா^{4}தி மே ॥ 9॥

பதச்சேதம்:

கடுத்வம் ச ஏவ ஶைத்யத்வம் ம்ருதுத்வம் ச யதா ஜலே |
ப்ரக்ருதி: புருஷஸ் தத்வத் அபின்னம் ப்ரதிபாதி மே ||9||

பத அர்த்தம்:

- கடுத்வம் ச ஏவ ஸைத்யத்வம் ம்ருதுத்வம் ச யதா ஜலே - தண்ணீர் குளிர்ச்சியாக இருந்தாலும், சூடாக இருந்தாலும், வெதுவெதுப்பாக இருந்தாலும், அது நீராகவே இருக்கிறது;
- ப்ரக்ருதி: புருஷஸ் தத்வத் அபின்னம் ப்ரதிபாதி மே - அதே போல் பிரபஞ்சமும், ஜீவர்களும் என்னில் பிரதிபலித்து தோன்றுகிறது.

தெளிவுரை:

தண்ணீர் குளிர்ச்சியாக இருந்தாலும், சூடாக இருந்தாலும், வெதுவெதுப்பாக இருந்தாலும், அது நீராகவே இருக்கிறது; அதே போல் பிரபஞ்சமும், ஜீவர்களும் பிரம்மமாகிய என்னில் பிரதிபலித்து தோன்றுகிறது.

ஸர்வாக் ^{2}யாரஹிதம் யத் ^{3}யத்ஸூக்ஷ்மாத்ஸூக்ஷ்மதரம் பரம் ।
மநோபு ^{3}த்^{3}தீ^{4}ந்த் ^{3}ரியாதீதமகலங்கம் ஜக ^{3}த்பதிம் ॥ 10 ॥

பதச்சேதம்:

ஸர்வாக்யா ரஹிதம் யத் யத் ஸூக்ஷ்மாத் ஸூக்ஷ்ம தரம் பரம் |
மனோ புத்தி இந்த்ரிய அதீதம் அகலங்கம் ஜகத் பதிம் ||10|

பத அர்த்தம்:

- ஸர்வாக்யா ரஹிதம் யத் யத் ஸூக்ஷமாத் ஸூக்ஷம தரம் பரம் - பிரம்மம் நுட்பமானதை விட நுட்பமாக இருப்பதால், அது எந்த வாதத்திற்கும் எட்டாது;
- மனோ புத்தி இந்த்ரிய அதீதம் அகலங்கம் ஜகத் பதிம் - புலன்கள், மனம் மற்றும் புத்திக்கு அப்பாற்பட்டது. அது எப்பொழுதும் பிரகாசிக்கும் பிரபஞ்சநாதன்.

தெளிவுரை:

பிரம்மம் நுட்பமானதை விட நுட்பமாக இருப்பதால், அது எந்த வாதத்திற்கும் எட்டாது; புலன்கள், மனம் மற்றும் புத்திக்கு அப்பாற்பட்டது; அது எப்பொழுதும், எங்கும் பிரகாசிக்கும் பிரபஞ்சநாதன்.

ஈத் ^{3}ரு’ஶம் ஸஹஜம் யத்ர அஹம் தத்ர கத ^{2}ம் ப^{4}வேத் ।
த்வமேவ ஹி கத ^{2}ம் தத்ர கத ^{2}ம் தத்ர சராசரம் ॥ 11 ॥

பதச்சேதம்:

ஈத்ருஸம் ஸஹஜம் யத்ர அஹம் தத்ர கதம் பவேத் |
த்வம் ஏவ ஹி கதம் தத்ர கதம் தத்ர சர அசரம் ||11||

பத அர்த்தம்:

- ஈத்ருஸம் ஸஹஜம் யத்ர அஹம் தத்ர கதம் பவேத் - பிரம்மம் மட்டுமே இயல்பாக இருக்கையில், இங்கு நான் என்பது எப்படி இருக்க முடியும்?

- த்வம் ஏவ ஹி கதம் தத்ர கதம் தத்ர சர அசரம் - நீ என்பது எப்படி இருக்க முடியும்? அசைவது மற்றும் அசையாதது என்பதும் எப்படி இருக்க முடியும்?

தெளிவுரை:

பிரம்மம் மட்டுமே இயல்பாக இருக்கையில், இங்கு நான் என்பது எப்படி இருக்க முடியும்? நீ என்பது எப்படி இருக்க முடியும்? அசைவது மற்றும் அசையாதது என்பதும் எப்படி இருக்க முடியும்?

க^{3}க^{3}நோபமம் து யத்ப்ரோக்தம் ததே ^{3}வ க^{3}க^{3}நோபமம் ।
சைதந்யம் தோ ^{3}ஷஹீநம் ச ஸர்வஜ்ஞம் பூர்ணமேவ ச ॥ 12 ॥

பதச்சேதம்:

ககனோபமம் து யத் ப்ரோக்தம் தத் ஏவ ககனோபமம் |
சைதன்யம் தோஷஹீனம் ச ஸர்வஜ்ஞம் பூர்ணம் ஏவ ச ||12||

பத அர்த்தம்:

- ககனோபமம் து யத் ப்ரோக்தம் தத் ஏவ ககனோபமம் - பிரம்மம் ஆகாயம் போன்றது என்று சாஸ்த்திரங்களால் உரைக்கப்படுகிறது, எனெனில், பிரம்மம் ஆகாயத்தையும் வியாபித்துள்ளது.

- சைதன்யம் தோஷஹீனம் ச ஸர்வஜ்ஞம் பூர்ணம் ஏவ ச - பிரம்மம் குற்றமற்றது, தூய உணர்வு, எல்லாம் அறிந்தது மற்றும் நிறைவானது.

தெளிவுரை:

பிரம்மம் ஆகாயம் போன்றது என்று சாஸ்த்திரங்களால் உரைக்கப்படுகிறது, எனெனில், பிரம்மம் ஆகாயத்தையும் வியாபித்துள்ளது. பிரம்மம் குற்றமற்றது, தூய உணர்வு, எல்லாம் அறிந்தது மற்றும் நிறைவானது.

ப்ரு ’தி ^{2}வ்யாம் சரிதம் நைவ மாருதேந ச வாஹிதம் ।
வரிணா பிஹிதம் நைவ தேஜோமத்^{4}யே வ்யவஸ்தி ^{2}தம் ॥ 13 ॥

பதச்சேதம்:

ப்ருதிவ்யாம் சரிதம் ந ஏவ மாருதேன ச வாஹிதம் |
வரிணா பிஹிதம் ந ஏவ தேஜோ மத்யே வ்யவஸ்திதம் ||13||

பத அர்த்தம்:

- ப்ருதிவ்யாம் சரிதம் ந ஏவ மாருதேன ச வாஹிதம் - பிரம்மம் பூமியில் நடமாடுவதில்லை, காற்றினால் கொண்டு செல்லப்படுவதில்லை

- வரிணா பிஹிதம் ந ஏவ தேஜோ மத்யே வ்யவஸ்திதம் - தண்ணீரில் மூழ்குவதுமில்லை, நெருப்பின் மத்தியில் வசிப்பதுமில்லை.

தெளிவுரை:

பிரம்மம் பூமியில் நடமாடுவதில்லை, காற்றினால் கொண்டு செல்லப்படுவதில்லை, தண்ணீரில் மூழ்குவதுமில்லை, நெருப்பின் மத்தியில் வசிப்பதுமில்லை.

ஆகாஶம் தேந ஸம்வ்யாப்தம் ந தத் ^{3}வ்யாப்தம் ச கேநசித் ।
ஸ பா ^{3}ஹ்யாப்^{4}யந்தரம் திஷ்ட ^{2}த்யவச்சி ^{2}ந்நம் நிரந்தரம் ॥ 14 ॥

பதச்சேதம்:

ஆகாஸம் தேன ஸம்வ்யாப்தம் ந தத் வ்யாப்தம் ச கேனசித் |
ஸ பாஹ்ய அப்யந்தர திஷ்டதி அவச்சின்னம் நிரந்தரம் ||14||

பத அர்த்தம்:

- ஆகாஸம் தேன ஸம்வ்யாப்தம் ந தத் வ்யாப்தம் ச கேனசித் - ஆகாயத்தை பிரம்மம் வியாபித்துள்ளது, ஆனால் பிரம்மத்தை எதுவும் வியாபிக்கவில்லை;

- ஸ பாஹ்ய அப்யந்தர திஷ்டதி அவச்சின்னம் நிரந்தரம் - அது உள்ளேயும் வெளியேயும் நிறைந்து, பிரிக்கமுடுயாததாயும், தடையின்றியும் இருக்கிறது.

தெளிவுரை:

ஆகாயத்தை பிரம்மம் வியாபித்துள்ளது, ஆனால் பிரம்மத்தை எதுவும் வியாபிக்கவில்லை; அது உள்ளேயும் வெளியேயும் நிறைந்து, பிரிக்கமுடியாததாயும், தடையின்றியும் இருக்கிறது.

ஸூக்ஷ்மத்வாத்தத ^{3}த்^{3}ரு'ஶ்யத்வாந்நிர்கு ^{3}ணத்வாச்ச யோகி ^{3}பி :^{4} ।
ஆலம்ப ^{3}நாதி ^{3} யத்ப்ரோக்தம் க்ரமாதா ^{3}லம்ப ^{3}நம் ப^{4}வேத் ॥ 15 ॥

பதச்சேதம்:

ஸூக்ஷ்மத்வாத் தத் அத்ருஸ்யத்வான் நிர்குணத்வாச்ச யோகிபி: |
ஆலம்பனாதி யத் ப்ரோக்தம் க்ரமாத் ஆலம்பனம் பவேத் ||15||

பத அர்த்தம்:

- ஸூக்ஷ்மத்வாத் தத் அத்ருஸ்யத்வான் நிர்குணத்வாச்ச யோகிபி: - பிரம்மம் நுட்பமானது, புலன்களுக்கு எட்டாதது, குணங்களற்றது, என்று யோ(விவே)கிகள் எடுத்துரைக்கின்றனர்;

- ஆலம்பனாதி யத் ப்ரோக்தம் க்ரமாத் ஆலம்பனம் பவேத் - அவர்கள் பரிந்துரைத்த முறைகளை சிரத்தையுடன் வரிசையாக ஒன்றன் பின் ஒன்றாக பின்பற்ற வேண்டும்.

தெளிவுரை:

பிரம்மம் நுட்பமானது, புலன்களுக்கு எட்டாதது, குணங்களற்றது, என்று யோ(விவே)கிகள் எடுத்துரைக்கின்றனர்; அவர்கள் பரிந்துரைத்த முறைகளை சிரத்தையுடன் வரிசையாக ஒன்றன் பின் ஒன்றாக பின்பற்ற வேண்டும்.

ஸததா Sப்⁴யாஸயுக்தஸ்து நிராலம்போ ³ யதா ³ ப⁴வேத் ।
தல்லயால்லீயதே நாந்தர்கு ³ணதோ ³ஷவிவர்ஜித : ॥ 16 ॥

பதச்சேதம்:

ஸததா அப்யாஸ யுக்தஸ்து நிராலம்போ யதா பவேத் |
தல்லயாத் லீயதே ந அந்தர் குண தோஷ விவர்ஜித: ||16||

பத அர்த்தம்:

- ஸததா அப்யாஸ யுக்தஸ்து நிராலம்போ யதா பவேத் - இடைவிடாத பிரம்ம பாவனையால், யோகத்தை பயில்பவனின் மனம் எப்பொருளையும், வடிவத்தையும் பற்றாமல், பிரம்மமாகவே ஆகிறது.
- தல்லயாத் லீயதே ந அந்தர் குண தோஷ விவர்ஜித: - மேலும் அநத மனதிற்கு விருப்பு வெறுப்பு இல்லாமல் போகிறது.

தெளிவுரை:

இடைவிடாத பிரம்ம பாவனையால், யோகத்தை பயில்பவனின் மனம் எப்பொருளையும், வடிவத்தையும் பற்றாமல், பிரம்மமாகவே ஆகிறது. மேலும் அந்த மனதிற்கு விருப்பு வெறுப்பு இல்லாமல் போகிறது.

விஷவிஶ்வஸ்ய ரௌத் ³ரஸ்ய மோஹமூர்ச்சா ²ப்ரத ³ஸ்ய ச ।
ஏகமேவ விநாஶாய ஹ்யமோக⁴ம் ஸஹஜாம்ரு ’தம் ॥ 17 ॥

பதச்சேதம்:

விஷ விஸ்வஸ்ய ரௌத்ரஸ்ய மோஹ மூர்ச்சா ப்ரதஸ்ய ச |
ஏகம் ஏவ விநாஸாய ஹி அமோகம் ஸஹஜ அம்ருதம் ||17||

பத அர்த்தம்:

- விஷ விஸ்வஸ்ய ரௌத்ரஸ்ய மோஹ மூர்ச்சா ப்ரதஸ்ய ச - மாயையின் மயக்கத்தை உருவாக்கும் உலகியல் என்ற பயங்கரமான விஷத்திற்கு ஒரே ஒரு மாற்று மருந்து,
- ஏகம் ஏவ விநாஸாய ஹி அமோகம் ஸஹஜ அம்ருதம் - அம்மருந்து அழிவிலிருந்து மீட்கவல்லது, மயக்கமற்றதும், இயல்பானதுமான அழிவற்ற பிரம்மமே, அது மேலான அமுதமாகும்.

தெளிவுரை:

மாயையின் மயக்கத்தை உருவாக்கும் உலகியல் என்ற பயங்கரமான விஷத்திற்கு ஒரே மாற்று மருந்து, அம்மருந்து அழிவிலிருந்து மீட்கவல்லது, மயக்கமற்றதும், இயல்பானதுமான அழிவற்ற பிரம்மமே, அது மேலான அமுதமாகும்.

பா⁴வக ³ம்யம் நிராகாரம் ஸாகாரம் த்³ரு’ஷ்டிகோ ³சரம் ।
பா⁴வாபா⁴வவிநிர்முக்தமந்தராலம் தது ³ச்யதே ॥ 18 ॥

பதச்சேதம்:

பாவகம்யம் நிராகாரம் ஸாகாரம் த்ருஷ்டி கோசரம் |
பாவ அபாவ விநிர்முக்தம் அந்தராலம் தத் உச்யதே ||18||

பத அர்த்தம்:

- பாவகம்யம் நிராகாரம் ஸாகாரம் த்ருஷ்டி கோசரம் - ஒருவர் உருவமற்றதைப் பற்றி சிந்திக்க முடியும், ஒரு வடிவத்தை காட்சிப்படுத்த முடியும்;
- பாவ அபாவ விநிர்முக்தம் அந்தராலம் தத் உச்யதே - ஆனால் பிரம்மம் இருப்பதும் அல்ல, இல்லாததும் அல்ல. அதை உள்ளம் என்று உணர்ந்தவர் உரைப்பர்.

தெளிவுரை:

ஒருவர் உருவமற்றதைப் பற்றி சிந்திக்க முடியும், ஒரு வடிவத்தை காட்சிப்படுத்த முடியும்; ஆனால் பிரம்மம் இருப்பதும் அல்ல, இல்லாததும் அல்ல. அதை உள்ளம் என்று உணர்ந்தவர் உரைப்பர்.

பா ³ஹ்யபா⁴வம் ப⁴வேத் ³விஸ்வமந்த : ப்ரக்ரு ’திருச்யதே ।
அந்தராத ³ந்தரம் ஜ்ஞேயம் நாரிகேலப ²லாம்பு ³வத் ॥ 19 ॥

பதச்சேதம்:

பாஹ்ய பாவம் பவேத் விஸ்வம் அந்த: ப்ரக்ருதிர் உச்யதே |
அந்தராத் அந்தரம் ஜ்ஞேயம் நாரி கேல பல அம்புவத் ||19||

பத அர்த்தம்:

- பாஹ்ய பாவம் பவேத் விஸ்வம் அந்த: ப்ரக்ருதிர் உச்யதே - புற அனுபவத்தை பிரபஞ்சம் (மாயா) என்றும், அக அனுபவத்தை (அவித்தை) என்றும் அழைக்கப்படுகிறது, உள்ளத்தின் உள்ளமாம் பிரம்மத்தை உணரு;
- அந்தராத் அந்தரம் ஜ்ஞேயம் நாரி கேல பல அம்புவத் - இது எவ்வாறெனில், ஒரு தேங்காயின் உள்ளே உள்ள நீரை கண்டறிவது போல்.

தெளிவுரை:

புற அனுபவத்தை பிரபஞ்சம் (மாயா) என்றும், அக அனுபவத்தை (அவித்தை) என்றும் அழைக்கப்படுகிறது, உள்ளத்தின் உள்ளமாம் பிரம்மத்தை உணரு; இது எவ்வாறெனில், ஒரு தேங்காயின் உள்ளே உள்ள நீரை கண்டறிவது போல்.

ப்^{4}ராந்திஜ்ஞாநம் ஸ்தி ^{2}தம் பா ^{3}ஹ்யம் ஸம்யக் ^{3}ஜ்ஞாநம் ச மத்^{4}யக ^{3}ம் ।
மத்^{4}யாந்மத்^{4}யதரம் ஜ்ஞேயம் நாரிகேலப ^{2}லாம்பு ^{3}வத் ॥ 20 ॥

பதச்சேதம்:

ப்ராந்தி ஜ்ஞானம் ஸ்திதம் பாஹ்யம் ஸம்யக் ஜ்ஞானம் ச மதி அகம் |
மத்யான் மத்யதரம் ஜ்ஞேயம் நாரிகேல பல அம்புவத் ||20||

பத அர்த்தம்:

- ப்ராந்தி ஜ்ஞானம் ஸ்திதம் பாஹ்யம் ஸம்யக் ஜ்ஞானம் ச மதி அகம் - புறவுலகமான பிரபஞ்சம் மயக்க அறிவு; உண்மை அறிவு தூய மனதில் பிரகாசிக்கும்;
- மத்யான் மத்யதரம் ஜ்ஞேயம் நாரிகேல பல அம்புவத் - உள்ளத்தின் உள்ளமாம் பிரம்மத்தை உணரு; இது எவ்வாறெனில், ஒரு தேங்காயின் உள்ளே உள்ள நீரை கண்டறிவது போல்.

தெளிவுரை:

புறவுலகமான பிரபஞ்சம் மயக்க அறிவு; உண்மை அறிவு தூய மனதில் பிரகாசிக்கும்; உள்ளத்தின் உள்ளமாம் பிரம்மத்தை உணரு; இது எவ்வாறெனில், ஒரு தேங்காயின் உள்ளே உள்ள நீரை கண்டறிவது போல்.

பௌர்ணமாஸ்யாம் யதா ^{2} சந்த் ^{3}ர ஏக ஏவாதிநிர்மல : ।
தேந தத்ஸத் ^{3}ரு'ஶம் பஶ்யேத் ^{3}த்^{3}விதா^{4}த் ^{3}ரு'ஷ்டிர்விபர்யய : ॥ 21 ॥

பதச்சேதம்:

பௌர்ணமாஸ்யாம் யதா சந்த்ர ஏக ஏவாதி நிர்மல: |
தேன தத் ஸத்ருஸம் பஸ்யேத் த்விதா த்ருஷ்டிர் விபர்யய: ||21||

பத அர்த்தம்:

- பௌர்ணமாஸ்யாம் யதா சந்த்ர ஏக ஏவாதி நிர்மல: - எப்படி பௌர்ணமி தினத்தன்று ஒரு சந்திரன் மட்டும் ஒன்றாகவும், பிரகாசமாகவும் ஒளிர்கிறதோ
- தேன தத் ஸத்ருஸம் பஸ்யேத் த்விதா த்ருஷ்டிர் விபர்யய: - அது போல பிரம்மம் ஒன்றே, சுயம் பிரகாசம் என்று உணர வேண்டும்; இருமைகளாக தெரிவது எல்லாம் ஏற்றி வைக்கப்பட்ட அறிவிலிருந்து இருந்து வருகின்றது.

தெளிவுரை:

எப்படி பௌர்ணமி தினத்தன்று ஒரு சந்திரன் மட்டும் ஒன்றாகவும், பிரகாசமாகவும் ஒளிர்கிறதோ, அது போல பிரம்மம் ஒன்றே, சுயம் பிரகாசம் என்று உணர வேண்டும்; இருமைகளாக தெரிவது எல்லாம் ஏற்றி வைக்கப்பட்ட அறிவிலிருந்து இருந்து வருகின்றது.

அநேநைவ ப்ரகாரேண பு[3]த்[3]தி[4]பே[4]தோ [3] ந ஸர்வக :[3] ।
தா [3]தா ச தீ[4]ரதாமேதி கீ [3]யதே நாமகோடிபி :[4] ॥ 22 ॥

பதச்சேதம்:

அனேன ஏவ ப்ரகாரேண புத்தி பேதோ ந ஸர்வக: |
தாதா ச தீரதாம் ஏதி கீயதே நாம கோடிபி: ||22||

பத அர்த்தம்:

- அனேன ஏவ ப்ரகாரேண புத்தி பேதோ ந ஸர்வக: - இருமைகள் என்பது தப்பறிவான அறியாமையில் இருந்து வருவதைப் போல, ஏற்றி வைக்கப்பட்ட அறிவினால் மனிதனுக்கு, எங்கும் நிறைந்த பிரம்மத்தை உணர முடியாது;

- தாதா ச தீரதாம் ஏதி கீயதே நாம கோடிபி: - தூய்மையான உள்ளம் உடையவரே பிரம்மம் என்ற அமைதியான நிலையை அடைகிறார், அந்த பிரம்மமே பல பெயர்களால் போற்றி பாடப்படுகிறது.

தெளிவுரை:

இருமைகள் என்பது தப்பறிவான அறியாமையில் இருந்து வருவதைப் போல, ஏற்றி வைக்கப்பட்ட அறிவினால் மனிதனுக்கு, எங்கும் நிறைந்த பிரம்மத்தை உணர முடியாது; தூய்மையான உள்ளம் உடையவரே பிரம்மம் என்ற அமைதியான நிலையை அடைகிறார், அந்த பிரம்மமே பல பெயர்களால் போற்றி பாடப்படுகிறது.

கு[3]ருப்ரஜ்ஞாப்ரஸாதே [3]ந மூர்கோ [2] வா யதி [3] பண்டி [3]த: ।
யஸ்து ஸம்பு [3]த்[4]யதே தத்த்வம் விரக்தோ ப[4]வஸாக [3]ராத் ॥ 23 ॥

பதச்சேதம்:

குரு ப்ரஜ்ஞா ப்ரஸாதேன மூர்கோ வா யதி பண்டித: |
யஸ்து ஸம்பத்யதே தத்த்வம் விரக்தோ பவ ஸாகராத் ||23||

பத அர்த்தம்:

- குரு ப்ரஜ்ஞா ப்ரஸாதேன மூர்கோ வா யதி பண்டித: - ஒருவர் கற்றவராக இருந்தாலும், பாமரராக இருந்தாலும், பிரம்ம சொரூபத்தை குருவின்(ஈஸ்வர) உபதேச அருளால் உணர்ந்தால்

- யஸ்து ஸம்பத்யதே தத்த்வம் விரக்தோ பவ ஸாகராத் - அவர் மாயை என்னும் கொந்தளிப்பான கடலில் இருந்து விடுபடுகிறார்.

தெளிவுரை:

ஒருவர் கற்றவராக இருந்தாலும், பாமரராக இருந்தாலும், பிரம்ம சொரூபத்தை குருவின்(ஈஸ்வர) உபதேச அருளால் உணர்ந்தால், அவர் மாயை என்னும் கொந்தளிப்பான கடலில் இருந்து விடுபடுகிறார்.

ராக ^{3}த்^{3}வேஷவிநிர்முக்த : ஸர்வபூ^{4}தஹிதே ரத : ।
த்^{3}ரு’ட^{4}போ ^{3}த^{4}ஶ்ச தீ^{4}ரஶ்ச ஸ க^{3}ச்சே ^{2}த்பரமம் பத ^{3}ம் ॥ 24 ॥

பதச்சேதம்:

ராக த்வேஷ விநிர்முக்த: ஸர்வ பூத ஹிதே ரத: |
த்ருட போதஸ்ச தீரஸ்ச ஸ கச்சேத் பரமம் பதம் ||24||

பத அர்த்தம்:

- ராக த்வேஷ விநிர்முக்த: ஸர்வ பூத ஹிதே ரத: - பிரபஞ்சத்தின் எவ்வுயிர்களுக்கும் தீங்கு செயாதவன், விருப்பு அற்றவன், வெறுப்பு அற்றவன்
- த்ருட போதஸ்ச தீரஸ்ச ஸ கச்சேத் பரமம் பதம் - நிலையானவன், சிறந்த விவேகியானவன், மேலான உண்மையான பிரம்ம சொரூபத்தை உணருகிறான்.

தெளிவுரை:

பிரபஞ்சத்தின் எவ்வுயிர்களுக்கும் தீங்கு செய்யாதவன், விருப்பு அற்றவன், வெறுப்பு அற்றவன், நிலையானவன், சிறந்த விவேகியானவன், மேலான உண்மையான பிரம்ம சொரூபத்தை உணருகிறான்.

க^{4}டே பி^{4}ந்நே க^{4}டாகாஶ ஆகாஶே லீயதே யதா ^{2} ।
தே ^{3}ஹாபா^{4}வே ததா ^{2} யோகீ ^{3} ஸ்வரூபே பரமாத்மநி ॥ 25 ॥

பதச்சேதம்:

கடே பின்னே கடாகாஸ ஆகாஸே லீயதே யதா |
தேஹ அபாவே ததா யோகீ ஸ்வரூபே பரம் ஆத்மனி ||25||

பத அர்த்தம்:

- கடே பின்னே கடாகாஸ ஆகாஸே லீயதே யதா - எப்படி ஒரு குடம் உடைந்தால், அதனில் உள்ள ஆகாயம், மகா ஆகாயத்துடன் ஒன்றாகிறதோ,
- தேஹ அபாவே ததா யோகீ ஸ்வரூபே பரம் ஆத்மனி - அப்படி ஒரு விவேகி, இவ்வுடல் நானல்ல என்ற நிச்சய புத்தியினாலும், இவ்வுடல் இறந்தாலும், தன் மேலான சொரூபமான சுயத்தில் திளைக்கிறார்.

தெளிவுரை:

எப்படி ஒரு குடம் உடைந்தால், அதனில் உள்ள ஆகாயம், மகா ஆகாயத்துடன் ஒன்றாகிறதோ, அப்படி ஒரு விவேகி, இவ்வுடல் நானல்ல என்ற நிச்சய புத்தியினாலும், இவ்வுடல் இறந்தாலும், தன் மேலான சொரூபமான சுயத்தில் திளைக்கிறார்.

உக்தேயம் கர்மயுக்தாநாம் மதிர்யாந்தே ऽபி ஸா க³தி : ।
ந சோக்தா யோக ³யுக்தாநாம் மதிர்யாந்தே ऽபி ஸா க³தி : ॥ 26 ॥

பதச்சேதம்:

உக்தேயம் கர்ம யுக்தானாம் மதிர்யாந்தே அபி ஸா கதி: |
ந ச உக்தா யோக யுக்தானாம் மதிர்யாந்தே அபி ஸா கதி: ||26||

பத அர்த்தம்:

- உக்தேயம் கர்ம யுக்தானாம் மதிர்யாந்தே அபி ஸா கதி: - சாஸ்த்திரங்கள் எடுத்துரைத்த செயல்களையும், சாஸ்த்திரங்கள் எடுத்துரைக்கா செயலைகளையும் பின்பற்றுபவர்களுக்கு, அவ்வாசனையின் காரணமாக மரணத்திற்கு பிறகு, அதே நிலையை அவர்கள் அடைகின்றனர் என்று கூறப்படுகிறது.

- ந ச உக்தா யோக யுக்தானாம் மதிர்யாந்தே அபி ஸா கதி: - ஆனால் தன் சுயத்தில் திளைப்பவரான யோகிக்கு[1], அவர் அதே நிலையை அடைவார் என்று கூறப்படவில்லை.

தெளிவுரை:

சாஸ்த்திரங்கள் எடுத்துரைத்த செயல்களையும், எடுத்துரைக்காத செயல்களையும் பின்பற்றுபவர்களுக்கு, அவ்வாசனையின் காரணமாக மரணத்திற்கு பிறகு, அதே நிலையை அவர்கள் அடைகின்றனர் என்று கூறப்படுகிறது. ஆனால் தன் சுயத்தில் திளைப்பவரான யோகிக்கு[1], அவர் அதே நிலையை அடைவார் என்று கூறப்படவில்லை.

1. **யோகி** – இங்கு யோகி என்ற சொல் இரண்டற்ற நிலையை குறிக்கிறது; உடலினாலும், மனதினாலும் செயல் செய்யும் செயல்களை யோகி என்ற தவறாக புரிந்து கொள்ளக்கூடாது.

யா க³தி : கர்மயுக்தாநாம் ஸா ச வாகி ³ந்த்³ரியாத் ³வதே ³த் ।
யோகி ³நாம் யா க³தி : க்வாபி ஹ்யகத் ²யா ப⁴வதோர்ஜிதா ॥ 27 ॥

பதச்சேதம்:

யா கதி: கர்ம யுக்தானாம் ஸா ச வாக் இந்த்ரியாத் வதேத் |
யோகினாம் யா கதி: க்வாபி ஹி அகத்யா பவதோர்ஜிதா ||27||

பத அர்த்தம்:

- யா கதி: கர்ம யுக்தானாம் ஸா ச வாக் இந்த்ரியாத் வதேத் - செயலைப் பின்பற்றுபவர்களின் நிலையை, அவர்களது பேச்சுறுப்பின் மூலம் விவரிக்க முடியும்,

- யோகினாம் யா கதி: க்வாபி ஹி அகத்யா பவதோர்ஜிதா - ஆனால் யோகிகளின் நிலையை சற்றும் விவரிக்க இயலாது, ஏனென்றால் அது பெறப்பட வேண்டிய பொருள் அல்ல.

தெளிவுரை:

செயலைப் பின்பற்றுபவர்களின் நிலையை, அவர்களது பேச்சுறுப்பின் மூலம் விவரிக்க முடியும், ஆனால் யோகிகளின் நிலையை சற்றும் விவரிக்க இயலாது, ஏனென்றால் அது பெறப்பட வேண்டிய பொருள் அல்ல.

ஏவம் ஜ்ஞாத்வா த்வமும் மார்க ³ம் யோகி ³நாம் நைவ கல்பிதம் ।
விகல்பவர்ஜநம் தேஷாம் ஸ்வயம் ஸித் ³தி :⁴ ப்ரவர்ததே ॥ 28 ॥

பதச்சேதம்:

ஏவம் ஜ்ஞாத்வா த்வமும் மார்கம் யோகினாம் ந ஏவ கல்பிதம் |
விகல்ப வர்ஜிதம் தேஷாம் ஸ்வயம் ஸித்தி: ப்ரவர்ததே ||28||

பத அர்த்தம்:

- ஏவம் ஜ்ஞாத்வா த்வமும் மார்கம் யோகினாம் ந ஏவ கல்பிதம் - இதை (முன் பாடலில் கூறப்பட்ட பொருளை) அறிந்த ஒருவர், யோகிகளின் எந்தவொரு குறிப்பிட்ட பாதையையும் கற்பனை செய்யக்கூடாது

- விகல்ப வர்ஜிதம் தேஷாம் ஸ்வயம் ஸித்தி: ப்ரவர்ததே - ஏனென்றால், அவர்கள் இருமைகளை கடந்தவர்கள், ஆகையால் அவர்கள் முழுமையாக சுயத்தில் இளைப்பாறுகிறார்கள்.

தெளிவுரை:

இதை (முன் பாடலில் கூறப்பட்ட பொருளை) அறிந்த ஒருவர், யோகிகளின் எந்தவொரு குறிப்பிட்ட பாதையையும் கற்பனை செய்யக்கூடாது, ஏனென்றால், அவர்கள் இருமைகளை கடந்தவர்கள், ஆகையால் அவர்கள் முழுமையாக சுயத்தில் இளைப்பாறுகிறார்கள்.

தீர்தே ² வாந்த்யஜகே ³ஹே வா யத்ர குத்ர ம்ரு ’தோ Sபி வா ।
ந யோகீ ³ பஶ்யதே க³ர்ப⁴ம் பரே ப்³ரஹ்மணி லீயதே ॥ 29 ॥

பதச்சேதம்:

தீர்தேவாந் த்யஜ கேஹே வா யத்ர குத்ர ம்ருதோ அபி வா |
ந யோகீ பஸ்யதே கர்பம் பரே ப்ரஹ்மணி லீயதே ||29||

பத அர்த்தம்:

- தீர்தேவாந் த்யஜ கேஹே வா யத்ர குத்ர ம்ருதோ அபி வா - ஒரு விவேகி புனித நீர்நிலை இருக்கும் இடத்திலோ, ஆலயங்கள் போன்ற புனித இடத்திலோ, பாமரரின் இல்லத்திலோ என எங்கு இறந்தாலும்

- ந யோகீ பஸ்யதே கர்பம் பரே ப்ரஹ்மணி லீயதே - அது, அவர் மீண்டும் ஒரு தாயின கர்பத்தில் புகுவதில்லை; அவர் மேலான பிரம்மத்தில் திளைக்கிறார்.

தெளிவுரை:

ஒரு விவேகி புனித நீர்நிலை இருக்கும் இடத்திலோ, ஆலயங்கள் போன்ற புனித இடத்திலோ, பாமரரின் இல்லத்திலோ என எங்கு இறந்தாலும், அது, அவர் மீண்டும் ஒரு தாயின கர்பத்தில் புகுவதில்லை; அவர் மேலான பிரம்மத்தில் திளைக்கிறார்.

ஸஹஜமஜமசிந்த்யம் யஸ்து பஶ்யேத்ஸ்வரூபம்
க⁴டதி யதி ³ யதே ²ஷ்டம் லிப்யதே நைவ தோ ³ஷை : ।
ஸக்ரு 'த³பி தத ³பா⁴வாத்கர்ம கிஞ்சிந்நகுர்யாத்
தத ³பி ந ச விப ³த்³த:⁴ ஸம்யமீ வா தபஸ்வீ ॥ 30 ॥

பதச்சேதம்:

ஸஹஜம் அஜம் அசிந்த்யம் யஸ்து பஸ்யேத் ஸ்வரூபம்
கடதி யதி யதேஷ்டம் லிப்யதே ந ஏவ தோஷை: |
ஸக்ருதபி தத் அபாவாத் கர்ம கிஞ்சிந் ந குர்யாத்
தத் அபி ந ச விபத்த: ஸம்யமீ வா தபஸ்வீ ||30||

பத அர்த்தம்:

- ஸஹஜம் அஜம் அசிந்த்யம் யஸ்து பஸ்யேத் ஸ்வரூபம் - பி(இ)றப்பற்ற, சிந்தனைக்கு எட்டாத, யதார்த்த சுயத்தை உணர்ந்தவர், தான் விரும்பிய வழியில் செயல்பட்டாலும்,

- கடதி யதி யதேஷ்டம் லிப்யதே ந ஏவ தோஷை: - அவரது செயல்கள், எந்த பலன்களையும் ஏற்படுவதில்லை.

- ஸக்ருதபி தத் அபாவாத் கர்ம கிஞ்சிந் ந குர்யாத் - மேலும் அவர் அறியாமையிலிருந்து விடுபட்டதனால், எச்செயலையும் இச்சைகாக செய்வதில்லை,

- தத் அபி ந ச விபத்த: ஸம்யமீ வா தபஸ்வீ - இதனால் சுயத்தில் திளைத்திருப்பவர் ஒருபோதும் எதற்கும் கட்டுப்பட்டவர் இல்லை.

தெளிவுரை:

பி(இ)றப்பற்ற, சிந்தனைக்கு எட்டாத, யதார்த்த சுயத்தை உணர்ந்தவர், தான் விரும்பிய வழியில் செயல்பட்டாலும், அவரது செயல்கள், எந்த பலன்களையும் ஏற்படுவதில்லை. மேலும் அவர் அறியாமையிலிருந்து விடுபட்டதனால், எச்செயலையும் இச்சைகாக செய்வதில்லை, இதனால் சுயத்தில் திளைத்திருப்பவர் ஒருபோதும் எதற்கும் கட்டுப்பட்டவர் இல்லை.

நிராமயம் நிஷ்ப்ரதிமம் நிராக்ரு 'திம்
நிராஶ்ரயம் நிர்வபுஷம் நிராஶிஷம் ।
நிர்த் ³வந்த் ³வநிர்மோஹமலுப்தஶக்திகம்
தமீஶமாத்மாநமுபைதி ஶாஶ்வதம் ॥ 31 ॥

பதச்சேதம்:

நிராமயம் நிஷ்ப்ரதிமம் நிராக்ருதிம்
நிராஸ்ரயம் நிர்வபுஷம் நிராஸூதம் |
நிர்த்வந்த்வ நிர்மோஹம் அலுப்த ஸக்திகம்
தம் ஈஸம் ஆத்மானம் உபைதி ஸாஸ்வதம் ||31||

பத அர்த்தம்:

- நிராமயம் – தூய்மையான
- நிஷ்ப்ரதிமம் – இணையற்ற
- நிராக்ருதிம் – வடிவற்ற
- நிராஸ்ரயம் – ஆதரவற்ற
- நிர்வபுஷம் – ஜடமற்ற
- நிராஸூதம் – ஆசையற்ற
- நிர்த்வந்த்வ – இருமைகளற்ற
- நிர்மோஹம் – குழப்பமற்ற
- அலுப்த ஸக்திகம் – குறைவற்ற சக்தி
- தம் ஈஸம் ஆத்மானம் – ஆத்மாவாகிய தன்னில்
- உபைதி ஸாஸ்வதம் – எப்பொழுதும் திளைக்கிறார்

தெளிவுரை:

விவேகி நித்தியமான உன்னத ஆத்மாவாகிய தன்னில் எப்பொழுதும் திளைக்கிறார், அது தூய்மையான, இணையற்ற, வடிவற்ற, ஆதரவற்ற, ஜடமற்ற, ஆசையற்ற, இருமைகளற்ற, குழப்பமற்ற, மாயைக்கு அப்பாற்பட்ட குறைவற்ற சக்தி.

வேதோ ^{3} ந தீ ^{3}க்ஷா ந ச முண்ட ^{3}நக்ரியா
கு^{3}ருர்ந ஶிஷ்யோ ந ச யந்த்ரஸம்பத :^{3} ।
முத்^{3}ராதி ^{3}கம் சாபி ந யத்ர பா^{4}ஸதே
தமீஶமாத்மாநமுபைதி ஶாஶ்வதம் ॥ 32 ॥

பதச்சேதம்:

வேதோ ந தீக்ஷா ந ச முண்டன க்ரியா
குருர் ந ஸிஷ்யோ ந ச யந்த்ர ஸம்பத: |
முத்ராதிகம் ச அபி ந யத்ர பாஸதே
தம் ஈஸம் ஆத்மானம் உபைதி ஸாஸ்வதம் ||32||

பத அர்த்தம்:

- வேதோ ந தீக்ஷா ந ச முண்டன க்ரியா - அச்சுகத்தை வேதங்களாலோ, தீட்சைகளாலோ, மொட்டை அடித்து கொள்வது போன்ற பிற செயல்களாலோ

- குருர் ந ஸிஷ்யோ ந ச யந்த்ர ஸம்பத: - குருவாலோ, சீடராலோ, யந்திரங்களாலோ

- முத்ராதிகம் ச அபி ந யத்ர பாஸதே - தோரணைகளாலோ வெளிப்படுத்த இயலாது.

- தம் ஈஸம் ஆத்மானம் உபைதி ஸாஸ்வதம் - விவேகி நித்தியமான உன்னத ஆத்மாவாகிய தன்னில் எப்பொழுதும் திளைக்கிறார்,

தெளிவுரை:

விவேகி நித்தியமான உன்னத ஆத்மாவாகிய தன்னில் எப்பொழுதும் திளைக்கிறார், அச்சுகத்தை வேதங்களாலோ, தீட்சைகளாலோ, மொட்டை அடித்து கொள்வது போன்ற பிற செயல்களாலோ, குருவாலோ, சீடராலோ, யந்திரங்களாலோ, தோரணைகளாலோ வெளிப்படுத்த இயலாது.

ந ஶாம்ப^{4}வம் ஶாக்திகமாநவம் ந வா
பிண்ட ^{3}ம் ச ரூபம் ச பதா ^{3}தி ^{3}கம் ந வா ।
ஆரம்ப^{4}நிஷ்பத்திக^{4}டாதி ^{3}கம் ச நோ
தமீஶமாத்மாநமுபைதி ஶாஸ்வதம் ॥ 33 ॥

பதச்சேதம்:

ந ஸாம்பவம் ஸாக்திக மானவம் ந வா
பிண்டம் ச ரூபம் ச பதாதி கம் ந வா |
ஆரம்ப நிஷ்பத்தி கடாதி கம் ச நோ
தம் ஈஸம் ஆத்மானம் உபைதி ஸாஸ்வதம் ||33||

பத அர்த்தம்:

- ந ஸாம்பவம் ஸாக்திக மானவம் ந வா - அது சிவன் அல்லது சக்தி அல்லது மனுவிலிருந்து தோன்றவில்லை.
- பிண்டம் ச ரூபம் ச பதாதி கம் ந வா - அது மாமிசம் போன்ற சதைக்கட்டி அல்ல, அதற்கு ஒரு வடிவமற்றது, கை கால்கள் போன்ற உறுப்புகளற்றது,
- ஆரம்ப நிஷ்பத்தி கடாதி கம் ச நோ - அதனை ஒரு குடம் போன்று வடிவமைத்து உருவாக்க முடியாது.
- தம் ஈஸம் ஆத்மானம் உபைதி ஸாஸ்வதம் - விவேகி நித்தியமான உன்னத ஆத்மாவாகிய தன்னில் எப்பொழுதும் திளைக்கிறார்,

தெளிவுரை:

விவேகி நித்தியமான உன்னத ஆத்மாவாகிய தன்னில் எப்பொழுதும் திளைக்கிறார், அது சிவன், சக்தி, மனுவிலிருந்து தோன்றவில்லை. அது மாமிசம் போன்ற சதைக்கட்டி அல்ல, அது வடிவமற்றது, கை கால்கள் போன்ற உறுப்புகளற்றது, அதனை ஒரு குடம் போன்று வடிவமைத்து உருவாக்க முடியாது.

யஸ்ய ஸ்வரூபாத்ஸசராசரம் ஜக ^{3}-
து^{3}த்பத் ^{3}யதே திஷ்ட ^{2}தி லீயதே ऽபி வா ।
பயோவிகாராதி ^{3}வ பே ^{2}நபு ^{3}த்^{3}பு^{3}தா ^{3}-
ஸ்தமீஶமாத்மாநமுபைதி ஶாஸ்வதம் ॥ 34 ॥

பதச்சேதம்:

யஸ்ய ஸ்வரூபாத் ஸ சராசரம் ஜகத்
உத்பத்யதே திஷ்டதி லீயதே அபி வா |
பயோ விகாராதிவ பேன புத்புதா
தம் ஈஸம் ஆத்மானம் உபைதி ஸாஸ்வதம் ||34||

பத அர்த்தம்:

- யஸ்ய ஸ்வரூபாத் ஸ சராசரம் ஜகத் - எதனுடைய சாராத்திலிருந்து அசையும் மற்றும் அசையாத உலகங்கள் வெளிப்பட்டு
- உத்பத்யதே திஷ்டதி லீயதே அபி வா - எதிலே அவை இருந்து, மீண்டும் கரைகின்றதோ?
- பயோ விகாராதிவ பேன புத்புதா - எப்படி நீரின் சலனத்தினால் நுரை மற்றும் நீர்குமிழ்கள் உண்டாகி, பின்னர் மீண்டும் நீரிலே கரைகிறதோ
- தம் ஈஸம் ஆத்மானம் உபைதி ஸாஸ்வதம் – ஆத்மாவாகிய தன்னில் எப்பொழுதும் திளைக்கிறார்

தெளிவுரை:

விவேகி நித்தியமான உன்னத ஆத்மாவாகிய தன்னில் எப்பொழுதும் திளைக்கிறார், எதனுடைய சாராத்திலிருந்து அசையும் மற்றும் அசையாத உலகங்கள் வெளிப்பட்டு, எதில் அவை இருந்து, மீண்டும் கரைகின்றதோ? எப்படி நீரின் சலனத்தினால் நுரை மற்றும் நீர்குமிழ்கள் உண்டாகி, பின்னர் மீண்டும் நீரிலே கரைகிறதோ அப்படி சுயத்திலே அனைத்தும் உண்டாகி சுயத்திலே மீண்டும் கரைகின்றது.

நாஸாநிரோதோ^{4} ந ச த்^{3}ரு’ ஷ்டிராஸநம்
போ ^{3}தோ^{4} ऽப்யபோ ^{3}தோ^{4} ऽபி ந யத்ர பா^{4}ஸதே ।
நாடீ ^{3}ப்ரசாரோ ऽபி ந யத்ர கிஞ்சித்
தமீஶமாத்மாநமுபைதி ஶாஶ்வதம் ॥ 35 ॥

பதச்சேதம்:

நாஸா நிரோதோ ந ச த்ருஷ்டிர் ஆஸனம்
போதோ அபி அபோதோ அபி ந யத்ர பாஸதே |
நாடீ ப்ரசாரோ அபி ந யத்ர கிஞ்சித்
தம் ஈஸம் ஆத்மானம் உபைதி ஸாஸ்வதம் ||35||

பத அர்த்தம்:

- நாஸா நிரோதோ ந ச த்ருஷ்டிர் ஆஸனம் - மூச்சு கட்டுப்பாட்டினாலோ, மனதை ஒடுக்கிவதாலோ, ஆசனங்களை பயிற்சி செய்வதாலோ
- போதோ அபி அபோதோ அபி ந யத்ர பாஸதே - அறிவு, அறியாமை, அறிவறியாமைக்கு அப்பாற்பட்டது,

- நாடீ ப்ரசாரோ அபி ந யத்ர கிஞ்சித் - நரம்பு மண்டலங்களை உயிரூட்டுவதாலோ (இடா, பிங்கலா மற்றும் சுஷும்னா) உணர இயலாது.

- தம் ஈஸம் ஆத்மானம் உபைதி ஸாஸ்வதம் – ஆத்மாவாகிய தன்னில் எப்பொழுதும் திளைக்கிறார்

தெளிவுரை:

விவேகி நித்தியமான உன்னத ஆத்மாவாகிய தன்னில் எப்பொழுதும் திளைக்கிறார், சுயம், அறிவு, அறியாமை, அறிவறியாமைக்கு அப்பாற்பட்டது, மேலும் மூச்சு கட்டுப்பாட்டினாலோ, மனதை ஒடுக்குவதாலோ, ஆசனங்களை பயிற்சி செய்வதாலோ, நரம்பு மண்டலங்களை உயிரூட்டுவதாலோ (இடா, பிங்கலா மற்றும் சுஷும்னா) உணர இயலாது.

நாநாத்வமேகத்வமுப⁴த்வமந்யதா
அணுத்வதீ³ர்க⁴த்வமஹத்த்வஶூந்யதா ।
மாநத்வமேயத்வஸமத்வவர்ஜிதம்
தமீஶமாத்மாநமுபைதிஶாஶ்வதம் ॥36 ॥
பதச்சேதம்:

நானாத்வம் ஏககத்வம் உபத்வம் அன்யதா
அணுத்வ தீர்கத்வ மஹத்த்வ ஸூன்யதா |
மானத்வ மேயத்வ ஸமத்வ வர்ஜிதம்
தம் ஈஸம் ஆத்மானம் உபைதி ஸாஸ்வதம் ||36||

பத அர்த்தம்:

- நானாத்வம் ஏககத்வம் உபத்வம் அன்யதா - சுயம், ஒன்றல்ல, இரண்டல்ல, பலவல்ல, மற்றொன்றுமல்ல.

- அணுத்வ தீர்கத்வ மஹத்த்வ ஸூன்யதா - அது நுண்ணியது, பெரியது, பரந்த தன்மை மற்றும் வெறுமை ஆகியவற்றிலிருந்து விடுபட்டது.

- மானத்வ மேயத்வ ஸமத்வ வர்ஜிதம் - அது அளவீடு, பரிமாணம், ஒற்றுமை போன்றவை அற்றது.

- தம் ஈஸம் ஆத்மானம் உபைதி ஸாஸ்வதம் – ஆத்மாவாகிய தன்னில் எப்பொழுதும் திளைக்கிறார்

தெளிவுரை:

விவேகி நித்தியமான உன்னத ஆத்மாவாகிய தன்னில் எப்பொழுதும் திளைக்கிறார், சுயம், ஒன்றல்ல, இரண்டல்ல, பலவல்ல, மற்றொன்றுமல்ல. அது நுண்ணியது, பெரியது, பரந்த தன்மை மற்றும் வெறுமை ஆகியவற்றிலிருந்து விடுபட்டது. அது அளவீடு, பரிமாணம், ஒற்றுமை போன்றவை அற்றது.

ஸுஸம்யமீ வா யதி ^{3} வா ந ஸம்யமீ
ஸுஸங்க் ^{3}ரஹீ வா யதி ^{3} வா ந ஸங்க் ^{3}ரஹீ ।
நிஷ்கர்மகோ வா யதி ^{3} வா ஸகர்மகஸ்
தமீஶமாத்மாநமுபைதி ஶாஶ்வதம் ॥ 37 ॥

பதச்சேதம்:

ஸுஸம்யமீ வா யதி வா ந ஸம்யமீ
ஸுஸங்க்ரஹீ வா யதி வா ந ஸங்க்ரஹீ |
நிஷ்கர்ம கோ வா யதி வா ஸகர்மகஸ்
தம் ஈஸம் ஆத்மானம் உபைதி ஸாஸ்வதம் ||37||

பத அர்த்தம்:

- ஸுஸம்யமீ வா யதி வா ந ஸம்யமீ - விவேகி, சுய கட்டுப்பாடு உடைய சந்நியாசியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும்
- ஸுஸங்க்ரஹீ வா யதி வா ந ஸங்க்ரஹீ - இல்லறத்தானாக இருந்தாலும் இல்லாவிட்டாலும்
- நிஷ்கர்ம கோ வா யதி வா ஸகர்மகஸ் - செயல் புரிபவராக இருந்தாலும், செயலற்றவராக இருந்தாலும்
- தம் ஈஸம் ஆத்மானம் உபைதி ஸாஸ்வதம் – ஆத்மாவாகிய தன்னில் எப்பொழுதும் திளைக்கிறார்

தெளிவுரை:

விவேகி, சுய கட்டுப்பாடு உடைய சந்நியாசியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், இல்லறத்தானாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், செயல் புரிபவராக இருந்தாலும், செயலற்றவராக இருந்தாலும், நித்தியமான உன்னத ஆத்மாவாகிய தன்னில் எப்பொழுதும் திளைக்கிறார்

மநோ ந பு^{3}த்^{3}தி^{4}ர்ந ஶரீரமிந்த் ^{3}ரியம்
தந்மாத்ரபூ^{4}தாநி ந பூ^{4}தபஞ்சகம் ।
அஹங்க்ரு ’திஶ்சாபி வியத்ஸ்வரூபகம்
தமீஶமாத்மாநமுபைதி ஶாஶ்வதம் ॥ 38 ॥

பதச்சேதம்:

மனோ ந புத்திர் ந ஸரீரம் இந்த்ரியம்
தன்மாத்ர பூதானி ந பூத பஞ்சகம் |
அஹங்க்ருதிஸ் ச அபி வியத் ஸ்வரூபகம்
தம் ஈஸம் ஆத்மானம் உபைதி ஸாஸ்வதம் ||38||

பத அர்த்தம்:

- மனோ ந புத்திர் ந ஸரீரம் இந்த்ரியம் – மனம், புத்தி, உடல் மற்றும் புலன்கள் அற்றது

- தன்மாத்ர பூதானி ந பூத பஞ்சகம் – சுக்ஷும தன்மாத்திரைகள் மற்றும் ஸ்தூல பூதங்கள் அற்றது.

- அஹங்க்ருதிஸ் ச அபி வியத் ஸ்வரூபகம் – அஹங்காரம் அற்ற நான் சொரூபம்

- தம் ஈஸம் ஆத்மானம் உபைதி ஸாஸ்வதம் – ஆத்மாவாகிய தன்னில் எப்பொழுதும் திளைக்கிறார்

தெளிவுரை:

விவேகி நித்தியமான உன்னத ஆத்மாவாகிய தன்னில் எப்பொழுதும் திளைக்கிறார், சுயமானது, உடல், புலன்கள், மனம், புத்தி, சித்தம் மற்றும் அகங்காரம் அற்றது. சுக்ஷும ஐந்து பூதங்களாலோ (தன்மாத்திரைகள்[1]), ஸ்தூல ஐந்து பூதங்களாலோ[2], அல்லது வெட்டவெளி தன்மையும் அற்றது, அகங்காரமற்ற நான் சொரூபம்.

1. **தன்மாத்திரைகள்** – சப்தம், ஸ்பரிசம், ரூபம் ரசம், கந்தம்
2. **பூதங்கள்** – ஆகாயம், காற்று, நெருப்பி, நீர், பூமி

விதௌ^{4} நிரோதே^{4} பரமாத்மதாம் க^{3}தே
ந யோகி ^{3}நஶ்சேதஸி பே^{4}த ^{3}வர்ஜிதே ।
ஶௌசம் ந வாஶௌசமலிங்க ^{3}பா^{4}வநா
ஸர்வம் விதே^{4}யம் யதி ^{3} வா நிஷித்^{4}யதே ॥ 39 ॥

பதச்சேதம்:

விதௌ நிரோதே பரமாத்மதாம் கதே
ந யோகீ நஸ் சேதஸி பேத வர்ஜிதே |
ஸௌசம் ந வ அஸௌசம் அலிங்கம் பாவனா
ஸர்வம் விதேயம் யதி வா நிஷித்யதே ||39||

பத அர்த்தம்:

- விதௌ நிரோதே - சாஸ்த்திரங்களில் விதிக்கப்பட்டுள்ள கட்டுபாடுகளற்றவர் ஆகிறார்

- பரமாத்மதாம் கதே - தன் நித்திய உன்னத ஆத்மாவை உணர்ந்த விவேகிக்கு

- ந யோகீ நஸ் சேதஸி பேத வர்ஜிதே - தூய்மை அல்லது தூய்மையின்மை பற்றிய எண்ணம் இல்லை

- ஸௌசம் ந வ அஸௌசம் அலிங்கம் பாவனா - வேறுபடாற்ற மனதில் நல்ல, தீய எண்ணங்கள் எழாது.

- ஸர்வம் விதேயம் யதி வா நிஷித்யதே - தடைசெய்யப்பட்டது என்று எதுவும் அவருக்கு இல்லை, ஏனெனில் அவர் எல்லா விதிகளுக்கும் அப்பாற்பட்டவர்.

தெளிவுரை:

தன் நித்திய உன்னத ஆத்மாவை உணர்ந்த விவேகிக்கு, சாஸ்த்திரங்களின் கட்டுபாடுகளில்லை, தூய்மை அல்லது தூய்மையின்மை பற்றிய எண்ணம் இல்லை,

வேறுபடாற்ற மனதில் நல்ல, தீய எண்ணங்கள் எழாது. தடைசெய்யப்பட்டது என்று எதுவும் அவருக்கு இல்லை, ஏனெனில் அவர் எல்லா விதிகளுக்கும் அப்பாற்பட்டவர்.

மநோ வசோ யத்ர ந ஶக்தமீரிதும்
நூநம் கத ^{2}ம் தத்ர கு^{3}ருபதே ^{3}ஶதா ।
இமாம் கதா ^{2}முக்தவதோ கு^{3}ரோஸ்
தத்^{3}யுக்தஸ்ய தத்த்வம் ஹி ஸமம் ப்ரகாஶதே ॥ 40 ॥

பதச்சேதம்:

மனோ வசோ யத்ர ந ஸக்தமீரிதும்
நூனம் கதம் தத்ர குரு உபதேஸதா |
இமாம் கதா முக்த வதோ குரோஸ்
தத் யுக்தஸ்ய தத்த்வம் ஹி ஸமம் ப்ரகாஸதே ||40||

பத அர்த்தம்:

- மனோ வசோ யத்ர ந ஸக்தமீரிதும் - பிரம்மம் வாக்கிற்கும், மனதிற்கும் அப்பாற்ப்பட்டது
- நூனம் கதம் தத்ர குரு உபதேஸதா - பிரம்மத்தை பற்றிய குருவின் உபதேசத்தைப் என்ன கூறுவது?
- இமாம் கதா முக்த வதோ குரோஸ் - யதார்த்த சத்தியத்தை அறிவுரைத்த குருவின் உபதேசங்களை
- தத் யுக்தஸ்ய தத்த்வம் ஹி ஸமம் ப்ரகாஸதே - உள்வாங்கியவருக்கு பிரம்மம் முழுவதுமாக உணரப்படுகிறது.

தெளிவுரை:

பிரம்மம் வாக்கிற்கும், மனதிற்கும் அப்பாற்ப்பட்டது, அப்படியிருக்க, பிரம்மத்தை பற்றிய குருவின் உபதேசத்தைப் என்ன கூறுவது? யதார்த்த சத்தியத்தை அறிவுரைத்த குருவின் உபதேசங்களை உள்வாங்கியவருக்கு பிரம்மம் முழுவதுமாக உணரப்படுகிறது.

||இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று||

மூன்றாம் அத்தியாயம்

ஆத்மாவின் இயல்பை அவதூதர் எடுத்துரைத்தல்

அவதூதர் கூறுகிறார்:

கு³ணவிகு ³ணவிபா⁴கோ ³ வர்ததே நைவ கிஞ்சித்
ரதிவிரதிவிஹீநம் நிர்மலம் நிஷ்ப்ரபஞ்சம் ।
கு³ணவிகு ³ணவிஹீநம் வ்யாபகம் விஶ்வரூபம்
கத ²மஹமிஹ வந்தே ³ வ்யோமரூபம் ஶிவம் வை ॥ 1॥

பதச்சேதம்:

குண விகுண விபாகோ வர்ததே நைவ கிஞ்சித்
ரதி விரதி விஹீனம் நிர்மலம் நிஷ்ப்ரபஞ்சம் |
குண விகுண விஹீனம் வ்யாபகம் விஸ்வரூபம்
கதம் அஹம் இஹம் வந்தே வ்யோம ரூபம் ஸிவம் வை ||1||

பத அர்த்தம்:

- குண விகுண விபாகோ – பிரம்மத்தில் குணங்களால் (ஸத்வம், ரஜஸ், தமஸ்) ஏற்படும் வேறுபாடுகள்
- வர்ததே நைவ கிஞ்சித் – என்பது சிறிதும் இல்லை
- ரதி விரதி விஹீனம் – நாட்டம் மற்றும் நாட்டமின்மை இல்லை
- நிர்மலம் நிஷ்ப்ரபஞ்சம் – பிரம்மம் தூய்மையானது வெளிப்படாதது
- குண விகுண விஹீனம் - குணங்களற்றது (ஸத்வம், ரஜஸ், தமஸ்)
- வ்யாபகம் விஸ்வரூபம் – எங்கும் நிறைந்துள்ளதும், அனைத்தையும் வியாபித்துள்ளதுமான பிரம்மம்
- கதம் அஹம் இஹம் வந்தே – எப்படி நான் எங்கு? எதை வணங்குவது?
- வ்யோம ரூபம் ஸிவம் வை – ஆகாயம் போன்ற பிரம்ம(சிவ)த்தை

தெளிவுரை:

பிரம்மத்தில் குணங்களால் (ஸத்வம், ரஜஸ், தமஸ்) ஏற்படும் வேறுபாடுகள் என்பது சிறிதும் இல்லை; தூய்மையானதும், வெளிப்படாத பிரம்மத்தில், நாட்டம் மற்றும் நாட்டமின்மை என்பதும் இல்லை; எங்கும் நிறைந்துள்ளதும், அனைத்தையும் வியாபித்துள்ளதுமான பிரம்மம் குணங்களற்றது (ஸத்வம், ரஜஸ், தமஸ்); ஆகாயம் போன்ற பிரம்ம(சிவ)த்தை, நான் எங்கு? எதை? எப்படி வணங்குவது?

ஶ்வேதாதி ^{3}வர்ணரஹிதோ நியதம் ஶிவஶ்ச
கார்யம் ஹி காரணமித ^{3}ம் ஹி பரம் ஶிவஶ்ச ।
ஏவம் விகல்பரஹிதோ ऽஹமலம் ஶிவஶ்ச
ஸ்வாத்மாநமாத்மநி ஸுமித்ர கத ^{2}ம் நமாமி ॥ 2॥

பதச்சேதம்:

ஸ்வேதாதி வர்ண ரஹிதோ நியதம் ஸிவஸ்ச
கார்யம் ஹி காரணம் இதம் ஹி பரம் ஸிவஸ்ச |
ஏவம் விகல்ப ரஹிதோ அஹம் அலம் ஸிவஸ்ச
ஸ்வ ஆத்மானம் ஆத்மனி ஸுமித்ர கதம் நமாமி ||2||

பத அர்த்தம்:

- ஸ்வேதாதி வர்ண ரஹிதோ நியதம் ஸிவஸ்ச - பிரம்மம் நிரந்தரமானது, நிறங்களற்றது (வெள்ளை, சிவப்பு, கருப்பு போன்றவை)

- கார்யம் ஹி காரணம் இதம் ஹி பரம் ஸிவஸ்ச - எழுவாய் மற்றும் பயனிலை அற்றது;

- ஏவம் விகல்ப ரஹிதோ அஹம் அலம் ஸிவஸ்ச - வேறுபாடுகளற்றது;

- ஸ்வ ஆத்மானம் ஆத்மனி ஸுமித்ர கதம் நமாமி - நண்பா! பிரம்ம(சிவ)மாகிய நான் என் சுயத்தை எங்கு? எப்படி வணங்குவது?

தெளிவுரை:

பிரம்மம் நிரந்தரமானது, நிறங்களற்றது (வெள்ளை, சிவப்பு, கருப்பு போன்றவை); எழுவாய் மற்றும் பயனிலை அற்றது; வேறுபாடுகளற்றது; நண்பா! பிரம்ம(சிவ)மாகிய நான் என் சுயத்தை எங்கு? எப்படி வணங்குவது?

நிர்மூலமூலரஹிதோ ஹி ஸதோ ^{3}தி ^{3}தோ ऽஹம்
நிர்தூ^{4}மதூ^{4}மரஹிதோ ஹி ஸதோ ^{3}தி ^{3}தோ ऽஹம் ।
நிர்தீ ^{3}பதீ ^{3}பரஹிதோ ஹி ஸதோ ^{3}தி ^{3}தோ ऽஹம்
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ ऽஹம் ॥ 3॥

பதச்சேதம்:

நிர்மூல மூல ரஹிதோ ஹி ஸத் உதிதோ அஹம்
நிர்தூம தூம ரஹிதோ ஹி ஸத் உதிதோ அஹம் |
நிர்தீப தீப ரஹிதோ ஹி ஸத் உதிதோ அஹம்
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||3||

பத அர்த்தம்:

- நிர்மூல மூல ரஹிதோ ஹி - நான் உருவாக்கப்பட்டவன் அல்லன் ஏனெனில் உருவாக்கத்திற்கு அப்பாற்பட்டவன்

- ஸத் உதிதோ அஹம் - நான் எப்போதும் இருக்கும் சுயம் பிரகாசம்

- நிர்தூம தூம ரஹிதோ ஹி - அறியாமை(மாயை)யினால் மறைக்கப்பட்டவன் அல்லன், ஏனெனில் அறியாமை(மாயை)க்கு அப்பாற்பட்டவன்

- நிர்தீப தீப ரஹிதோ ஹி - நான் எப்போதும் இருக்கும் சுயம் பிரகாசம்; என்னை ஒளிர்விக்க வேறொர் ஒளி தேவையில்லை, ஆனால் நானன்றி எதுவும் ஒளிர்வதில்லை

- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் தூய இருப்பு, தூய அறிவு, பேரின்பம் மற்றும் வெளி போன்ற எல்லையற்றவன்.

தெளிவுரை:

நான் உருவாக்கப்பட்டவன் அல்லன் ஏனெனில் உருவாக்கத்திற்கு அப்பாற்பட்டவன்; அறியாமை(மாயை)யினால் மறைக்கப்பட்டவன் அல்லன், ஏனெனில் அறியாமை(மாயை)க்கு அப்பாற்பட்டவன்; நான் எப்போதும் இருக்கும் சுயம் பிரகாசம்; என்னை ஒளிர்விக்க வேறொர் ஒளி தேவையில்லை, ஆனால் நானன்றி எதுவும் ஒளிர்வதில்லை; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

நிஷ்காமகாமமிஹ நாம கத ^{2}ம் வதா ^{3}மி
நி :ஸங்க ^{3}ஸங்க ^{3}மிஹ நாம கத ^{2}ம் வதா ^{3}மி ।
நி :ஸாரஸாரரஹிதம் ச கத ^{2}ம் வதா ^{3}மி
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ Sஹம் ॥ 4॥

பதச்சேதம்:

நிஷ்காம காமம் இஹ நாம கதம் வதாமி
நி:ஸங்க ஸங்கம் இஹ நாம கதம் வதாமி |
நி:ஸார ஸார ரஹிதம் ச கதம் வதாமி
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||3||

பத அர்த்தம்:

- நிஷ்காம காமம் இஹ நாம கதம் வதாமி – ஆசை உள்ளது என்றும் ஆசையற்றாது என்றும் எப்படி கூறுவது?

- நி:ஸங்க ஸங்கம் இஹ நாம கதம் வதாமி -பற்றற்றது என்றும் பற்றுள்ளது என்றும் எப்படி கூறுவது?

- நி:ஸார ஸார ரஹிதம் ச கதம் வதாமி – உண்மைக்கு புறம்பானது என்றும் இன்மை புறம்பானது என்றும் எப்படி கூறுவது?

- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பிரம்மம், ஆசை உள்ளது என்றும் ஆசையற்றதும் என்றும் எப்படி கூறுவது? பற்றற்றது என்றும் பற்றுள்ளது என்றும் எப்படி கூறுவது? உண்மைக்கு புறம்பானது என்றும் இன்மை புறம்பானது என்றும் எப்படி கூறுவது? நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

அத் ^{3}வைதரூபமகி ^{2}லம் ஹி கத ^{2}ம் வதா ^{3}மி
த்^{3}வைதஸ்வரூபமகி ^{2}லம் ஹி கத ^{2}ம் வதா ^{3}மி ।
நித்யம் த்வநித்யமகி ^{2}லம் ஹி கத ^{2}ம் வதா ^{3}மி
ஜ்ஞாநாம்ரு 'தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ Sஹம் ॥ 5॥

பதச்சேதம்:

அத்வைத ரூபம் அகிலம் ஹி கதம் வதாமி
த்வைத ஸ்வரூபம் அகிலம் ஹி கதம் வதாமி |
நித்யம் த்வநித்யம் அகிலம் ஹி கதம் வதாமி
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||5||

பத அர்த்தம்:

- அத்வைத ரூபம் அகிலம் – பிரம்மம் இயல்பில் இரண்டானதா?
- த்வைத ஸ்வரூபம் அகிலம் – ஒன்றானதா?
- நித்யம் த்வநித்யம் அகிலம் – நித்தியமானதா? அநித்தியமானதா?
- கதம் வதாமி - என்று எப்படி சொல்வது?
- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பிரம்மம், இயல்பில் இரண்டானதா? ஒன்றானதா? என்று எப்படி சொல்வது? அது நித்தியமானதா? அநித்தியமானதா? என்று எப்படி சொல்வது? நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

ஸ்தூ ^{2}லம் ஹி நோ ந ஹி க்ரு 'ஶம் ந க^{3}தாக ^{3}தம் ஹி
ஆத் ^{3}யந்தமத்^{4}யரஹிதம் ந பராபரம் ஹி ।
ஸத்யம் வதா ^{3}மி க^{2}லு வை பரமார்த ^{2}தத்த்வம்
ஜ்ஞாநாம்ரு 'தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ Sஹம் ॥ 6॥

பதச்சேதம்:

ஸ்தூலம் ஹி நோ ந ஹி க்ருஸம் ந கதாகதம் ஹி
ஆதி அந்த மத்ய ரஹிதம் ந பராபரம் ஹி |
ஸத்யம் வதாமி கலுவை பரமார்த தத்த்வம்
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||6||

பத அர்த்தம்:

- ஸ்தூலம் ஹி நோ ந ஹி க்ருஸம் - பிரம்மம் ஸ்தூலமோ, நுட்பமோ இல்லை.
- ந கத அகதம் ஹி - தோன்றுவதும் இல்லை மறைவதும் இல்லை;
- ஆதி அந்த மத்ய ரஹிதம் - ஆரம்பம், நடு முடிவு அற்றது

- ந பராபரம் ஹி - உயர்வு தாழ்வு என்பதில்லை
- ஸத்யம் வதாமி கலுவை பரமார்த தத்த்வம் - நான் பிரகடனம் செய்கிறேன், இதுவே எனது யதார்த்த உண்மை
- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பிரம்மம் ஸ்தூலமும் இல்லை, நுட்பமும் இல்லை. தோன்றுவதும் இல்லை மறைவதும் இல்லை; ஆரம்பம், நடு முடிவு அற்றது; உயர்வு தாழ்வு என்பதில்லை; என்பதை நான் பிரகடனம் செய்கிறேன், இதுவே எனது யதார்த்த உண்மை. நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

ஸம்வித் ^{3}தி^{4} ஸர்வகரணாநி நபோ^{4}நிபா^{4}நி
ஸம்வித் ^{3}தி^{4} ஸர்வவிஷயாம்ஶ்ச நபோ^{4}நிபா^{4}ம்ஶ்ச ।
ஸம்வித் ^{3}தி^{4} சைகமமலம் ந ஹி ப^{3}ந்த^{4}முக்தம்
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ ऽஹம் ॥ 7॥

பதச்சேதம்:

ஸம்வித்தி ஸர்வ கரணானி நபோநிபானி
ஸம்வித்தி ஸர்வ விஷயாம்ஸ்ச நபோநிபாம்ஸ்ச |
ஸம்வித்தி ச ஏகம் அமலம் ந ஹி பந்த முக்தம்
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||7||

பத அர்த்தம்:

- ஸம்வித்தி ஸர்வ கரணானி – அனைத்து புலன்களும்,
- ஸம்வித்தி ஸர்வ விஷயாம்ஸ்ச – அனைத்து அந்தக்கரணங்களும்
- நபோநிபாம்ஸ்ச - ஆகாயத்தில் தோன்றி மறையும் மேகங்களைப் போன்றது என்பதை அறிகிறேன்
- ஸம்வித்தி ச ஏகம் அமலம் ந ஹி பந்த முக்தம் - ஒன்றாக பிரகாசிக்கும் தூய்மையான என்னில் கட்டுக்களோ, சுதந்திரமோ இல்லை என்பதை அறிகிறேன்
- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய என்னில், அனைத்து புலன்களும், அந்தக்கரணங்களும் ஆகாயத்தில் தோன்றி மறையும் மேகங்களைப் போன்றது என்பதை அறிகிறேன்; ஒன்றாக பிரகாசிக்கும் தூய்மையான என்னில் கட்டுக்களோ, சுதந்திரமோ இல்லை என்பதை அறிகிறேன்; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

து^{3}ர்போ ^{3}த^{4}போ ^{3}த^{4}க ^{3}ஹநோ ந ப^{4}வாமி தாத
து^{3}ர்லக்ஷ்யலக்ஷ்யக ^{3}ஹநோ ந ப^{4}வாமி தாத ।
ஆஸந்நரூபக ^{3}ஹநோ ந ப^{4}வாமி தாத
ஜ்ஞாநாம்ரு 'தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ ऽஹம் ॥ 8॥

பதச்சேதம்:

துர்போத போத கஹநோ ந பவாமி தாத
துர்லக்ஷ்ய லக்ஷ்ய கஹநோ ந பவாமி தாத |
ஆஸந்த ரூப கஹநோ ந பவாமி தாத
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||8||

பத அர்த்தம்:

- துர்போத போத கஹநோ ந பவாமி தாத - அன்பே, நான் புத்திக்கு புரிபடாதவன் அல்லன்; புத்தியிலிருந்து மறைக்கப்பட்டவன் அல்லன்
- துர்லக்ஷ்ய லக்ஷ்ய கஹநோ ந பவாமி தாத - உணர்வதற்கு சிரமமானவன் அல்லன், உணர்வதிலிருந்து மறைக்கப்பட்டவன் அல்லன்;
- ஆஸந்த ரூப கஹநோ ந பவாமி தாத - புலன்களுக்கு அருகில் அல்லன், புலன்களில் ஊடுருவியும் அல்லன்
- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

அன்பே, நான் புத்திக்கு புரிபடாதவன் அல்லன்; புத்தியிலிருந்து மறைக்கப்பட்டவன் அல்லன்; உணர்வதற்கு சிரமமானவன் அல்லன், உணர்வதிலிருந்து மறைக்கப்பட்டவன் அல்லன்; புலன்களுக்கு அருகில் அல்லன், புலன்களில் ஊடுருவியும் அல்லன்; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

நிஷ்கர்மகர்மத ^{3}ஹநோ ஜ்வலநோ ப^{4}வாமி
நிர்து :^{3} க^{2}து:^{3} க^{2}த^{3}ஹநோ ஜ்வலநோ ப^{4}வாமி ।
நிர்தே ^{3}ஹதே ^{3}ஹத ^{3}ஹநோ ஜ்வலநோ ப^{4}வாமி
ஜ்ஞாநாம்ரு 'தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ ऽஹம் ॥ 9॥

பதச்சேதம்:

நிஷ்கர்ம கர்ம தஹனோ ஜ்வலனோ பவாமி
நிர்துக்க து:க்க தஹனோ ஜ்வலனோ பவாமி ।
நிர்தேஹ தேஹ தஹனோ ஜ்வலநோ பவாமி
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||9||

பத அர்த்தம்:

- நிஷ்கர்ம கர்ம தஹனோ ஜ்வலனோ பவாமி - செயலற்ற அனைத்து செயல்களையும் எரிக்கும் ஞான நெருப்பு நான்
- நிர்துக்க து:க்க தஹனோ ஜ்வலனோ பவாமி - துக்கமற்ற அனைத்து துக்கங்களையும் எரிக்கும் ஞான நெருப்பு நான்
- நிர்தேஹ தேஹ தஹனோ ஜ்வலநோ பவாமி - உடலற்ற அனைத்து உடல்களையும் எரிக்கும் ஞான நெருப்பு நான்
- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

செயலற்ற அனைத்து செயல்களையும் எரிக்கும் ஞான நெருப்பு[1] நான்; துக்கமற்ற அனைத்து துக்கங்களையும் எரிக்கும் ஞான நெருப்பு நான்; உடலற்ற அனைத்து உடல்களையும் எரிக்கும் ஞான நெருப்பு நான்; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

1. **ஞான நெருப்பு** – பிரம்மமானது, செயல், துக்கம், உடலிலிருந்து விடுபட்டது; இவ்வனைத்தும் மாயையால் பிரம்மத்தின் மீது ஏற்றிவைக்கப்பட்டுள்ளது; ஞான நெருப்பானது மனதிலுள்ள அனைத்து ஏற்றிவைக்கப்பட்ட சிந்தனைகளையும் அழிக்கிறது.

நிஷ்பாபபாபத ^{3}ஹநோ ஹி ஹுதாஶநோ ऽஹம்
நிர்த^{4}ர்மத^{4}ர்மத ^{3}ஹநோ ஹி ஹுதாஶநோ ऽஹம் ।
நிர்ப ^{3}ந்த^{4}ப ^{3}ந்த^{4}த ^{3}ஹநோ ஹி ஹுதாஶநோ ऽஹம்
ஜ்ஞாநாம்ரு 'தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ ऽஹம் ॥ 10 ॥

பதச்சேதம்:

நிஷ்பாப பாப தஹனோ ஹி ஹுதாஶனோ அஹம்
நிர்தர்ம தர்ம தஹனோ ஹி ஹுதாஶனோ அஹம் ।
நிர்பந்த பந்த தஹனோ ஹி ஹுதாஶனோ அஹம்
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||10||

பத அர்த்தம்:

- நிஷ்பாப பாப தஹனோ ஹி ஹுதாஶனோ அஹம் - பாவ(புண்ணிய)மற்ற அனைத்து பாவ(புண்ணிய)ங்களையும் அழிக்கும் ஞான நெருப்பு நான்
- நிர்தர்ம தர்ம தஹனோ ஹி ஹுதாஶனோ அஹம் - பண்புகளற்ற அனைத்துப் பண்புகளையும் அழிக்கும் ஞான நெருப்பு நான்
- நிர்பந்த பந்த தஹனோ ஹி ஹுதாஶனோ அஹம் - கட்டற்ற அனைத்து கட்டுக்களையும் அழிக்கும் ஞான நெருப்பு நான்
- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பாவ(புண்ணிய)மற்ற அனைத்து பாவ(புண்ணிய)ங்களையும் அழிக்கும் ஞான நெருப்பு நான்; பண்புகளற்ற அனைத்துப் பண்புகளையும் அழிக்கும் ஞான நெருப்பு நான்; கட்டற்ற அனைத்து கட்டுக்களையும் அழிக்கும் ஞான நெருப்பு நான்; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

நிர்பா^{4}வபா^{4}வரஹிதோ ந ப^{4}வாமி வத்ஸ
நிர்யோக ^{3}யோக ^{3}ரஹிதோ ந ப^{4}வாமி வத்ஸ ।
நிஶ்சித்தசித்தரஹிதோ ந ப^{4}வாமி வத்ஸ
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ Sஹம் ॥ 11 ॥

பதச்சேதம்:

நிர்பாவ பாவ ரஹிதோ ந பவாமி வத்ஸ
நிர்யோக யோக ரஹிதோ ந பவாமி வத்ஸ ।
நிஶ்சித்த சித்த ரஹிதோ ந பவாமி வத்ஸ
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||11||

பத அர்த்தம்:

- நிர்பாவ பாவ ரஹிதோ ந பவாமி வத்ஸ - என் அன்பே! நான் சிந்தனையற்றவன் அல்லன், சிந்தனையுற்றவன் அல்லன்

- நிர்யோக யோக ரஹிதோ ந பவாமி வத்ஸ - நான் எதனிலிருந்தும் பிரிந்தவன் அல்லன், எதனோடும் சேர்ந்தவன் அல்லன்

- நிஶ்சித்த சித்த ரஹிதோ ந பவாமி வத்ஸ - நான் மனமற்றவன் அல்லன், மனம் உற்றவன் அல்லன்

- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

என் அன்பே! நான் சிந்தனையற்றவன் அல்லன், சிந்தனையுடையவன் அல்லன்; நான் எதனிலிருந்தும் பிரிந்தவன் அல்லன், எதனோடும் சேர்ந்தவன் அல்லன்; நான் மனமற்றவன்[1] அல்லன், மனம் உடைவன் அல்லன்; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

1. வேதாந்த கூற்றின் படி, ஜீவன் நிர்குண பிரம்மத்துடன் இணையும் போது, அது சிந்தனைக்கும் மனதுக்கும் அப்பாற்பட்ட சிவம். அதுவே, அந்த ஜீவன் சகுணத்துடன் இருக்கும்போது, அவருக்கு மனம் இருக்கிறது, அவர் சிந்திக்கிறார்.

நிர்மோஹமோஹபத ^{3}வீதி ந மே விகல்போ
நி :ஶோகஶோகபத ^{3}வீதி ந மே விகல்ப : ।
நிர்லோப^{4}லோப^{4}பத ^{3}வீதி ந மே விகல்போ
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ Sஹம் ॥ 12 ॥

பதச்சேதம்:

நிர்மோஹ மோஹ பதவீதி ந மே விகல்போ
நி :ஶோக ஶோக பதவீதி ந மே விகல்ப : ।
நிர்லோப லோப பதவீதி ந மே விகல்போ
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||12||

பத அர்த்தம்:

- நிர்மோஹ மோஹ - மாயை, மாயையின்மை
- நி :ஶோக ஶோக - துக்கம், துக்கமின்மை
- நிர்லோப லோப - பேராசை, பேராசையின்மை
- பதவீதி ந மே விகல்போ - போன்ற எந்த வேறுபாடும் இல்லை
- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

சுயத்தில் மாயை, மாயையின்மை; துக்கம், துக்கமின்மை; பேராசை, பேராசையின்மை போன்ற எந்த வேறுபாடும் இல்லை; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

**ஸம்ஸாரஸந்ததிலதா ந ச மே கதா ^{3}சித்
ஸந்தோஷஸந்ததிஸுகோ ^{2} ந ச மே கதா ^{3}சித் ।
அஜ்ஞாநப ^{3}ந்த^{4}நமித ^{3}ம் ந ச மே கதா ^{3}சித்
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ ऽஹம் ॥ 13 ॥**

பதச்சேதம்:

ஸம்ஸார ஸந்ததி லதா ந ச மே கதாசித்
ஸந்தோஷ ஸந்ததி ஸுகோ ந ச மே கதாசித் ।
அஜ்ஞான பந்தனம் இதம் ந ச மே கதாசித்
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||13||

பத அர்த்தம்:

- ஸம்ஸார ஸந்ததி லதா ந ச மே கதாசித் - தொடர்ச்சியான பி(இ)றப்பு என்ற கொடியினால் ஒரு போதும் கட்டுப்படவில்லை
- ஸந்தோஷ ஸந்ததி ஸுகோ ந ச மே கதாசித் - பூரணத்தினால் மகிழ்ச்சியோ
- அஜ்ஞான பந்தனம் இதம் ந ச மே கதாசித் - அறியாமையின் அடிமைத்தனமோ என்னில் ஒரு போதும் இல்லை
- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய நான், தொடர்ச்சியான பி(இ)றப்பு என்ற கொடியினால் ஒரு போதும் கட்டுப்படவில்லை; பூரணத்தினால் மகிழ்ச்சியோ, அறியாமையின் அடிமைத்தனமோ என்னில் ஒரு போதும் இல்லை; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

ஸம்ஸாரஸந்ததிரஜோ ந ச மே விகார :
ஸந்தாபஸந்ததிதமோ ந ச மே விகார : ।
ஸத்த்வம் ஸ்வத⁴ர்மஜநகம் ந ச மே விகாரோ
ஜ்ஞாநாம்ரு 'தம் ஸமரஸம் க³க³நோபமோ Sஹம் ॥ 14 ॥

பதச்சேதம்:

ஸம்ஸார ஸந்ததி ரஜோ ந ச மே விகார:
ஸந்தாப ஸந்ததி தமோ ந ச மே விகார: ।
ஸத்த்வம் ஸ்வதர்ம ஜனகம் ந ச மே விகாரோ
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||14||

பத அர்த்தம்:

- ஸம்ஸார ஸந்ததி ரஜோ ந ச மே விகார: - உலகம் (பி[இ]றப்பு) காணப்படுவது என்பது ராஜோ குணத்தின் மாற்றமே தவிர நான் அல்ல

- ஸந்தாப ஸந்ததி தமோ ந ச மே விகார: - துன்பங்கள் என்பது தமோ குணத்தின் மாற்றமே தவிர நான் அல்ல

- ஸத்த்வம் ஸ்வதர்ம ஜனகம் ந ச மே விகாரோ - இன்பங்கள் என்பது சத்வ குணத்தின் மாற்றமே தவிர நான் அல்ல

- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

உலகம் (பி[இ]றப்பு) காணப்படுவது என்பது ராஜோ குணத்தின்[1] மாற்றமே தவிர நான் அல்ல; துன்பங்கள் என்பது தமோ குணத்தின் மாற்றமே தவிர நான் அல்ல; இன்பங்கள் என்பது சத்வ குணத்தின் மாற்றமே தவிர நான் அல்ல; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

1. **குணங்கள்** – சத்வம், ரஜஸ், தமோ ஆகிய இம்மூன்று குணங்களே பிரகிருதியாகிய மாயையை உருவாக்கவள்ளது. குணங்கள் சரியான சமநிலையில் இருக்கும் போது, உருவாக்கம் மற்றும் வெளிப்பாடு இல்லை. சமநிலையற்ற படைப்பு ஏற்படுகிறது. சத்வ குணமானது - மகிழ்ச்சி, அமைதி மற்றும் தூய்மையைக் குறிக்கிறது. ரஜோ குணமானது - அமைதியின்மை, ஆர்வம் மற்றும் செயல்பாடு ஆகியவற்றைக் குறிக்கிறது. தமோ குணமானது - சோம்பல், செயலற்ற தன்மை மற்றும் அறியாமையை குறிக்கிறது.

ஸந்தாபது :^{3} க^{2}ஜநகோ ந விதி :^{4} கதா ^{3}சித்
ஸந்தாபயோக ^{3}ஜநிதம் ந மந : கதா ^{3}சித் ।
யஸ்மாத ^{3}ஹங்க்ரு ’திரியம் ந ச மே கதா ^{3}சித்
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ Sஹம் ॥ 15 ॥

பதச்சேதம்:

ஸந்தாப துக்க ஜனகோ ந விதி: கதாசித்
ஸந்தாப யோக ஜனிதம் ந மன: கதாசித் |
யஸ்மாத் அஹங்க்ருதிர் இயம் ந ச மே கதாசித்
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||15||

பத அர்த்தம்:

- ஸந்தாப துக்க ஜனகோ ந விதி: கதாசித் - வேதனையையும் துயரத்தையும் உருவாக்கும் எச்செயல்களையும் நான் ஒரு போதும் செய்வ(த)தில்லை.
- ஸந்தாப யோக ஜனிதம் ந மன: கதாசித் - துன்பம் மற்றும் இன்பத்தின் தொடர்பு மூலம் செயல்படக்கூடிய மனம் எனக்கு ஒரு போதும் இல்லை.
- யஸ்மாத் அஹங்க்ருதிர் இயம் ந ச மே கதாசித் - எனக்கு அகங்(மம)காரம் ஒரு போதும் இல்லை
- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

வேதனையையும் துயரத்தையும் உருவாக்கும் எச்செயல்களையும் நான் ஒரு போதும் செய்வ(த)தில்லை; துன்பம் மற்றும் இன்பத்தின் தொடர்பு மூலம் செயல்படக்கூடிய மனம் எனக்கு ஒரு போதும் இல்லை; எனக்கு அகங்(மம)காரம் ஒரு போதும் இல்லை; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

நிஷ்கம்பகம்பநித^{4}நம் ந விகல்பகல்பம்
ஸ்வப்நப்ரபோ ^{3}த^{4}நித^{4}நம் ந ஹிதாஹிதம் ஹி ।
நி :ஸாரஸாரநித^{4}நம் ந சராசரம் ஹி
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ Sஹம் ॥ 16 ॥

பதச்சேதம்:

நிஷ்கம்பகம் நிதனம் ந விகல்ப கல்பம்
ஸ்வப்ன ப்ரபோத நிதனம் ந ஹித அஹிதம் ஹி |
நிஸ்ஸார ஸார நிதனம் ந சராசரம்
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||16||

பத அர்த்தம்:

- நிஷ்கம்பகம் நிதனம் ந விகல்ப கல்பம் - அமைதி, அதிர்வு, சந்தேகம், உறுதி
- ஸ்வப்ன ப்ரபோத நிதனம் ந ஹித அஹிதம் ஹி - கனவு நிலைகள், நன்மை, தீமை

- நிஸ்ஸார ஸார நிதனம் ந சராசரம் - இயக்கம், இயக்கமின்மை, உண்மை, இன்மை ஆகிய அனைத்து இரட்டைகளும் பிரம்மத்தில் கரைகின்றன

- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

அமைதி, அதிர்வு, சந்தேகம், உறுதி; விழிப்பு, கனவு நிலைகள், நன்மை, தீமை; இயக்கம், இயக்கமின்மை, உண்மை, இன்மை ஆகிய அனைத்து இரட்டைகளும் பிரம்மத்தில் கரைகின்றன; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

நோ வேத் ^{3}யவேத ^{3}கமித ^{3}ம் ந ச ஹேதுதர்க்யம்
வாசாமகோ ^{3}சரமித ^{3}ம் ந மநோ ந பு^{3}த்^{3}தி :^{4} ।
ஏவம் கத ^{2}ம் ஹி ப^{4}வத : கத ^{2}யாமி தத்த்வம்
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ Sஹம் ॥ 17 ॥

பதச்சேதம்:

நோ வேத்ய வேதகம் இதம் ந ச ஹேது தர்க்யம்
வாசாம் அகோரம் இதம் ந மனோ ந புத்தி: |
ஏவம் கதம் ஹி பவத: கதயாமி தத்த்வம்
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||17||

பத அர்த்தம்:

- நோ வேத்ய வேதகம் இதம் ந ச ஹேது தர்க்யம் - அறிபவனும் அல்லன், அறியக்கூடியவனும் அல்லன்; ஊகங்களுக்கும் தர்க்கரீதியான காரணங்களுக்கும் அப்பாற்பட்டவன்

- வாசாம் அகோரம் இதம் ந மனோ ந புத்தி: - வாக்கு, மனம் மற்றும் அறிவுக்கு அப்பாற்பட்டவன்

- ஏவம் கதம் ஹி பவத: கதயாமி தத்த்வம் - அப்படியிருக்க, இறுதி முடிவாகிய பிரம்மத்தை பற்றி எப்படிச் சொல்ல முடியும்?

- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பிரம்மாகிய நான், அறிபவனும் அல்லன், அறியக்கூடியவனும் அல்லன்; ஊகங்களுக்கும், தர்க்கரீதியான காரணங்களுக்கும் அப்பாற்பட்டவன்; வாக்கு, மனம் மற்றும் அறிவுக்கு அப்பாற்பட்டவன்; அப்படியிருக்க, இறுதி முடிவாகிய பிரம்மத்தை பற்றி எப்படிச் சொல்ல முடியும்? நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

நிர்பி⁴ந்நபி⁴ந்நரஹிதம் பரமார்த ²தத்த்வ -
மந்தர்ப ³ஹிர்ந ஹி கத ²ம் பரமார்த ²தத்த்வம் ।
ப்ராக்ஸம்ப⁴வம் ந ச ரதம் ந ஹி வஸ்து கிஞ்சித்
ஜ்ஞாநாம்ரு 'தம் ஸமரஸம் க³க³நோபமோ Sஹம் ॥ 18 ॥

பதச்சேதம்:

நிர்பின்ன பின்ன ரஹிதம் பரமார்த தத்த்வம்
அந்தர் பஹிர் ந ஹி கதம் பரமார்த தத்த்வம் |
ப்ராக் ஸம்பவம் ந ச ரதம் ந ஹி வஸ்து கிஞ்சித்
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||18||

பத அர்த்தம்:

- நிர்பின்ன பின்ன ரஹிதம் பரமார்த தத்த்வம் - பிரம்மமாகிய நான், பிரிக்கப்பட்டவனும் அல்லன், பிரிக்கப்படாததுவனும் அல்லன்

- அந்தர் பஹிர் ந ஹி கதம் பரமார்த தத்த்வம் - உண்மையில், எனக்கு உள், வெளி என்பது எதுவும் அல்ல

- ப்ராக் ஸம்பவம் ந ச ரதம் ந ஹி வஸ்து கிஞ்சித் - கடந்த காலத்தில் தோன்றி பின்னர் இல்லாமல் போகும் ஒன்றல்ல

- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய நான், பிரிக்கப்பட்டதும்[1] அல்ல, பிரிக்கப்படாததும் அல்ல; உண்மையில், எனக்கு உள், வெளி என்பது எதுவும் அல்ல; கடந்த காலத்தில் தோன்றி பின்னர் இல்லாமல் போகும் ஒன்றல்ல; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

1. **பிரிக்கப்பட்டது, பிரிக்கப்படாதது** – வேதாந்த தத்துவத்தின் படி மூன்று பிரிவுகள் உள்ளன:-

    I. **ஸ்வகத பேதம்** – தன்னில் பல பிரிவுகள். உதாரணம்: ஒரு மரம், வேர், தண்டு, கிளை, இலை, பூ, பழம் போன்ற பல பிரிவுகளை தன்னில் கொண்டுள்ளது.

    II. **ஸஜாதீய பேதம்** – ஒரே இனத்தில் பல பிரிவுகள். உதாரணம்: மரம் என்பதில், ஆலமரம், பலாமரம், மாமரம், வாழைமரம், முதலியவை.

    III. **விஜாதீய பேதம்** – வேறு இனத்தில் உள்ள பிரிவுகள், உதாரணம்: மரம், கல், நீர், காற்று, முதலியவை.

இருமைகளற்ற வேதாந்தம், இவ்வனைத்துப் பிரிவுகளையும் மறுக்கிறது.

ராகா ³தி ³தோ ³ஷரஹிதம் த்வஹமேவ தத்த்வம்
தை ³வாதி ³தோ ³ஷரஹிதம் த்வஹமேவ தத்த்வம் ।
ஸம்ஸாரஶோகரஹிதம் த்வஹமேவ தத்த்வம்
ஜ்ஞாநாம்ரு 'தம் ஸமரஸம் க³க³நோபமோ Sஹம் ॥ 19 ॥

பதச்சேதம்:

ராகாதி தோஷ ரஹிதம் த்வஹமேவ தத்த்வம்
தைவாதி தோஷ ரஹிதம் த்வஹமேவ தத்த்வம் ।
ஸம்ஸார ஶோக ரஹிதம் த்வஹமேவ தத்த்வம்
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||19||

பத அர்த்தம்:

- ராகாதி தோஷ ரஹிதம் த்வஹமேவ தத்த்வம் - பிரம்மமாகிய நான், பேரார்வம், பொறாமை, வெறுப்பு போன்ற மலினங்களிலிருந்து விடுபட்டவன்

- தைவாதி தோஷ ரஹிதம் த்வஹமேவ தத்த்வம் - உடல், பூமி மற்றும் இயற்கைக்கு அப்பாற்பட்ட அமைப்புகளால் ஏற்படும் துன்பங்கள் இல்லாதவன்

- ஸம்ஸார ஶோக ரஹிதம் த்வஹமேவ தத்த்வம் - உலகின் பி(இ)றப்பு என்ற துயரத்தால் தீண்டப்படுபவன் அல்லன்

- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய நான், பேரார்வம், பொறாமை, வெறுப்பு போன்ற மலினங்களிலிருந்து விடுபட்டவன்; உடல், பூமி மற்றும் இயற்கைக்கு அப்பாற்பட்ட அமைப்புகளால் ஏற்படும் துன்பங்கள் இல்லாதவன்; உலகின் பி(இ)றப்பு என்ற துயரத்தால் தீண்டப்படுபவன் அல்லன்; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

**ஸ்தா ^{2}நத்ரயம் யதி ^{3} ச நேதி கத ^{2}ம் துரீயம்
காலத்ரயம் யதி ^{3} ச நேதி கத ^{2}ம் தி ^{3}ஶஶ்ச ।
ஶாந்தம் பத ^{3}ம் ஹி பரமம் பரமார்த ^{2}தத்த்வம்
ஜ்ஞாநாம்ரு 'தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ Sஹம் ॥ 20 ॥**

பதச்சேதம்:

ஸ்தான த்ரயம் யதி ச நேதி கதம் துரீயம்
கால த்ரயம் யதி ச நேதி கதம் திஶஶ்ச ।
ஶாந்தம் பதம் ஹி பரமம் பரமார்த தத்த்வம்
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||20||

பத அர்த்தம்:

- ஸ்தான த்ரயம் யதி ச நேதி கதம் துரீயம் - பிரம்மத்தில் மூன்று நிலைகள் (உறக்கம், கனவு, விழிப்பு) இல்லாத போது நான்காவது நிலை (துரீய) எப்படி இருக்கும்?

- கால த்ரயம் யதி ச நேதி கதம் திஶஶ்ச - மூன்று காலங்களில் (இறந்த, நிகழ், எதிர்) நான்கு திசைகள் (கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு) எப்படி இருக்க முடியும்?

- ஶாந்தம் பதம் ஹி பரமம் பரமார்த தத்த்வம் - யதார்தத்தில் பிரம்மாகிய நான் மௌனத்தின் இருப்பிடம்

- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பிரம்மத்தில் மூன்று நிலைகள் (உறக்கம், கனவு, விழிப்பு) இல்லாத போது நான்காவது நிலை (துரீய) எப்படி இருக்கும்? மூன்று காலங்கள் (இறந்த, நிகழ், எதிர்) எப்படி இருக்க முடியும்? நான்கு திசைகள் (கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு) எப்படி இருக்க முடியும்? யதார்தத்தில் பிரம்மாகிய நான் மௌனத்தின் இருப்பிடம்; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தீ ³ர்கோ⁴ லகு :⁴ புநரிதீஹ நமே விபா⁴கோ ³
விஸ்தாரஸங்கடமிதீஹ ந மே விபா⁴க :³ ।
கோணம் ஹி வர்துலமிதீஹ ந மே விபா⁴கோ ³
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க³க³நோபமோ ऽஹம் ॥ 21 ॥

பதச்சேதம்:

தீர்கோ லகு : புனர் இதி இஹ நமே விபாகோ
விஸ்தார ஸங்கடம் இதி இஹ ந மே விபாக : ।
கோணம் ஹி வர்துலம் இதி இஹ ந மே விபாகோ
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||21||

பத அர்த்தம்:

- தீர்கோ லகு : புனர் இதி இஹ - பிரம்மமாகிய எனக்கு, நீண்ட, குறுகிய

- விஸ்தார ஸங்கடம் இதி இஹ - பரந்து, விரிந்து, வளைந்து,

- கோணம் ஹி வர்துலம் இதி இஹ ந மே விபாகோ - வட்ட அல்லது கோணம் போன்ற பிரிவுகள் இல்லை

- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய எனக்கு, நீண்ட, குறுகிய, பரந்து, விரிந்து, வளைந்து, வட்ட அல்லது கோணம் போன்ற பிரிவுகள் இல்லை; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

மாதாபிதாதி ³ தநயாதி ³ ந மே கதா ³சித்
ஜாதம் ம்ரு ’தம் ந ச மநோ ந ச மே கதா ³சித் ।
நிர்வ்யாகுலம் ஸ்தி ²ரமித ³ம் பரமார்த ²தத்த்வம்
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க³க³நோபமோ ऽஹம் ॥ 22 ॥

பதச்சேதம்:

மாதா பிதாதி தனயாதி ந மே கதாசித்
ஜாதம் ம்ருதம் ந ச மனோ ந ச மே கதாசித் ।
நிர்வ்யாகுலம் ஸ்திரம் இதம் பரமார்த தத்த்வம்
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||22||

பத அர்த்தம்:

- மாதா பிதாதி தனயாதி ந மே கதாசித் - பிரம்மமாகிய எனக்கு தாயோ தந்தையோ பிள்ளைகளோ ஒரு போதும் இல்லை
- ஜாதம் ம்ருதம் ந ச மனோ ந ச மே கதாசித் - பி(இ)றப்பும் இல்லை, மனதின் ஆசை ஒரு போதும் இல்லை
- நிர்வ்யாகுலம் ஸ்திரம் இதம் பரமார்த தத்த்வம் - எதனாலும் அசைக்க முடியாத மற்றும் அமைதியான யதார்த்த உண்மை
- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய எனக்கு தாயோ தந்தையோ பிள்ளைகளோ ஒரு போதும் இல்லை; பி(இ)றப்பும் இல்லை, மனதின் ஆசை ஒரு போதும் இல்லை; எதனாலும் அசைக்க முடியாத மற்றும் அமைதியான யதார்த்த உண்மை; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

ஶுத் ^{3}த^{4}ம் விஶுத் ^{3}த^{4}மவிசாரமநந்தரூபம்
நிர்லேபலேபமவிசாரமநந்தரூபம் ।
நிஷ்க ^{2}ண்ட ^{3}க^{2}ண்ட ^{3}மவிசாரமநந்தரூபம்
ஜ்ஞாநாம்ரு 'தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ Sஹம் ॥ 23 ॥

பதச்சேதம்:

ஶுத்தம் விஶுத்தம் அவிசாரம் அனந்தரூபம்
நிர்லேப லேபம் அவிசாரம் அனந்தரூபம் ।
நிஷ்கண்ட கண்டம் அவிசாரம் அனந்தரூபம்
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||23||

பத அர்த்தம்:

- ஶுத்தம் விஶுத்தம் அவிசாரம் அனந்தரூபம் - பிரம்மமாகிய நான், ஒளிமயமானவன், முற்றிலும் தூய்மையானவன், எல்லையற்றவன் மற்றும் அறிவுக்கு அப்பாற்பட்டவன்
- நிர்லேப லேபம் அவிசாரம் அனந்தரூபம் - எல்லையற்ற பிரம்மத்தை மாசுபடாதது என்றும், மாசுற்றது என்றும்
- நிஷ்கண்ட கண்டம் அவிசாரம் அனந்தரூபம் - பிரிக்கப்படாதது என்றும், பிரிக்கப்பட்டது என்றும் நினைப்பது விவேகமற்றது

- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய நான், ஒளிமயமானவன், முற்றிலும் தூய்மையானவன், எல்லையற்றவன் மற்றும் அறிவுக்கு அப்பாற்பட்டவன்; எல்லையற்ற பிரம்மத்தை மாசுபடாதது என்றும், மாசுடையது என்றும், பிரிக்கப்படாதது என்றும், பிரிக்கப்பட்டது என்றும் நினைப்பது விவேகமற்றது; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

ப்^{3}ரஹ்மாத ^{3}ய: ஸுரக ^{3}ணா: கத ^{2}மத்ர ஸந்தி
ஸ்வர்கா ^{3}த^{3}யோ வஸதய : கத ^{2}மத்ர ஸந்தி ।
யத் ^{3}யேகரூபமமலம் பரமார்த ^{2}தத்த்வம்
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ ऽஹம் ॥ 24 ॥

பதச்சேதம்:

ப்ரஹ்மாதய: ஸுரகணா: கதம் அத்ர ஸந்தி
ஸ்வர்காதயோ வஸதய : கதம் அத்ர ஸந்தி ।
யத் ஏகரூபம் அமலம் பரமார்த தத்த்வம்
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||24||

பத அர்த்தம்:

- ப்ரஹ்மாதய: ஸுரகணா: - பிரம்மா, விஷ்ணு, சிவன் போன்ற பல கடவுள்களும்,
- ஸ்வர்காதயோ வஸதய : - பிரம்மலோகம், சொர்க்கம், பூமி போன்ற பல இருப்பிடங்களும்
- கதம் அத்ர ஸந்தி - எப்படி எங்கு எதனில் இருக்க முடியும்?
- யத் ஏகரூபம் அமலம் பரமார்த தத்த்வம் - யதார்த்த உண்மை, ஒன்றேயானது, தூய்மையானது, அனைத்திற்கும் மேலானது, அதுவே சுயம்
- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

யதார்த்த உண்மை, ஒன்றேயானது, தூய்மையானது, அனைத்திற்கும் மேலானது, அதுவே சுயம்; அப்படியிருக்க, பிரம்மா, விஷ்ணு, சிவன் போன்ற பல கடவுள்களும், பிரம்மலோகம், சொர்க்கம், பூமி போன்ற பல இருப்பிடங்களும் எப்படி எங்கு எதனில் இருக்க முடியும்? நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

நிர்நேதி நேதி விமலோ ஹி கத ^{2}ம் வதா ^{3}மி
நி :ஶேஷஶேஷவிமலோ ஹி கத ^{2}ம் வதா ^{3}மி ।
நிர்லிங்க ^{3}லிங்க ^{3}விமலோ ஹி கத ^{2}ம் வதா ^{3}மி
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ Sஹம் ॥ 25 ॥

பதச்சேதம்:

நிர்நேதி நேதி விமலோ ஹி கதம் வதாமி
நி :ஶேஷ ஶேஷ விமலோ ஹி கதம் வதாமி ।
நிர்லிங்க லிங்க விமலோ ஹி கதம் வதாமி
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||25||

பத அர்த்தம்:

- நிர்நேதி நேதி விமலோ ஹி கதம் வதாமி - உயர்ந்த யதார்த்தம் இது அல்ல, அது அல்ல என்றும்

- நி :ஶேஷ ஶேஷ விமலோ ஹி கதம் வதாமி - அது முடிவற்றது, முடிவானது என்றும்

- நிர்லிங்க லிங்க விமலோ ஹி கதம் வதாமி - உடல் கொண்டது என்றும், நான் எப்படிச் சொல்வது?

- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

உயர்ந்த யதார்த்தம் இது அல்ல, அது அல்ல என்றும், அது முடிவற்றது, முடிவானது என்றும், அது உடலற்றது, உடல் கொண்டது என்றும், நான் எப்படிச் சொல்வது? நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

நிஷ்கர்மகர்மபரமம் ஸததம் கரோமி
நி :ஸங்க ^{3}ஸங்க ^{3}ரஹிதம் பரமம் விநோத ^{3}ம் ।
நிர்தே ^{3}ஹதே ^{3}ஹரஹிதம் ஸததம் விநோத ^{3}ம்
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ Sஹம் ॥ 26 ॥

பதச்சேதம்:

நிஷ்கர்ம கர்ம பரமம் ஸததம் கரோமி
நி :ஸங்க ஸங்க ரஹிதம் பரமம் விநோதம் ।
நிர்தேஹ தேஹ ரஹிதம் ஸததம் விநோதம்
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||26||

பத அர்த்தம்:

- நிஷ்கர்ம கர்ம பரமம் ஸததம் கரோமி - செயலற்றவனாக இருந்தாலும், நான் எப்போதும் உயர்ந்த செயலில் ஈடுபட்டுள்ளேன்

- நி :ஸங்க ஸங்க ரஹிதம் பரமம் விநோதம் - பற்றற்ற நிலையில், நான் பற்றற்ற இன்பத்தை அனுபவிக்கிறேன்
- நிர்தேஹ தேஹ ரஹிதம் ஸததம் விநோதம் - சரீரமற்றவனாக இருந்தும், நான் சரீரமற்ற மகிழ்ச்சியை அனுபவிக்கிறேன்
- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

செயலற்றவனாக இருந்தும், நான் எப்போதும் உயர்ந்த செயலில் ஈடுபட்டுள்ளேன்; பற்றற்ற நிலையில், நான் பற்றற்ற இன்பத்தை அனுபவிக்கிறேன்; சரீரமற்றவனாக இருந்தும், நான் சரீரமற்ற மகிழ்ச்சியை அனுபவிக்கிறேன்; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

மாயாப்ரபஞ்சரசநா ந ச மே விகார : ।
கௌடில்யத ³ம்ப⁴ரசநா ந ச மே விகார : ।
ஸத்யாந்ரு ’தேதி ரசநா ந ச மே விகாரோ
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க³க³நோபமோ Sஹம் ॥ 27 ॥

பதச்சேதம்:

மாயா ப்ரபஞ்ச ரசனா ந ச மே விகார:
கௌடில்ய தம்ப ரசனா ந ச மே விகார: ।
ஸத்ய அன்ருதேதி ரசனா ந ச மே விகாரோ
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||27||

பத அர்த்தம்:

- மாயா ப்ரபஞ்ச ரசனா ந ச மே விகார: - மாயையின் அழகிய இப்படைப்பு, என் சுயத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது
- கௌடில்ய தம்ப ரசனா ந ச மே விகார: - வக்கிரமும், வஞ்சகமும், என் சுயத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது
- ஸத்ய அன்ருதேதி ரசனா ந ச மே விகாரோ - உண்மையும், அசத்தியமும் என் மீது எந்த விளைவையும் ஏற்படுத்தாது
- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

மாயையின் அழகிய இப்படைப்பு, என் சுயத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது; வக்கிரமும், வஞ்சகமும், உண்மையும், அசத்தியமும் என் மீது எந்த விளைவையும் ஏற்படுத்தாது; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

ஸந்த்4யாதி 3காலரஹிதம் ந ச மே வியோகோ 3-
ஹ்யந்த : ப்ரபோ 3த4ரஹிதம் ப3தி4ரோ ந மூக : ।
ஏவம் விகல்பரஹிதம் ந ச பா4வஶுத் 3த4ம்
ஜ்ஞாநாம்ரு 'தம் ஸமரஸம் க3க3நோபமோ Sஹம் ॥ 28 ॥

பதச்சேதம்:

ஸந்த்யாதி கால ரஹிதம் ந ச மே வியோகோஹி
அந்த: ப்ரபோத ரஹிதம் பதிரோ ந மூக : ।
ஏவம் விகல்ப ரஹிதம் ந ச பாவ ஶுத்தம்
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||28||

பத அர்த்தம்:

- ஸந்த்யாதி கால ரஹிதம் ந ச மே வியோகோஹி - நான் காலை, மாலை போன்ற நேரப் பிரிவுகளுக்கு அப்பாற்பட்டவனாக இருந்தும், எப்பொழுதும் நான் இல்லாமல் இல்லை

- அந்த: ப்ரபோத ரஹிதம் பதிரோ ந மூக: - நான் அறிவு, அறியாமை, அறிவறியாமை போன்றவை இல்லாமல் இருந்தாலும், நான் செவிடனும் அல்லன், ஊமையும் அல்லன்

- ஏவம் விகல்ப ரஹிதம் ந ச பாவ ஶுத்தம் - நான் அறியாமையிலிருந்து முற்றிலும் விடுபட்டதால், மனதைத் தூய்மைப்படுத்தும் எச்செயலும் தேவையில்லை

- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

நான் காலை, மாலை போன்ற நேரப் பிரிவுகளுக்கு அப்பாற்பட்டவனாக இருந்தும், எப்பொழுதும் நான் இல்லாமல் இல்லை; நான் அறிவு, அறியாமை, அறிவறியாமை போன்றவை இல்லாமல் இருந்தாலும், நான் செவிடனும் அல்லன், ஊமையும் அல்லன்; நான் அறியாமையிலிருந்து முற்றிலும் விடுபட்டதால், மனதைத் தூய்மைப்படுத்தும் எச்செயலும் தேவையில்லை; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

நிர்நாத 2நாத 2ரஹிதம் ஹி நிராகுலம் வை
நிஶ்சித்தசித்தவிக 3தம் ஹி நிராகுலம் வை ।
ஸம்வித் 3தி4 ஸர்வவிக 3தம் ஹி நிராகுலம் வை
ஜ்ஞாநாம்ரு 'தம் ஸமரஸம் க3க3நோபமோ Sஹம் ॥ 29 ॥

பதச்சேதம்:

நிர்நாத நாத ரஹிதம் ஹி நிராகுலம் வை
நிஶ்சித்த சித்தவிகதம் ஹி நிராகுலம் வை ।
ஸம்வித்தி ஸர்வவிகதம் ஹி நிராகுலம் வை
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||29||

பத அர்த்தம்:

- நிர்நாத நாத ரஹிதம் ஹி நிராகுலம் வை - பிரம்மமாகிய எனக்கு எஜமானன் அல்லன், நான் யாருக்கும் எஜமானன் அல்லன், அதனால் எனக்கு எந்த குழப்பமும் இல்லை

- நிஶ்சித்த சித்தவிகதம் ஹி நிராகுலம் வை - நான் மனதைத் கடந்துவிட்டதனால், அது செயல்படுவதை நிறுத்திவிட்டது, அதனால் எனக்கு எந்த குழப்பமும் இல்லை

- ஸம்வித்தி ஸர்வவிகதம் ஹி நிராகுலம் வை - எனக்கு எல்லா இருமைகளும் நின்றுவிட்டன என்பதை நிச்சயமாக அறிவேன், அதனால் எனக்கு எந்த குழப்பமும் இல்லை

- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய எனக்கு எஜமானன் அல்லன், நான் யாருக்கும் எஜமானன் அல்லன், அதனால் எனக்கு எந்த குழப்பமும் இல்லை; நான் மனதைத் கடந்துவிட்டதனால், அது செயல்படுவதை நிறுத்திவிட்டது, அதனால் எனக்கு எந்த குழப்பமும் இல்லை; எனக்கு எல்லா இருமைகளும் நின்றுவிட்டன என்பதை நிச்சயமாக அறிவேன், அதனால் எனக்கு எந்த குழப்பமும் இல்லை; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

காந்தாரமந்தி ^{3}ரமித ^{3}ம் ஹி கத ^{2}ம் வதா ^{3}மி
ஸம்ஸித் ^{3}த^{4}ஸம்ஶயமித ^{3}ம் ஹி கத ^{2}ம் வதா ^{3}மி ।
ஏவம் நிரந்தரஸமம் ஹி நிராகுலம் வை
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ ऽஹம் ॥ 30 ॥

பதச்சேதம்:

காந்தார மந்திரம் இதம் ஹி கதம் வதாமி
ஸம்ஸித்த ஸம்ஶயம் இதம் ஹி கதம் வதாமி ।
ஏவம் நிரந்தர ஸமம் ஹி நிராகுலம் வை
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||30||

பத அர்த்தம்:

- காந்தார மந்திரம் இதம் ஹி கதம் வதாமி - பிரம்மமாகிய நான், காடு போன்று அடர்த்தி(கருமை)யானது என்றும், ஆலயம் போன்று புணிதமானது என்றும் எப்படிச் சொல்வது?

- ஸம்ஸித்த ஸம்ஶயம் இதம் ஹி கதம் வதாமி - நான் நிரூபிக்கப்பட்டவன் அல்லது சந்தேகத்திற்குரியவன் என்று எப்படி சொல்வது?

- ஏவம் நிரந்தர ஸமம் ஹி நிராகுலம் வை - யதார்த்தத்தில் நான் அனைத்தையும் வியாபித்தவன், வேறுபாடில்லாதவன், சலனமற்றவன்

- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய நான், காடு போன்று அடர்த்தி(கருமை)யானது என்றும், ஆலயம் போன்று புனிதமானது என்றும் எப்படிச் சொல்வது? நான் நிரூபிக்கப்பட்டவன் அல்லது சந்தேகத்திற்குரியவன் என்று எப்படி சொல்வது? யதார்த்தத்தில் நான் அனைத்தையும் வியாபித்தவன், வேறுபாடில்லாதவன், சலனமற்றவன்; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

நிர்ஜீவஜீவரஹிதம் ஸததம் விபா^{4}தி
நிர்பீ ^{3}ஜபீ ^{3}ஜரஹிதம் ஸததம் விபா^{4}தி ।
நிர்வாணப ^{3}ந்த^{4}ரஹிதம் ஸததம் விபா^{4}தி
ஜ்ஞாநாம்ரு 'தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ Sஹம் ॥ 31 ॥

பதச்சேதம்:

நிர்ஜீவ ஜீவ ரஹிதம் ஸததம் விபாதி
நிர்பீஜ பீஜ ரஹிதம் ஸததம் விபாதி ।
நிர்வாண பந்த ரஹிதம் ஸததம் விபாதி
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||31||

பத அர்த்தம்:

- நிர்ஜீவ ஜீவ ரஹிதம் ஸததம் விபாதி - பிரம்மமாகிய நான், ஜடப்பொருள் மற்றும் உயிர் அல்லாததால், என்றென்றும் பிரகாசித்து இருக்கிறேன்
- நிர்பீஜ பீஜ ரஹிதம் ஸததம் விபாதி - காரியம் (தோற்றம்) மற்றும் காரணம் (விதை) அற்றதால், எப்போதும் பிரகாசித்து இருக்கிறேன்
- நிர்வாண பந்த ரஹிதம் ஸததம் விபாதி - சுதந்திரமோ, கட்டுப்பாடோ அற்றதால், எப்போதும் பிரகாசித்து இருக்கிறேன்
- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய நான், ஜடப்பொருள் மற்றும் உயிர் அல்லாததால், என்றென்றும் பிரகாசித்து இருக்கிறேன்; காரியம் (தோற்றம்) மற்றும் காரணம் (விதை) அற்றதால், எப்போதும் பிரகாசித்து இருக்கிறேன்; சுதந்திரமோ, கட்டுப்பாடோ அற்றதால், எப்போதும் பிரகாசித்து இருக்கிறேன்; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

ஸம்பூ^{4}திவர்ஜிதமித ^{3}ம் ஸததம் விபா^{4}தி
ஸம்ஸாரவர்ஜிதமித ^{3}ம் ஸததம் விபா^{4}தி ।
ஸம்ஹாரவர்ஜிதமித ^{3}ம் ஸததம் விபா^{4}தி
ஜ்ஞாநாம்ரு 'தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ Sஹம் ॥ 32 ॥

பதச்சேதம்:

ஸம்பூதி வர்ஜிதம் இதம் ஸததம் விபாதி
ஸம்ஸார வர்ஜிதம் இதம் ஸததம் விபாதி
ஸம்ஹார வர்ஜிதம் இதம் ஸததம் விபாதி
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||32||

பத அர்த்தம்:

- ஸம்பூதி வர்ஜிதம் இதம் ஸததம் விபாதி - பிரம்மமாகிய நான், தோற்றமற்றதால் என்றென்றும் இருக்கிறேன் என ஒளிர்கிறேன்

- ஸம்ஸார வர்ஜிதம் இதம் ஸததம் விபாதி - பி(இ)றப்பு அற்றதால் என்றென்றும் இருக்கிறேன் என ஒளிர்கிறேன்

- ஸம்ஹார வர்ஜிதம் இதம் ஸததம் விபாதி - அழிவற்றதால் என்றென்றும் இருக்கிறேன் என ஒளிர்கிறேன்

- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய நான், தோற்றமற்றதால் என்றென்றும் இருக்(ஒளிர்)கிறேன்; பி(இ)றப்பு அற்றதால் என்றென்றும் இருக்(ஒளிர்)கிறேன்; அழிவற்றதால் என்றென்றும் இருக்(ஒளிர்)கிறேன்; நான் இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

உல்லேக ^{2}மாத்ரமபி தே ந ச நாமரூபம்
நிர்பி^{4}ந்நபி^{4}ந்நமபி தே ந ஹி வஸ்து கிஞ்சித் ।
நிர்லஜ்ஜமாநஸ கரோஷி கத ^{2}ம் விஷாத ^{3}ம்
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ ऽஹம் ॥ 33 ॥

பதச்சேதம்:

உல்லேக மாத்ரம் அபி தே ந ச நாம ரூபம்
நிர்பின்ன பின்னம் அபி தே ந ஹி வஸ்து கிஞ்சித் ।
நிர்லஜ்ஜ மானஸ கரோஷி கதம் விஷாதம்
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||33||

பத அர்த்தம்:

- உல்லேக மாத்ரம் அபி தே ந ச நாம ரூபம் - பிரம்மமாகிய உனக்கு, ஒரு குறிப்பிட்ட அளவில் கூட, எந்த பெயரும், உருவமும் இல்லை

- நிர்பின்ன பின்னம் அபி தே ந ஹி வஸ்து கிஞ்சித் - உனக்கு வேறுபட்டோ அல்லது வேறாக எந்தப் பொருளும் இல்லை

- நிர்லஜ்ஜ மானஸ கரோஷி கதம் விஷாதம் - வெட்கமற்ற மனமே! நீ வருத்தப்படுகிறாயா?
- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நீ இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

வெட்கமற்ற மனமே! நீ வருத்தப்படுகிறாயா? பிரம்மமாகிய உனக்கு, ஒரு குறிப்பிட்ட அளவில் கூட, எந்த பெயரும், உருவமும் இல்லை; உனக்கு வேறுபட்டோ அல்லது வேறாக எந்தப் பொருளும் இல்லை; நீ இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

கிம் நாம ரோதி ^{3}ஷி ஸகே ^{2} ந ஜரா ந ம்ரு ’த்யு :
கிம் நாம ரோதி ^{3}ஷி ஸகே ^{2} ந ச ஜந்ம து:^{3} க^{2}ம் ।
கிம் நாம ரோதி ^{3}ஷி ஸகே ^{2} ந ச தே விகாரோ
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ Sஹம் ॥ 34 ॥

பதச்சேதம்:

கிம் நாம ரோதிஷி ஸகே ந ஜரா ந ம்ருத்யு :
கிம் நாம ரோதிஷி ஸகே ந ச ஜந்ம துக்கம் ।
கிம் நாம ரோதிஷி ஸகே ந ச தே விகாரோ
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||34||

பத அர்த்தம்:

- கிம் நாம ரோதிஷி ஸகே ந ஜரா ந ம்ருத்யு : - நீ ஏன் அழுகிறாய் நண்பா? உனக்கு எவ்வித தேய்மானமோ, மரணமோ இல்லை
- கிம் நாம ரோதிஷி ஸகே ந ச ஜந்ம துக்கம் - பிறப்பும் இல்லை, துன்பமும் இல்லை
- கிம் நாம ரோதிஷி ஸகே ந ச தே விகாரோ - உனக்கு எந்த நோயும், மாற்றமும் இல்லை
- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நீ இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

நீ ஏன் அழுகிறாய் நண்பா? உனக்கு எவ்வித தேய்மானமோ, மரணமோ இல்லை; பிறப்பும் இல்லை, துன்பமும் இல்லை; உனக்கு எந்த நோயும், மாற்றமும் இல்லை; நீ இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

கிம் நாம ரோதி ^{3}ஷி ஸகே ^{2} ந ச தே ஸ்வரூபம்
கிம் நாம ரோதி ^{3}ஷி ஸகே ^{2} ந ச தே விரூபம் ।
கிம் நாம ரோதி ^{3}ஷி ஸகே ^{2} ந ச தே வயாம்ஸி
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ Sஹம் ॥ 35 ॥

பதச்சேதம்:

கிம் நாம ரோதிஷி ஸகே ந ச தே ஸ்வரூபம்
கிம் நாம ரோதிஷி ஸகே ந ச தே விரூபம் ।
கிம் நாம ரோதிஷி ஸகே ந ச தே வயாம்ஸி
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||35||

பத அர்த்தம்:

- கிம் நாம ரோதிஷி ஸகே ந ச தே ஸ்வரூபம் - நீ ஏன் அழுகிறாய் நண்பா? உனக்கு உருவமும் இல்லை
- கிம் நாம ரோதிஷி ஸகே ந ச தே விரூபம் - நீ உருவவில் சிதைந்தவனும் அல்லன்
- கிம் நாம ரோதிஷி ஸகே ந ச தே வயாம்ஸி - உனக்கு முதுமை இல்லை
- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நீ இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

நீ ஏன் அழுகிறாய் நண்பா? உனக்கு உருவம் இல்லை; உருவில் சிதைந்தவன் அல்லன்; உனக்கு முதுமை இல்லை; நீ இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

கிம் நாம ரோதி ^{3}ஷி ஸகே ^{2} ந ச தே வயாம்ஸி
கிம் நாம ரோதி ^{3}ஷி ஸகே ^{2} ந ச தே மநாம்ஸி ।
கிம் நாம ரோதி ^{3}ஷி ஸகே ^{2} ந தவேந்த் ^{3}ரியாணி
ஜ்ஞாநாம்ரு 'தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ Sஹம் ॥ 36 ॥

பதச்சேதம்:

கிம் நாம ரோதிஷி ஸகே ந ச தே வயாம்ஸி
கிம் நாம ரோதிஷி ஸகே ந ச தே மனாம்ஸி ।
கிம் நாம ரோதிஷி ஸகே ந தவ இந்த்ரியாணி
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||36||

பத அர்த்தம்:

- கிம் நாம ரோதிஷி ஸகே ந ச தே வயாம்ஸி - நீ ஏன் அழுகிறாய் நண்பா? நீ உடலற்றவன் ஆதலால் தேய்தல், மறைதல் போன்றவை இல்லை
- கிம் நாம ரோதிஷி ஸகே ந ச தே மனாம்ஸி - மனம், புத்தி, சித்தம் போன்ற அந்தக்கரணங்கள் இல்லை
- கிம் நாம ரோதிஷி ஸகே ந தவ இந்த்ரியாணி - புலன்கள் எதுவும் இல்லை
- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நீ இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

நீ ஏன் அழுகிறாய் நண்பா? நீ உடலற்றவன் ஆதலால் தேய்தல், மறைதல் போன்றவை இல்லை; மனம், புத்தி, சித்தம், அகங்காரம் போன்ற அந்தக்கரணங்கள் இல்லை; புலன்கள் எதுவும் இல்லை; நீ இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

கிம் நாம ரோதி ^{3}ஷி ஸகே ^{2} ந ச தே Sஸ்தி காம :
கிம் நாம ரோதி ^{3}ஷி ஸகே ^{2} ந ச தே ப்ரலோப :^{4} ।
கிம் நாம ரோதி ^{3}ஷி ஸகே ^{2} ந ச தே விமோஹோ
ஜ்ஞாநாம்ரு 'தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ Sஹம் ॥ 37 ॥

பதச்சேதம்:

கிம் நாம ரோதிஷி ஸகே ந ச தே அஸ்தி காம:
கிம் நாம ரோதிஷி ஸகே ந ச தே ப்ரலோப: ।
கிம் நாம ரோதிஷி ஸகே ந ச தே விமோஹோ
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||37||

பத அர்த்தம்:

- கிம் நாம ரோதிஷி ஸகே ந ச தே அஸ்தி காம: - நீ ஏன் அழுகிறாய் நண்பா? நீ ஆசையற்றவன்
- கிம் நாம ரோதிஷி ஸகே ந ச தே ப்ரலோப: - பேராசையற்றவன்
- கிம் நாம ரோதிஷி ஸகே ந ச தே விமோஹோ - நீ மாயை என்ற மயக்கம் அற்றவன்
- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நீ இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

நீ ஏன் அழுகிறாய் நண்பா? நீ ஆசையற்றவன்; பேராசையற்றவன்; மாயை என்ற மயக்கம் அற்றவன்; நீ இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

ஐஶ்வர்யமிச்ச ^{2}ஸி கத ^{2}ம் ந ச தே த^{4}நாநி
ஐஶ்வர்யமிச்ச ^{2}ஸி கத ^{2}ம் ந ச தே ஹி பத்நீ ।
ஐஶ்வர்யமிச்ச ^{2}ஸி கத ^{2}ம் ந ச தே மமேதி
ஜ்ஞாநாம்ரு 'தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ Sஹம் ॥ 38 ॥

பதச்சேதம்:

ஐஶ்வர்யம் இச்சஸி கதம் ந ச தே தனானி
ஐஶ்வர்யம் இச்சஸி கதம் ந ச தே ஹி பத்னீ ।
ஐஶ்வர்யம் இச்சஸி கதம் ந ச தே மமேதி
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||38||

பத அர்த்தம்:

- ஐஶ்வர்யம் இச்சஸி கதம் ந ச தே தனானி - பிரம்மமாகிய உனக்கு, செல்வங்கள் இல்லை, பின் நீ எதை துறந்து இறையாண்மை அடைய ஆசைப்படுகிறாய்?
- ஐஶ்வர்யம் இச்சஸி கதம் ந ச தே ஹி பத்னீ - உனக்கு மனைவி, மக்கள் இல்லை, பின் எதற்காக செல்வம் சேர்க்க ஆசைப்படுகிறாய்?

- ஐஸ்வர்யம் இச்சஸி கதம் ந ச தே மமேதி - உனக்கு என்னுடையது என்ற மமகாரம் இல்லாததால் எதனிடத்தில் ஆசைபடுகிறாய்?
- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நீ இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய உனக்கு, செல்வம் இல்லை, பின் எதை துறந்து, இறைவை அடைய ஆசைப்படுகிறாய்? உனக்கு மனைவி, மக்கள் இல்லை, பின் எதற்காக செல்வம் சேர்க்க ஆசைப்படுகிறாய்? உனக்கு என்னுடையது என்ற மமகாரம் இல்லாததால் எதனிடத்தில் ஆசைபடுகிறாய்? நீ இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

லிங்க ^{3}ப்ரபஞ்சஜநுஷீ ந ச தே ந மே ச
நிர்லஜ்ஜமாநஸமித ^{3}ம் ச விபா^{4}தி பி^{4}ந்நம் ।
நிர்பே^{4}த ^{3}பே^{4}த ^{3}ரஹிதம் ந ச தே ந மே ச
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ ऽஹம் ॥ 39 ॥

பதச்சேதம்:

லிங்க ப்ரபஞ்ச ஜனுஷீ ந ச தே ந மே ச
நிர்லஜ்ஜ மானஸம் இதம் ச விபாதி பின்னம் ।
நிர்பேத பேத ரஹிதம் ந ச தே ந மே ச
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||39||

பத அர்த்தம்:

- லிங்க ப்ரபஞ்ச ஜனுஷீ ந ச தே ந மே ச - பிரம்மமாகிய உ(எ)னக்கும், இப்பிரபஞ்சம் சூக்ஷமம் அல்ல, ஸ்தூலம் அல்ல
- நிர்லஜ்ஜ மானஸம் இதம் ச விபாதி பின்னம் - வெட்கமற்ற மனமே! நீயே இவ்வேறுபாட்டை கற்பித்துக்கொண்டாய்
- நிர்பேத பேத ரஹிதம் ந ச தே ந மே ச - உனக்கும் எனக்கும் ஒற்றுமையோ வேற்றுமையோ இல்லை
- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நீ இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய உ(எ)னக்கும், இப்பிரபஞ்சம் சூக்ஷ்மம் அல்ல, ஸ்தூலம் அல்ல; வெட்கமற்ற மனமே! நீயே இவ்வேறுபாட்டை கற்பித்துக்கொண்டாய்; உ(எ)னக்கும் ஒற்றுமையோ, வேற்றுமையோ இல்லை; நீ இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

நோ வாணுமாத்ரமபி தே ஹி விராக ^{3}ரூபம்
நோ வாணுமாத்ரமபி தே ஹி ஸராக ^{3}ரூபம் ।
நோ வாணுமாத்ரமபி தே ஹி ஸகாமரூபம்
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ Sஹம் ॥ 40 ॥

பதச்சேதம்:

நோ வ அணுமாத்ரம் அபி தே ஹி விராக ரூபம்
நோ வ அணுமாத்ரம் அபி தே ஹி ஸராக ரூபம் ।
நோ வ அணுமாத்ரம் அபி தே ஹி ஸகாம ரூபம்
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||40||

பத அர்த்தம்:

- நோ வ அணுமாத்ரம் அபி தே ஹி விராக ரூபம் - பிரம்மமாகிய உனக்கு, அணுவளவும் பற்று என்பதில்லை

- நோ வ அணுமாத்ரம் அபி தே ஹி ஸராக ரூபம் - அணுவளவும் பற்றின்மை என்பதில்லை

- நோ வ அணுமாத்ரம் அபி தே ஹி ஸகாம ரூபம் - ஆசை என்பது அணுவளவும் உனகில்லை

- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நீ இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய உனக்கு, அணுவளவும் பற்று என்பதில்லை; அணுவளவும் பற்றின்மை என்பதில்லை; ஆசை என்பது அணுவளவும் உனகில்லை; நீ இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

த்^{4}யாதா ந தே ஹி ஹ்ரு ’த^{3}யே ந ச தே ஸமாதி^{4} -
ர்த்^{4}யாநம் ந தே ஹி ஹ்ரு ’த^{3}யே ந ப^{3}ஹி: ப்ரதே ^{3}ஶ: ।
த்^{4}யேயம் ந சேதி ஹ்ரு ’த^{3}யே ந ஹி வஸ்து காலோ
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ Sஹம் ॥ 41 ॥

பதச்சேதம்:

த்யாதா ந தே ஹி ஹ்ருதயே ந ச தே ஸமாதிர்
த்யானம் ந தே ஹி ஹ்ருதயே ந பஹி: ப்ரதேஶ: ।
த்யேயம் ந சேதி ஹ்ருதயே ந ஹி வஸ்து காலோ
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||41||

பத அர்த்தம்:

- த்யாதா ந தே ஹி ஹ்ருதயே ந ச தே ஸமாதிர் - பிரம்மமாகிய உனக்கு, இதயம் இல்லாததால், தியானம் செய்பவன் இல்லை, சமாதி இல்லை

- த்யானம் ந தே ஹி ஹ்ருதயே ந பஹி: ப்ரதேஶ: - தியானப்பதற்கு இடமும் இல்லை

- த்யேயம் ந சேதி ஹ்ருதயே ந ஹி வஸ்து காலோ - எந்த பொருளும், நேரமும், இல்லாததால், தியானம் என்று எதுவும் இல்லை

- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நீ இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய உனக்கு, இதயம் இல்லாததால், தியானம் செய்பவன் இல்லை, சமாதி இல்லை; தியானப்பதற்கு இடம் இல்லை; எந்த பொருளும், நேரமும், இல்லாததால், தியானம் என்று செயல் எதுவும் இல்லை; நீ இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

யத்ஸாரபூ^{4}தமகி ^{2}லம் கதி ^{2}தம் மயா தே
ந த்வம் ந மே ந மஹதோ ந கு^{3}ருர்ந ந ஶிஷ்ய : ।
ஸ்வச்ச ^{2}ந்த ^{3}ரூபஸஹஜம் பரமார்த ^{2}தத்த்வம்
ஜ்ஞாநாம்ரு ’தம் ஸமரஸம் க^{3}க^{3}நோபமோ Sஹம் ॥ 42 ॥

பதச்சேதம்:

யத்ஸார பூதம் அகிலம் கதிதம் மயா தே
ந த்வம் ந மே ந மஹதோ ந குருர் ந ந ஶிஷ்ய : ।
ஸ்வச்சந்த ரூப ஸஹஜம் பரமார்த தத்த்வம்
ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் ||42||

பத அர்த்தம்:

- யத்ஸார பூதம் அகிலம் கதிதம் மயா தே - பிரம்மத்தின் யதார்த்த உண்மையை நான் உனக்கு எடுத்துரைத்தேன்

- ந த்வம் ந மே ந மஹதோ ந குருர் ந ந ஶிஷ்ய : - நீ, நான், உயர்ந்தவன், ஆசிரியர், சீடன் போன்றவை இங்கில்லை

- ஸ்வச்சந்த ரூப ஸஹஜம் பரமார்த தத்த்வம் - இறுதி உண்மை எளிமையானது மற்றும் தன்னிச்சையானது

- ஜ்ஞானம் அம்ருதம் ஸமரஸம் ககனோபமோ அஹம் - நீ இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பிரம்மத்தின் யதார்த்த உண்மையை நான் உனக்கு எடுத்துரைத்தேன்; நீ, நான், உயர்ந்தவன், ஆசிரியர், சீடன் போன்றவை இங்கில்லை; இறுதி உண்மை எளிமையானது மற்றும் தன்னிச்சையானது; நீ இருப்பறிவானந்தம், ஆகாயம் போன்று எல்லையற்றவன்.

கத ^{2}மிஹ பரமார்த ^{2}ம் தத்த்வமாநந்த ^{3}ரூபம்
கத ^{2}மிஹ பரமார்த ^{2}ம் நைவமாநந்த ^{3}ரூபம் ।
கத ^{2}மிஹ பரமார்த ^{2}ம் ஜ்ஞாநவிஜ்ஞாநரூபம்
யதி ^{3} பரமஹமேகம் வர்ததே வ்யோமரூபம் ॥ 43 ॥

பதச்சேதம்:

கதம் இஹ பரமார்தம் தத்த்வம் ஆனந்த ரூபம்
கதம் இஹ பரமார்தம் ந ஏவ ஆனந்த ரூபம் ।
கதம் இஹ பரமார்தம் ஜ்ஞாந விஜ்ஞான ரூபம்
யதி பரம் அஹம் ஏகம் வர்ததே வ்யோமரூபம் ॥ 43 ॥

பத அர்த்தம்:

- கதம் இஹ பரமார்தம் தத்த்வம் ஆனந்த ரூபம் - யதார்த்த உண்மை ஆனந்தமானது என்றும்
- கதம் இஹ பரமார்தம் ந ஏவ ஆனந்த ரூபம் - ஆனந்தமற்றது என்றும் எப்படி கூற முடியும்?
- கதம் இஹ பரமார்தம் ஜ்ஞாந விஜ்ஞான ரூபம் - அதை அறிவால் அல்லது உணர்தல் மூலம் அடைய முடியும் என்று எப்படி கூறுவது?
- யதி பரம் அஹம் ஏகம் வர்ததே வ்யோமரூபம் - பிரம்மமாகிய நான், ஆகாயத்தை போன்று அனைத்தையும் நிறைத்தவன், அனைத்திலும் உயர்ந்தவன்

தெளிவுரை:

பிரம்மமாகிய நான், ஆகாயத்தை போன்று அனைத்தையும் நிறைந்தவன், உயர்ந்தவன் என்கிறபடியால், யதார்த்த உண்மை ஆனந்தமானது, ஆனந்தமற்றது என்று எப்படி கூற முடியும்? அதை அறிவால் அல்லது உணர்தல் மூலம் அடைய முடியும் என்று எப்படி கூறுவது?

த^{3}ஹநபவநஹீநம் வித் ^{3}தி^{4} விஜ்ஞாநமேக -
மவநிஜலவிஹீநம் வித் ^{3}தி^{4} விஜ்ஞாநரூபம் ।
ஸமக ^{3}மநவிஹீநம் வித் ^{3}தி^{4} விஜ்ஞாநமேகம்
க^{3}க^{3}நமிவ விஶாலம் வித் ^{3}தி^{4} விஜ்ஞாநமேகம் ॥ 44 ॥

பதச்சேதம்:

தஹன பவன ஹீனம் வித்தி விஜ்ஞானம் ஏகம்
அவநிஜல விஹீனம் வித்தி விஜ்ஞான ரூபம் ।
ஸமகமன விஹீனம் வித்தி விஜ்ஞானம் ஏகம்
ககனம் இவ விஶாலம் வித்தி விஜ்ஞானம் ஏகம் ॥ 44 ॥

பத அர்த்தம்:

- தஹன பவன ஹீனம் வித்தி விஜ்ஞானம் ஏகம் - இருமைகளற்ற பிரம்மம், நெருப்பு, காற்று போன்றவை அற்றது
- அவநிஜல விஹீனம் வித்தி விஜ்ஞான ரூபம் - பூமி, நீர் போன்றவை அற்றது

- ஸமகமன விஹீனம் வித்தி விஜ்ஞானம் ஏகம் - அசைவது, அசையாதது போன்றவை அற்றது என்றும்

- ககனம் இவ விஶாலம் வித்தி விஜ்ஞானம் ஏகம் - ஆகாயம் போன்று பரந்து விரிந்து இருக்கிறது என்று அறியுங்கள்.

தெளிவுரை:

இருமைகளற்ற பிரம்மம், நெருப்பு, காற்று, பூமி, நீர் போன்றவை அற்றது; அசைவது, அசையாதது போன்றவை அற்றது; ஆகாயம் போன்று பரந்து விரிந்து இருக்கிறது என்று அறியுங்கள்.

ந ஶூந்யரூபம் ந விஶூந்யரூபம்
ந ஶுத் ³த⁴ரூபம் ந விஶுத் ³த⁴ரூபம் ।
ரூபம் விரூபம் ந ப⁴வாமி கிஞ்சித்
ஸ்வரூபரூபம் பரமார்த ²தத்த்வம் ॥ 45 ॥

பதச்சேதம்:

ந ஶூன்ய ரூபம் ந விஶூன்ய ரூபம்
ந ஶுத்த ரூபம் ந விஶுத்த ரூபம் ।
ரூபம் விரூபம் ந பவாமி கிஞ்சித்
ஸ்வரூப ரூபம் பரமார்த தத்த்வம் ॥ 45 ॥

பத அர்த்தம்:

- ந ஶூன்ய ரூபம் ந விஶூன்ய ரூபம் - பிரம்மமாகிய நான், உருவமற்றவன் அல்ல, வடிவமும் அல்ல;

- ந ஶுத்த ரூபம் ந விஶுத்த ரூபம் - எனது உண்மையான இயல்பு தூய்மையானதும் அல்ல, தூய்மை அற்றதும் அல்ல;

- ரூபம் விரூபம் ந பவாமி கிஞ்சித் - எனக்கு அழகு, அசிங்கம் போன்ற பாவனைகள் இல்லை;

- ஸ்வரூப ரூபம் பரமார்த தத்த்வம் - என் இயல்பு சுயம் பிரகாசம், அதுவே அனைத்திலும் மேலான உண்மை.

தெளிவுரை:

பிரம்மமாகிய நான், வடிவமற்றவன் அல்லன், வடிவமுடையவன் அல்லன்; எனது உண்மையான இயல்பு தூய்மையானதும் அல்ல, தூய்மையற்றதும் அல்ல; எனக்கு அழகு, அழகின்மை போன்ற பாவனைகள் இல்லை; எனது இயல்பு சுயம் பிரகாசம், அதுவே அனைத்திலும் மேலான உண்மை.

முஞ்ச முஞ்ச ஹி ஸம்ஸாரம் த்யாக ³ம் முஞ்ச ஹி ஸர்வதா ² ।
த்யாகா ³த்யாக ³விஷம் ஶுத் ³த⁴மம்ரு ’தம் ஸஹஜம் த்⁴ருவம் ॥ 46 ॥

பதச்சேதம்:

முஞ்ச முஞ்ச ஹி ஸம்ஸாரம் த்யாகம் முஞ்ச ஹி ஸர்வதா |
த்யாகா த்யாக விஷம் ஶுத்தம் அம்ருதம் ஸஹஜம் த்ருவம் ||46||

பத அர்த்தம்:

- முஞ்ச முஞ்ச ஹி ஸம்ஸாரம் த்யாகம் முஞ்ச ஹி ஸர்வதா - உடல், மனப்பற்றுக்களை துறப்பது, பி(இ)றப்பாகிய சம்சாரத்தை துறப்பது, பின்னர் துறக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் முற்றிலுமாக துறத்தல் வேண்டும்;

- த்யாகா த்யாக விஷம் - உலகத்தை விஷம் போன்று தவிர்க்க வேண்டும் என்ற எண்ணத்தையும் கைவிட வேண்டும்;

- ஶுத்தம் அம்ருதம் ஸஹஜம் த்ருவம் - பிரம்மமாகிய நீ, தூய்மையானவன், எளிமையானவன், உறுதியானவன், அழியாதவன்.

தெளிவுரை:

உடல், மனப்பற்றுக்களை துறப்பது, பி(இ)றப்பாகிய சம்சாரத்தை துறப்பது; பின்னர் துறக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் முற்றிலுமாக துறத்தல் வேண்டும்; உலகத்தை விஷம் போன்றது, அதை தவிர்க்க வேண்டும் என்ற எண்ணத்தையும் கைவிட வேண்டும்; பிரம்மமாகிய நீ, தூய்மையானவன், எளிமையானவன், உறுதியானவன், அழியாதவன்.

||மூன்றாம் அத்தியாயம் முற்றிற்று||

நான்காம் அத்தியாயம்

ஆத்மாவின் இயல்பை அவதூதர் எடுத்துரைத்தல்

அவதூதர் கூறுகிறார்:

நாவாஹநம் நைவ விஸர்ஜநம் வா
புஷ்பாணி பத்ராணி கத ²ம் ப⁴வந்தி ।
த்⁴யாநாநி மந்த்ராணி கத ²ம் ப⁴வந்தி
ஸமாஸமம் சைவ ஶிவார்சநம் ச ॥ 1॥

பதச்சேதம்:

ந ஆவாஹனம் ந ஏவ விஸர்ஜனம் வா
புஷ்பாணி பத்ராணி கதம் பவந்தி |
த்யானானி மந்த்ராணி கதம் பவந்தி
ஸமா ஸமம் ச ஏவ ஸிவ அர்சனம் ||1||

பத அர்த்தம்:

- ந ஆவாஹனம் ந ஏவ விஸர்ஜனம் வா - பிரம்மத்தை எதன் மீதும் ஏற்றி வைக்கவோ அல்லது விளக்கவோ முடியாது

- புஷ்பாணி பத்ராணி கதம் பவந்தி - அது வடிவமற்றதால், பூக்களையோ, இலைகளையோ கொண்டு அர்ப்பணிப்பதால் என்ன பயன்?

- த்யானானி மந்த்ராணி கதம் பவந்தி - தியானம் செய்தோ, மந்திரத்தை மீண்டும் மீண்டும் சொல்வதால் என்ன பயன்?

- ஸமா ஸமம் ச ஏவ ஸிவ அர்சனம் - ஒற்றுமை மற்றும் வேற்றுமை இரண்டும் இணைந்த உன்னதமான பேரறிவை எவ்வாறு வணங்குவது?

தெளிவுரை:

பிரம்மத்தை எதன் மீதும் ஏற்றி வைக்கவோ அல்லது விளக்கவோ முடியாது; அது வடிவமற்றதால், பூக்களையோ, இலைகளையோ கொண்டு அர்ப்பணிப்பதால் என்ன பயன்? தியானம் செய்தோ, மந்திரத்தை மீண்டும் மீண்டும் சொல்வதால் என்ன பயன்? ஒற்றுமை மற்றும் வேற்றுமை இரண்டும் இணைந்த உன்னதமான பேரறிவை எவ்வாறு வணங்குவது?

ந கேவலம் ப³ந்த⁴விப ³ந்த⁴முக்தோ
ந கேவலம் ஶுத் ³த⁴விஶுத் ³த⁴முக்த : ।
ந கேவலம் யோக ³வியோக ³முக்த :
ஸ வை விமுக்தோ க³க³நோபமோ Sஹம் ॥ 2॥

பதச்சேதம்:

ந கேவலம் பந்த விபந்த முக்தோ
ந கேவலம் ஶுத்த விஶுத்த முக்த : ।
ந கேவலம் யோக வியோக முக்த :
ஸ வை விமுக்தோ ககனோபமோ அஹம் ॥ 2॥

பத அர்த்தம்:

- ந கேவலம் பந்த விபந்த முக்தோ - பிரம்மம் பற்று, பற்றின்மை,
- ந கேவலம் ஶுத்த விஶுத்த முக்த : - தூய்மை, தூய்மையின்மை,
- ந கேவலம் யோக வியோக முக்த : - ஒருமை, இருமை ஆகியவற்றிலிருந்து விடுபட்டது மட்டுமல்லாமல் எப்போதும் சுதந்திரமானது;
- ஸ வை விமுக்தோ ககனோபமோ அஹம் - நான் பிரம்மன் ஆகாயத்தை போன்று எல்லையற்றவன்.

தெளிவுரை:

பிரம்மம் பற்று, பற்றின்மை, தூய்மை, தூய்மையின்மை, ஒருமை, இருமை ஆகியவற்றிலிருந்து விடுபட்டது, எப்போதும் சுதந்திரமானது; நான் பிரம்மன் ஆகாயத்தை போன்று எல்லையற்றவன்.

ஸஞ்ஜாயதே ஸர்வமித ³ம் ஹி தத் ²யம்
ஸஞ்ஜாயதே ஸர்வமித ³ம் விதத் ²யம் ।
ஏவம் விகல்போ மம நைவ ஜாத :
ஸ்வரூபநிர்வாணமநாமயோ ऽஹம் ॥ 3॥

பதச்சேதம்:

ஸஞ்ஜாயதே ஸர்வம் இதம் ஹி தத்யம்
ஸஞ்ஜாயதே ஸர்வம் இதம் விதத்யம் ।
ஏவம் விகல்போ மம நைவ ஜாத :
ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் ॥ 3॥

பத அர்த்தம்:

- ஸஞ்ஜாயதே ஸர்வம் இதம் ஹி தத்யம் - வெளிப்பட்ட உலகம் உண்மையானதா?
- ஸஞ்ஜாயதே ஸர்வம் இதம் விதத்யம் - வெளிப்பட்ட உலகம் உண்மையானதா?
- ஏவம் விகல்போ மம நைவ ஜாத : - இது போன்ற சந்தேகம் என் மனதில் எழவே இல்லை.
- ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் - நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

தெளிவுரை:

வெளிப்பட்ட இவ்வுலகம் உண்மையானதா? அல்லது உண்மையற்றதா? இது போன்ற சந்தேகம் என் மனதில் எழவே இல்லை; நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

ந ஸாஞ்ஜநம் சைவ நிரஞ்ஜநம் வா
ந சாந்தரம் வாபி நிரந்தரம் வா ।
அந்தர்விப^{4}ந்நம் ந ஹி மே விபா^{4}தி
ஸ்வரூபநிர்வாணமநாமயோ ऽஹம் ॥ 4॥

பதச்சேதம்:

ந ஸ அஞ்ஜனம் ச ஏவ நிரஞ்ஜனம் வா
ந ச அந்தரம் வாபி நிரந்தரம் வா ।
அந்தர் விபன்னம் ந ஹி மே விபாதி
ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் ॥ 4॥

பத அர்த்தம்:

- ந ஸ அஞ்ஜனம் ச ஏவ நிரஞ்ஜனம் வா - இருள், ஒளி
- ந ச அந்தரம் வாபி நிரந்தரம் வா - அகம், புறம்
- அந்தர் விபன்னம் ந ஹி மே விபாதி - எந்தப் பன்முகத்தன்மையும் என் சுயத்தில் தோன்றுவதில்லை
- ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் - நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

தெளிவுரை:

இருள், ஒளி, அகம், புறம் போன்ற எந்த பன்முகத்தன்மையும் என் சுயத்தில் தோன்றுவதில்லை; நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

அபோ ^{3}த^{4}போ ^{3}தோ^{4} மம நைவ ஜாதோ
போ ^{3}த^{4}ஸ்வரூபம் மம நைவ ஜாதம் ।
நிர்போ ^{3}த^{4}போ ^{3}த^{4}ம் ச கத ^{2}ம் வதா ^{3}மி
ஸ்வரூபநிர்வாணமநாமயோ ऽஹம் ॥ 5॥

பதச்சேதம்:

அபோத போதோ மம நைவ ஜாதோ
போத ஸ்வரூபம் மம நைவ ஜாதம் ।
நிர்போத போதம் ச கதம் வதாமி
ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் ॥ 5॥

பத அர்த்தம்:

- அபோத போதோ மம நைவ ஜாதோ - அறியாமை, அறிவு போன்றவை பிரம்மமாகிய என்னில் தோன்றவில்லை
- போத ஸ்வரூபம் மம நைவ ஜாதம் - என் சுயத்தை பற்றிய அறிவும் எனக்குள் தோன்றவில்லை
- நிர்போத போதம் ச கதம் வதாமி - எனக்கு அறியாமை, அறிவு இருக்கிறது என்று எப்படிச் சொல்வது?
- ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் - நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

தெளிவுரை:

அறியாமை, அறிவு போன்றவை பிரம்மமாகிய என்னில் தோன்றவில்லை; என் சுயத்தை பற்றிய அறிவும் எனக்குள் தோன்றவில்லை; எனக்கு அறியாமை, அறிவு இருக்கிறது என்று எப்படிச் சொல்வது? நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

ந த⁴ர்மயுக்தோ ந ச பாபயுக்தோ
ந ப³ந்த⁴யுக்தோ ந ச மோக்ஷயுக்த : ।
யுக்தம் த்வயுக்தம் ந ச மே விபா⁴தி
ஸ்வரூபநிர்வாணமநாமயோ Sஹம் ॥ 6॥

பதச்சேதம்:

ந தர்ம யுக்தோ ந ச பாப யுக்தோ
ந பந்த யுக்தோ ந ச மோக்ஷ யுக்த : ।
யுக்தம் த்வயுக்தம் ந ச மே விபாதி
ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் ॥ 6॥

பத அர்த்தம்:

- ந தர்ம யுக்தோ ந ச பாப யுக்தோ - பிரம்மமாகிய என்னில், அறம், அறமற்ற போன்ற சிந்தனை(செயல்)கள் இல்லை
- ந பந்த யுக்தோ ந ச மோக்ஷ யுக்த : - கட்டுப்பாடு, சுதந்திரம் போன்றவற்றால் தொடர்புபடுத்தப்படவில்லை
- யுக்தம் த்வயுக்தம் ந ச மே விபாதி - ஒன்றாகவோ, வேறாகவோ எதுவும் எனக்குத் தோன்றவில்லை
- ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் - நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய என்னில், அறம், அறமற்ற சிந்தனை(செயல்)களோ இல்லை; கட்டுப்பாடு, சுதந்திரம் போன்றவற்றால் தொடர்புபடுத்தப்படவில்லை; ஒன்றாகவோ,

வேறாகவோ எதுவும் தோன்றவில்லை; நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

பராபரம் வா ந ச மே கதா ^{3}சித்
மத்^{4}யஸ்த ^{2}பா^{4}வோ ஹி ந சாரிமித்ரம் ।
ஹிதாஹிதம் சாபி கத ^{2}ம் வதா ^{3}மி
ஸ்வரூபநிர்வாணமநாமயோ Sஹம் ॥ 7॥

பதச்சேதம்:

பராபரம் வா ந ச மே கதாசித்
மத்யஸ்த பாவோ ஹி ந சாரிமித்ரம் ।
ஹித அஹிதம் ச அபி கத ம் வதாமி
ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் ॥ 7॥

பத அர்த்தம்:

- பராபரம் வா ந ச மே கதாசித் - பிரம்மமாகிய என்னில், உயர்வு, தாழ்வு போன்றவை ஒரு போதும் இல்லை
- மத்யஸ்த பாவோ ஹி ந சாரிமித்ரம் - நடுநிலைமை என்பதும் இல்லை; எதிரி, நண்பர் இல்லை
- ஹித அஹிதம் ச அபி கதம் வதாமி - அப்படியிருக்க, அறம், அறமற்று என்பதை பற்றி எப்படி பேசுவது?
- ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் - நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய என்னில், உயர்வு, தாழ்வு போன்றவை ஒரு போதும் இல்லை; நடுநிலைமை என்பதும் இல்லை; எதிரி, நண்பர் இல்லை; அப்படியிருக்க, அறம், அறமற்றது போன்றவற்றை பற்றி எப்படி பேசுவது? நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

நோபாஸகோ நைவமுபாஸ்யரூபம்
ந சோபதே ^{3}ஶோ ந ச மே க்ரியா ச ।
ஸம்வித்ஸ்வரூபம் ச கத ^{2}ம் வதா ^{3}மி
ஸ்வரூபநிர்வாணமநாமயோ Sஹம் ॥ 8॥

பதச்சேதம்:

ந உபாஸகோ ந ஏவ உபாஸ்ய ரூபம்
ந ச உபதேஶோ ந ச மே க்ரியா ச ।
ஸம்வித் ஸ்வரூபம் ச கதம் வதாமி
ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் ॥ 8॥

பத அர்த்தம்:

- ந உபாஸகோ ந ஏவ உபாஸ்ய ரூபம் - பிரம்மமாகிய நான், வழிபடுபவனும் அல்ல, வழிபடும் பொருளும் அல்ல
- ந ச உபதேஶோ ந ச மே க்ரியா ச - அறிவுறுத்தல்கள், சடங்குகள் போன்றவை எனக்கல்ல
- ஸம்வித் ஸ்வரூபம் ச கதம் வதாமி - அப்படியிருக்க, முழுமையான உணர்வின் தன்மையை என்னால் எப்படி விவரிக்க முடியும்?
- ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் - நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய நான், வழிபடுபவனும் அல்ல, வழிபடும் பொருளும் அல்ல; அறிவுறுத்தல்கள், சடங்குகள் போன்றவை எனக்கல்ல; அப்படியிருக்க, முழுமையான உணர்வின் தன்மையை என்னால் எப்படி விவரிக்க முடியும்? நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

நோ வ்யாபகம் வ்யாப்யமிஹாஸ்தி கிஞ்சித்
ந சாலயம் வாபி நிராலயம் வா ।
அஶூந்யஶூந்யம் ச கத ²ம் வதா ³மி
ஸ்வரூபநிர்வாணமநாமயோ Sஹம் ॥ 9॥

பதச்சேதம்:

நோ வ்யாபகம் வ்யாப்யம் இஹாஸ்தி கிஞ்சித்
ந ச ஆலயம் வாபி நிராலயம் வா ।
அஶூன்ய ஶூன்யம் ச கதம் வதாமி
ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் ॥ 9॥

பத அர்த்தம்:

- நோ வ்யாபகம் வ்யாப்யம் இஹாஸ்தி கிஞ்சித் - பிரம்மத்தை எதுவும் வியாபிக்கவில்லை, பிரம்மத்தால் எதுவும் வியாபிக்கப்படவில்லை
- ந ச ஆலயம் வாபி நிராலயம் வா - பிரம்மத்திற்கு எந்த உறைவிடமும் இல்லை, பிரம்மம் எதற்கும் உறைவிடம் இல்லை
- அஶூன்ய ஶூன்யம் ச கதம் வதாமி - அப்படியிருக்க, பிரம்மம் முழுமை அல்லது வெறுமை என்று எப்படி விவரிப்பது?
- ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் - நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

தெளிவுரை:

பிரம்மத்தை எதுவும் வியாபிக்கவில்லை, பிரம்மத்தால் எதுவும் வியாபிக்கப்படவில்லை; பிரம்மத்திற்கு எந்த உறைவிடமும் இல்லை, பிரம்மம்

எதற்கும் உறைவிடம் இல்லை; அப்படியிருக்க, பிரம்மம் முழுமை அல்லது வெறுமை என்று எப்படி விவரிப்பது? நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

ந க்^{3}ராஹகோ க்^{3}ராஹ்யகமேவ கிஞ்சித்
ந காரணம் வா மம நைவ கார்யம் ।
அசிந்த்யசிந்த்யம் ச கத ^{2}ம் வதா ^{3}மி
ஸ்வரூபநிர்வாணமநாமயோ ऽஹம் ॥ 10 ॥

பதச்சேதம்:

ந க்ராஹகோ க்ராஹ்யகம் ஏவ கிஞ்சித்
ந காரணம் வா மம ந ஏவ கார்யம் |
அசிந்த்ய சிந்த்யம் ச கதம் வதாமி
ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் ॥ 10॥

பத அர்த்தம்:

- ந க்ராஹகோ க்ராஹ்யகம் ஏவ கிஞ்சித் - சுயமாகிய நான் உணர்பவன் அல்ல, உணரும் பொருள் அல்ல
- ந காரணம் வா மம ந ஏவ கார்யம் - எனக்கு காரணம், விளைவு போன்றவை அல்ல
- அசிந்த்ய சிந்த்யம் ச கதம் வதாமி - அப்படியிருக்க, என்னை கற்பனை செய்யமுடியும், கற்பனை செய்ய முடியாது என்று எப்படி கூறவது?
- ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் - நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

தெளிவுரை:

சுயமாகிய நான் உணர்பவன் அல்ல, உணரும் பொருள் அல்ல; எனக்கு காரணம், விளைவு போன்றவை அல்ல; அப்படியிருக்க, என்னை கற்பனை செய்யமுடியும், கற்பனை செய்ய முடியாது என்று எப்படி கூறவது? நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

ந பே^{4}த ^{3}கம் வாபி ந சைவ பே^{4}த் ^{3}யம்
ந வேத ^{3}கம் வா மம நைவ வேத் ^{3}யம் ।
க^{3}தாக ^{3}தம் தாத கத ^{2}ம் வதா ^{3}மி
ஸ்வரூபநிர்வாணமநாமயோ ऽஹம் ॥ 11 ॥

பதச்சேதம்:

ந பேதகம் வாபி ந சைவ பேத்யம்
ந வேதகம் வா மம நைவ வேத்யம் ।
கத அகதம் தாத கதம் வதாமி
ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் ॥ 11॥

பத அர்த்தம்:

- ந பேதகம் வாபி ந சைவ பேத்யம் - சுயமாகிய நான், எதையும் அழிப்பது இல்லை, எதனாலும் அழியப்படுவதும் இல்லை
- ந வேதகம் வா மம நைவ வேத்யம் - அறிந்தவனும் அல்ல, அறியக்கூடியதும் அல்ல;
- கத அகதம் தாத கதம் வதாமி - அன்பே! நான் எப்படி வருகிறேன், போகிறேன் என்று எதனை விவரிப்பது?
- ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் - நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

தெளிவுரை:

சுயமாகிய நான், எதையும் அழிப்பது இல்லை, எதனாலும் அழியப்படுவதும் இல்லை; அறிந்தவனும் அல்ல, அறியக்கூடியதும் அல்ல; அன்பே! நான் எவ்வாறு வருகிறேன், போகிறேன் என்று எப்படி விவரிப்பது? நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

ந சாஸ்தி தே ^{3}ஹோ ந ச மே விதே ^{3}ஹோ
பு^{3}த்^{3}தி^{4}ர்மநோ மே ந ஹி சேந்த் ^{3}ரியாணி ।
ராகோ ^{3} விராக ^{3}ஶ்ச கத ^{2}ம் வதா ^{3}மி
ஸ்வரூபநிர்வாணமநாமயோ ऽஹம் ॥ 12 ॥

பதச்சேதம்:

ந ச அஸ்தி தேஹோ ந ச மே விதேஹோ
புத்திர் மனோ மே ந ஹி ச இந்த்ரியாணி ।
ராகோ விராகஶ்ச கதம் வதாமி
ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் ॥ 12॥

பத அர்த்தம்:

- ந ச அஸ்தி தேஹோ ந ச மே விதேஹோ - சுயமாகிய நான், உடலுடையவன் அல்லன், உடலற்றவன் அல்லன்
- புத்திர் மனோ மே ந ஹி ச இந்த்ரியாணி - எனக்கு புலன்கள், மனம், புத்தி போன்ற அந்தக்கரணங்கள் இல்லை
- ராகோ விராகஶ்ச கதம் வதாமி - அப்படியிருக்க, விருப்பு, வெறுப்பு பற்றி நான் எப்படி சொல்வது?
- ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் - நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

தெளிவுரை:

சுயமாகிய நான், உடலுடையவன் அல்லன், உடலற்றவன் அல்லன்; எனக்கு புலன்கள், மனம், புத்தி போன்ற அந்தக்கரணங்கள் இல்லை; அப்படியிருக்க, விருப்பு,

வெறுப்பு பற்றி நான் எப்படி சொல்வது? நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

உல்லேக ^{2}மாத்ரம் ந ஹி பி^{4}ந்நமுச்சை -
ருல்லேக ^{2}மாத்ரம் ந திரோஹிதம் வை ।
ஸமாஸமம் மித்ர கத ^{2}ம் வதா ^{3}மி
ஸ்வரூபநிர்வாணமநாமயோ Sஹம் ॥ 13 ॥

பதச்சேதம்:

உல்லேக மாத்ரம் ந ஹி பின்னம் உச்சைர்
உல்லேக மாத்ரம் ந திரோஹிதம் வை ।
ஸம அஸமம் மித்ர கதம் வதாமி
ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் ॥ 13॥

பத அர்த்தம்:

- உல்லேக மாத்ரம் ந ஹி பின்னம் உச்சைர் - வலிமையான தர்க்க வாதத்தினால், பிரம்மத்தின் உண்மை தன்மையை உரைக்க இயலாது

- உல்லேக மாத்ரம் ந திரோஹிதம் வை - வலிமையான தர்க்க வாதத்தினால், பிரம்மத்தின் உண்மை தன்மையை மறுக்க இயலாது

- ஸம அஸமம் மித்ர கதம் வதாமி - நண்பா! பிரம்மம் எப்பொழுதும் ஒரே மாதிரி இருக்கிறதா? இல்லையா? என்று எப்படிச் சொல்வது?

- ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் - நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

தெளிவுரை:

வலிமையான தர்க்க வாதத்தினால், பிரம்மத்தின் உண்மை தன்மையை உரைக்க இயலாது அல்லது மறுக்க இயலாது; நண்பா! பிரம்மம் எப்பொழுதும் ஒரே மாதிரி இருக்கிறதா? இல்லையா? என்று எப்படிச் சொல்வது? நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

ஜிதேந்த் ^{3}ரியோ Sஹம் த்வஜிதேந்த் ^{3}ரியோ வா
ந ஸம்யமோ மே நியமோ ந ஜாத : ।
ஜயாஜயௌ மித்ர கத ^{2}ம் வதா ^{3}மி
ஸ்வரூபநிர்வாணமநாமயோ Sஹம் ॥ 14 ॥

பதச்சேதம்:

ஜிதேந்த்ரியோ அஹம் த்வ ஜிதேந்த்ரியோ வா
ந ஸம்யமோ மே நியமோ ந ஜாத : ।
ஜயாஜயௌ மித்ர கதம் வதாமி
ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் ॥ 14॥

பத அர்த்தம்:

- ஜிதேந்த்ரியோ அஹம் த்வ ஜிதேந்த்ரியோ வா - பிரம்மமாகிய நான், புலனடக்கமற்றன், புலனடக்கயவன் என்பது இல்லை
- ந ஸம்யமோ மே நியமோ ந ஜாத : - சுயக்கட்டுப்பாடு இல்லை, மத சடங்குகள் என்பதில்லை
- ஜயாஜயௌ மித்ர கதம் வதாமி - அப்படியிருக்க நண்பா! எதனு(யாரு)டைய வெற்றி, தோல்வியை பற்றி பேசவது?
- ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் - நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய நான், புலனடக்கமற்றன், புலனடக்கமுடையவன் என்பது இல்லை; சுயக்கட்டுப்பாடு இல்லை, மத சடங்குகள் என்பதில்லை; அப்படியிருக்க நண்பா! எதனு(யாரு)டைய வெற்றி, தோல்வியை பற்றி பேசவது? நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

அமூர்தமூர்திர்ந ச மே கதா ³சி -
தா ³த்³யந்தமத்⁴யம் ந ச மே கதா ³சித் ।
ப³லாப ³லம் மித்ர கத ²ம் வதா ³மி
ஸ்வரூபநிர்வாணமநாமயோ Sஹம் ॥ 15 ॥

பதச்சேதம்:

அமூர்த மூர்திர் ந ச மே கதாசித்
ஆதி அந்த மத்யம் ந ச மே கதாசித் ।
பல அபலம் மித்ர கதம் வதாமி
ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் ॥ 15॥

பத அர்த்தம்:

- அமூர்த மூர்திர் ந ச மே கதாசித் - பிரம்மமாகிய நான், உருவமற்றவன், உருவமுடையவன் என்பது ஒரு போதுமில்லை
- ஆதி அந்த மத்யம் ந ச மே கதாசித் - எனக்கு ஆரம்பம், நடு, முடிவு என்பது ஒரு போதுமில்லை
- பல அபலம் மித்ர கதம் வதாமி - அப்படியிருக்க நண்பா! நான் வலிமையானவன், பலவீனமானவன் என்று எதை வைத்து சொல்வது?
- ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் - நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய நான், உருவமற்றவன், உருவமுடையவன் என்பது ஒரு போதுமில்லை; எனக்கு ஆரம்பம், நடு, முடிவு என்பது ஒரு போதுமில்லை;

அப்படியிருக்க நண்பா! நான் வலிமையானவன், பலவீனமானவன் என்று எதை வைத்து சொல்வது? நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

ம்ரு ’தாம்ரு ’தம் வாபி விஷாவிஷம் ச
ஸஞ்ஜாயதே தாத ந மே கதா ^{3}சித் ।
அஶுத் ^{3}த^{4}ஶுத் ^{3}த^{4}ம் ச கத ^{2}ம் வதா ^{3}மி
ஸ்வரூபநிர்வாணமநாமயோ ऽஹம் ॥ 16 ॥

பதச்சேதம்:

ம்ருத அம்ருதம் வ அபி விஷ அவிஷம் ச
ஸஞ்ஜாயதே தாத ந மே கதாசித் ।
அஶுத்த ஶுத்தம் ச கதம் வதாமி
ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் ॥ 16॥

பத அர்த்தம்:

- ம்ருத அம்ருதம் வ அபி விஷ அவிஷம் ச - மரணமும் அழியாமையும், விஷமும் அமிர்தமும்
- ஸஞ்ஜாயதே தாத ந மே கதாசித் - அன்பே! பிரம்மமாகிய என்னிடமிருந்து ஒரு போதும் வெளிப்படவில்லை
- அஶுத்த ஶுத்தம் ச கதம் வதாமி - அப்படியிருக்க, நான் தூய்மையானவன், தூய்மையற்றவன் என்று எப்படி கூறுவது?
- ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் - நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

தெளிவுரை:

அன்பே! மரணமும் அழியாமையும், விஷமும் அமிர்தமும் பிரம்மமாகிய என்னிடமிருந்து ஒரு போதும் வெளிப்படவில்லை; அப்படியிருக்க, நான் தூய்மையானவன், தூய்மையற்றவன் என்று எப்படி கூறுவது? நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

ஸ்வப்ந : ப்ரபோ ^{3}தோ^{4} ந ச யோக ^{3}முத்^{3}ரா
நக்தம் தி ^{3}வா வாபி ந மே கதா ^{3}சித் ।
அதுர்யதுர்யம் ச கத ^{2}ம் வதா ^{3}மி
ஸ்வரூபநிர்வாணமநாமயோ ऽஹம் ॥ 17 ॥

பதச்சேதம்:

ஸ்வப்ன: ப்ரபோதோ ந ச யோக முத்ரா
நக்தம் திவா வாபி ந மே கதாசித் ।
அதுர்ய துர்யம் ச கதம் வதாமி
ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் ॥ 17॥

பத அர்த்தம்:

- ஸ்வப்ன: ப்ரபோதோ ந ச யோக முத்ரா - பிரம்மமாகிய எனக்கு, விழிப்பு, கனவு நிலைகள் இல்லை, யோகத்தில் எந்த நிலைகளும் இல்லை
- நக்தம் திவா வாபி ந மே கதாசித் - இரவு, பகல் போன்றவை ஒரு போதும் இல்லை
- அதுர்ய துர்யம் ச கதம் வதாமி - அப்படியிருக்க, நான் மூன்றாம் நிலையாகிய உறக்கத்தில் உள்ளேன் என்றும், நான்காவது நிலையாகிய துரீயத்தில் இருக்கிறேன் என்று எப்படிச் சொல்ல முடியும்?
- ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் - நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய எனக்கு, விழிப்பு, கனவு நிலைகள் இல்லை, யோகத்தில் எந்த நிலைகளும் இல்லை; இரவு, பகல் போன்றவை ஒரு போதும் இல்லை; அப்படியிருக்க, நான் மூன்றாம் நிலையாகிய உறக்கத்தில் உள்ளேன் என்றும், நான்காவது நிலையாகிய துரீயத்தில் இருக்கிறேன் என்று எப்படிச் சொல்ல முடியும்? நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

ஸம்வித் ³தி⁴ மாம் ஸர்வவிஸர்வமுக்தம்
மாயா விமாயா ந ச மே கதா ³சித் ।
ஸந்த்⁴யாதி ³கம் கர்ம கத ²ம் வதா ³மி
ஸ்வரூபநிர்வாணமநாமயோ Sஹம் ॥ 18 ॥

பதச்சேதம்:

ஸம்வித்தி மாம் ஸர்வ விஸர்வ முக்தம்
மாயா விமாயா ந ச மே கதாசித் ।
ஸந்த்யாதி கம் கர்ம கதம் வதாமி
ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் ॥ 18॥

பத அர்த்தம்:

- ஸம்வித்தி மாம் ஸர்வ விஸர்வ முக்தம் - பிரம்மமாகிய நான், எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டவன், எல்லாவற்றிலும் இருப்பவன்1 என்பதை அறிந்து கொள்;
- மாயா விமாயா ந ச மே கதாசித் - எனக்கு மாயையும், அதன் வடிவங்களும் ஒரு போதும் இல்லை;
- ஸந்த்யாதி கம் கர்ம கதம் வதாமி - அப்படியிருக்க, தினசரி கடமைகள் உண்டு, மத ஒழுக்கங்கள் உண்டு, அவைகளை நான் பின்பற்ற வேண்டும் என்று எப்படி கூறவது?
- ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் - நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய நான், எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டவன், எல்லாவற்றிலும் இருப்பவன்[1] என்பதை அறிந்து கொள்; எனக்கு மாயையும், அதன் வடிவங்களும் ஒரு போதும் இல்லை; அப்படியிருக்க, தினசரி[2] கடமைகள் உண்டு, மத ஒழுக்கங்கள் உண்டு, அவைகளை நான் பின்பற்ற வேண்டும் என்று எப்படி கூறவது? நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

1. **எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டவன், எல்லாவற்றிலும் இருப்பவன்** – சாதகர், குணங்களற்ற நிலையில், எல்லாவற்றிலிருந்தும் விடுபடுகிறான்; அவரே, குணங்களுடன் செயல்படும் போது, எல்லாவற்றிலும் தானே ஒருவராக இருக்கிறார்.

2. **தினசரி கடமைகள்** – ஜபம், தியானம், தானம், சூரிய வழிபாடு, மறைகளை ஓதுதல், மற்றும் பல செயல்கள்.

ஸம்வித் ³தி⁴ மாம் ஸர்வஸமாதி⁴யுக்தம்
ஸம்வித் ³தி⁴ மாம் லக்ஷ்யவிலக்ஷ்யமுக்தம் ।
யோக ³ம் வியோக ³ம் ச கத ²ம் வதா ³மி
ஸ்வரூபநிர்வாணமநாமயோ Sஹம் ॥ 19 ॥

பதச்சேதம்:

ஸம்வித்தி மாம் ஸர்வ ஸமாதியுக்தம்
ஸம்வித்தி மாம் லக்ஷ்ய விலக்ஷ்ய முக்தம் ।
யோகம் வியோகம் ச கதம் வதாமி
ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் ॥ 19॥

பத அர்த்தம்:

- ஸம்வித்தி மாம் ஸர்வ விஸர்வ முக்தம் - பிரம்மமாகிய நான் முற்றிலும் சுயத்தில் லயித்திருக்கிறேன் என்பதை அறிந்து கொள்
- ஸம்வித்தி மாம் லக்ஷ்ய விலக்ஷ்ய முக்தம் - இலக்கு, நோக்கமின்மை போன்றவற்றிலிருந்து விடுபட்டவன் என்பதை அறிந்து கொள்;
- யோகம் வியோகம் ச கதம் வதாமி - அப்படியிருக்க, மன ஒருமைபாடு, பிரிவினை பற்றி நான் என்ன பேசுவது?
- ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் - நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய நான் முற்றிலும் சுயத்தில் லயித்திருக்கிறேன் என்பதை அறிந்து கொள்; இலக்கு, நோக்கமின்மை போன்றவற்றிலிருந்து விடுபட்டவன் என்பதை அறிந்து கொள்; அப்படியிருக்க, மன ஒருமைபாடு, பிரிவினை பற்றி நான் என்ன பேசுவது? நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

மூர்கோ ²Sபி நாஹம் ந ச பண்டி ³தோ Sஹம்
மௌநம் விமௌநம் ந ச மே கதா ³சித் ।
தர்கம் விதர்கம் ச கத ²ம் வதா ³மி
ஸ்வரூபநிர்வாணமநாமயோ Sஹம் ॥ 20 ॥

பதச்சேதம்:

மூர்கோ அபி ந அஹம் ந ச பண்டிதோ அஹம்
மௌனம் விமௌனம் ந ச மே கதாசித் ।
தர்கம் விதர்கம் ச கதம் வதாமி
ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் ॥ 20॥

பத அர்த்தம்:

- மூர்கோ அபி ந அஹம் ந ச பண்டிதோ அஹம் - பிரம்மமாகிய நான், பாமரனும் அல்ல, அறிஞனும் அல்ல
- மௌனம் விமௌனம் ந ச மே கதாசித் - நான் மௌனியும் அல்ல, பேச்சாற்றல் உடையவனும் அல்ல
- தர்கம் விதர்கம் ச கதம் வதாமி - அப்படியிருக்க, வாதம் அல்லது எதிர் வாதத்தின் மூலம் என்னை எப்படி விவரிப்பது?
- ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் - நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய நான், பாமரனும் அல்ல, அறிஞனும் அல்ல; நான் மௌனியும் அல்ல, பேச்சாற்றல் உடையவனும் அல்ல; அப்படியிருக்க, வாதம் அல்லது எதிர் வாதத்தின் மூலம் என்னை எப்படி விவரிப்பது? நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

பிதா ச மாதா ச குலம் ந ஜாதி -
ர்ஜந்மாதி ³ ம்ரு 'த்யுர்ந ச மே கதா ³சித் ।
ஸ்நேஹம் விமோஹம் ச கத ²ம் வதா ³மி
ஸ்வரூபநிர்வாணமநாமயோ Sஹம் ॥ 21 ॥

பதச்சேதம்:

பிதா ச மாதா ச குலம் ந ஜாதிர்
ஜன்மாதி ம்ருத்யுர் ந ச மே கதாசித் ।
ஸ்நேஹம் விமோஹம் ச கதம் வதாமி
ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் ॥ 21॥

பத அர்த்தம்:

- பிதா ச மாதா ச குலம் ந ஜாதிர் - பிரம்மமாகிய எனக்கு தந்தை இல்லை, தாய் இல்லை, குடும்பம் இல்லை, இன(குல)ம் இல்லை;

- ஜன்மாதி ம்ருத்யுர் ந ச மே கதாசித் - நான் ஒருபோதும் பிறக்கவில்லை, இறக்கவும் இல்லை;
- ஸ்நேஹம் விமோஹம் ச கதம் வதாமி - அப்படியிருக்க, பற்றி(பாசத்தி)னால் எனக்கு குழப்பம் இருக்கிறது என்று எப்படி சொல்வது?
- ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் - நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய எனக்கு தந்தை இல்லை, தாய் இல்லை, குடும்பம் இல்லை, இன(குல)ம் இல்லை; நான் ஒருபோதும் பிறக்கவில்லை, இறக்கவும் இல்லை; அப்படியிருக்க, பற்றி(பாசத்தி)னால் எனக்கு குழப்பம் இருக்கிறது என்று எப்படி சொல்வது? நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

அஸ்தம் க^{3}தோ நைவ ஸதோ ^{3}தி ^{3}தோ ऽஹம்
தேஜோவிதேஜோ ந ச மே கதா ^{3}சித் ।
ஸந்த்^{4}யாதி ^{3}கம் கர்ம கத ^{2}ம் வதா ^{3}மி
ஸ்வரூபநிர்வாணமநாமயோ ऽஹம் ॥ 22 ॥

பதச்சேதம்:

அஸ்தம் கதோ ந ஏவ ஸத் உதிதோ அஹம்
தேஜோ விதேஜோ ந ச மே கதாசித் ।
ஸந்த்யாதிகம் கர்ம கதம் வதாமி
ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் ॥ 22॥

பத அர்த்தம்:

- அஸ்தம் கதோ ந ஏவ ஸத் உதிதோ அஹம் - பிரம்மமாக்ய நான், ஒருபோதும் மறைவதில்லை, உதிப்பதில்லை, எப்போதும் இருக்கிறேன்;
- தேஜோ விதேஜோ ந ச மே கதாசித் - என்னில் ஒளியும் இல்லை, இருளும் இல்லை;
- ஸந்த்யாதிகம் கர்ம கதம் வதாமி - அப்படியிருக்க, பழக்க வழக்கங்கள் (சடங்குகள்) எனக்கானவை என்று நான் எப்படிச் சொல்வது?
- ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் - நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய நான், ஒருபோதும் மறைவதில்லை, உதிப்பதில்லை, எப்போதும் இருக்கிறேன்; என்னில் ஒளியும் இல்லை, இருளும் இல்லை; அப்படியிருக்க, பழக்க வழக்கங்கள் (சடங்குகள்) எனக்கானவை என்று நான் எப்படிச் சொல்வது? நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

அஸம்ஶயம் வித் ^{3}தி^{4} நிராகுலம் மாம்
அஸம்ஶயம் வித் ^{3}தி^{4} நிரந்தரம் மாம் ।
அஸம்ஶயம் வித் ^{3}தி^{4} நிரஞ்ஜநம் மாம்
ஸ்வரூபநிர்வாணமநாமயோ Sஹம் ॥ 23 ॥

பதச்சேதம்:

அஸம்ஶயம் வித்தி நிராகுலம் மாம்
அஸம்ஶயம் வித்தி நிரந்தரம் மாம் ।
அஸம்ஶயம் வித்தி நிரஞ்ஜநம் மாம்
ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் ॥ 23॥

பத அர்த்தம்:

- அஸம்ஶயம் வித்தி நிராகுலம் மாம் - பிரம்மமாகிய நான், குழப்பத்திலிருந்து விடுபட்டவன் என்பதை உறுதியாக அறிந்து கொள்;

- அஸம்ஶயம் வித்தி நிரந்தரம் மாம் - நித்தியமானவன் என்பதை உறுதியாக அறிந்து கொள்; மாசற்றவன் என்பதை உறுதியாக அறிந்து கொள்;

- அஸம்ஶயம் வித்தி நிரஞ்ஜநம் மாம் - நித்தியமானவன் என்பதை உறுதியாக அறிந்து கொள்; மாசற்றவன் என்பதை உறுதியாக அறிந்து கொள்;

- ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் - நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

தெளிவுரை:

பிரம்மமாகிய நான், குழப்பத்திலிருந்து விடுபட்டவன் என்பதை உறுதியாக அறிந்து கொள்; நித்தியமானவன் என்பதை உறுதியாக அறிந்து கொள்; மாசற்றவன் என்பதை உறுதியாக அறிந்து கொள்; நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

த் ^{4}யாநாநி ஸர்வாணி பரித்யஜந்தி
ஶுபா^{4}ஶுப^{4}ம் கர்ம பரித்யஜந்தி ।
த்யாகா ^{3}ம்ரு 'தம் தாத பிப ^{3}ந்தி தீ^{4}ரா :
ஸ்வரூபநிர்வாணமநாமயோ Sஹம் ॥ 24 ॥

பதச்சேதம்:

த்யானானி ஸர்வாணி பரித்யஜந்தி
ஶுப அஶுபம் கர்ம பரித்யஜந்தி ।
த்யாக அம்ருதம் தாத பிபந்தி தீரா :
ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் ॥ 24॥

பத அர்த்தம்:

- த்யானானி ஸர்வாணி பரித்யஜந்தி - அன்பே! விவேகிகள் அனைத்து வகையான தியானங்களையும், கைவிடுகிறார்கள்;

- ஶுப அஶுபம் கர்ம பரித்யஜந்தி - செயல்களையும் (நல்லது அல்லது கெட்டது) கைவிடுகிறார்கள்;

- த்யாக அம்ருதம் தாத பிபந்தி தீரா : - இவ்வாறு அனைத்து செயல்களையும் விடுத்து, சுயமாகிய அமிர்தத்தை பருகுகிறார்கள்

- ஸ்வரூப நிர்வாண மனோமயோ அஹம் - நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

தெளிவுரை:

அன்பே! விவேகிகள் அனைத்து வகையான தியானங்களையும், கைவிடுகிறார்கள்; செயல்களையும் (நல்லது அல்லது கெட்டது) கைவிடுகிறார்கள்; இவ்வாறு அனைத்து செயல்களையும் விடுத்து, சுயமாகிய அமிர்தத்தை பருகுகிறார்கள்; நான் இயல்பிலேயே ஆனந்தமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன்.

விந்த ³தி விந்த ³தி ந ஹி ந ஹி யத்ர
ச²ந்தோ ³லக்ஷணம் ந ஹி ந ஹி தத்ர ।
ஸமரஸமக் ³நோ பா⁴விதபூத :
ப்ரலபதி தத்த்வம் பரமவதூ⁴த : ॥ 25 ॥

பதச்சேதம்:

விந்ததி விந்ததி ந ஹி ந ஹி யத்ர
சந்தோ லக்ஷணம் ந ஹி ந ஹி தத்ர ।
ஸமரஸ மக்னோ பாவித பூத :
ப்ரலபதி தத்த்வம் பரம் அவதூத : ॥ 25 ॥

பத அர்த்தம்:

- விந்ததி விந்ததி ந ஹி ந ஹி யத்ர - அவதூதருக்கு, அறிபவன், அறிபடும்பொருள், அறிவு போன்ற திரிபுடி அற்றவர்; எல்லையற்ற சுயத்தில் திளைத்துள்ளதால்;

- சந்தோ லக்ஷணம் ந ஹி ந ஹி தத்ர - அவருக்கு பேச்சு, செயல் போன்றவை இல்லை;

- ஸமரஸ மக்னோ பாவித பூத : - அவதூதர், தியானத்தின் மூலம் மனதை தூய்மைப்படுத்தி, எல்லையற்ற சுயத்தில் திளைத்து,

- ப்ரலபதி தத்த்வம் பரம் அவதூத : - தன்னிச்சையாக இப்பாடல்களை பாடியுள்ளார்.

தெளிவுரை:

அவதூதர், அறிபவன், அறிபடும்பொருள், அறிவு போன்ற திரிபுடி அற்றவர்; எல்லையற்ற சுயத்தில் திளைத்துள்ளதால்; அவருக்கு பேச்சு, செயல் போன்றவை இல்லை; தியானத்தின் மூலம் மனதை தூய்மைப்படுத்தி, எல்லையற்ற சுயத்தில் திளைத்து, தன்னிச்சையாக இப்பாடல்களை பாடியுள்ளார்.

||நான்காம் அத்தியாயம் முற்றிற்று||

ஐந்தாம் அத்தியாயம்

ஆத்மா எல்லா நிலைகளிலும் ஒரே மாதிரியாக இருப்பதால்,
அனைத்து புலம்பல்களையும் தவிர்க்குமாறு அவதூதர் எடுத்துரைத்தல்

அவதூதர் கூறுகிறார்:

ஓம் இதி க^{3}தி ^{3}தம் க^{3}க^{3}நஸமம் தத்
ந பராபரஸாரவிசார இதி ।
அவிலாஸவிலாஸநிராகரணம் கத^{2}
மக்ஷரபி ^{3}ந்து ^{3}ஸமுச்சரணம் ॥1॥

பதச்சேதம்:

ஓம் இதி கதிதம் ககன ஸமம் தத்
ந பராபர ஸார விசார இதி ।
அவிலாஸ விலாஸ நிராகரணம் கதம்
அக்ஷர பிந்து ஸமுச்சரணம் ॥1॥

பத அர்த்தம்:

- ஓம் இதி கதிதம் ககன ஸமம் தத் - அனைத்தையும் வியாபித்துள்ள பிரம்மம், எழுத்துக்களில் ஓம் என்று அறியப்படுகிறது என்பது கூற்று

- ந பராபர ஸார விசார இதி - ஆனால் அதன் சாராம்சத்தை உயர்ந்த அல்லது குறைந்த அறிவால் உணர இயலாது என்றும் கூறப்படுகிறது;

- அவிலாஸ விலாஸ நிராகரணம் கதம் - பிரம்மம் நாமம் மற்றும் ரூபம் அற்றது என்பது சாஸ்த்திரங்களின் கூற்றாக இருக்க

- அக்ஷர பிந்து ஸமுச்சரணம் - ஓம் என்ற எழுத்து மட்டும் பிரம்மத்தை எவ்வாறு குறிக்கும்? அல்லது அறியப்படுத்தும்?

தெளிவுரை:

அனைத்தையும் வியாபித்துள்ள பிரம்மம், எழுத்துக்களில் ஓம்[1] என்று அறியப்படுகிறது என்பது கூற்று; ஆனால் அதன் சாராம்சத்தை உயர்ந்த அல்லது குறைந்த அறிவால் உணர இயலாது என்றும் கூறப்படுகிறது; பிரம்மம் நாமம் மற்றும் ரூபம் அற்றது என்பது சாஸ்த்திரங்களின் கூற்றாக இருக்க, ஓம் என்ற எழுத்து மட்டும் பிரம்மத்தை எவ்வாறு குறிக்கும்? அல்லது அறியப்படுத்தும்?

1. **ஓம்** – சகுணப் பிரம்மத்தில், நாமம், ரூபம் என எல்லாவற்றையும் பிரம்மத்தின் மீது ஏற்றிவைத்து வழிபடலாம்; ஆனால் நிர்குணப் பிரம்மத்தில், பிரம்மத்தின் மீது ஏற்றிவைத்தல் என்ற சிந்தனைக்கே இடமில்லை. ஏனெனில் வழிபடுபவன், வழிபடுவது என்ற இருமையற்று ஒன்று மட்டுமே இருக்கிறது. ஆகையால் தான், ஓம் என்ற சொல்லும் கூட பிரம்மத்தை எப்படி குறிக்கும்? என்று அதனையும் நிராகரணம் செய்கிறார் ஸ்ரீ தத்தாத்ரேயர்.

இதி தத்த்வமஸிப்ரப்^{4}ரு ’திஶ்ருதிபி :^{4}
ப்ரதிபாதி ^{3}தமாத்மநி தத்த்வமஸி ।
த்வமுபாதி^{4}விவர்ஜிதஸர்வஸமம்கிமு
ரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 2॥

பதச்சேதம்:

இதி தத்த்வமஸி ப்ரப்ருதி ஶ்ருதிபி:
ப்ரதிபாதி தம் ஆத்மனி தத்த்வமஸி ।
த்வம் உபாதி விவர்ஜித ஸர்வ ஸமம்
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 2॥

பத அர்த்தம்:

- இதி தத்த்வமஸி ப்ரப்ருதி ஶ்ருதிபி: ப்ரதிபாதி தம் ஆத்மனி தத்த்வமஸி - உபநிடதங்கள் "நீயே அது" மற்றும் "நான் பிரம்மம்" போன்ற மகாவாக்கியங்களின் மூலம் உன்னுடைய யதார்த்த உண்மையை எடுத்து உரைக்கின்றன

- த்வம் உபாதி விவர்ஜித ஸர்வ ஸமம் - நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? உபநிடதங்கள் **நீயே அது** மற்றும் **நான் பிரம்மம்** போன்ற மகாவாக்கியங்களின் மூலம் உன்னுடைய யதார்த்த உண்மையை எடுத்து உரைக்கின்றன; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

அத^4 ஊர்த்^{4}வவிவர்ஜிதஸர்வஸமம்
ப^{3}ஹிரந்தரவர்ஜிதஸர்வஸமம் ।
யதி ^{3} சைகவிவர்ஜிதஸர்வஸமம்
கிமு ரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 3॥

பதச்சேதம்:

அத ஊர்த்வ விவர்ஜித ஸர்வ ஸமம்
பஹிர் அந்தர வர்ஜித ஸர்வ ஸமம் ।
யதி ச ஏக விவர்ஜித ஸர்வ ஸமம்
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 3॥

பத அர்த்தம்:

- அத ஊர்த்வ விவர்ஜித ஸர்வ ஸமம் - அனைத்தையும் நிறைந்துள்ள பிரம்மமாகிய நீ, உயர்வு, தாழ்வு, நடுநிலை அற்றவன்;

- பஹிர் அந்தர வர்ஜித ஸர்வ ஸமம் - உள்ளே, வெளியே, உள்வெளி அற்றவன்;

- யதி ச ஏக விவர்ஜித ஸர்வ ஸமம் - நின்னை ஒன்று, பல என்று எண்ணியல் ரீதியில் விவரிக்க இயலாது; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? அனைத்தையும் நிறைந்துள்ள பிரம்மமாகிய நீ, உயர்வு, தாழ்வு, நடுநிலை அற்றவன்; உள்ளே, வெளியே, உள்வெளி அற்றவன்; உன்னை ஒன்று, பல என்ற எண்ணியல் ரீதியில் விவரிக்க இயலாது; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

ந ஹி கல்பிதகல்பவிசார இதி
ந ஹி காரணகார்யவிசார இதி ।
பத [3]ஸந்தி[4]விவர்ஜிதஸர்வஸமம்
கிமுரோதி [3]ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 4॥

பதச்சேதம்:

ந ஹி கல்பித கல்ப விசார இதி
ந ஹி காரண கார்ய விசார இதி ।
பத ஸந்திவிவர்ஜித ஸர்வ ஸமம்
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 4॥

பத அர்த்தம்:

- ந ஹி கல்பித கல்ப விசார இதி - பரிந்துரைக்கப்பட்ட சடங்குகள் மற்றும் சடங்குகளைப் பின்பற்றுவதன் மூலம் பிரம்மத்தை உணர இயலாது

- ந ஹி காரண கார்ய விசார இதி - எதனுடைய கரணம் மற்றும் விளைவு மூலம் பிரம்மத்தின் உண்மை நிலையை ஆராய இயலாது;

- பத ஸந்திவிவர்ஜித ஸர்வ ஸமம் - எந்த ஊடுருவிய சொற்களும், இன்பம் சேர்க்கும் சொற்களுன், பிரம்மத்தின் உண்மை நிலையை ஆராய இயலாது; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? பரிந்துரைக்கப்பட்ட சடங்குகள் மற்றும் சடங்குகளைப் பின்பற்றுவதன் மூலம் பிரம்மத்தை உணர இயலாது; எந்த காரணமும் மற்றும் விளைவும், பிரம்மத்தின் உண்மை நிலையை ஆராய இயலாது; எந்த ஊடுருவிய சொற்களும், இன்பம் சேர்க்கும் சொற்களும், பிரம்மத்தின் உண்மை நிலையை ஆராய இயலாது; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

ந ஹி போ ^{3}த^{4}விபோ ^{3}த^{4}ஸமாதி^{4}ரிதி
ந ஹி தே ^{3}ஶவிதே ^{3}ஶஸமாதி^{4}ரிதி ।
ந ஹி காலவிகாலஸமாதி^{4}ரிதி
கிமு ரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 5॥

பதச்சேதம்:

ந ஹி போத விபோத ஸமாதிர் இதி
ந ஹி தேஶ விதேஶ ஸமாதிர் இதி ।
ந ஹி கால விகால ஸமாதிர் இதி
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 5॥

பத அர்த்தம்:

- ந ஹி போத விபோத ஸமாதிர் இதி - பிரம்மம் அறிவுமல்ல, அறியாமையுமல்ல, அறிவறியாமையுமல்ல;
- ந ஹி தேஶ விதேஶ ஸமாதிர் இதி - இடமல்ல, இடமற்றதுமல்ல, இடவிடமற்றதுமல்ல; காலமல்ல, காலமற்றதுமல்ல, காலகாலமற்றதுமல்ல; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.
- ந ஹி கால விகால ஸமாதிர் இதி - இடமல்ல, இடமற்றதுமல்ல, இரண்டுமல்ல; காலமல்ல, காலமற்றதுமல்ல, இரண்டுமல்ல; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? பிரம்மம் அறிவுமல்ல, அறியாமையுமல்ல, அறிவறியாமையுமல்ல; இடமல்ல, இரண்டுமல்ல, இடமிடமற்றதுமல்ல; காலமல்ல, காலமற்றதுமல்ல, இரண்டுமல்ல; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

ந ஹி கும்ப^{4}நபோ^{4} ந ஹி கும்ப^4 இதி
ந ஹி ஜீவவபுர்ந ஹி ஜீவ இதி ।
ந ஹி காரணகார்யவிபா^{4}க ^{3} இதி
கிமு ரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 6॥

பதச்சேதம்:

ந ஹி கும்ப நபோ ந ஹி கும்ப இதி
ந ஹி ஜீவ வபுர் ந ஹி ஜீவ இதி ।
ந ஹி காரண கார்ய விபாக இதி
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 6॥

பத அர்த்தம்:

- ந ஹி கும்ப நபோ ந ஹி கும்ப இதி – பிரம்மம், குடத்திலுள்ள வெளியோ அல்லது குடமோ அல்ல;
- ந ஹி ஜீவ வபுர் ந ஹி ஜீவ இதி - அது தனிப்பட்ட ஆத்மாவின் உடலோ அல்லது தனிப்பட்ட ஆத்மாவோ அல்ல;
- ந ஹி காரண கார்ய விபாக இதி - அது காரணம் மற்றும் விளைவு முதலியவற்றிற்கு அப்பாற்பட்டது;
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? பிரம்மம், குடத்திலுள்ள வெளியோ அல்லது குடமோ அல்ல; அது தனிப்பட்ட ஆத்மாவின் உடலோ அல்லது தனிப்பட்ட ஆத்மாவோ அல்ல; அது காரணம் மற்றும் விளைவு முதலியவற்றிற்கு அப்பாற்பட்டது; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

இஹ ஸர்வநிரந்தரமோக்ஷபத ^{3}ம்
லகு^{4}தீ ^{3}ர்க^{4}விசாரவிஹீந இதி ।
ந ஹி வர்துலகோணவிபா^{4}க ^{3} இதி
கிமு ரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 7॥

பதச்சேதம்:

இஹ ஸர்வ நிரந்தர மோக்ஷ பதம்
லகு தீர்க விசார விஹீன இதி ।
ந ஹி வர்துல கோண விபாக இதி
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 7॥

பத அர்த்தம்:

- இஹ ஸர்வ நிரந்தர மோக்ஷ பதம் - எங்கும் நிறைந்துள்ள பிரம்மம், அனைத்திற்கும் மேலான சுதந்திர வடிவினன்;
- லகு தீர்க விசார விஹீன இதி - குறுகிய, நீண்ட போன்ற பிரிவுகள் அற்றவன்;
- ந ஹி வர்துல கோண விபாக இதி - வட்ட, கோணப் போன்ற பிரிவுகள் அற்றவன்; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? எங்கும் நிறைந்துள்ள பிரம்மம், அனைத்திற்கும் மேலான சுதந்திர வடிவினன்; குறுகிய, நீண்ட, வட்ட, கோணப் போன்ற பிரிவுகள் அற்றவன்; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

இஹ ஶூந்யவிஶூந்யவிஹீந இதி
இஹ ஶுத் ^{3}த^{4}விஶுத் ^{3}த^{4}விஹீந இதி ।
இஹ ஸர்வவிஸர்வவிஹீந இதி
கிமு ரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 8॥

பதச்சேதம்:

இஹ ஶூன்ய விஶூன்ய விஹீன இதி
இஹ ஶுத்த விஶுத்த விஹீன இதி ।
இஹ ஸர்வ விஸர்வ விஹீன இதி
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 8॥

பத அர்த்தம்:

- இஹ ஶூன்ய விஶூன்ய விஹீன இதி - பிரம்மம் சூன்யம் அல்ல, சூன்யமற்றதும் அல்ல;
- இஹ ஶுத்த விஶுத்த விஹீன இதி - அது தூய்மையானதல்ல, தூய்மையற்றது அல்ல;
- இஹ ஸர்வ விஸர்வ விஹீன இதி - அது அனைத்துமல்ல, அனைத்துமற்றதுமல்ல; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? பிரம்மம் சூன்யம் அல்ல, சூன்யமற்றதும் அல்ல; அது தூய்மையானதல்ல, தூய்மையற்றது அல்ல; அது அனைத்துமல்ல, அனைத்துமற்றதுமல்ல; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

ந ஹி பி^{4}ந்நவிபி^{4}ந்நவிசார இதி
ப^{3}ஹிரந்தரஸந்தி^{4}விசார இதி ।
அரிமித்ரவிவர்ஜிதஸர்வஸமம்கிமு
ரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 9॥

பதச்சேதம்:

ந ஹி பின்ன விபின்ன விசார இதி
பஹிர் அந்தர ஸந்தி விசார இதி ।
அரிமித்ர விவர்ஜித ஸர்வ ஸமம்
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 9॥

பத அர்த்தம்:

- ந ஹி பின்ன விபின்ன விசார இதி - பிரம்மம் பிரிக்கப்பட்டதுமல்ல, பிரிக்கப்படாததுமல்ல;
- பஹிர் அந்தர ஸந்தி விசார இதி - வெளியே அல்ல, உள்ளே அல்ல, உள்வெளி அல்ல;
- அரிமித்ர விவர்ஜித ஸர்வ ஸமம் - எதிரி அல்ல, நண்பன் அல்ல, இரண்டற்றதுமல்ல; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? பிரம்மம் பிரிக்கப்பட்டதுமல்ல, பிரிக்கப்படாததுமல்ல; வெளியே அல்ல, உள்ளே அல்ல, உள்வெளி அல்ல; எதிரி அல்ல, நண்பன் அல்ல, இரண்டற்றதுமல்ல; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

ந ஹி ஶிஷ்யவிஶிஷ்யஸ்வரூப இதி
ந சராசரபே⁴த ³விசார இதி ।
இஹ ஸர்வநிரந்தரமோக்ஷபத ³ம்
கிமு ரோதி ³ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 10 ॥

பதச்சேதம்:

ந ஹி ஶிஷ்ய விஶிஷ்ய ஸ்வரூப இதி
ந சர அசர பேத விசார இதி ।
இஹ ஸர்வ நிரந்தர மோக்ஷ பதம்
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 10॥

பத அர்த்தம்:

- ந ஹி ஶிஷ்ய விஶிஷ்ய ஸ்வரூப இதி - பிரம்மத்தில் சீடனாக இருப்பவன், சீடன் இல்லாதவன் என்ற வேறுபாடு இல்லை;
- ந சர அசர பேத விசார இதி - அசைவது மற்றும் அசையாதது போன்ற வேறுபாடு இல்லை;
- இஹ ஸர்வ நிரந்தர மோக்ஷ பதம் - எங்கும் நிறைந்துள்ள பிரம்மம், அனைத்திற்கும் மேலான சுதந்திர வடிவினன்; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? பிரம்மத்தில் சீடனாக இருப்பவன், சீடன் இல்லாதவன் என்ற வேறுபாடு இல்லை; அசைவது மற்றும் அசையாதது போன்ற வேறுபாடு இல்லை; எங்கும் நிறைந்துள்ள பிரம்மம், அனைத்திற்கும் மேலான சுதந்திர வடிவினன்; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

நநு ரூபவிரூபவிஹீந இதி
நநு பி⁴ந்நவிபி⁴ந்நவிஹீந இதி ।
நநு ஸர்க ³விஸர்க ³விஹீந இதி
கிமு ரோதி ³ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 11 ॥

பதச்சேதம்:

நனு ரூப விரூப விஹீன இதி
நனு பின்ன விபின்ன விஹீன இதி |
நனு ஸர்க விஸர்க விஹீன இதி
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 11॥

பத அர்த்தம்:

- நனு ரூப விரூப விஹீன இதி - பிரம்மம் உருவமுடையதல்ல, உருவமற்றதல்ல
- நனு பின்ன விபின்ன விஹீன இதி - எதிலிருந்தும் பிரிந்தும் அல்ல, பிரியப்படாததும் அல்ல
- நனு ஸர்க விஸர்க விஹீன இதி - படைப்பு மற்றும் அழிவிலிருந்து விடுபட்டது; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? பிரம்மம் உருவமுடையதல்ல, உருவமற்றதல்ல; எதிலிருந்தும் பிரிந்தும் அல்ல, பிரியப்படாததும் அல்ல; படைப்பு மற்றும் அழிவிலிருந்து விடுபட்டது; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

ந கு^{3}ணாகு ^{3}ணபாஶநிப ^{3}ந்த^{4} இதி
ம்ரு ’தஜீவநகர்ம கரோமி கத ^{2}ம் ।
இதி ஶுத் ^{3}த^{4}நிரஞ்ஜநஸர்வஸமம்
கிமு ரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 12 ॥

பதச்சேதம்:

ந குண அகுண பாஶ நிபந்த இதி
ம்ருத ஜீவன கர்ம கரோமி கதம் ।
இதி ஶுத்த நிரஞ்ஜன ஸர்வ ஸமம்
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 12॥

பத அர்த்தம்:

- ந குண அகுண பாஶ நிபந்த இதி - நான் நல்லது, கெட்டது போன்ற குணங்களின் பிணைப்புகளால் பிணைக்கப்பட்டவன் அல்லன்
- ம்ருத ஜீவன கர்ம கரோமி கதம் - உடல் மற்றும் மனதின் பி(இ)றப்பு செயல்களில் எவ்வாறு ஈடுபட முடியும்?
- இதி ஶுத்த நிரஞ்ஜன ஸர்வ ஸமம் - நான் தூய்மையான, மோகமற்ற, எல்லாவற்றிலும் வியாபித்திருக்கும் உண்மை
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? நான் நல்லது, கெட்டது போன்ற குணங்களின் பிணைப்புகளால் பிணைக்கப்பட்டவன் அல்லன்; உடல் மற்றும் மனதின் பி(இ)றப்பு செயல்களில் எவ்வாறு ஈடுபட முடியும்? நான் தூய்மையான, மோகமற்ற, எல்லாவற்றிலும் வியாபித்திருக்கும் உண்மை; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

இஹ பா^{4}வவிபா^{4}வவிஹீந இதி
இஹ காமவிகாமவிஹீந இதி ।
இஹ போ ^{3}த^{4}தமம் க^{2}லு மோக்ஷஸமம்
கிமு ரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 13 ॥

பதச்சேதம்:

இஹ பாவ விபாவ விஹீன இதி
இஹ காம விகாம விஹீன இதி ।
இஹ போத தமம் கலு மோக்ஷ ஸமம்
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 13॥

பத அர்த்தம்:

- இஹ பாவ விபாவ விஹீன இதி - பிரம்மமானது உணர்ச்சி வயப்படாது, உற்சாகம் அடையாது
- இஹ காம விகாம விஹீன இதி - ஆசையற்றது, விருப்பமின்மையற்றது
- இஹ போத தமம் கலு மோக்ஷ ஸமம் - இந்த உயர்ந்த உணர்வு எல்லாவற்றிலிருந்தும் விடுதலை அடைந்தது
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? பிரம்மமானது உணர்ச்சி வயப்படாது, உற்சாகம் அடையாது; ஆசையற்றது, விருப்பமின்மையற்றது; இந்த உயர்ந்த உணர்வு எல்லாவற்றிலிருந்தும் விடுதலை அடைந்தது; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

இஹ தத்த்வநிரந்தரதத்த்வமிதி
ந ஹி ஸந்தி^{4}விஸந்தி^{4}விஹீந இதி ।
யதி ^{3} ஸர்வவிவர்ஜிதஸர்வஸமம்
கிமு ரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 14 ॥

பதச்சேதம்:

இஹ தத்த்வ நிரந்தர தத்த்வம் இதி
ந ஹி ஸந்தி விஸந்தி விஹீன இதி ।
யதி ஸர்வ விவர்ஜித ஸர்வ ஸமம்
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 14॥

பத அர்த்தம்:

- இஹ தத்த்வ நிரந்தர தத்த்வம் இதி - பிரம்மத்தின் இயல்பு நித்திய உண்மை
- ந ஹி ஸந்தி விஸந்தி விஹீன இதி - அதற்கு இணைவோ பிரிவோ இல்லை
- யதி ஸர்வ விவர்ஜித ஸர்வ ஸமம் - அது எல்லாவற்றிலிருந்தும் அப்பாற்பட்டது என்றாலும், அது அனைத்தையும் சமமாக வியாபிக்கிறது
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? பிரம்மத்தின் இயல்பு நித்திய உண்மை; அதற்கு இணைவோ பிரிவோ இல்லை; அது எல்லாவற்றிலிருந்தும் அப்பாற்பட்டது என்றாலும், அது அனைத்தையும் சமமாக வியாபிக்கிறது; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

அநிகேதகுடீ பரிவாரஸமம்
இஹஸங்க ^{3}விஸங்க ^{3}விஹீநபரம் ।
இஹ போ ^{3}த^{4}விபோ ^{3}த^{4}விஹீநபரம்
கிமு ரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 15 ॥

பதச்சேதம்:

அநிகேத குடீ பரிவார ஸமம்
இஹ ஸங்க விஸங்க விஹீன பரம் ।
இஹ போத விபோத விஹீன பரம்
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 15॥

பத அர்த்தம்:

- அநிகேத குடீ பரிவார ஸமம் - பிரம்மமானது ஆகாயம், வீடு மற்றும் உயிர்களிடத்தில் சமமாக இருக்கிறது
- இஹ ஸங்க விஸங்க விஹீன பரம் - உயர்ந்த யதார்த்தத்திற்கு பற்றுதல், பற்றின்மை, இல்லை
- இஹ போத விபோத விஹீன பரம் - உயர்ந்த யதார்த்தத்திற்கு அறிவு, அறியாமை இல்லை
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? பிரம்மமானது ஆகாயம், வீடு மற்றும் உயிர்களிடத்தில் சமமாக இருக்கிறது; உயர்ந்த யதார்த்தத்திற்கு பற்றுதல், பற்றின்மை, அறிவு, அறியாமை போன்ற எதுவும் இல்லை; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

அவிகாரவிகாரமஸத்யமிதி
அவிலக்ஷவிலக்ஷமஸத்யமிதி ।
யதி ^{3} கேவலமாத்மநி ஸத்யமிதி
கிமு ரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 16 ॥

பதச்சேதம்:

அவிகார விகாரம் அஸத்யம் இதி
அவிலக்ஷ விலக்ஷம் அஸத்யம் இதி ।
யதி கேவலம் ஆத்மனி ஸத்யம் இதி
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 16॥

பத அர்த்தம்:

- அவிகார விகாரம் அஸத்யம் இதி - இப்பிரபஞ்சமானது மாறாத பிரம்மத்தில் மாறிகொண்டே இருக்கிறது, ஆகையால் அது உண்மையல்ல
- அவிலக்ஷ விலக்ஷம் அஸத்யம் இதி - புலன் மற்றும் அந்தக்கரணங்களுக்கு எட்டாத பிரம்மத்தில், அனைத்து நிகழ்வுகளும் ஏற்றிவைக்கப்பட்டுள்ளது, ஆகையால் அது உண்மையல்ல
- யதி கேவலம் ஆத்மனி ஸத்யம் இதி - யதார்த்தத்தில் ஆத்மா மட்டுமே உண்மை
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? இப்பிரபஞ்சமானது மாறாத பிரம்மத்தில் மாறிகொண்டே இருக்கிறது, ஆகையால் அது உண்மையல்ல; புலன் மற்றும் அந்தக்கரணங்களுக்கு எட்டாத பிரம்மத்தில், அனைத்து நிகழ்வுகளும் ஏற்றிவைக்கப்பட்டுள்ளது, ஆகையால் அது உண்மையல்ல; யதார்த்தத்தில் ஆத்மா மட்டுமே உண்மை; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

இஹ ஸர்வஸமம் க^{2}லு ஜீவ இதி
இஹ ஸர்வநிரந்தரஜீவ இதி ।
இஹ கேவலநிஶ்சலஜீவ இதி
கிமு ரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 17 ॥

பதச்சேதம்:

இஹ ஸர்வ ஸமம் கலு ஜீவ இதி
இஹ ஸர்வ நிரந்தர ஜீவ இதி ।
இஹ கேவல நிஶ்சல ஜீவ இதி
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 17॥

பத அர்த்தம்:

- இஹ ஸர்வ ஸமம் கலு ஜீவ இதி - உண்மையில் பிரம்மமும் ஜீவனும் ஒன்றே
- இஹ ஸர்வ நிரந்தர ஜீவ இதி - அது எல்லா உயிர்களிலும் எப்பொழுதும் இருக்கிறது
- இஹ கேவல நிஶ்சல ஜீவ இதி - அசையாப் பொருட்களிலும் சமமாக இருக்கிறது
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? உண்மையில் பிரம்மமும் ஜீவனும் ஒன்றே; அது எல்லா உயிர்களிலும் எப்பொழுதும் இருக்கிறது; அசையாப் பொருட்களிலும் சமமாக இருக்கிறது; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

அவிவேகவிவேகமபோ ^{3}த^{4} இதி
அவிகல்பவிகல்பமபோ ^{3}த^{4} இதி ।
யதி ^{3} சைகநிரந்தரபோ ^{3}த^{4} இதி
கிமு ரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 18 ॥

பதச்சேதம்:

அவிவேக விவேகம் அபோத இதி
அவிகல்ப விகல்பம் அபோத இதி ।
யதி ச ஏக நிரந்தர போத இதி
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 18॥

பத அர்த்தம்:

- அவிவேக விவேகம் அபோத இதி - எண்ணத்திற்கு அப்பாற்பட்ட பிரம்மத்தைப் எண்ணுவது சுத்த அறியாமை
- அவிகல்ப விகல்பம் அபோத இதி - ஒற்றுமையில் பலவற்றை காண்பது சுத்த அறியாமை
- யதி ச ஏக நிரந்தர போத இதி - பிரம்மம் உண்மையில் தடையற்ற உணர்வு;
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? எண்ணத்திற்கு அப்பாற்பட்ட பிரம்மத்தைப் எண்ணுவது சுத்த அறியாமை; ஒற்றுமையில் பலவற்றை காண்பது சுத்த அறியாமை; பிரம்மம் உண்மையில் தடையற்ற உணர்வு; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

ந ஹி மோக்ஷபத ^{3}ம் ந ஹி ப^{3}ந்த^{4}பத ^{3}ம்
ந ஹி புண்யபத ^{3}ம் ந ஹி பாபபத ^{3}ம் ।
ந ஹி பூர்ணபத ^{3}ம் ந ஹி ரிக்தபத ^{3}ம்
கிமு ரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 19 ॥

பதச்சேதம்:

ந ஹி மோக்ஷ பதம் ந ஹி பந்த பதம்
ந ஹி புண்ய பதம் ந ஹி பாப பதம் ।
ந ஹி பூர்ண பதம் ந ஹி ரிக்த பதம்
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 19॥

பத அர்த்தம்:

- ந ஹி மோக்ஷ பதம் ந ஹி பந்த பதம் - பிரம்மத்திற்கு சுதந்திரம் அல்ல அடிமை நிலை அல்ல
- ந ஹி புண்ய பதம் ந ஹி பாப பதம் – நல்லது அல்ல கெட்டது அல்ல
- ந ஹி பூர்ண பதம் ந ஹி ரிக்த பதம் – முழுமை அல்ல வெறுமை அல்ல
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? பிரம்மத்திற்கு சுதந்திரம் அல்ல அடிமை நிலை அல்ல; நல்லது அல்ல, கெட்டது அல்ல; முழுமை அல்ல, வெறுமை அல்ல; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

யதி ^{3} வர்ணவிவர்ணவிஹீநஸமம்
யதி ^{3} காரணகார்யவிஹீநஸமம் ।
யதி ^{3}பே^{4}த ^{3}விபே^{4}த ^{3}விஹீநஸமம்
கிமு ரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 20 ॥

பதச்சேதம்:

யதி வர்ண விவர்ண விஹீன ஸமம்
யதி காரண கார்ய விஹீன ஸமம் ।
யதி பேத விபேத விஹீன ஸமம்
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 20॥

பத அர்த்தம்:

- யதி வர்ண விவர்ண விஹீன ஸமம் - எங்கும் நிறைந்த பிரம்மம் சாதி மற்றும் புறக்கணிப்பு அற்றது
- யதி காரண கார்ய விஹீன ஸமம் - காரணம் மற்றும் விளைவு அற்றது
- யதி பேத விபேத விஹீன ஸமம் - ஒற்றுமை மற்றும் பன்முகத்தன்மை ஆகியவற்றிலிருந்து விடுபட்டது
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? எங்கும் நிறைந்த பிரம்மம் சாதி மற்றும் புறக்கணிப்பு அற்றது; காரணம் மற்றும் விளைவு அற்றது; ஒற்றுமை மற்றும் பன்முகத்தன்மை ஆகியவற்றிலிருந்து விடுபட்டது; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

இஹ ஸர்வநிரந்தரஸர்வசிதே
இஹ கேவலநிஶ்சலஸர்வசிதே ।
த்^{3}விபதா ^{3}தி ^{3}விவர்ஜிதஸர்வசிதே
கிமு ரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 21 ॥

பதச்சேதம்:

இஹ ஸர்வ நிரந்தர ஸர்வ சிதே
இஹ கேவல நிஶ்சல ஸர்வ சிதே ।
த்விபதாதி விவர்ஜித ஸர்வ சிதே
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 21॥

பத அர்த்தம்:

- இஹ ஸர்வ நிரந்தர ஸர்வ சிதே - பிரம்மம் முழு உணர்வு
- இஹ கேவல நிஶ்சல ஸர்வ சிதே - அனைத்து உயிரினங்கள் மற்றும் உலகின் அசைவற்ற பொருட்கள் என அனைத்திலும் நிறைந்துள்ளது
- த்விபதாதி விவர்ஜித ஸர்வ சிதே - மனிதர்கள் மற்றும் பிற உயிரினங்கள் என எல்லாவற்றிலும் தானே பிரகாசிக்கிறது
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? பிரம்மம் முழு உணர்வு; அனைத்து உயிரினங்கள் மற்றும் உலகின் அசைவற்ற பொருட்கள் என அனைத்திலும் நிறைந்துள்ளது;

மனிதர்கள் மற்றும் பிற உயிரினங்கள் என எல்லாவற்றிலும் தானே பிரகாசிக்கிறது; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

அதிஸர்வநிரந்தரஸர்வக ^{3}தம்
அதிநிர்மலநிஶ்சலஸர்வக^{3}தம் ।
தி ^{3}நராத்ரிவிவர்ஜிதஸர்வக ^{3}தம்
கிமு ரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 22 ॥

பதச்சேதம்:

அதிஸர்வ நிரந்தர ஸர்வ கதம்
அதி நிர்மல நிஶ்சல ஸர்வ கதம் ।
தின ராத்ரி விவர்ஜித ஸர்வ கதம்
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 22 ॥

பத அர்த்தம்:

- அதிஸர்வ நிரந்தர ஸர்வ கதம் - எங்கும் நிறைந்திருக்கும் பிரம்மம் அனைத்திற்கும் அப்பாற்பட்டது மற்றும் அனைத்திலும் சமமாக வியாபித்துள்ளது
- அதி நிர்மல நிஶ்சல ஸர்வ கதம் - தூய்மையானது மற்றும் அமைதியானது
- தின ராத்ரி விவர்ஜித ஸர்வ கதம் - இரவு பகல் அற்றது
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? எங்கும் நிறைந்திருக்கும் பிரம்மம் அனைத்திற்கும் அப்பாற்பட்டது மற்றும் அனைத்திலும் சமமாக வியாபித்துள்ளது; தூய்மையானது மற்றும் அமைதியானது; இரவு பகல் அற்றது; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

ந ஹி ப^{3}ந்த^{4}விப ^{3}ந்த^{4}ஸமாக ^{3}மநம்
ந ஹி யோக ^{3}வியோக ^{3}ஸமாக ^{3}மநம் ।
ந ஹி தர்கவிதர்கஸமாக ^{3}மநம்
கிமு ரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 23 ॥

பதச்சேதம்:

ந ஹி பந்த விப ந்த ஸம ஆகமனம்
ந ஹி யோக வியோக ஸம ஆகமனம் ।
ந ஹி தர்க விதர்க ஸம ஆகமனம்
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 23 ॥

பத அர்த்தம்:

- ந ஹி பந்த விப ந்த ஸம ஆகமனம் - பிரம்மம் அடிமைத்தனம் அற்றது, சுதந்திரம் அற்றது
- ந ஹி யோக வியோக ஸம ஆகமனம் - ஒற்றுமை அற்றது, பிரித்தல் அற்றது
- ந ஹி தர்க விதர்க ஸம ஆகமனம் - பகுத்தறிவு அற்றது, அனுமானம் அற்றது;
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? பிரம்மம் அடிமைத்தனம் அற்றது, சுதந்திரம் அற்றது; ஒற்றுமை அற்றது, பிரித்தல் அற்றது; பகுத்தறிவு அற்றது, அனுமானம் அற்றது; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

இஹ காலவிகாலநிராகரணம்
அணுமாத்ரக்ரு 'ஶானுநிராகரணம் ।
ந ஹி கேவலஸத்யநிராகரணம்
கிமு ரோதி ³ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 24 ॥

பதச்சேதம்:

இஹ கால விகால நிராகரணம்
அணுமாத்ர க்ருஸானு நிராகரணம் ।
ந ஹி கேவல ஸத்ய நிராகரணம்
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 24॥

பத அர்த்தம்:

- இஹ கால விகால நிராகரணம் - பிரம்மத்தில், நேரமில்லை, கா(மா)லை போன்ற பிரிவிகளில்லை
- அணுமாத்ர க்ருஸானு நிராகரணம் - அணு, நெருப்பு, காற்று போன்ற கூறுகளில்லை
- ந ஹி கேவல ஸத்ய நிராகரணம் - யதார்த்தத்தை மறுப்பதற்கு எதுவுமில்லை
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? பிரம்மத்தில், நேரமில்லை, கா(மா)லை போன்ற பிரிவிகளில்லை; அணு, நெருப்பு, காற்று போன்ற கூறுகளில்லை; யதார்த்தத்தை மறுப்பதற்கு எதுவுமில்லை; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

இஹ தே ^{3}ஹவிதே ^{3}ஹவிஹீந இதி
நநு ஸ்வப்நஸுஷுப்திவிஹீநபரம் ।
அபி^{4}தா^{4}நவிதா^{4}நவிஹீநபரம்
கிமுரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 25 ॥

பதச்சேதம்:

இஹ தேஹ விதேஹ விஹீன இதி
நனு ஸ்வப்ன ஸுஷுப்தி விஹீன பரம் ।
அபிதான விதான விஹீன பரம்
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 25॥

பத அர்த்தம்:

- இஹ தேஹ விதேஹ விஹீன இதி - பிரம்மம் உடலுடையதல்ல; உடலற்றதல்ல;
- நனு ஸ்வப்ன ஸுஷுப்தி விஹீன பரம் - விழிப்பு, கனவு மற்றும் உறக்கம் போன்ற நிலைகள் அற்றது
- அபிதான விதான விஹீன பரம் - பெயர், வடிவம் மற்றும் விதிகளுக்கு அப்பாற்பட்டது
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? பிரம்மம் உடலுடையதல்ல; உடலற்றதல்ல; விழிப்பு, கனவு மற்றும் உறக்கம் போன்ற நிலைகள் அற்றது; பெயர், வடிவம் மற்றும் விதிகளுக்கு அப்பாற்பட்டது; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

க^{3}க^{3}நோபமஶுத் ^{3}த^{4}விஶாலஸமம்
அதிஸர்வவிவர்ஜிதஸர்வஸமம்।
க^{3}தஸாரவிஸாரவிகாரஸமம்
கிமுரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 26 ॥

பதச்சேதம்:

ககனோபம ஶுத்த விஶால ஸமம்
அதிஸர்வ விவர்ஜித ஸர்வ ஸமம்।
கதஸார விஸார விகார ஸமம்
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 26॥

பத அர்த்தம்:

- ககனோபம ஶுத்த விஶால ஸமம் - பிரம்மம், ஆகாயம் போன்று பரந்து விரிந்து அனைத்திலும் களங்கமற்று நிறைந்து இருக்கிறது
- அதிஸர்வ விவர்ஜித ஸர்வ ஸமம்- அது அனைத்தையும் கடந்தும், ஊடுருவி இருக்கிறது

- கதஸார விஸார விகார ஸமம் - அது இன்றியமையாததிலும், அத்தியாவசியமற்றிலும், மாற்றியமைப்பிலும் இருக்கிறது

- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? பிரம்மம், ஆகாயம் போன்று பரந்து விரிந்து அனைத்திலும் களங்கமற்று நிறைந்து இருக்கிறது; அது அனைத்தையும் கடந்தும், ஊடுருவி இருக்கிறது; அது இன்றியமையாததிலும், அத்தியாவசியமற்றிலும், மாற்றியமைப்பிலும் இருக்கிறது; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

இஹ த^{4}ர்மவித^{4}ர்மவிராக ^{3}தர -
மிஹ வஸ்துவிவஸ்துவிராக ^{3}தரம் ।
இஹ காமவிகாமவிராக ^{3}தரம்
கிமு ரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 27 ॥

பதச்சேதம்:

இஹ தர்ம விதர்ம விராக தரம்
இஹ வஸ்து விவஸ்து விராக தரம் ।
இஹ காம விகாம விராக தரம்
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 27॥

பத அர்த்தம்:

- இஹ தர்ம விதர்ம விராக தரம் - பிரம்மம் அறம், அறமற்ற சிந்தனைகள் அற்றது

- இஹ வஸ்து விவஸ்து விராக தரம் - செல்வந்தன், ஏழ்மையானவன் போன்ற சிந்தனைகள் அற்றது

- இஹ காம விகாம விராக தரம் - பேரார்வம், நாட்டம் அற்றது

- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? பிரம்மம் அறம், அறமற்ற சிந்தனைகள் அற்றது; செல்வந்தன், ஏழ்மையானவன் போன்ற சிந்தனைகள் அற்றது; பேரார்வம், நாட்டம் அற்றது; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

ஸுக ^{2}து:^{3} க^{2}விவர்ஜிதஸர்வஸம -
மிஹ ஶோகவிஶோகவிஹீநபரம் ।
கு^{3}ருஶிஷ்யவிவர்ஜிததத்த்வபரம்
கிமுரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 28 ॥

பதச்சேதம்:

ஸுக துக்க விவர்ஜித ஸர்வ ஸமம்
இஹ ஶோக விஶோக விஹீன பரம் ।
குரு ஶிஷ்ய விவர்ஜித தத்த்வ பரம்
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 28॥

பத அர்த்தம்:

- ஸுக துக்க விவர்ஜித ஸர்வ ஸமம் - எங்கும் எல்லாவற்றிலும் வியாபித்துள்ள பிரம்மம், இ(து)ன்பம் அற்றது
- இஹ ஶோக விஶோக விஹீன பரம் - துக்கம், மகிழ்ச்சி அற்றது
- குரு ஶிஷ்ய விவர்ஜித தத்த்வ பரம் - உன்னத யதார்த்தத்தில் குருவும் அல்ல, சீடனும் அல்ல
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? எங்கும் எல்லாவற்றிலும் வியாபித்துள்ள பிரம்மம், இ(து)ன்பம் அற்றது; துக்கம், மகிழ்ச்சி அற்றது; உன்னத யதார்த்தத்தில் குருவும் அல்ல, சீடனும் அல்ல; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

ந கிலாங்குரஸாரவிஸார இதி
ந சலாசலஸாம்யவிஸாம்யமிதி ।
அவிசாரவிசாரவிஹீநமிதி
கிமுரோதி ³ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 29 ॥

பதச்சேதம்:

ந கிலாங்குர ஸார விஸார இதி
ந சல அசல ஸாம்ய விஸாம்யம் இதி ।
அவிசார விசார விஹீனம் இதி
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 29॥

பத அர்த்தம்:

- ந கிலாங்குர ஸார விஸார இதி - பிரம்மத்தில், காம விளையாட்டு, சந்ததி இல்லை, வலிமை இல்லை, பலவீனம் இல்லை
- ந சல அசல ஸாம்ய விஸாம்யம் இதி - அசைவு இல்லை, அசைவின்மை இல்லை, சமத்துவம் இல்லை, சமத்துவமின்மை இல்லை
- அவிசார விசார விஹீனம் இதி - பகுத்தறிவு இல்லை, பகுத்தறிவின்மை இல்லை
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? பிரம்மத்தில், காம விளையாட்டு இல்லை, சந்ததி இல்லை, வலிமை இல்லை, பலவீனம் இல்லை; அசைவு இல்லை, அசைவின்மை இல்லை; சமத்துவம் இல்லை, சமத்துவமின்மை இல்லை; பகுத்தறிவு இல்லை, பகுத்தறிவின்மை இல்லை; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

இஹ ஸாரஸமுச்சயஸாரமிதி
கதி ^{2}தம் நிஜபா^{4}வவிபே^{4}த ^{3} இதி ।
விஷயே கரணத்வமஸத்யமிதி
கிமு ரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 30 ॥

பதச்சேதம்:

இஹ ஸார ஸமுச்சய ஸாரம் இதி
கதி தம் நிஜபாவ விபேத இதி ।
விஷயே கரணத்வம் அஸத்யம் இதி
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 30॥

பத அர்த்தம்:

- இஹ ஸார ஸமுச்சய ஸாரம் இதி - பிரம்மம் அனைத்து சாரங்களின் சாரமாகும்
- கதி தம் நிஜபாவ விபேத இதி - அது பண்புகளுக்கு வேறானது
- விஷயே கரணத்வம் அஸத்யம் இதி - விவேகமான நிகழ்வில் அனைத்து செயல்களும் உண்மையற்றது
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? பிரம்மம் அனைத்து சாரங்களின் சாரமாகும்; அது பண்புகளுக்கு வேறானது; விவேகமான நிகழ்வில் அனைத்து செயல்களும் உண்மையற்றது; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

ப^{3}ஹுதா^{4} ஶ்ருதய : ப்ரவத ^{3}ந்தி யதோ
வியதா ^{3}தி ^{3}ரித ^{3}ம் ம்ரு ’க^{3}தோயஸமம் ।
யதி ^{3} சைகநிரந்தரஸர்வஸமம்
கிமு ரோதி ^{3}ஷி மாநஸி ஸர்வஸமம் ॥ 31 ॥

பதச்சேதம்:

பஹுதா ஶ்ருதய: ப்ரவதந்தி யதோ
வியதாதி ரிதம் ம்ருகதோய ஸமம் ।
யதி ச ஏகா நிரந்தர ஸர்வ ஸமம்
கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் ॥ 31॥

பத அர்த்தம்:

- பஹுதா ஶ்ருதய: ப்ரவதந்தி யதோ - பல்வேறு வழிகளில் உபநிடதங்கள் (சாஸ்த்திரங்கள்)
- வியதாதி ரிதம் ம்ருகதோய ஸமம் - வெளிப்பட்ட இப்பிரபஞ்சமானது, கானல் நீருக்கு ஒப்பானது என்று அறிவிக்கின்றன
- யதி ச ஏகா நிரந்தர ஸர்வ ஸமம் - உண்மையில் பிரம்மம் மட்டுமே எல்லாவற்றிலும் சமமாக இருக்கிறது
- கிமு ரோதிஷி மானஸி ஸர்வ ஸமம் - மனமே, நீ ஏன் அழுகிறாய்?

தெளிவுரை:

மனமே! நீ ஏன் அழுகிறாய்? பல்வேறு வழிகளில் உபநிடதங்கள் (சாஸ்த்திரங்கள்) வெளிப்பட்ட இப்பிரபஞ்சமானது, கானல் நீருக்கு ஒப்பானது என்று அறிவிக்கின்றன; உண்மையில் பிரம்மம் மட்டுமே எல்லாவற்றிலும் சமமாக இருக்கிறது; நீ அனைத்தையும் நிறைந்(த்)துள்ள, பண்புகளற்ற பிரம்மம்.

விந்த ^{3}தி விந்த ^{3}தி ந ஹி ந ஹி யத்ர
ச^{2}ந்தோ ^{3}லக்ஷணம் ந ஹி ந ஹி தத்ர ।
ஸமரஸமக் ^{3}நோ பா^{4}விதபூத :
ப்ரலபதி தத்த்வம் பரமவதூ^{4}த : ॥ 32 ॥

பதச்சேதம்:

விந்ததி விந்ததி ந ஹி ந ஹி யத்ர
சந்தோ லக்ஷணம் ந ஹி ந ஹி தத்ர ।
ஸமரஸ மக்னோ பாவித பூத :
ப்ரலபதி தத்த்வம் பரம் அவதூத : ॥ 32 ॥

பத அர்த்தம்:

- விந்ததி விந்ததி ந ஹி ந ஹி யத்ர - அவதூதருக்கு, அறிபவன், அறிபடும்பொருள், அறிவு போன்ற திரிபுடி அற்றவர்; எல்லையற்ற சுயத்தில் திளைத்துள்ளதால்;
- சந்தோ லக்ஷணம் ந ஹி ந ஹி தத்ர - அவருக்கு பேச்சு, செயல் போன்றவை இல்லை;
- ஸமரஸ மக்னோ பாவித பூத : - அவதூதர், தியானத்தின் மூலம் மனதை தூய்மைப்படுத்தி, எல்லையற்ற சுயத்தில் திளைத்து,
- ப்ரலபதி தத்த்வம் பரம் அவதூத : - தன்னிச்சையாக இப்பாடல்களை பாடியுள்ளார்.

தெளிவுரை:

அவதூதர், அறிபவன், அறிபடும்பொருள், அறிவு போன்ற திரிபுடி அற்றவர்; எல்லையற்ற சுயத்தில் திளைத்துள்ளதால்; அவருக்கு பேச்சு, செயல் போன்றவை இல்லை; தியானத்தின் மூலம் மனதை தூய்மைப்படுத்தி, எல்லையற்ற சுயத்தில் திளைத்து, தன்னிச்சையாக இப்பாடல்களை பாடியுள்ளார்.

||ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று||

ஆறாம் அத்தியாயம்

ஆத்மாவிற்கு சாதி, குடும்பம், புலன்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள், அந்தக்கரணங்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள் போன்றவை எதுவும் இல்லை என்று அவதூதர் எடுத்துரைத்தல்

அவதூதர் கூறுகிறார்:

ப^{3}ஹூதா^{4} ஶ்ருதய : ப்ரவத ^{3}ந்தி வயம்
வியதா ^{3}தி ^{3}ரித ^{3}ம் ம்ரு ’க^{3}தோயஸமம் ।
யதி ^{3} சைகநிரந்தரஸர்வஶிவ -
முபமேயமதோ ^{2}ஹ்யுபமா ச கத ^{2}ம் ॥ 1॥

பதச்சேதம்:

பஹூதா ஶ்ருதய: ப்ரவதந்தி வயம்
வியதாதி ரிதம் ம்ருகதோய ஸமம் ।
யதி ச ஏக நிரந்தர ஸர்வஶிவம்-
உபமேயம் அதோஹி உபமா ச கதம் ॥ 1॥

பத அர்த்தம்:

- பஹூதா ஶ்ருதய: ப்ரவதந்தி வயம் வியதாதி ரிதம் ம்ருகதோய ஸமம் - இப்பிரபஞ்ச தோற்றம் (விண்வெளி, பூமி, பால்வளி மண்டலங்கள், மற்றும் பல) கானல் நீருக்கு ஒப்பானது என்று உபநிடதங்கள் பல வழிகளில் எடுத்திரைக்கின்றன
- யதி ச ஏக நிரந்தர ஸர்வஶிவம் - பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை
- உபமேயம் அதோஹி உபமா ச கதம் - அப்படியிருக்க, ஒப்பிட்டுப் பார்க்கும் பொருளாக பிரம்மம் எப்படி இருக்க முடியும்?

தெளிவுரை:

இப்பிரபஞ்ச தோற்றம் (விண்வெளி, பூமி, பால்வளி மண்டலங்கள், மற்றும் பல) கானல் நீருக்கு ஒப்பானது என்று உபநிடதங்கள் பல வழிகளில் எடுத்துரைக்கின்றன; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க, ஒப்பிட்டுப் பார்க்கும் பொருளாக பிரம்மம் எப்படி இருக்க முடியும்?

அவிப^{4}க்திவிப^{4}க்திவிஹீநபரம்நநு
கார்யவிகார்யவிஹீநபரம் ।
யதி ^{3} சைகநிரந்தரஸர்வஶிவம்
யஜநம் ச கத ^{2}ம் தபநம் ச கத ^{2}ம் ॥ 2॥

பதச்சேதம்:

அவிபக்தி விபக்தி விஹீனபரம் நனு
கார்ய விகார்ய விஹீன பரம் ।
யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம்
யஜனம் ச கதம் தபனம் ச கதம் ॥ 2॥

பத அர்த்தம்:

- அவிபக்தி விபக்தி விஹீனபரம் நனு - பிரம்மம் பிளவுபடவில்லை, பிரிக்கப்படவில்லை
- கார்ய விகார்ய விஹீன பரம் - செயல் அற்றது, மாற்றம் அற்றது
- யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம் - பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை
- யஜனம் ச கதம் தபனம் ச கதம் - அப்படியிருக்க, வழிபாடு மற்றும் துறவறம் என்பது எப்படி சாத்தியம்?

தெளிவுரை:

பிரம்மம் பிளவுபடவில்லை, பிரிக்கப்படவில்லை; செயல் அற்றது, மாற்றம் அற்றது; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க, வழிபாடு மற்றும் துறவறம் என்பது எப்படி சாத்தியம்?

மந ஏவ நிரந்தரஸர்வக ^{3}தம்ஹ்
யவிஶாலவிஶாலவிஹீநபரம்।
மந ஏவ நிரந்தரஸர்வஶிவம்
மநஸாபி கத ^{2}ம் வசஸா ச கத ^{2}ம் ॥ 3॥

பதச்சேதம்:

மன ஏவ நிரந்தர ஸர்வ கதம் ஹி
அவிஶால விஶால விஹீன பரம்।
மன ஏவ நிரந்தர ஸர்வ ஶிவம்
மனஸாபி கதம் வசஸா ச கதம் ॥ 3॥

பத அர்த்தம்:

- மன ஏவ நிரந்தர ஸர்வ கதம் ஹி - பிரம்மம் எப்பொழுதும் எங்கும் இருப்பது
- அவிஶால விஶால விஹீன பரம்- பரந்த தன்மை, நுணுக்கம் போன்றவை அற்றது
- மன ஏவ நிரந்தர ஸர்வ ஶிவம் - பிரம்மம் பிரிக்க முடியாத உன்னத உண்மை
- மனஸாபி கதம் வசஸா ச கதம் - அப்படியிருக்க, மனத்தாலும், பேச்சினாலும் எப்படி வெளிப்படுத்தி விளக்க முடியும்?

தெளிவுரை:

பிரம்மம் எப்பொழுதும் எங்கும் இருப்பது; பரந்த தன்மை, நுணுக்கம் போன்றவை அற்றது; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க, மனத்தாலும், பேச்சினாலும் எப்படி வெளிப்படுத்தி விளக்க முடியும்?

தி ^{3}நராத்ரிவிபே^{4}த ^{3}நிராகரண -
முதி ^{3}தாநுதி ^{3}தஸ்ய நிராகரணம் ।
யதி ^{3} சைகநிரந்தரஸர்வஶிவம்
ரவிசந்த் ^{3}ரமஸௌ ஜ்வலநஶ்ச கத ^{2}ம் ॥ 4॥

பதச்சேதம்:

தின ராத்ரி விபேத நிராகரணம்
உதித அனுதிதஸ்ய நிராகரணம் ।
யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம்
ரவி சந்த்ரம் அஸௌ ஜ்வலனஶ்ச கதம் ॥ 4॥

பத அர்த்தம்:

- தின ராத்ரி விபேத நிராகரணம் - பிரம்மத்தில் இரவில்லை, பகலில்லை
- உதித அனுதிதஸ்ய நிராகரணம் - சூரிய உதயமில்லை, அஸ்தமனமில்லை
- யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம் - பிரம்மம் பிரிக்க முடியாத உன்னத உண்மை
- ரவி சந்த்ரம் அஸௌ ஜ்வலனஶ்ச கதம் - அப்படியிருக்க சூரியன், சந்திரன், அல்லது நெருப்பு எப்படி பிரம்மத்தை ஒளிரச் செய்யும்?

தெளிவுரை:

பிரம்மத்தில் இரவில்லை, பகலில்லை; சூரிய உதயமில்லை, அஸ்தமனமில்லை; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க சூரியன், சந்திரன், அல்லது நெருப்பு எப்படி பிரம்மத்தை ஒளிரச் செய்யும்?

க^{3}தகாமவிகாமவிபே^{4}த ^{3} இதி
க^{3}தசேஷ்டவிசேஷ்டவிபே^{4}த ^{3} இதி ।
யதி ^{3} சைகநிரந்தரஸர்வஶிவம்
ப^{3}ஹிரந்தரபி^{4}ந்நமதிஶ்ச கத ^{2}ம் ॥ 5॥

பதச்சேதம்:

கத காம விகாம விபேத இதி
கத சேஷ்ட விசேஷ்ட விபேத இதி ।
யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம்
பஹி: அந்தர பின்ன மதிஶ்ச கதம் ॥ 5॥

பத அர்த்தம்:

- கத காம விகாம விபேத இதி - பிரம்மத்தில் ஆசையில்லை, ஆசையின்மையில்லை
- கத சேஷ்ட விசேஷ்ட விபேத இதி - செயலில்லை, செயலற்ற தன்மையில்லை
- யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம் - வேறுபாடுகள் முற்றிலும் இல்லை; பிரம்மம் பிரிக்க முடியாத உன்னத உண்மை
- பஹி: அந்தர பின்ன மதிஶ்ச கதம் - அப்படியிருக்க உள், வெளி போன்ற கருத்துக்கள் எப்படி இருக்க முடியும்?

தெளிவுரை:

பிரம்மத்தில் ஆசையில்லை, ஆசையின்மையில்லை; செயலில்லை, செயலற்ற தன்மையில்லை; வேறுபாடுகள் முற்றிலும் இல்லை; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க உள், வெளி போன்ற கருத்துக்கள் எப்படி இருக்க முடியும்?

யதி ³ ஸாரவிஸாரவிஹீந இதி
யதி ³ ஶூந்யவிஶூந்யவிஹீந இதி ।
யதி ³ சைகநிரந்தரஸர்வஶிவம்
ப்ரத ²மம் ச கத ²ம் சரமம் ச கத ²ம் ॥ 6॥

பதச்சேதம்:

யதி ஸார விஸார விஹீன இதி
யதி ஶூன்ய விஶூன்ய விஹீன இதி ।
யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம்
ப்ரதமம் ச கதம் சரமம் ச கதம் ॥ 6॥

பத அர்த்தம்:

- யதி ஸார விஸார விஹீன இதி - பிரம்மம் விரிவற்றது, சுருக்கமற்றது
- யதி ஶூன்ய விஶூன்ய விஹீன இதி - முழுமையற்றது, வெறுமையற்றது
- யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம் - பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை
- ப்ரதமம் ச கதம் சரமம் ச கதம் - அப்படியிருக்க முதல், கடைசி போன்ற நிலைகள் எப்படி இருக்க முடியும்?

தெளிவுரை:

பிரம்மம் விரிவற்றது, சுருக்கமற்றது; முழுமையற்றது, வெறுமையற்றது; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க முதல், கடைசி போன்ற நிலைகள் எப்படி இருக்க முடியும்?

யதி ^{3}பே^{4}த ^{3}விபே^{4}த ^{3}நிராகரணம்
யதி ^{3} வேத ^{3}கவேத் ^{3}யநிராகரணம் ।
யதி ^{3} சைகநிரந்தரஸர்வஶிவம்
த்ரு ’தீயம் ச கத ^{2}ம் துரீயம் ச கத ^{2}ம் ॥ 7॥

பதச்சேதம்:

யதி பேத விபேத நிராகரணம்
யதி வேதக வேத்ய நிராகரணம் ।
யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம்
த்ருதீயம் ச கதம் துரீயம் ச கதம் ॥ 7॥

பத அர்த்தம்:

- யதி பேத விபேத நிராகரணம் - பிரம்மத்தை பொறுத்தவரை, வேறுபாடு மற்றும் ஒற்றுமை போன்ற கருத்துக்கள் நிராகரிக்கப்படுகின்றன
- யதி வேதக வேத்ய நிராகரணம் - அறிந்தவர் மற்றும் அறியக்கூடிய கருத்துக்கள் நிராகரிக்கப்படுகின்றன
- யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம் - பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை
- த்ருதீயம் ச கதம் துரீயம் ச கதம் - அப்படியிருக்க மூன்றாவது நிலையாகிய தூக்கமும், நான்காவது நிலையாகிய துரீயமும் எப்படி இருக்க முடியும்?

தெளிவுரை:

பிரம்மத்தில் வேறுபாடு, ஒற்றுமை, அறிந்தது, அறியக்கூடியது போன்றக் கருத்துக்கள் நிராகரிக்கப்படுகின்றன; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க மூன்றாவது நிலையாகிய உறக்கமும், நான்காவது நிலையாகிய துரீயமும் எப்படி இருக்க முடியும்?

க^{3}தி ^{3}தாவிதி ^{3}தம் ந ஹி ஸத்யமிதி
விதி ^{3}தாவிதி ^{3}தம் ந ஹி ஸத்யமிதி ।
யதி ^{3} சைகநிரந்தரஸர்வஶிவம்
விஷயேந்த் ^{3}ரியபு ^{3}த்^{3}தி^{4}மநாம்ஸி கத ^{2}ம் ॥ 8॥

பதச்சேதம்:

கதிதா விதிதம் ந ஹி ஸத்யம் இதி
விதிதா விதிதம் ந ஹி ஸத்யம் இதி ।
யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம்
விஷய இந்த்ரிய புத்தி மனாம்ஸி கதம் ॥ 8॥

பத அர்த்தம்:

- கதிதா விதிதம் ந ஹி ஸத்யம் இதி - பிரம்மம் வெளிப்படுத்தக்கூடியது, வெளிப்படுத்த முடியாதது, போன்ற நினைவுகள் போலியானவை

- விதிதா விதிதம் ந ஹி ஸத்யம் இதி – அறியக்கூடியது, அறிய முடியாதது போன்ற சிந்தனைகள் போலியானவை

- யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம் – பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை

- விஷய இந்த்ரிய புத்தி மனாம்ஸி கதம் - அப்படியிருக்க பிரபஞ்சம், புலன்கள், மனம் மற்றும் புத்தி போன்றவை எப்படி இருக்க முடியும்?

தெளிவுரை:

பிரம்மம் வெளிப்படுத்தக்கூடியது, வெளிப்படுத்த முடியாதது, அறியக்கூடியது, அறிய முடியாதது போன்ற சிந்தனைகள் போலியானவை; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க பிரபஞ்சம், புலன்கள், மனம் மற்றும் புத்தி போன்றவை எப்படி இருக்க முடியும்?

க^{3}க^{3}நம் பவநோ ந ஹி ஸத்யமிதி
த^{4}ரணீ த^{3}ஹநோ ந ஹி ஸத்யமிதி ।
யதி ^{3} சைகநிரந்தரஸர்வஶிவம்
ஜலத ^{3}ஶ்ச கத ^{2}ம் ஸலிலம் ச கத ^{2}ம் ॥ 9॥

பதச்சேதம்:

ககனம் பவனோ ந ஹி ஸத்யம் இதி
தரணீ தஹனோ ந ஹி ஸத்யம் இதி ।
யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம்
ஜலதஶ்ச கதம் ஸலிலம் ச கதம் ॥ 9॥

பத அர்த்தம்:

- ககனம் பவனோ ந ஹி ஸத்யம் இதி - ஆகாயம், காற்று உண்மையல்ல

- தரணீ தஹனோ ந ஹி ஸத்யம் இதி - நெருப்பு, பூமி உண்மையல்ல

- யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம் - பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை

- ஜலதஶ்ச கதம் ஸலிலம் ச கதம் - அப்படியிருக்க நீர் எங்கு இருக்கிறது? நீரை தாங்கும் மேகங்கள் எங்கு இருக்கிறது?

தெளிவுரை:

ஆகாயம், காற்று உண்மையல்ல; நெருப்பு, பூமி உண்மையல்ல; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க நீர் எங்கு இருக்கிறது? நீரை தாங்கும் மேகங்கள் எங்கு இருக்கிறது?

யதி ^{3} கல்பிதலோகநிராகரணம்
யதி ^{3} கல்பிததே ^{3}வநிராகரணம் ।
யதி ^{3} சைகநிரந்தரஸர்வஶிவம்
கு^{3}ணதோ ^{3}ஷவிசாரமதிஶ்ச கத ^{2}ம் ॥ 10 ॥

பதச்சேதம்:

யதி கல்பித லோக நிராகரணம்
யதி கல்பித தேவ நிராகரணம் ।
யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம்
குண தோஷ விசார மதிஶ்ச கதம் ॥ 10 ॥

பத அர்த்தம்:

- யதி கல்பித லோக நிராகரணம் - பல்வேறு உலகங்கள் (பூமி, சொர்க்கம், நரகம், முதலியவை) கற்பனையே, இவற்றிற்கு தனி இருப்பு கிடையாது

- யதி கல்பித தேவ நிராகரணம் - பல்வேறு கடவுள்கள் (விஷ்ணு, சிவன், பிரம்மன், முதலியவை) கற்பனையே, இவற்றிற்கு தனி இருப்பு கிடையாது

- யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம் - பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை;

- குண தோஷ விசார மதிஶ்ச கதம் - அப்படியிருக்க, தகுதி, தகுதியின்மை; பகுத்தறிவு, புத்திசாலித்தனம் போன்றவை எப்படி, எங்கு, யாரிடத்தில் இருக்க முடியும்?

தெளிவுரை:

பல்வேறு உலகங்கள் (பூமி, சொர்க்கம், நரகம், முதலியவை), பல்வேறு கடவுள்கள் (விஷ்ணு, சிவன், பிரம்மன், முதலியவை) அனைத்தும் கற்பனையே, இவற்றிற்கு தனி இருப்பு கிடையாது; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க, தகுதி, தகுதியின்மை; பகுத்தறிவு, புத்திசாலித்தனம் போன்றவை எப்படி, எங்கு, யாரிடத்தில் இருக்க முடியும்?

மரணாமரணம் ஹி நிராகரணம்
கரணாகரணம் ஹி நிராகரணம் ।
யதி ^{3} சைகநிரந்தரஸர்வஶிவம்
க^{3}மநாக ^{3}மநம் ஹி கத ^{2}ம் வத ^{3}தி ॥ 11 ॥

பதச்சேதம்:

மரண அமரணம் ஹி நிராகரணம்
கரண அகரணம் ஹி நிராகரணம் ।
யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம்
கமன அகமனம் ஹி கதம் வததி ॥ 11 ॥

பத அர்த்தம்:

- மரண அமரணம் ஹி நிராகரணம் - பிரம்மத்திற்கு மரணமில்லை, மரணமற்றதுமில்லை

- கரண அகரணம் ஹி நிராகரணம் - செயல் புரிவதற்கு கருவிகளில்லை, செயலற்றதுமில்லை

- யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம் - பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை

- கமன அகமனம் ஹி கதம் வததி - அப்படியிருக்க, வருவதையும் போவதையும் என்ன பேசுவது?

தெளிவுரை:

பிரம்மத்திற்கு மரணமில்லை, மரணமற்றதுமில்லை; செயல் புரிவதற்கு கருவிகளில்லை, செயலற்றதுமில்லை; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க, வருவதையும் போவதையும் என்ன பேசுவது?

ப்ரக்ரு ’தி : புருஷோ ந ஹி பே^{4}த ^{3} இதி
ந ஹி காரணகார்யவிபே^{4}த ^{3} இதி ।
யதி ^{3} சைகநிரந்தரஸர்வஶிவம்
புருஷாபுருஷம் ச கத ^{2}ம் வத ^{3}தி ॥ 12 ॥

பதச்சேதம்:

ப்ரக்ருதி: புருஷோ ந ஹி பேத இதி
ந ஹி காரண கார்ய விபேத இதி ।
யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம்
புருஷ அபுருஷம் ச கதம் வததி ॥ 12 ॥

பத அர்த்தம்:

- ப்ரக்ருதி: புருஷோ ந ஹி பேத இதி - பிரம்மத்தில் ஜீவனுக்கும், பிரபஞ்சத்திற்கும் இடையே எந்த வேறுபாடும் இல்லை

- ந ஹி காரண கார்ய விபேத இதி - காரணமும் விளைவும் இல்லை

- யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம் - பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை

- புருஷ அபுருஷம் ச கதம் வததி - அப்படியிருக்க, ஆண், பெண் என்று எப்படி கூறுவது?

தெளிவுரை:

பிரம்மத்தில் ஜீவனுக்கும், பிரபஞ்சத்திற்கும் இடையே எந்த வேறுபாடும் இல்லை; காரணமும் விளைவும் இல்லை; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க, ஆண், பெண் என்று எப்படி கூறுவது?

த்ரு ’தீயம் ந ஹி து:^{3} க^{2}ஸமாக ^{3}மநம்
ந கு^{3}ணாத் ^{3}த்^{3}விதீயஸ்ய ஸமாக ^{3}மநம் ।
யதி ^{3} சைகநிரந்தரஸர்வஶிவம்
ஸ்த ^{2}விரஶ்ச யுவா ச ஶிஶுஶ்ச கத ^{2}ம் ॥ 13 ॥

பதச்சேதம்:

த்ருதீயம் ந ஹி துக்க ஸம அகமனம்
ந குணாத் த்விதீ யஸ்ய ஸம அகமனம் ।
யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம்

ஸ்தவிரஸ்ச யுவா ச ஶிஶுஸ்ச கதம் ॥ 13 ॥

பத அர்த்தம்:

- த்ருதீயம் ந ஹி துக்க ஸம அகமனம் - பிரம்மம், முதுமையற்றது, அதனால் ஏற்படக் கூடிய துன்பங்கள் அற்றது
- ந குணாத் த்விதீ யஸ்ய ஸம அகமனம் - இளமையின் மகிழ்ச்சியோடு எந்த தொடர்பும் அற்றது
- யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம் - பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை
- ஸ்தவிரஸ்ச யுவா ச ஶிஶுஸ்ச கதம் - குழந்தை பருவம், இளமை அல்லது முதுமை எப்படி இருக்க முடியும்?

தெளிவுரை:

பிரம்மம், முதுமை பருவம்[1] அற்றது, அதனால் ஏற்படக் கூடிய துன்பங்கள் அற்றது; இளமை பருவத்தின் மகிழ்ச்சியோடு எந்த தொடர்பும் அற்றது; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க, குழந்தை பருவம், இளமை பருவம், முதுமை பருவம் எப்படி இருக்க முடியும்?

1. **பருவம்** – உயிரினங்களுக்கு மட்டுமே மூன்று பருவங்கள் அவைகள் – குழந்தை மற்றும் பால பருவம், வாலிப பருவம், முதுமைப் பருவம்.

நநு ஆஶ்ரமவர்ணவிஹீநபரம்
நநு காரணகர்த்ரு 'விஹீநபரம் ।
யதி ³ சைகநிரந்தரஸர்வஶிவ -
மவிநஷ்டவிநஷ்டமதிஶ்ச கத ²ம் ॥ 14 ॥

பதச்சேதம்:

நனு ஆஶ்ரம வர்ண விஹீன பரம்
நனு காரண கர்த்ரு விஹீன பரம் ।
யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம்
அவிநஷ்ட விநஷ்ட மதிஶ்ச கதம் ॥ 14 ॥

பத அர்த்தம்:

- நனு ஆஶ்ரம வர்ண விஹீன பரம் - பிரம்மம் நான்கு வாழ்வியல் முறைகள் அற்றது
- நனு காரண கர்த்ரு விஹீன பரம் - காரணம், விளைவு அற்றது
- யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம் - பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை
- அவிநஷ்ட விநஷ்ட மதிஶ்ச கதம் - அப்படியிருக்க, அழிந்துவிட்டது என்றும், அழியாதது என்றும் எதனை நினைப்பது?

தெளிவுரை:

பிரம்மம் நான்கு வாழ்வியல் முறைகள் அற்றது; காரணம், விளைவு அற்றது; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க, அழிந்துவிட்டது என்றும், அழியாதது என்றும் எதனை நினைப்பது?

க்^{3}ரஸிதாக் ^{3}ரஸிதம் ச விதத் ^{2}யமிதி
ஜநிதாஜநிதம் ச விதத் ^{2}யமிதி ।
யதி ^{3} சைகநிரந்தரஸர்வஶிவ -
மவிநாஶி விநாஶி கத ^{2}ம் ஹி ப^{4}வேத் ॥ 15 ॥

பதச்சேதம்:

க்ரஸித அக்ரஸிதம் ச விதத்யம் இதி
ஜனித அஜனிதம் ச விதத்யம் இதி ।
யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம்
அவிநாஶி விநாஶி கதம் ஹி பவேத் ॥ 15 ॥

பத அர்த்தம்:

- க்ரஸித அக்ரஸிதம் ச விதத்யம் இதி - பிரம்மம் கட்டப்பட்டதும் அல்ல, கட்டுப்படாததும் அல்ல
- ஜனித அஜனிதம் ச விதத்யம் இதி - படைக்கப்பட்டதும் அல்ல, படைக்கப்படாததும் அல்ல
- யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம் - பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை
- அவிநாஶி விநாஶி கதம் ஹி பவேத் - அப்படியிருக்க, அழிவது, அழியாதது என்று எதனைக் கூறுவது?

தெளிவுரை:

பிரம்மம் கட்டப்பட்டதும் அல்ல, கட்டுப்படாததும் அல்ல; படைக்கப்பட்டதும் அல்ல, படைக்கப்படாததும் அல்ல; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க, அழிவது, அழியாதது என்று எதனைக் கூறுவது?

புருஷாபுருஷஸ்ய விநஷ்டமிதி
வநிதாவநிதஸ்ய விநஷ்டமிதி ।
யதி ^{3} சைகநிரந்தரஸர்வஶிவ -
மவிநோத ^{3}விநோத ^{3}மதிஸ்ச கத ^{2}ம் ॥ 16 ॥

பதச்சேதம்:

புருஷ அபுருஷஸ்ய விநஷ்டம் இதி
வனித அவனிதஸ்ய விநஷ்டம் இதி ।
யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம்
அவிநோத விநோத மதிஸ்ச கதம் ॥ 16 ॥

பத அர்த்தம்:

- புருஷ அபுருஷஸ்ய விநஷ்டம் இதி - பிரம்மத்தில், ஆண், பெண் போன்ற பிரிவுகள் இல்லை
- வனித அவனிதஸ்ய விநஷ்டம் இதி - மனைவி, கணவன் போன்ற உறவுகள் இல்லை
- யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம் - பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை
- அவிநோத விநோத மதிஶ்ச கதம் - அப்படியிருக்க, சுகம், துக்கம் போன்றவற்றை எப்படி உணர முடியும்?

தெளிவுரை:

பிரம்மத்தில், ஆண், பெண் போன்ற பிரிவுகள் இல்லை, மனைவி, கணவன் போன்ற உறவுகள் இல்லை; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க, சுகம், துக்கம் போன்றவற்றை எப்படி உணர முடியும்?

யதி ^{3} மோஹவிஷாத ^{3}விஹீநபரோ
யதி ^{3} ஸம்ஶயஶோகவிஹீநபர : ।
யதி ^{3} சைகநிரந்தரஸர்வஶிவ -
மஹமத்ர மமேதி கத ^{2}ம் ச புந : ॥ 17 ॥

பதச்சேதம்:

யதி மோஹ விஷாத விஹீன பரோ
யதி ஸம்ஶய ஶோக விஹீன பர: ।
யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம்
அஹம் அத்ர மமேதி கதம் ச புந : ॥ 17 ॥

பத அர்த்தம்:

- யதி மோஹ விஷாத விஹீன பரோ - பிரம்மம், மாயை, மனச்சோர்வு போன்றவற்றிலிருந்து விடுபட்டது
- யதி ஸம்ஶய ஶோக விஹீன பர: - சந்தேகம், துன்பம் போன்றவற்றிலிருந்து விடுபட்டது
- யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம் - பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை
- அஹம் அத்ர மமேதி கதம் ச புன: - அப்படியிருக்க, நான், எனது போன்றவை எப்படி யாரிடத்தில் இருக்க முடியும்?

தெளிவுரை:

பிரம்மம், மாயை, மனச்சோர்வு போன்றவற்றிலிருந்து விடுபட்டது; சந்தேகம், துன்பம் போன்றவற்றிலிருந்து விடுபட்டது; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க, நான், எனது போன்றவை எப்படி யாரிடத்தில் இருக்க முடியும்?

நநு த^{4}ர்மவித^{4}ர்மவிநாஶ இதி
நநு ப^{3}ந்த^{4}விப ^{3}ந்த^{4}விநாஶ இதி ।
யதி ^{3} சைகநிரந்தரஸர்வஶிவம் -
மிஹது :^{3} க^{2}விது :^{3} க^{2}மதிஸ்ச கத ^{2}ம் ॥ 18 ॥

பதச்சேதம்:

நனு தர்ம விதர்ம விநாஶ இதி
நனு பந்த விபந்த விநாஶ இதி ।
யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம்
இஹ துக்க விதுக்க மதிஸ்ச கதம் ॥ 18 ॥

பத அர்த்தம்:

- நனு தர்ம விதர்ம விநாஶ இதி - பிரம்மத்தில், தகுதி, குறைபாடு போன்றவை இல்லை
- நனு பந்த விபந்த விநாஶ இதி - அடிமைத்தனம், சுதந்திரம் போன்றவை இல்லை
- யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம் - பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை
- இஹ துக்க விதுக்க மதிஸ்ச கதம் - அப்படியிருக்க, துன்பம், இன்பம் போன்ற உணர்வுகள் எப்படி இருக்க முடியும்?

தெளிவுரை:

பிரம்மத்தில், தகுதி, குறைபாடு போன்றவை இல்லை; அடிமைத்தனம், சுதந்திரம் போன்றவை இல்லை; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க, துன்பம், இன்பம் போன்ற உணர்வுகள் எப்படி இருக்க முடியும்?

ந ஹி யாஜ்ஞிகயஜ்ஞவிபா^{4}க ^{3} இதி
ந ஹுதாஶநவஸ்துவிபா^{4}க ^{3} இதி ।
யதி ^{3} சைகநிரந்தரஸர்வஶிவம்
வத ^{3} கர்மப ^{2}லாநி ப^{4}வந்தி கத ^{2}ம் ॥ 19 ॥

பதச்சேதம்:

ந ஹி யாஜ்ஞிக யஜ்ஞ விபாக இதி
ந ஹுதாஶன வஸ்து விபாக இதி ।
யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம்
வத கர்ம பலானி பவந்தி கதம் ॥ 19 ॥

பத அர்த்தம்:

- ந ஹி யாஜ்ஞிக யஜ்ஞ விபாக இதி - பிரம்மத்தில், தியாகம் செய்பவன், தியாகம் போன்ற வேறுபாடுகள் இல்லை
- ந ஹுதாஶன வஸ்து விபாக இதி - வேள்வி தீ, அதில் அர்பணிப்பவை போன்ற வேறுபாடுகள் இல்லை

- யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம் - பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை
- வத கர்ம பலானி பவந்தி கதம் - அப்படியிருக்க, செயல்களின் பலன்கள் என்பது எப்படி இருக்கும்?

தெளிவுரை:

பிரம்மத்தில், தியாகம் செய்பவன், தியாகம் போன்ற வேறுபாடுகள் இல்லை; வேள்வி தீ, அதில் அர்பணிப்பவை போன்ற வேறுபாடுகள் இல்லை; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க, செயல்களின் பலன்கள் என்பது எப்படி இருக்கும்?

நநு ஶோகவிஶோகவிமுக்த இதி
நநு த^{3}ர்பவித ^{3}ர்பவிமுக்த இதி ।
யதி ^{3} சைகநிரந்தரஸர்வஶிவம்
நநு ராக ^{3}விராக ^{3}மதிஶ்ச கத ^{2}ம் ॥ 20 ॥

பதச்சேதம்:

நனு ஶோக விஶோக விமுக்த இதி
நனு தர்ப விதர்ப விமுக்த இதி ।
யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம்
நனு ராக விராக மதிஶ்ச கதம் ॥ 20 ॥

பத அர்த்தம்:

- நனு ஶோக விஶோக விமுக்த இதி - பிரம்மம், துக்கம், மகிழ்ச்சி போன்றவற்றிலிருந்து விடுபட்டது
- நனு தர்ப விதர்ப விமுக்த இதி - கர்வம், பணிவு போன்றவற்றிலிருந்து விடுபட்டது
- யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம் - பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை
- நனு ராக விராக மதிஶ்ச கதம் - அப்படியிருக்க, பேரார்வம், அக்கறையின்மை பற்றிய எண்ணங்கள் எப்படி இருக்க முடியும்?

தெளிவுரை:

பிரம்மம், துக்கம், மகிழ்ச்சி போன்றவற்றிலிருந்து விடுபட்டது; கர்வம், பணிவு போன்றவற்றிலிருந்து விடுபட்டது; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க, பேரார்வம், அக்கறையின்மை பற்றிய எண்ணங்கள் எப்படி இருக்க முடியும்?

ந ஹி மோஹவிமோஹவிகார இதி
ந ஹி லோப^{4}விலோப^{4}விகார இதி ।
யதி ^{3}சைகநிரந்தரஸர்வஶிவம்
ஹ்யவிவேகவிவேகமதிஶ்சகத ^{2}ம் ॥ 21 ॥

பதச்சேதம்:

ந ஹி மோஹ விமோஹ விகார இதி
ந ஹி லோப விலோப விகார இதி ।
யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம்
ஹி அவிவேக விவேக மதிஶ்ச கதம் ॥ 21 ॥

பத அர்த்தம்:

- ந ஹி மோஹ விமோஹ விகார இதி - பிரம்மத்தில், அறியாமை, அறியாமையின்மை போன்றவை இல்லை
- ந ஹி லோப விலோப விகார இதி - பேராசை, பேராசையின்மை போன்றவை இல்லை
- யதி ச ஏக நிரந்தர ஸர்வ ஶிவம் - பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை
- ஹி அவிவேக விவேக மதிஶ்ச கதம் - அப்படியிருக்க, பாகுபாடு, பாகுபாடு இன்மை பற்றிய சிந்தனை எப்படி இருக்க முடியும்?

தெளிவுரை:

பிரம்மத்தில், அறியாமை, அறியாமையின்மை போன்றவை இல்லை; பேராசை, பேராசையின்மை போன்றவை இல்லை; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க, பாகுபாடு, பாகுபாடு இன்மை பற்றிய சிந்தனை எப்படி இருக்க முடியும்?

த்வமஹம் ந ஹி ஹந்த கதா [3]சித [3]பி
குலஜாதிவிசாரமஸத்யமிதி ।
அஹமேவ ஶிவ : பரமார்த [2] இதி
அபி[4]வாத [3]நமத்ர கரோமி கத [2]ம் ॥ 22 ॥

பதச்சேதம்:

த்வம் அஹம் ந ஹி ஹந்த கதாசித் அபி
குல ஜாதி விசாரம் அஸத்யம் இதி ।
அஹம் ஏவ ஶிவ: பரமார்த இதி
அபிவாதனம் அத்ர கரோமி கதம் ॥ 22 ॥

பத அர்த்தம்:

- த்வம் அஹம் ந ஹி ஹந்த கதாசித் அபி - பார்! நீ, நான் என்று எப்பொழுதும் இருந்ததில்லை
- குல ஜாதி விசாரம் அஸத்யம் இதி - குடும்பம், ஜாதி போன்றவை இருப்பதாக கருதுவது சுத்த முட்டாள் தனம்
- அஹம் ஏவ ஶிவ: பரமார்த இதி - பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை
- அபிவாதனம் அத்ர கரோமி கதம் - அப்படியிருக்க, யார் யாருக்கு, எதற்கு, எப்படி வணக்கம் செலுத்துவது?

தெளிவுரை:

பார்! நீ, நான் என்று எப்பொழுதும் இருந்ததில்லை; குடும்பம், ஜாதி போன்றவை இருப்பதாக கருதுவது சுத்த முட்டாள் தனம்; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க, யார் யாருக்கு, எதற்கு, எப்படி வணக்கம் செலுத்துவது?

கு^{3}ருஶிஷ்யவிசாரவிஶீர்ண இதி
உபதே ^{3}ஶவிசாரவிஶீர்ண இதி ।
அஹமேவ ஶிவ : பரமார்த ^{2} இதி
அபி^{4}வாத ^{3}நமத்ர கரோமி கத ^{2}ம் ॥ 23 ॥

பதச்சேதம்:

குரு ஶிஷ்ய விசார விஶீர்ண இதி
உபதேஶ விசார விஶீர்ண இதி ।
அஹம் ஏவ ஶிவ: பரமார்த இதி
அபிவாதனம் அத்ர கரோமி கதம் ॥ 23 ॥

பத அர்த்தம்:

- குரு ஶிஷ்ய விசார விஶீர்ண இதி - பிரம்மத்தில், குரு, சீடர் போன்ற பாகுபாடுகள் இல்லை
- உபதேஶ விசார விஶீர்ண இதி - அறிவுறுத்தல், போதனையின் பிரதிபலிப்பு போன்ற பாகுபாடுகள் இல்லை
- அஹம் ஏவ ஶிவ: பரமார்த இதி - பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை
- அபிவாதனம் அத்ர கரோமி கதம் - அப்படியிருக்க, யார் யாருக்கு, எதற்கு, எப்படி வணக்கம் செலுத்துவது?

தெளிவுரை:

பிரம்மத்தில், குரு, சீடர் போன்ற பாகுபாடுகள் இல்லை; அறிவுறுத்தல், போதனையின் பிரதிபலிப்பு போன்ற பாகுபாடுகள் இல்லை; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க, யார் யாருக்கு, எதற்கு, எப்படி வணக்கம் செலுத்துவது?

ந ஹி கல்பிததே ^{3}ஹவிபா^{4}க ^{3} இதி
ந ஹி கல்பிதலோகவிபா^{4}க ^{3} இதி ।
அஹமேவ ஶிவ : பரமார்த ^{2} இதி
அபி^{4}வாத ^{3}நமத்ர கரோமி கத ^{2}ம் ॥ 24 ॥

பதச்சேதம்:

ந ஹி கல்பித தேஹ விபாக இதி
ந ஹி கல்பித லோக விபாக இதி ।
அஹம் ஏவ ஶிவ: பரமார்த இதி

அபிவாதனம் அத்ர கரோமி கதம் ॥ 24 ॥

பத அர்த்தம்:

- ந ஹி கல்பித தேஹ விபாக இதி - பிரம்மம், கற்பனை உடல்கள் அற்றது
- ந ஹி கல்பித லோக விபாக இதி - கற்பனை உலகங்கள் அற்றது
- அஹம் ஏவ ஶிவ: பரமார்த இதி - பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை
- அபிவாதனம் அத்ர கரோமி கதம் - அப்படியிருக்க, யார் யாருக்கு, எதற்கு, எப்படி வணக்கம் செலுத்துவது?

தெளிவுரை:

பிரம்மம், கற்பனை உடல்கள் அற்றது; கற்பனை உலகங்கள் அற்றது; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க, யார் யாருக்கு, எதற்கு, எப்படி வணக்கம் செலுத்துவது?

ஸரஜோ விரஜோ ந கதா ³சித ³பி
நநு நிர்மலநிஶ்சலஶூத் ³த⁴ இதி ।
அஹமேவ ஶிவ : பரமார்த ² இதி
அபி⁴வாத ³நமத்ர கரோமி கத ²ம் ॥ 25 ॥

பதச்சேதம்:

ஸரஜோ விரஜோ ந கதாசித் அபி
நனு நிர்மல நிஶ்சல ஶூத்த இதி ।
அஹம் ஏவ ஶிவ: பரமார்த இதி
அபிவாதனம் அத்ர கரோமி கதம் ॥ 25 ॥

பத அர்த்தம்:

- ஸரஜோ விரஜோ ந கதாசித் அபி - பிரம்மம், உணர்ச்சி, விரக்தி அற்றது
- நனு நிர்மல நிஶ்சல ஶூத்த இதி - உண்மையில் அது தூய்மையான தன்னிலை மாறாத சுயம்பிரகாசம்
- அஹம் ஏவ ஶிவ: பரமார்த இதி - பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை
- அபிவாதனம் அத்ர கரோமி கதம் - அப்படியிருக்க, யார் யாருக்கு, எதற்கு, எப்படி வணக்கம் செலுத்துவது?

தெளிவுரை:

பிரம்மம், உணர்ச்சி, விரக்தி அற்றது; உண்மையில் அது தூய்மையான தன்னிலை மாறாத சுயம்பிரகாசம்; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க, யார் யாருக்கு, எதற்கு, எப்படி வணக்கம் செலுத்துவது?

ந ஹி தே ³ஹவிதே ³ஹவிகல்ப இதி
அந்ரு 'தம் சரிதம் ந ஹி ஸத்யமிதி ।
அஹமேவ ஶிவ : பரமார்த ² இதி
அபி⁴வாத ³நமத்ர கரோமி கத ²ம் ॥ 26 ॥

பதச்சேதம்:

ந ஹி தேஹ விதேஹ விகல்ப இதி
அன்ருதம் சரிதம் ந ஹி ஸத்யம் இதி ।
அஹம் ஏவ ஶிவ: பரமார்த இதி
அபிவாதனம் அத்ர கரோமி கதம் ॥ 26 ॥

பத அர்த்தம்:

- ந ஹி தேஹ விதேஹ விகல்ப இதி - பிரம்மம், உடல் உள்ளது, உடலற்றது என்ற நினைப்பும் கற்பனையே
- அன்ருதம் சரிதம் ந ஹி ஸத்யம் இதி - உயிரினங்கள் அதனதன் வாழ்வில் செய்யப்படும் செயல்களும் கற்பனையே
- அஹம் ஏவ ஶிவ: பரமார்த இதி - பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை
- அபிவாதனம் அத்ர கரோமி கதம் - அப்படியிருக்க, யார் யாருக்கு, எதற்கு, எப்படி வணக்கம் செலுத்துவது?

தெளிவுரை:

பிரம்மம், உடல் உள்ளது, உடலற்றது என்ற நினைப்பும் கற்பனையே; உயிரினங்கள் அதனதன் வாழ்வில் செய்யப்படும் செயல்களும் கற்பனையே; பிரம்மம் மட்டுமே பிரிக்க முடியாத உன்னத உண்மை; அப்படியிருக்க, யார் யாருக்கு, எதற்கு, எப்படி வணக்கம் செலுத்துவது?

விந்த ³தி விந்த ³தி ந ஹி ந ஹி யத்ர
ச²ந்தோ ³லக்ஷணம் ந ஹி ந ஹி தத்ர ।
ஸமரஸமக் ³நோ பா⁴விதபூத :
ப்ரலபதி தத்த்வம் பரமவதூ⁴த : ॥ 27 ॥

பதச்சேதம்:

விந்ததி விந்ததி ந ஹி ந ஹி யத்ர
சந்தோ லக்ஷணம் ந ஹி ந ஹி தத்ர ।
ஸமரஸ மக்னோ பாவித பூத :
ப்ரலபதி தத்த்வம் பரம் அவதூத : ॥ 27 ॥

பத அர்த்தம்:

- விந்ததி விந்ததி ந ஹி ந ஹி யத்ர - அவதூதருக்கு, அறிபவன், அறிபடும்பொருள், அறிவு போன்ற திரிபுடி அற்றவர்; எல்லையற்ற சுயத்தில் திளைத்துள்ளதால்;

- சந்தோ லக்ஷணம் ந ஹி ந ஹி தத்ர - அவருக்கு பேச்சு, செயல் போன்றவை இல்லை;
- ஸமரஸ மக்னோ பாவித பூத : - அவதூதர், தியானத்தின் மூலம் மனதை தூய்மைப்படுத்தி, எல்லையற்ற சுயத்தில் திளைத்து,
- ப்ரலபதி தத்த்வம் பரம் அவதூத : - தன்னிச்சையாக இப்பாடல்களை பாடியுள்ளார்.

தெளிவுரை:

அவதூதர், அறிபவன், அறிபடும்பொருள், அறிவு போன்ற திரிபுடி அற்றவர்; எல்லையற்ற சுயத்தில் திளைத்துள்ளதால்; அவருக்கு பேச்சு, செயல் போன்றவை இல்லை; தியானத்தின் மூலம் மனதை தூய்மைப்படுத்தி, எல்லையற்ற சுயத்தில் திளைத்து, தன்னிச்சையாக இப்பாடல்களை பாடியுள்ளார்.

||ஆறாம் அத்தியாயம் முற்றிற்று||

ஏழாம் அத்தியாயம்

இவ்வத்தியாயம் அவதூதரின் நிலையை எடுத்துரைக்கிறது

அவதூதர் கூறுகிறார்:

ரத் ^{2}யாகர்படவிரசிதகந்த :^{2}
புண்யாபுண்யவிவர்ஜிதபந்த :^{2} ।
ஶூந்யாகா ^{3}ரே திஷ்ட ^{2}தி நக் ^{3}நோ
ஶுத் ^{3}த^{4}நிரஞ்ஜநஸமரஸமக் ^{3}ந: ॥ 1॥

பதச்சேதம்:

ரத்யா கர்பட விரசித கந்த:
புண்ய அபுண்ய விவர்ஜித பந்த: ।
ஶூன்யாகாரே திஷ்டதி நக்நோ
ஶுத்த நிரஞ்ஜன ஸமரஸமக்ன: ॥ 1॥

பத அர்த்தம்:

- ரத்யா கர்பட விரசித கந்த: - அவதூதர், தெருவில் கிடைக்கும் கந்தல் துணியாலான ஒட்டுப்போட்ட ஆடையையும் அணிதிருப்பார்
- புண்ய அபுண்ய விவர்ஜித பந்த: - அவர் அறம், அறமற்ற பாதையில் பயணிக்கிறார்
- ஶூன்யாகாரே திஷ்டதி நக்நோ ஶுத்த நிரஞ்ஜன ஸமரஸமக்ன: - பிரம்மத்தின் தூய்மையான, மாசுபடாத பேரின்பத்தில் திளைத்திருப்பவர், எவ்விடத்திலும் வசிப்பார், அது வனமாக இருந்தாலும்.

தெளிவுரை:

அவதூதர், தெருவில் கிடைக்கும் கந்தல் துணியாலான ஒட்டுப்போட்ட ஆடையையும் அணிதிருப்பார்; அவர் அறம், அறமற்ற பாதையில் பயணிக்கிறார்; பிரம்மத்தின் தூய்மையான, மாசுபடாத பேரின்பத்தில் திளைத்திருப்பவர், எவ்விடத்திலும் வசிப்பார், அது வனமாக இருந்தாலும்.

குறிப்பு: இந்த தெளிவுரையை படித்துவிட்டு, அவதூதர் கந்தல் துணிகளை தான் உடுத்துவார் என்றும், வனத்தில் தான் வசிப்பார் என்றும் தவறாக புரிந்து கொள்ளக்கூடாது; அவ்வாறான சந்தர்ப்பங்கள் ஏற்ப்பட்டால், அவர் அதனை நிராகரிக்கமாட்டார் என்றே புரிந்து கொள்ளவேண்டும்.

லக்ஷ்யாலக்ஷ்யவிவர்ஜிதலக்ஷ்யோ
யுக்தாயுக்தவிவர்ஜிதத^{3}க்ஷ: ।
கேவலதத்த்வநிரஞ்ஜநபூதோ வாத^{3}
விவாத :^{3} கத ^{2}மவதூ^{4}த :॥2॥

பதச்சேதம்:

லக்ஷ்ய அலக்ஷ்ய விவர்ஜித லக்ஷ்யோ
யுக்த அயுக்த விவர்ஜித தக்ஷ: ।
கேவல தத்த்வ நிரஞ்ஜன பூதோ வாத
விவாத: கதம் அமவதூத: ॥2॥

பத அர்த்தம்:

- லக்ஷ்ய அலக்ஷ்ய விவர்ஜித லக்ஷ்யோ - ஒரு அவதூதர் தன்னிலையை வெளிப்படுத்தலாம், வெளிப்படுத்தாமலும் இருக்கலாம்
- யுக்த அயுக்த விவர்ஜித தக்ஷ: - சரி, தவறு போன்ற இருமைகளிலிருந்து முற்றிலும் நேர்மையானவர்
- கேவல தத்த்வ நிரஞ்ஜன பூதோ வாத - அவரது உண்மையான இயல்பு ஒன்றானது, தூய்மையானது, களங்கமற்றது
- விவாத: கதம் அமவதூத: - இப்படிப்பட்ட தூய ஆன்மா, எப்படி வாதங்களிலும் சர்ச்சைகளிலும் ஈடுபட முடியும்?

தெளிவுரை:

ஒரு அவதூதர் தன்னிலையை வெளிப்படுத்தலாம், வெளிப்படுத்தாமலும் இருக்கலாம்; சரி, தவறு போன்ற இருமைகளிலிருந்து முற்றிலும் நேர்மையானவர்; அவரது உண்மையான இயல்பு ஒன்றானது, தூய்மையானது, களங்கமற்றது; இப்படிப்பட்ட தூய ஆன்மா, எப்படி வாதங்களிலும் சர்ச்சைகளிலும் ஈடுபட முடியும்?

ஆஶாபாஶவிப ³ந்த⁴நமுக்தா :
ஶௌசாசாரவிவர்ஜிதயுக்தா : ।
ஏவம் ஸர்வவிவர்ஜிதஶாந்தா -
ஸ்தத்த்வம் ஶுத் ³த⁴நிரஞ்ஜநவந்த : ॥ 3 ॥

பதச்சேதம்:

ஆஶா பாஶ விபந்தன முக்தா:
ஶௌச ஆசார விவர்ஜித யுக்தா: ।
ஏவம் ஸர்வ விவர்ஜித ஶாந்தாஸ்
தத்த்வம் ஶுத்த நிரஞ்ஜன வந்த: ॥ 3 ॥

பத அர்த்தம்:

- ஆஶா பாஶ விபந்தன முக்தா: - அவதூதர் ஆசை என்ற வசீகரிக்கும் பொறியிலிருந்து விடுபட்டவர்
- ஶௌச ஆசார விவர்ஜித யுக்தா: - உடல் தூய்மை, மனத் தூய்மை, சமூக தூய்மை போன்றவற்றை நிராகரித்து தன் சுயத்தில் திளைத்து இருக்கிறார்;
- ஏவம் ஸர்வ விவர்ஜித ஶாந்தாஸ் - இவ்வாறு அனைத்தையும் துறந்து, அமைதியாக

- தத்த்வம் ஶுத்த நிரஞ்ஜன வந்த: - தூய்மையான, களங்கமற்ற பிரம்மத்தில் ஏகாந்தமாக இருக்கிறார்.

தெளிவுரை:

அவதூதர், ஆசை என்ற வசீகரிக்கும் பொறியிலிருந்து விடுபட்டவர்; உடல் தூய்மை, மனத் தூய்மை, சமூக தூய்மை போன்றவற்றை நிராகரித்து, தன் சுயத்தில் திளைத்து இருக்கிறார்; இவ்வாறு அனைத்தையும் துறந்து, அமைதியாக, தூய்மையான, களங்கமற்ற பிரம்மத்தில் ஏகாந்தமாக இருக்கிறார்.

கத ²மிஹ தே ³ஹவிதே ³ஹவிசார :
கத ²மிஹ ராக ³விராக ³விசார : ।
நிர்மலநிஶ்சலக ³க³நாகாரம்
ஸ்வயமிஹ தத்த்வம் ஸஹஜாகாரம் ॥ 4॥

பதச்சேதம்:

கதம் இஹ தேஹ விதேஹ விசார:
கதம் இஹ ராக விராக விசார: ।
நிர்மல நிஶ்சல ககனாகாரம்
ஸ்வயம் இஹ தத்த்வம் ஸஹஜாகாரம் ॥ 4॥

பத அர்த்தம்:

- கதம் இஹ தேஹ விதேஹ விசார: - தன் சுயத்தில் திளைத்திருக்கும் அவதூதர், தனக்கு உடல் இருக்கிறதா இல்லையா என்பதை எவ்வாறு கருத்தில் கொள்ள முடியும்?

- கதம் இஹ ராக விராக விசார: - அவருக்குப் பற்று இருக்கிறதா இல்லையா என்று எப்படி விசாரிக்க முடியும்?

- நிர்மல நிஶ்சல ககனாகாரம் - அவர் மாசற்றவர், சலனமற்றவர், அகாயத்தை போன்று எல்லையற்றவர்

- ஸ்வயம் இஹ தத்த்வம் ஸஹஜாகாரம் - யதார்த்தமாக தன்னில் நிலைத்து இருக்கிறார்

தெளிவுரை:

தன் சுயத்தில் திளைத்திருக்கும் அவதூதர், தனக்கு உடல் இருக்கிறதா இல்லையா என்பதை எவ்வாறு கருத்தில் கொள்ள முடியும்? அவருக்குப் பற்று இருக்கிறதா இல்லையா என்று எப்படி விசாரிக்க முடியும்? அவர் மாசற்றவர், சலனமற்றவர், அகாயத்தை போன்று எல்லையற்றவர்; யதார்த்தமாக தன்னில் நிலைத்து இருக்கிறார்.

கத ²மிஹ தத்த்வம் விந்த ³தி யத்ர
ரூபமரூபம் கத ²மிஹ தத்ர ।
க³க³நாகார : பரமோ யத்ர
விஷயீகரணம் கத ²மிஹ தத்ர ॥ 5॥

பதச்சேதம்:

கதம் இஹ தத்த்வம் விந்ததி யத்ர
ரூபம் அரூபம் கதம் இஹ தத்ர ।
ககனாகார: பரமோ யத்ர
விஷயீ கரணம் கதம் இஹ தத்ர ॥ 5॥

பத அர்த்தம்:

- கதம் இஹ தத்த்வம் விந்ததி யத்ர - தன் சுயத்தில் திளைத்திருக்கும் அவதூதர், எப்படி, எங்கே யதார்த்தத்தை தனக்கு வேறாக அறிய முடியும்?
- ரூபம் அரூபம் கதம் இஹ தத்ர - அவர் வடிவமுள்ளவர், வடிவமற்றவர் என்று எப்படி கூற முடியும்?
- ககனாகார: பரமோ யத்ர - ஆகாயத்தை போன்று யதார்த்தமாக எங்கும் வியாபித்திருப்பவர், எப்படி?
- விஷயீ கரணம் கதம் இஹ தத்ர - எதனில், தன்னை புறநிலைப்படுத்த முடியும்?

தெளிவுரை:

தன் சுயத்தில் திளைத்திருக்கும் அவதூதர், எப்படி, எங்கே யதார்த்தத்தை தனக்கு வேறாக அறிய முடியும்? அவர் வடிவமுள்ளவர், வடிவமற்றவர் என்று எப்படி கூற முடியும்? ஆகாயத்தை போன்று யதார்த்தமாக எங்கும் வியாபித்திருப்பவர், எப்படி? எதனில் தன்னை புறநிலைப்படுத்த முடியும்?

க^{3}க^{3}நாகாரநிரந்தரஹம்ஸ -
ஸ்தத்த்வவிஶுத் ^{3}த^{4}நிரஞ்ஜநஹம்ஸ : ।
ஏவம் கத ^{2}மிஹ பி^{4}ந்நவிபி^{4}ந்நம்
ப^{3}ந்த^{4}விப ^{3}ந்த^{4}விகாரவிபி^{4}ந்நம் ॥ 6॥

பதச்சேதம்:

ககனாகார நிரந்தர ஹம்ஸஸ்
தத்த்வ விஶுத்த நிரஞ்ஜன ஹம்ஸ: ।
ஏவம் கதம் இஹ பின்ன விபின்னம்
பந்த விபந்த விகார விபின்னம் ॥ 6॥

பத அர்த்தம்:

- ககனாகார நிரந்தர ஹம்ஸஸ் - பிரம்மம், ஆகயத்தை போன்று எங்கும் நிறைந்துள்ளத
- தத்த்வ விஶுத்த நிரஞ்ஜன ஹம்ஸ: - அதன் சாராம்சம் தூய்மையானது, களங்கமற்றது
- ஏவம் கதம் இஹ பின்ன விபின்னம் - பிரிவு, பெருக்கல், பிணைப்பு, போன்றவை அற்றது
- பந்த விபந்த விகார விபின்னம் - கட்டுபாடு, விடுதலை மற்றும் பல்வேறு மாற்றங்கள் எப்படி இருக்க முடியும்?

தெளிவுரை:

பிரம்மம், ஆகயத்தை போன்று எங்கும் நிறைந்துள்ளத;, அதன் சாராம்சம் தூய்மையானது, களங்கமற்றது; பிரிவு, பெருக்கல், பிணைப்பு, போன்றவை அற்றது; கட்டுபாடு, விடுதலை மற்றும் பல்வேறு மாற்றங்கள் எப்படி இருக்க முடியும்?

கேவலதத்த்வநிரந்தரஸர்வம்யோக^{3}
வியோகௌ ^{3} கத ^{2}மிஹ க^{3}ர்வம் ।
ஏவம் பரமநிரந்தரஸர்வ -
மேவம் கத ^{2}மிஹ ஸாரவிஸாரம் ॥ 7॥

பதச்சேதம்:

கேவல தத்த்வ நிரந்தர ஸர்வம்
யோக வியோகௌ கதம் இஹ கர்வம் ।
ஏவம் பரம நிரந்தர ஸர்வம்
ஏவம் கதம் இஹ ஸார விஸாரம் ॥ 7॥

பத அர்த்தம்:

- கேவல தத்த்வ நிரந்தர ஸர்வம் - பிரம்மம் முழுமையானது, எல்லாவற்றிலும் சமமாக வியாபித்துள்ளது
- யோக வியோகௌ கதம் இஹ கர்வம் - அப்படியிருக்க, ஒருவர் எவ்வாறு ஒற்றுமை, பிரிவு போன்றவைகளை உணர முடியும்?
- ஏவம் பரம நிரந்தர ஸர்வம் - ஒன்றேயான பிரம்மம் எல்லாவற்றிலும் இருப்பதால்
- ஏவம் கதம் இஹ ஸார விஸாரம் - பலம், பலவீனம் போன்ற மாறுபாடுகள் எப்படி இருக்க முடியும்?

தெளிவுரை:

பிரம்மம் முழுமையானது, எல்லாவற்றிலும் சமமாக வியாபித்துள்ளது; அப்படியிருக்க, ஒருவர் எவ்வாறு ஒற்றுமை, பிரிவு போன்றவைகளை உணர முடியும்? ஒன்றேயான பிரம்மம் எல்லாவற்றிலும் இருப்பதால், பலம், பலவீனம் போன்ற மாறுபாடுகள் எப்படி இருக்க முடியும்?

கேவலதத்த்வநிரஞ்ஜநஸர்வம்க^{3}
க^{3}நாகாரநிரந்தரஶுத் ^{3}த^{4}ம் ।
ஏவம் கத ^{2}மிஹ ஸங்க ^{3}விஸங்க ^{3}ம்
ஸத்யம் கத ^{2}மிஹ ரங்க ^{3}விரங்க ^{3}ம் ॥ 8॥

பதச்சேதம்:

கேவல தத்த்வ நிரஞ்ஜன ஸர்வம்
ககனாகார நிரந்தர ஶுத்தம் ।
ஏவம் கதம் இஹ ஸங்க விஸங்கம்

ஸத்யம் கதம் இஹ ரங்க விரங்கம் ॥ 8॥

பத அர்த்தம்:

- கேவல தத்த்வ நிரஞ்ஜன ஸர்வம் - பிரம்மம் முழுமையானது, எல்லாவற்றிலும் சமமாக பிரகாசிக்கிறது
- ககனாகார நிரந்தர ஶுத்தம் - ஆகாயத்தை போன்று தூய்மையாய் எங்கும் பரவியுள்ளது
- ஏவம் கதம் இஹ ஸங்க விஸங்கம் ஸத்யம் கதம் இஹ ரங்க விரங்கம் - அப்படியிருக்க நட்பு, பகை, மகிழ்ச்சி, துன்பம் எப்படி இருக்க முடியும்?

தெளிவுரை:

பிரம்மம் முழுமையானது, எல்லாவற்றிலும் சமமாக பிரகாசிக்கிறது; ஆகாயத்தை போன்று தூய்மையாய் எங்கும் பரவியுள்ளது; அப்படியிருக்க நட்பு, பகை, மகிழ்ச்சி, துன்பம் எப்படி இருக்க முடியும்?

யோக ³வியோகை ³ ரஹிதோ யோகீ ³
போ⁴க ³விபோ⁴கை ³ ரஹிதோ போ⁴கீ ³ ।
ஏவம் சரதி ஹி மந்த ³ம் மந்த ³ம்
மநஸா கல்பிதஸஹஜாநந்த ³ம் ॥ 9॥

பதச்சேதம்:

யோக வியோகை ரஹிதோ யோகீ
போக விபோகை ரஹிதோ போகீ ।
ஏவம் சரதி ஹி மந்தம் மந்தம்
மனஸா கல்பித ஸஹஜ ஆனந்தம் ॥ 9॥

பத அர்த்தம்:

- யோக வியோகை ரஹிதோ யோகீ - அவதூதர் யோக விதிகளைக் கடைப்பிடிக்கலாம், கடைப்பிடிக்காமலும் இருக்கலாம், இருப்பினும் அவர் ஒரு யோகியே
- போக விபோகை ரஹிதோ போகீ - அவரிடம் உடைமைகள் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம், இருப்பினும் அவர் போகியே (அனுபவிப்பவர்)
- ஏவம் சரதி ஹி மந்தம் மந்தம் - அவர் பொறுமையாகவும், அமைதியாகவும் தன்னிச்சை போல் செயல்களை செய்வார்
- மனஸா கல்பித ஸஹஜ ஆனந்தம் - தனது தூய மனதில் எழும் பேரின்பத்தில் திளைத்தவராக இருக்கிறார்.

தெளிவுரை:

அவதூதர் யோக விதிகளைக் கடைப்பிடிக்கலாம், கடைப்பிடிக்காமலும் இருக்கலாம், இருப்பினும் அவர் ஒரு யோகியே; அவரிடம் உடைமைகள் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம், இருப்பினும் அவர் போகியே (அனுபவிப்பவர்); அவர்

பொறுமையாகவும், அமைதியாகவும் தன்னிச்சை போல் செயல்களை செய்வார்; தனது தூய மனதில் எழும் பேரின்பத்தில் திளைத்தவராக இருக்கிறார்.

போ ^{3}த^{4}விபோ ^{3}தை :^{4} ஸததம் யுக்தோ
த்^{3}வைதாத் ^{3}வைததை : கத ^{2}மிஹ முக்த : ।
ஸஹஜோ விரஜ : கத ^{2}மிஹ யோகீ ^{3}
ஶுத் ^{3}த^{4}நிரஞ்ஜநஸமரஸபோ^{4}கீ ^{3} ॥ 10 ॥

பதச்சேதம்:

போத விபோதை: ஸததம் யுக்தோ
த்வைத அத்வைதை: கதம் இஹ முக்த: ।
ஸஹஜோ விரஜ: கதம் இஹ யோகீ
ஶுத்த நிரஞ்ஜன ஸமரஸ போகீ ॥ 10 ॥

பத அர்த்தம்:

- போத விபோதை: ஸததம் யுக்தோ த்வைத அத்வைதை: கதம் இஹ முக்த: - ஒருவருக்கு அறிவு, அறியாமை, இருமை, இருமையற்ற தன்மை ஆகிய இரட்டைகள் இருக்கும் வரை, அவர் எவ்வாறு விடுதலை பெற முடியும்?

- ஸஹஜோ விரஜ: கதம் இஹ யோகீ ஶுத்த நிரஞ்ஜன ஸமரஸ போகீ - தூய்மையான, கலங்கமற்ற, ஆசை, அறியாமை போன்ற இயல்புகளற்ற தன்சுயத்தில் எப்போதும் திளைத்திருக்கும் ஒருவர் ஏன் யோகியாக இருக்க முயற்சிக்க வேண்டும்?

தெளிவுரை:

ஒருவருக்கு அறிவு, அறியாமை, இருமை, இருமையற்ற தன்மை ஆகிய இரட்டைகள் இருக்கும் வரை, அவர் எவ்வாறு விடுதலை பெற முடியும்? தூய்மையான, கலங்கமற்ற, ஆசை, அறியாமை போன்ற இயல்புகளற்ற தன்சுயத்தில் எப்போதும் திளைத்திருக்கும் ஒருவர் ஏன் யோகியாக இருக்க முயற்சிக்க வேண்டும்?

ப^{4}க் ^{3}நாப^{4}க் ^{3}நவிவர்ஜிதப^{4}க் ^{3}நோ
லக் ^{3}நாலக் ^{3}நவிவர்ஜிதலக் ^{3}ந: ।
ஏவம் கத ^{2}மிஹ ஸாரவிஸார :
ஸமரஸதத்த்வம் க^{3}க^{3}நாகார : ॥ 11 ॥

பதச்சேதம்:

பக்ன அபக்ன விவர்ஜித பக்னோ
லக்ன அலக்ன விவர்ஜித லக்ன: ।
ஏவம் கதம் இஹ ஸார விஸார:
ஸமரஸ தத்த்வம் ககனாகார: ॥ 11 ॥

பத அர்த்தம்:

- பக்ன அபக்ன விவர்ஜித பக்னோ - பிரம்மம் முழுமைக்கும், பகுதிக்கும் அப்பாற்பட்டதால், எந்தப் பிரிவும் அற்றது

- லக்ன அலக்ன விவர்ஜித லக்ன: - எதனுடனும் பற்றுதலற்றது, ஏனெனில் பற்றுதலுக்கும், பற்றற்ற தன்மைக்கும் அப்பாற்பட்டது

- ஏவம் கதம் இஹ ஸார விஸார: ஸமரஸ தத்த்வம் ககனாகார: - ஆகயத்தை போல எங்கும் நிறைந்திருப்பதால், சுருக்கம், விரிவாக்கம் போன்ற மாற்றங்கள் எப்படி இருக்க முடியும்?

தெளிவுரை:

பிரம்மம் முழுமைக்கும், பகுதிக்கும் அப்பாற்பட்டதால், எந்தப் பிரிவும் அற்றது; எதனுடனும் பற்றுதலற்றது, ஏனெனில் பற்றுதலுக்கும், பற்றற்ற தன்மைக்கும் அப்பாற்பட்டது; ஆகயத்தை போல எங்கும் நிறைந்திருப்பதால், சுருக்கம், விரிவாக்கம் போன்ற மாற்றங்கள் எப்படி இருக்க முடியும்?

ஸததம் ஸர்வவிவர்ஜிதயுக்த :
ஸர்வம் தத்த்வவிவர்ஜிதமுக்த : ।
ஏவம் கத ^{2}மிஹ ஜீவிதமரணம்
த்^{4}யாநாத்^{4}யாநை : கத ^{2}மிஹ கரணம் ॥ 12 ॥

பதச்சேதம்:

ஸததம் ஸர்வ விவர்ஜித யுக்த:
ஸர்வம் தத்த்வ விவர்ஜித முக்த: ।
ஏவம் கதம் இஹ ஜீவித மரணம்
த்யான அத்யானை: கதம் இஹ கரணம் ॥ 12 ॥

பத அர்த்தம்:

- ஸததம் ஸர்வ விவர்ஜித யுக்த: - எல்லாவற்றையும் துறந்த அவதூதர், எப்போதும் தன் சுயத்தில் திளைத்து இருக்கிறார்

- ஸர்வம் தத்த்வ விவர்ஜித முக்த: - பண்புகள், குணங்கள் போன்ற எல்லாவற்றையும் கடந்து, சுதந்திரமாக இருக்கிறார்

- ஏவம் கதம் இஹ ஜீவித மரணம் - அவருக்கு வாழ்வோ, மரணமோ எப்படி இருக்க முடியும்?

- த்யான அத்யானை: கதம் இஹ கரணம் - அப்படியிருக்க, அவர் தியானம் போன்ற செயல்களை செய்தால் என்ன? செய்யாவிட்டால் என்ன?

தெளிவுரை:

எல்லாவற்றையும் துறந்த அவதூதர், எப்போதும் தன் சுயத்தில் திளைத்து இருக்கிறார்; பண்புகள், குணங்கள் போன்ற எல்லாவற்றையும் கடந்து, சுதந்திரமாக இருக்கிறார்; அவருக்கு வாழ்வோ, மரணமோ எப்படி இருக்க முடியும்? அப்படியிருக்க, அவர் தியானம் போன்ற செயல்களை செய்தால் என்ன? செய்யாவிட்டால் என்ன?

இந்த் ^{3}ரஜாலமித ^{3}ம் ஸர்வம் யதா ^{2} மருமரீசிகா ।
அக ^{2}ண்டி ^{3}தமநாகாரோ வர்ததே கேவல : ஶிவ : ॥ 13 ॥

பதச்சேதம்:

இந்த்ர ஜாலம் இதம் ஸர்வம் யதா மருமரீசிகா ।
அகண்டிதம் அனாகாரோ வர்ததே கேவல: ஶிவ : ॥ 13 ॥

பத அர்த்தம்:

- இந்த்ர ஜாலம் இதம் ஸர்வம் யதா மருமரீசிகா - இந்த மொத்தப் பிரபஞ்சமும் பாலைவனத்தில் தோன்றி மறையும் கானல் நீருக்கு ஒப்பானது
- அகண்டிதம் அனாகாரோ வர்ததே கேவல: ஶிவ: - இரண்டற்ற, வடிவமற்ற, உயர்ந்த ஒன்றேயாகிய பிரம்மம் (சிவம்) மட்டுமே உள்ளது.

தெளிவுரை:

இந்த மொத்தப் பிரபஞ்சமும் பாலைவனத்தில் தோன்றி மறையும் கானல் நீருக்கு ஒப்பானது; இரண்டற்ற, வடிவமற்ற, உயர்ந்த ஒன்றேயாகிய பிரம்மம் (சிவம்) மட்டுமே உள்ளது.

த^{4}ர்மாதௌ ^{3} மோக்ஷபர்யந்தம் நிரீஹா : ஸர்வதா ^{2} வயம் ।
கத ^{2}ம் ராக ^{3}விராகை ^{3}ஶ்ச கல்பயந்தி விபஶ்சித : ॥ 14 ॥

பதச்சேதம்:

தர்மாதௌ மோக்ஷ பர்யந்தம் நிரீஹா: ஸர்வதா வயம் ।
கதம் ராக விராகைஶ்ச கல்பயந்தி விபஶ்சித: ॥ 14 ॥

பத அர்த்தம்:

- தர்மாதௌ மோக்ஷ பர்யந்தம் நிரீஹா: ஸர்வதா வயம் - அவதூதர்களாகிய நாம், ஒருபோதும் அறம், பொருள், இன்பம், வீடுபேறு போன்றவற்றை விரும்புவதில்லை
- கதம் ராக விராகைஶ்ச கல்பயந்தி விபஶ்சித: - அப்படியிருக்க, பற்று, பற்றின்மை போன்றவை நமக்கு இருப்பதாக பண்டிதர்கள் எவ்வாறு கற்பனை செய்கிறார்கள்?

தெளிவுரை:

அவதூதர்களாகிய நாம், ஒருபோதும் அறம், பொருள், இன்பம், வீடுபேறு போன்றவற்றை விரும்புவதில்லை; அப்படியிருக்க, பற்று, பற்றின்மை போன்றவை நமக்கு இருப்பதாக பண்டிதர்கள் எவ்வாறு கற்பனை செய்கிறார்கள்?

விந்த ^{3}தி விந்த ^{3}தி ந ஹி ந ஹி யத்ர
ச^{2}ந்தோ ^{3}லக்ஷணம் ந ஹி ந ஹி தத்ர ।
ஸமரஸமக் ^{3}நோ பா^{4}விதபூத :
ப்ரலபதி தத்த்வம் பரமவதூ^{4}த : ॥ 15 ॥

பதச்சேதம்:

விந்ததி விந்ததி ந ஹி ந ஹி யத்ர
சந்தோ லக்ஷணம் ந ஹி ந ஹி தத்ர ।
ஸமரஸ மக்னோ பாவித பூத :
ப்ரலபதி தத்த்வம் பரம் அவதூத : ॥ 15 ॥

பத அர்த்தம்:

- விந்ததி விந்ததி ந ஹி ந ஹி யத்ர - அவதூதருக்கு, அறிபவன், அறிபடும்பொருள், அறிவு போன்ற திரிபுடி அற்றவர்; எல்லையற்ற சுயத்தில் திளைத்துள்ளதால்;

- சந்தோ லக்ஷணம் ந ஹி ந ஹி தத்ர - அவருக்கு பேச்சு, செயல் போன்றவை இல்லை;

- ஸமரஸ மக்னோ பாவித பூத : - அவதூதர், தியானத்தின் மூலம் மனதை தூய்மைப்படுத்தி, எல்லையற்ற சுயத்தில் திளைத்து,

- ப்ரலபதி தத்த்வம் பரம் அவதூத : - தன்னிச்சையாக இப்பாடல்களை பாடியுள்ளார்.

தெளிவுரை:

அவதூதர், அறிபவன், அறிபடும்பொருள், அறிவு போன்ற திரிபுடி அற்றவர்; எல்லையற்ற சுயத்தில் திளைத்துள்ளதால்; அவருக்கு பேச்சு, செயல் போன்றவை இல்லை; தியானத்தின் மூலம் மனதை தூய்மைப்படுத்தி, எல்லையற்ற சுயத்தில் திளைத்து, தன்னிச்சையாக இப்பாடல்களை பாடியுள்ளார்.

||ஏழாம் அத்தியாயம் முற்றிற்று||

எட்டாம் அத்தியாயம்

அவதூத என்ற சொல்லின் பொருளை எடுத்துரைத்தல்

அவதூதர் கூறுகிறார்:

த்வத் ³யாத்ரயா வ்யாபகதா ஹதா தே
த்⁴யாநேந சேத :பரதா ஹதா தே ।
ஸ்துத்யா மயா வாக்பரதா ஹதா தே
க்ஷமஸ்வ நித்யம் த்ரிவிதா⁴பராதா⁴ந் ॥ 1॥

பதச்சேதம்:

த்வத் யாத்ரயா வ்யாபகதா ஹதா தே
த்யானேன சேத: பரதா ஹதா தே ।
ஸ்துத்யா மயா வாக்பரதா ஹதா தே
க்ஷமஸ்வ நித்யம் த்ரிவிதா பராதாந் ॥ 1॥

பத அர்த்தம்:

- த்வத் யாத்ரயா வ்யாபகதா ஹதா தே - பிரம்மமே! உன்னைத் தேடி யாத்திரை சென்றதன் மூலம், உனது எங்கும் நிறைந்த தன்மையை மறுத்துவிட்டேன்

- த்யானேன சேத: பரதா ஹதா தே - உன்னை தியானிப்பதன் மூலம், உனக்கு வடிவம் கொடுத்து, உனது உருவமற்ற தன்மையை மறுத்துவிட்டேன்

- ஸ்துத்யா மயா வாக்பரதா ஹதா தே - பாடல்களைப் பாடி விவரிப்பதன் மூலம், உனது விவரிக்க முடியாத தன்மையை மறுத்துவிட்டேன்

- க்ஷமஸ்வ நித்யம் த்ரிவிதா பராதாந் - மனதின் அறியாமையால் செய்யப்பட்ட இம்மூன்று செயல்களையும் மன்னிப்பாயாக.

தெளிவுரை:

பிரம்மமே! உன்னைத் தேடி யாத்திரை சென்றதன் மூலம், உனது எங்கும் நிறைந்த தன்மையை மறுத்துவிட்டேன்; உன்னை தியானிப்பதன் மூலம், உனக்கு வடிவம் கொடுத்து, உனது உருவமற்ற தன்மையை மறுத்துவிட்டேன்; பாடல்களைப் பாடி விவரிப்பதன் மூலம், உனது விவரிக்க முடியாத தன்மையை மறுத்துவிட்டேன்; மனதின் அறியாமையால் செய்யப்பட்ட இம்மூன்று செயல்களையும் மன்னிப்பாயாக.

காமைரஹதகீ⁴ர்தா ³ந்தோ ம்ரு 'து:³ ஶுசிரகிஞ்சந : ।
அநீஹோ மிதபு⁴க் ஶாந்த : ஸ்தி ²ரோ மச்ச ²ரணோ முநி : ॥ 2॥

பதச்சேதம்:

காமை ரஹத தீர்தாந்தோ ம்ருது: ஶுசிர கிஞ்சன: ।
அநீஹோ மிதபுக் ஶாந்த : ஸ்திரோ மச்சரணோ முனி : ॥ 2॥

பத அர்த்தம்:

- காமை ரஹத தீர்தாந்தோ ம்ருது: ஶுசிர கிஞ்சன: - எவருடைய புத்தி, ஆசைகளால் கலங்கவில்லையோ; புலன்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளனவோ; யார் பொருட்களை சாராமல், சாந்தமாகவும், தூய்மையாகவும், பேராசையற்றவராகவும்

- அநீஹோ மிதபுக் ஶாந்த: ஸ்திரோ மச்சரணோ முனி: - உணவில் அதீத ஆசையற்றவராகவும், அமைதியானவராகவும், உறுதியானவராகவும், தன்னில் அடைக்கலம் புகுந்தவரோ, அவரே ஞானி.

தெளிவுரை:

எவருடைய புத்தி, ஆசைகளால் கலங்கவில்லையோ; புலன்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளனவோ; யார் பொருட்களை சாராமல், சாந்தமாகவும், தூய்மையாகவும், பேராசையற்றவராகவும், உணவில் அதீத ஆசையற்றவராகவும், அமைதியானவராகவும், உறுதியானவராகவும், தன்னில் அடைக்கலம் புகுந்தவரோ, அவரே ஞானி.

அப்ரமத்தோ க^{3}பீ^{4}ராத்மா த்^{4}ரு ’திமாந் ஜிதஷட் ^{3}கு^{3}ண: ।
அமாநீ மாநத :^{3} கல்போ மைத்ர : காருணிக : கவி : ॥ 3॥

பதச்சேதம்:

அப்ரமத்தோக பீராத்மா த்ருதிமாந் ஜிதஷட் குண: ।
அமானீ மானத: கல்போ மைத்ர: காருணிக: கவி: ॥ 3॥

பத அர்த்தம்:

- அப்ரமத்தோக பீராத்மா த்ருதிமாந் ஜிதஷட் குண: - ஞானி விழிப்புடன் இருப்பவர், ஆழ்ந்த சிந்தனை கொண்டவர், நிலையானவர், மனதையும் புலன்களையும் வென்றவர்

- அமானீ மானத: கல்போ மைத்ர: காருணிக: கவி: - பணிவானவர், அனைவருக்கும் மரியாதை அளிப்பவர்; நல்ல நடத்தை கொண்டவர், நட்புடையவர், இரக்கமுள்ளவர், தொலைநோக்குப் பார்வை கொண்டவர்.

தெளிவுரை:

ஞானி விழிப்புடன் இருப்பவர், ஆழ்ந்த சிந்தனை கொண்டவர், நிலையானவர், மனதையும் புலன்களையும் வென்றவர்; பணிவானவர், அனைவருக்கும் மரியாதை அளிப்பவர்; நல்ல நடத்தை கொண்டவர், நட்புடையவர், இரக்கமுள்ளவர், தொலைநோக்குப் பார்வை கொண்டவர்.

க்ரு ’பாலுரக்ரு ’தத் ^{3}ரோஹஸ்திதிக்ஷு : ஸர்வதே ^{3}ஹிநாம் ।
ஸத்யஸாரோ ऽநவத் ^{3}யாத்மா ஸம : ஸர்வோபகாரக : ॥ 4॥

பதச்சேதம்:

க்ருபாலுர் அக்ருத த்ரோஹ ஸ்திதிக்ஷு: ஸர்வ தேஹினாம் ।
ஸத்ய ஸாரோ அனவதி ஆத்மா ஸம: ஸர்வ உபகாரக : ॥ 4॥

பத அர்த்தம்:

- க்ருபாலுர் அக்ருத த்ரோஹ ஸ்திதிக்ஷு: ஸர்வ தேஹினாம் - ஞானி கருணை உள்ளவர், வன்முறையற்றவர், அனைவரிடமும் பொறுமை கொண்டவர்

- ஸத்ய ஸாரோ அனவதி ஆத்மா ஸம: ஸர்வ உபகாரக: - தன் சுயத்தில் நிலைபெற்றவர், பாரபட்சமற்றவர், அனைவருக்கும் நன்மை செய்பவர்.

தெளிவுரை:

ஞானி, கருணை உள்ளவர், வன்முறையற்றவர், அனைவரிடமும் பொறுமை கொண்டவர்; தன் சுயத்தில் நிலைபெற்றவர், பாரபட்சமற்றவர், அனைவருக்கும் நன்மை செய்பவர்.

அவதூ^{4}தலக்ஷணம் வர்ணைர்ஜ்ஞாதவ்யம் ப^{4}க ^{3}வத்தமை : ।
வேத ^{3}வர்ணார்த ^{2}தத்த்வஜ்ஞைர்வேத ^{3}வேதா ^{3}ந்தவாதி ^{3}பி :^{4} ॥ 5॥

பதச்சேதம்:

அவதூத லக்ஷணம் வர்ணைர் ஜ்ஞாதவ்யம் பகவத்தமை: ।
வேத வர்ணார்த தத்த்வ ஜ்ஞைர் வேத வேதாந்த வாதிபி: ॥ 5॥

பத அர்த்தம்:

- அவதூத லக்ஷணம் வர்ணைர் ஜ்ஞாதவ்யம் பகவத்தமை: - அவதூத என்ற சொல்லின் அர்த்தத்தையும், அவருடைய பண்புகளையும், ஒவ்வொரு அட்சரமாக (எழுத்தாக) கற்று உணரவேண்டும்.

- வேத வர்ணார்த தத்த்வ ஜ்ஞைர் வேத வேதாந்த வாதிபி: - வேதம் மற்றும் வேதாந்தத்தை கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் சீடர்களுக்கு கற்றுத் தர வேண்டும்.

தெளிவுரை:

அவதூத என்ற சொல்லின் அர்த்தத்தையும், அவருடைய பண்புகளையும், வேதம் மற்றும் வேதாந்தத்தை கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களிடமிருந்து ஒவ்வொரு அட்சரமாக (எழுத்தாக) கற்று உணரவேண்டும், அவ்வாறே ஆசிரியர்களும் சீடர்களுக்கு கற்றுத் தர வேண்டும்.

ஆஶாபாஶவிநிர்முக்த ஆதி ^{3}மத்^{4}யாந்தநிர்மல : ।
ஆநந்தே ^{3} வர்ததே நித்யமகாரம் தஸ்ய லக்ஷணம் ॥ 6॥

பதச்சேதம்:

ஆஶா பாஶ விநிர்முக்த ஆதி மத்ய அந்த நிர்மல: ।
ஆனந்தே வர்ததே நித்யம் அகாரம் தஸ்ய லக்ஷணம் ॥ 6॥

பத அர்த்தம்:

- ஆஶா பாஶ விநிர்முக்த ஆதி மத்ய அந்த நிர்மல: - அவதூத என்ற சொல்லில், அ என்ற எழுத்து, நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் போன்றவற்றிலிருந்து விடுபட்டவர் என்பதைக் குறிக்கிறது; அவரது வாழ்க்கை ஆரம்பம், நடு, இறுதி போன்ற எல்லா காலங்களிலும் தூய்மையானது

- ஆனந்தே வர்ததே நித்யம் அகாரம் தஸ்ய லக்ஷணம் - அவர் எப்போதும் பேரின்பத்தில் திளைத்து இருக்கிறார்.

தெளிவுரை:

அவதூத என்ற சொல்லில், **அ** என்ற எழுத்து, நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் போன்றவற்றிலிருந்து விடுபட்டவர் என்பதைக் குறிக்கிறது; அவரது வாழ்க்கை ஆரம்பம், நடு, இறுதி போன்ற எல்லா காலங்களிலும் தூய்மையானது; அவர் எப்போதும் பேரின்பத்தில் திளைத்து இருக்கிறார்.

வாஸநா வர்ஜிதா யேந வக்தவ்யம் ச நிராமயம் ।
வர்தமாநேஷு வர்தேத வகாரம் தஸ்ய லக்ஷணம் ॥ 7॥

பதச்சேதம்:

வாஸனா வர்ஜிதா யேன வக்தவ்யம் ச நிராமயம் ।
வர்தமானேஷு வர்தேத வகாரம் தஸ்ய லக்ஷணம் ॥ 7॥

பத அர்த்தம்:

- வாஸனா வர்ஜிதா யேன வக்தவ்யம் ச நிராமயம் - அவதூத என்ற சொல்லில், வா என்ற எழுத்து, அனைத்து ஆசைகளையும் வேரோடு களைந்தவர் என்பதைக் குறிக்கிறது; அவரது வாக்கு அனைவரையும் தூய்மைப் படுத்துகிறது

- வர்தமானேஷு வர்தேத வகாரம் தஸ்ய லக்ஷணம் - அவர் எப்போதும் பேரின்பத்தில் திளைத்து இருக்கிறார்.

தெளிவுரை:

அவதூத என்ற சொல்லில், **வா** என்ற எழுத்து, அனைத்து ஆசைகளையும் வேரோடு களைந்தவர் என்பதைக் குறிக்கிறது; அவரது வாக்கு அனைவரையும் தூய்மைப் படுத்துகிறது; அவர் எப்போதும் பேரின்பத்தில் திளைத்து இருக்கிறார்.

தூ⁴லிதூ⁴ஸரகா ³த்ராணி தூ⁴தசித்தோ நிராமய : ।
தா⁴ரணாத்⁴யாநநிர்முக்தோ தூ⁴காரஸ்தஸ்ய லக்ஷணம் ॥ 8॥

பதச்சேதம்:

தூலி தூஸர காத்ராணி தூத சித்தோ நிராமய: ।
தாரணா த்யான நிர்முக்தோ தூ காரஸ் தஸ்ய லக்ஷணம் ॥ 8॥

பத அர்த்தம்:

- தூலி தூஸர காத்ராணி தூத சித்தோ நிராமய: - அவதூத என்ற சொல்லில், தூ என்ற எழுத்து, உடலை போஷிக்க வேண்டும் என்ற சிந்தனை அற்றதால், அவரது உடல் தூசியால் பூசப்பட்டிருந்தாலும், அவருடைய மனம் தூய்மையாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கிறது என்பதைக் குறிக்கிறது

- தாரணா த்யான நிர்முக்தோ தூ காரஸ் தஸ்ய லக்ஷணம் - அவருக்கு மனதை ஒருமுகப்படுத்த, தியானம் போன்ற பயிற்சிகள் எதுவும் செய்யத் தேவையில்லை

தெளிவுரை:

அவதூத என்ற சொல்லில், **தூ** என்ற எழுத்து, உடலை போஷிக்க வேண்டும் என்ற சிந்தனை அற்றதால், அவரது உடல் தூசியால் பூசப்பட்டிருந்தாலும், அவருடைய மனம் தூய்மையாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கிறது என்பதைக் குறிக்கிறது; அவருக்கு மனதை ஒருமுகப்படுத்த, தியானம் போன்ற பயிற்சிகள் எதுவும் செய்யத் தேவையில்லை.

குறிப்பு: இந்த தெளிவுரையை படித்துவிட்டு, அவதூதர் குளிக்கமாட்டார், உடலை போஷிக்க மாட்டார் என்று தவறாக புரிந்து கொள்ளக்கூடாது; அவ்வாறான சந்தர்ப்பங்கள் ஏற்ப்பட்டால், அவர் அதனை நிராகரிக்கமாட்டார் என்றே புரிந்து கொள்ளவேண்டும்.

தத்த்வசிந்தா த்^{4}ரு 'தா யேந சிந்தாசேஷ்டாவிவர்ஜித : ।
தமோ Sஹங்காரநிர்முக்தஸ்தகாரஸ்தஸ்ய லக்ஷணம் ॥ 9॥

பதச்சேதம்:

தத்த்வ சிந்தா த்ருதா யேன சிந்தா சேஷ்டா விவர்ஜித: ।
தமோ அஹங்கார நிர்முக்தஸ் த காரஸ் தஸ்ய லக்ஷணம் ॥ 9॥

பத அர்த்தம்:

- தத்த்வ சிந்தா த்ருதா யேன சிந்தா சேஷ்டா விவர்ஜித: - அவதூத என்ற சொல்லில், த என்ற எழுத்து, அவர் தன் சுயத்தில் திளைத்து இருப்பதையும், மனது எவ்வித பதட்டமும் இன்றி சாந்தமாக இருக்கிறது; தன்னில் நிலைபெற எவ்வித முயற்சி செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை என்பதை குறிக்கிறது

- தமோ அஹங்கார நிர்முக்தஸ் த காரஸ் தஸ்ய லக்ஷணம் - அவர் அகங்காரம், அறியாமை போன்றவற்றிலிருந்து முற்றிலும் விடுபட்டவர்.

தெளிவுரை:

அவதூத என்ற சொல்லில், **த** என்ற எழுத்து, அவர் தன் சுயத்தில் திளைத்து இருப்பதையும், மனது எவ்வித பதட்டமும் இன்றி சாந்தமாக இருக்கிறது; தன்னில்

நிலைபெற எவ்வித முயற்சி செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை என்பதை குறிக்கிறது; அவர் அகங்காரம், அறியாமை போன்றவற்றிலிருந்து முற்றிலும் விடுபட்டவர்.

த^{3}த்தாத்ரேயாவதூ^{4}தேந நிர்மிதாநந்த ^{3}ரூபிணா ।
யே பட ^{2}ந்தி ச ஶ ்ரு ’ண்வந்தி தேஷாம் நைவ புநர்ப^{4}வ : ॥ 10 ॥

பதச்சேதம்:

தத்தாத்ரேய அவதூதேன நிர்மித ஆனந்த ரூபிணா ।
யே படந்தி ச ஶரு ண்வந்தி தேஷாம் நைவ புநர்பவ: ॥ 10 ॥

தெளிவுரை:

அவதூதரான **ஸ்ரீ தத்தாத்ரேயர்** அருளிய **அவதூத கீதை** என்ற இப்பாடல்களை, தக்க குருவின் மூலம் கேட்டு, சிந்தித்து, தெளிந்து, தன் சுயத்தில் நிலைபெறுபவர்கள், பி(இ)றப்பு என்ற சம்சார சக்கரத்திலிருந்து விடுபட்டு ஆ(த்மா)னந்தத்தில் திளைக்கிறார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

||எட்டாம் அத்தியாயம் முற்றிற்று||

அவதூத கீதை முற்றிற்று

ஓம் தத் சத்